
புத்தம் புதிய முழு மெகா நாவல்
ரமணி சந்திரன்
அழகிய மங்கையர் நாவல்
100 வது நாவல்
என்ன என்ன ஆசைகளோ...?
உலகிலேயே மிக அதிகமானவர்கள்
படிக்கும் தமிழ் நாவல்
ரூ.20/-

# சகோதரி பேசுகிறேன்

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக எழுதுகிறேன்! இத்தனை ஆண்டுகளில், நூறு நாவல்கள் எழுதியது பெரிய சாதனை என்று சொல்ல முடியாது! ஆயினும் அந்த 'நூறை' மட்டும் எடுத்துக்கொண்டால், இத்தனை கதைகளை எப்படி எழுதினேன் என்று ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.!

முப்பது ஆண்டுகள்! நீண்டகாலம் தான்!

'ராணி பத்திரிகையில் வெளிவந்த என் முதல் தொடர்கதையை நான் எழுதியபோது, என் பிள்ளைகள் சின்னஞ் சிறுவர்களாக இருந்தனர்.!

'ஷ்' அம்மா எழுதறாங்க! தொல்லை பண்ணக்கூடாது!' என்று மேடை ரகசியமாகச் சொல்லிக்கொண்டு, என் மகளும் மகனும் கண்ணை உருட்டியவாறு விலகிச் சென்றது, நேற்று நடந்தது போல நினைவு வருகிறது! இப்போது, என் பேரனும் பேத்தியும் அதே போலச் சொல்லிக் கொண்டு போவதைப் பார்த்துச் சிரிக்கிறேன்.!

ஆக, பிள்ளைகளின் மனோபாவத்தில் மாறுதல் இல்லை.!

ஆனால் மற்றபடி எத்தனை மாற்றங்கள்.! சமூகத்தில், விஞ்ஞானத்தில், எண்ணங்களின் போக்கில்.!

பெண் கல்வியின் முக்கியத்துவம் எல்லார் மனதிலும் பதியத் தொடங்கி விட்டது.!

கல்வி என்றால் எழுதப் படிக்கத் தெரிவது மட்டும் அல்ல! தன் காலில் நிற்கும் தகுதியைத் தரும் கல்வி! ஏதோ ஒரு பட்டப் படிப்பை முடித்துவிட்டு, வீட்டில் சோம்பியிருப்பதை எந்தப் பெண்ணும் விரும்புவது இல்லை.!

அதேபோல, முன் காலம் போலப் பார்த்தால் பாவம், பேசினால் தப்பு என்று இருப்பதை, இப்போது யாருமே விரும்புவது இல்லை.! பெண்களுக்குத் தைரியமும், திடமும் தேவைப்படுகிறது.! எனவே, பெரும்பாலும் என் கதாநாயகிகளையும், இப்போது இந்த மாதிரியே சித்தரிக்கிறேன். அடுத்து விஞ்ஞான முன்னேற்றம்.!

ஒரு காலத்தில் வீட்டில் டெலிஃபோன் என்பது மத்தியதர வகுப்பாருக்கே, அரியதாக இருந்தது! அதிலும், 'ராங் நம்பர்'கள் சர்வ சாதாரணம்! இப்போது, விஞ்ஞான முன்னேற்றம் காரணமாக தப்பு எண்கள் வர வாய்ப்பில்லையே! ஃபோன் இல்லாத வீடுகளும் அரிது. அதற்கு மேல் 'செல் ஃபோன்' வேறு! ஒருவரிடம், ஒரு சேதியைத் தெரிவிக்க முடியவில்லை என்று சொன்னால், இன்றைக்குச் சிறு பிள்ளைகள் கூட நம்பமாட்டார்கள்! இதே போலப் பெருகிவிட்ட போக்கு வரத்து சாதனங்கள், அடுக்குமாடி வீடுகள் எல்லாமே, இன்றைய வாழ்வில் பங்காகி விடுகின்றன.!

இதற்குத் தக்கவாறு சம்பவங்களை அமைத்தால்தான், இப்போதைய தலைமுறைக்குக் கதையை, இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்! ஏற்கவும் முடியும்! ரஷ்யா வில், ஒரு கதையில் பிச்சைக் காரன் வருவதாக எழுதியிருந்ததாம்! அதைப் படித்த குழந்தைக்குப் பிச்சைக்காரன் என்றால் யார் என்றே தெரியவில்லையாம்! விளக்கிச் சொன்னாலும், புரியவில்லையாம் பல்லாண்டுகளுக்கு முன்பாகவே, அங்கு பிச்சையெடுப்பதை ஒழித்துவிட்டதால், அந்தச் சிறுவனுக்குப் பிச்சைக்காரனைப் பற்றி எதுவும் தெரியவில்லை!

என் கதைகளில், இன்றையத் தலைமுறைக்குப் புரியாத எதுவும் இருக்கக் கூடாது என்று விரும்புகிறேன்.!

என்னால் இயன்றவரை, இவைகளையெல்லாம் மனதில் தக்க வைத்துக் கொண்டுதான் கதைகளை எழுத முயற்சிக்கிறேன், எழுகிறேன்! விளைவு எப்படி இருக்கிறது என்று, அந்தக் கதைகளைப் படிக்கிற வாசகர்கள்தானே சொல்ல வேண்டும்?

அன்புடன்
ரமணிசந்திரன்

# என்ன என்ன ஆசைகளோ..?



அறைக்கடிகாரம் மெல்லிய
குரலில் சிணுங்கலாகப்
பன்னிரெண்டு முறை
ஒலிக்கவும், புவனேசுவரி
சற்று நேரம் திகைத்துப்
போய் நின்று, கடிகாரத்தை
உற்றுப் பார்த்தாள்...

- ரமணிசந்திரன்

**மெ**ய்யாகவே மணி பன்னிரெண்டுதான்.

உட்கார முடியாமல், அறையில் குறுக்கும் நெடுக்குமாக புவனேசுவரி நடக்கத் தொடங்கியும் கூட, ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. ஆனால் படிப்பு முடிந்து, பஸ்சில் வந்தாலும் கூட, ஏழு மணிக்கெல்லாம் வீடு வந்து சேர்ந்திருக்க வேண்டிய தங்கை லோகேசுவரிதான். இன்னமும் வந்து சேரவில்லை.

ஆனால் ஒன்று லோகேஸ் என்றைக்குமே, உரிய நேரத்தில் வீட்டுக்கு வந்ததும் கிடையாதுதான். தேவிமாராணி, மோகன ஜோதி, கிளாரா என்று அவளுடைய தோழிகளின் வீடுகளில் சுற்றிவிட்டு எட்டரை, ஒன்பது மணிக்குத்தான், அவள் வீட்டை நினைப்பாள். மறுநாள் விடுமுறை என்றால், அவள் வந்து சேர, இரவு மணி பத்தரை பதினொன்று கூட ஆகிவிடும்.

அப்போதும் தூங்குவதற்கு ஓர் இடம் வேண்டுமே என்பதற்காகத்தான் வருவாள். படிப்பு நேரம் முடிந்து, ஒழுங்காக, உடனே வீட்டுக்கு வந்து, சற்று நேரம் ஓய்வெடுத்து விட்டு, இன்றையப் பாடங்களை நன்றாகப் படித்தால், அவளது புத்திக்கு, வகுப்பில் முதலாவதாகவே வரலாம்.

அதிலும், இப்போது தமிழில் நிறைய மதிப்பெண் வாங்கினால், மேல்படிப்புக்கும் நல்ல வாய்ப்பு இருக்கிறது எனும் போது, தங்கை இப்படி நேரத்தை வீணாக்குவது பற்றி, புவனேசுவரி ரொம்பவே மன வேதனைப்படுவாள்.

ஆனால், லோகேசுவரியிடம், இது பற்றி என்ன எடுத்துச் சொன்னாலும் அது எருமை மாட்டின் மீது பெய்த மழை மாதிரிதான்.

அப்படிக்கூடச் சொல்ல முடியாது. எருமை மாட்டின் மீது மழை பெய்தால், குறைந்த பட்சம் அந்த மாடேனும் சுத்தமாகலாம். ஆனால், லோகேஸிடம் ஒரு பிரதிபலிப்பும் இராது.

தமக்கை சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஒரு கொட்டாவி விடுவாள், "இன்றைக்கு, தேவிமா வீட்டில், எல்லோருமாய் நடனம் ஆடிக் கொண்டே இருந்தோமா, ஒரே களைப்பு. நான் அங்கேயே சாப்பிட்டு விட்டேன், தூங்கப்போகிறேன்." என்று எழுந்து போய் விடுவாள்.

'நான் இங்கே சாப்பாடு ஆக்கி வைத்துக் கொண்டு காத்திருக்கிறேனே' என்றால் அப்படி என்ன வைத்திருக்கப் போகிறீர்கள்? பருப்புக் கறியும், பாகற்காய் பொரியலும்தானே? நாக்கு செத்து விடும். அங்கே, மீகோரேங், சில்லி சிக்கன், ஐஸ் கச்சான். .. அதை விட்டு விட்டு, இந்த வறட்டுச் சோறைப் சாப்பிடுவதா? சேச்சே நான் ஒன்றும், அவ்வளவு முட்டாள் இல்லை, என்று சொல்லிவிட்டுப் போவாள்.

நாவில் நீர் ஊறச் செய்யும் பண்டங்கள்தான்.

ஆனால், அடுத்தவர் வீட்டில் போய்ச் சும்மா தின்று கொண்டே இருப்பதா? ந மரியாதை என்ன ஆவது? அத்தோடு, அவளுடைய அக்கா உண்பது, அதுதானே அந்த வீட்டு வருமானத்துக்கு, அதற்கு மேல் அவர்களுக்குக் கட்டுமா?

இதை புவனேசுவரி காற்றிடம்தான் கேட்க வேண்டும்.

அதற்குள் லோகேசுவரி தூங்கிவிட்டிருப்பாள்.



எனவே, அவள் படுக்குமுன் உடம்பை கழுவச் சொல்லி விரட்டி, சுத்த நைட்டியை எடுத்து, அணிய வைத்துப் பிறகு, உறங்கச் சொல்லுவாள்.

அதற்கே, படாதப் பாடுபட வேண்டும்.

சரி, காலையில் பொழுது விடிந்த பிறகு, தங்கைக்கு ஏதாவது புத்தி சொல்லலாம் என்றால், அதற்கும் இயலாமல், பெரியவள் காலையிலேயே, வேலைக்குக் கிளம்பி ஓட வேண்டும்.

அதற்குள், இயன்றவரை, ரொட்டி சென்னா, கொஞ்சமாக ஒரு சம்பல் என்று ஏதோ ஒரு சமையல், தங்கைக்கு ஆக்கி வைத்துவிட்டு, முந்தைய நாள் மீதியைத் தனக்கு எடுத்துக் கொண்டு ஓடுவாள்.

மதியத்துக்குப் பரவாயில்லை. பள்ளியிலே, விலைக் குறைப்பு செய்யப்பட்ட உணவு, லோகேசுவரிக்குக் கிடைக்கும். அவளுக்குப் பிடிக்காத 'வறட்டு சாம்பாரும் சோறும்' எடுத்துப் போகத் தேவையில்லை.

விடுமுறை நாட்களில் கேட்கவே வேண்டியது இல்லை. தோழிகளின் வீடே கதி என்று கிடப்பாள்.

தோழிகள் வீடே கதியாக, அவள் கிடந்த வரை, புவனேசுவரி, இவ்வளவு கவலைப்பட்டதில்லை. கௌரவம் பாராமல், அங்கே சாப்பாட்டுக்கு நிற்கிறாளே என்ற கூச்சம் மட்டும்தான்.

ஒழுக்கம் தவறினார் என்பதற்காக, அப்பாவை விட்டுப் பிரிந்து வந்து, கடுமையாக உழைத்து, தனியாகவே தங்களை வளர்த்த தாயை எண்ணும்போது தங்கையின் செய்கையை எண்ணி, அவமான உணர்வும் அவளை எரிக்கும்.

அன்பு காட்டிய அத்தையின் உதவியைக்கூட, அன்னை ஏற்றது இல்லையே. அவ்வளவு தன்மானம்.

கடைசியாக ஆஸ்திரேலியாவுக்கு குடி பெயர்ந்து செல்லும்போது 'தப்பு செய்ய அண்ணனுக்குத் தங்கையாகப் பிறந்தேன் என்ற ஒரு காரணத்துக்காக, கௌரவம் பார்த்துக் கொண்டு, என்னைக்கூட, அடியோடு ஒதுக்கி விட்டாயே, அண்ணி, உழைத்து உழைத்து ஓடாகி விட்டாயே' என்று, அத்தை அழுது கொண்டேதான் போனாள்.

ஓடாகிப் போன உடல் தீராத நோயில் விழுந்து, தவித்தபோதுதான், புவனேசுவரி தந்தையைப் பற்றி தாயிடம் கேட்டாள்.

அதுவும், மருத்துவச் செலவுக்கு அவரிடம் கேட்கலாமா என்பதற்காகத்தான்.

ஆனால், ஏற்கனவே நோயின் வேதனையால் வாடியிருந்த கோமதியின் முகம், சகிக்க முடியாத வேதனையில் கசங்கிப் போயிற்று.

ஒரு மலாய் நண்பர் வேலை ஏற்பாடு செய்து தர, கனகநாதன், சாரவாக் சென்றுவிட்டார். செல்லுமுன், தெலுக் இந்தானில் ஒரு பெண்ணைக் கட்டிக் கொண்டு போய், நாலைந்து பிள்ளைகளோடு இப்போது பெரிய குடும்பி, அவர்.

தனக்குத் துரோகம் செய்தது மட்டுமின்றி, சட்டப்பூர்வமான குடும்பத்துக்கு., இவ்வளவு அநியாயம் செய்தவரிடம் பணம் கேட்டுப் பெற்றுப் பிழைப்பதை விடச்



சாவது மேல் என்றாள், அந்த மானஸ்தி.

அப்படியே இறந்தும் போனாள்.

அப்படிப்பட்டவளுடைய மகள், நாக்கு ருசிக்காக அடுத்தவர் வீட்டில் போய்க் கிடப்பதும், ஆட்டம், பாட்டம் என்று அலைவதும், தாயின் அச்சான புவனேசுவரிக்குச் சகிக்க முடியாத துன்பமாக இருந்தது.

ஆனால், என்ன சொன்னாலும் கேளாதவளை என்ன செய்வது?

எப்படியோ போய்த்தொலை என்று விட முடியாமல், கூடப் பிறந்த பாசம் தடுத்தது.

இறக்கும் தருவாயில், மூத்த மகளின் கையைப் பிடித்து 'சின்னவள் இனி, உன் பொறுப்பு, அம்மா. அது, அறியாத முட்டாள் அதன் அப்பா போலக் கொஞ்சம் ஆசைகள் அதிகம். ஆனால் அந்தக் கிராதகத்தனம் கிடையாது. பொறுமையாகப் புத்தி சொல்லி, நல்லபடியாக வாழவை' என்று கேட்டுக் கொண்ட தாய்க்குக் கொடுத்த வாக்கு ஒருபுறம், லோகேசிடம் அதிகக் கடுமை காட்ட முடியாமல் புவனேசுவரியை அடக்கியது.

அப்படிக் கடுமையாக நடத்தினால், சின்னவள் அதற்குப் பணிந்து போவாளா என்கிற பயம் வேறு.

பின் விளைவை யோசியாமல், வீட்டை விட்டு வெளியேறிவிட்டால்?

எப்போதுமே, லோகேஸ் யோசித்துச் செய்கிறவள் அல்ல. செய்துவிட்டு, அப்புறமாக யோசித்துச் சமாளிக்கிறவள். சமாளிக்க முடியாவிட்டால், அக்கா பார்த்துக் கொள்ளட்டும் என்று விட்டு விடுவாள்.

கடைக்குப் போகச் சொன்னால், சாக்கலேட் எதையாவது வாங்கித் தின்றுவிட்டு, வாங்கப் போன சாமான் இல்லை என்பாள். காசு தொலைந்து விட்டது என்பாள் அல்லது அவளிடம் யாரோ திருடிவிட்டார்கள் என்று, ஏதோ ஒரு சமாதானம் சொல்லுவாள்.

ரொம்பவும் கண்டித்துக் கேட்டால், செல்லச் சிணுங்கலுடன் 'பெரிய பொங்குசாக வாங்கினால், அந்தச் சாக்லேட் ரொம்ப சல்லிசாகக் கிடைத்தது . அதனால் வாங்கினேன். தனித்தனியாக வாங்கினால் என்ன விலை தெரியுமா? இப்போது, எவ்வளவு பணம் மிச்சம். அதைப் பாராட்டாமல், வைகிறீர்களே., என்று உதட்டைப் பிதுக்குவாள்.

மாதுளை மொட்டாய் அந்தச் சிவந்த உதடுகள் துருத்துவதைப் பார்க்கும் போது புவனேசுவரியின் கோபம் பறந்தோடி விடும்.

அப்புறம், அக்கா, தங்கை இருவரும் சிரித்துக் கொண்டு இருப்பார்கள், பன்னிரெண்டு வயதில், குழந்தையாய் மலங்க மலங்க விழித்துக் கொண்டு நின்ற லோகேசுவரியின் பொறுப்பை, பதினாறு வயதில் பெரியவளாகப் புவனேசுவரி ஏற்றுக் கொண்டதில் இருந்து, தங்கையை அவள் குழந்தையாகத்தான் பார்த்தாள்.

அதேபோலத்தான் நடத்தினாள்.

லோகேசின் இந்தப் பதினெட்டு வயதிலும், அதே போலத்தான், சிறு



பிள்ளையாகவேதான் நடத்தியிருப்பாள். இன்பநாதன் மட்டும் இடை புகுந்திராவிட்டால்.

பெரியவர்கள் இல்லாமல் தனித்து இருக்கிற பெண்கள் என்பதால், அவச்சொல ஏதும் வந்துவிடக்கூடாது என்பதால், புவனேசுவரி தோற்றத்தில் கவனமாக இருப்பாள்.

அடர்ந்த கூந்தல் இறுகச் சுற்றப்பட்டு, கொண்டை வலைக்குள் அடங்கி இருக்கும். இறுக்கம் இல்லாததாய் நீள் டிரௌசரும், லாங் பிளவுசும். அவளது இருபத்தியிரண்டை திருத்தமான மதி முகத்தில்தான் கண்டு கொள்ள வேண்டும்.

இது பிடித்துப் போய், அவளை மணக்கக் கேட்டவன், இன்பநாதன்.

அவனுக்கும் பெரிய குடும்பம் கிடையாது. தாயார் மட்டும்தான். அவளுக்கும், புவனேசுவரியின் அடக்கமான தோற்றம் பிடித்துப் போனதாம். அதன் பிறகே, அவளிடம் திருமணப் பேச்சை எடுத்ததாக, இன்பநாதன் கூறியிருக்கிறான்.

என்னதான், அவன் மனதில் அளவு கடந்த காதல் இருந்தாலும், பிற்பாடு, மாமியார், மருமகள் சண்டையால், வீடு நரகம் ஆகிவிடக் கூடாதில்லையா?

அளவைக் கடக்காத காதல் என்று சொன்னால் சரியாக இருக்கும் என்று உள்ளூரக் குறுகுறுப்பாய் எண்ணியபோதும், தன் அபிப்பிராயத்தை வெளிக்காட்டாமல் வெறும் புன்சிரிப்புடன் புவனேசுரி அடக்கிக் கொண்டாள். எப்படியும் அவனது நோக்கத்தைக் குறை கூற முடியாதல்லவா?

அவன் சொல்வது போல அவர்கள் இருவரின் வருமானமும் சேர்ந்தால் எவ்வளவோ சாதிக்கலாம்.

எவ்வளவு என்றும் சொன்னான்.

சீக்கிரமே அவனுடைய தாயாருக்கு ஒரு தனி வீடு வாங்கிக் கொடுத்துவிட்டு தேனிலவுத் தம்பதிகள் போல அவர்கள் இருவரும் தனியே வாழலாம். கேஎல்லில் பெரிய ஃப்ளாட்டில் அவர்கள் இருவர் மட்டும் தனியாக...

அது முடியாதே... தங்கை கூட இருப்பாளே என்று புவனேசுவரி சொன்ன போதுதான், முதன் முதலாக அபசுரம் தட்டியது.

"அதற்குள் லோகேசுவரியும் ஏதாவது வேலை தேடிக் கொண்டு எங்காவது விடுதியில் வாழட்டுமே" என்றான் இன்பநாதன்.

"அப்படியெல்லாம் தன் செல்லத் தங்கையை உதற முடியாது. என்றாள் புவனேசுவரி..

"அவள் என்ன சின்னப் பாப்பாவா? வயது பதினெட்டு ஆகிறதே.. தன்னைப் பார்த்துக் கொள்ள மாட்டாளா?" வாதாடினான் அவன்.

தாய்க்குக் கொடுத்த வாக்கைப் பற்றி புவனேசுவரி பொறுமையுடன் எடுத்துச் சொன்ன பிறகும், "செத்தவர்களுக்குக் கொடுத்த வாக்குக்காக, உன் வாழ்க்கையை எப்போதும் சுமைதாங்கியாக்கிப் பாழ்படுத்திக் கொள்ளப் போகிறாயா?" என்றுதான் கேட்டான்.

"லோகேஸ் எனக்கு ஒரு நாளும் சுமையாகாது. அது எனக்கு ஒரு குழந்தை மாதிரிதான்" என்று அவள் சற்று அழுத்தத்துடன் கூறவும்தான், அவன் ஒருவாறு நிதானித்தான்.

ஏதோ சொல்ல வாயெடுத்துவிட்டு நிறுத்திக் கொண்டான்.

ஆனால், அது, அப்போதைக்கு மட்டும்தான்.

மற்றபடி, வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் லோகேசுவரியைப் பற்றி ஏதாவது குறை கூறிக்கொண்டே இருப்பான். அப்படிக் கூறுவதற்கான வாய்ப்புகளை லோகேசுவரியும் நிறையவே கொடுத்து வந்தாள் எனலாம்.

நடை, உடை, பாவனைகள் எல்லாவற்றிலும்.

கடைசியாக இன்பநாதனின் குற்றச்சாட்டு, லோகேஸ் யாரோ ஒரு பையனோடு சுற்றுகிறாள் என்பது. ஒரு வாரம் முன்பாக, பெரிய ஓட்டலில் பார்த்தானாம். ரொம்ப நெருக்கமாம்.

தங்கையிடம் குற்றம் காணும் இன்பனின் வழக்கம் அறிந்திருந்தமையால், புவனேசுவரி முதலில் அவனது குற்றச்சாட்டின் பொருள் பற்றிப் பெரிதாக எண்ணவில்லை. தங்கை அந்த மாதிரிப்பட்டவள் அல்ல என்பது அவளுக்கு நிச்சயம். அத்தோடு இந்த மாதிரிப் பேச்சுகளுக்காக, அவள் தங்கையை விட்டுவிடுவாளா?

ஆனால் இன்பநாதனது பேச்சு அதிகப்படி என்று எண்ணி "லோகேசைப் பற்றி பேசத்தான் வந்தீர்கள் என்றால் நீங்கள் வராமல் இருந்திருக்கலாம்" என்றாள் குறிப்பாக.

குறிப்பாக உணர்ந்த அவன், முகம் கன்றிவிட "சும்மா சொல்லுகிறேன் என்று நினைக்கிறாய். அப்படித்தானே? சரி. இனி அவளைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. நாளைக்கு, நம் வருங்கால மனைவி வருத்தப்படக்கூடாதே என்ற நல்ல எண்ணத்தில் உன் வருங்காலக் கணவன் என்ற பொறுப்புடன் சொல்ல வந்தேன். ஆனால்... போகட்டும். விட்டுவிடுகிறேன். ஆனால் இப்போதே சொல்லி வைக்கிறேன். ஒரு நாள் லோகேசால் நீ ரொம்பவே படப் போகிறாய். அது மட்டும் நிச்சயம்" என்று ஆத்திரமாய் பதில் சொன்னான்.

சற்று நேரம் அங்கே மௌனம் நிலவியது.

அவள், அவனைச் சமாதானப்படுத்துவள் என்று எண்ணினானோ.

ஆனால் சமாதானப்படுத்துவது இது போன்ற குற்றச்சாட்டுகளைத் தொடர வைக்கக் கூடும் என்று தோன்றிவிட புவனேசுவரியும் பேசாமலே இருந்துவிட்டாள்.

எப்படியும் அவளுடைய தங்கையை ஒழுக்கம் அற்றவள் என்று அவன் என்ன சொல்லுவது? எனவே அவளுக்கும் உள்ளூரக் கோபமே.

அவனும் சற்று நேரம் இருந்து பார்த்துவிட்டு எரிச்சலுடனேயே அங்கிருந்து கிளம்பிவிட்டான்.

மனதில் பளுவுடன் அவளும் வீடு திரும்பினாள்.

தங்கையைப் பற்றி இன்பன் கூறியதில் ஏதேனும் உண்மை இருக்கக் கூடுமோ?

சேச்சே... இருக்கவே இருக்காது. லோகேசுக்கு நாவில் சுவை அரும்புகள் சற்று அதிகப்படி வேலை செய்கிறவை. அது இது என்று உண்ண ஆசைப்படுவாள். நல்ல வேளையாக உடையில் செலவு பிடிக்கிறவை மீது. இன்னும் ஆசை வரவில்லை. வசதிக்கு, பெர்முடா, டீஷர்ட், குட்டைப் பாவாடை, கையில்லாத சின்னச் சட்டை...



இந்த மாதிரிதான்... மற்றபடி அவள் நல்ல பெண்தான்.

ஆனால் "சிக்கனை உதிர் உதிராகப் போட்டு மீரட்டல் எவ்வளவு ருசி தெரியுமா? நீங்களும் சாப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்பதற்காக, இன்னொரு பிளேட் கொண்டு வரச் சொல்லி, பார்சல் கட்டிக் கொண்டு வந்தேன். இந்தாருங்கள்" என்று சின்னவள் கொண்டு வந்து கொடுத்தபோது, பெரியவளுக்கு மீண்டும் மனம் கனத்தது.

'ஒரு பிளேட் கொண்டு வரச் சொல்லிப் பார்சல் கட்டுவது' என்றால் அது வெளிச்சாப்பாடுதானே? இன்பநாதன் சொன்னதுபோல பையனோடா? அந்தப் பை மேல், ஏதோ பெரிய ஓட்டல் பெயர் தெரிகிறதே.

கேட்டு விடலாமா?

"சாப்பிட்டுப் பாருங்கள், அக்கா. என்ன மசாலை பாவித்திருக்கிறார்களோ? வாசனையே பிரமாதமாக இல்லை?" என்று சாப்பாட்டு மேஜை மேல், பார்சலைப் பிரித்து வைத்த தங்கையின் ஆர்வம் மிகுந்த முகம், அவளது வாயைக் கட்டியது.

சும்மா விடவும் மனமின்றி, "இது ஏது, லோகேஸ்?" என்று வினவினாள்.

சற்றே தலை சரித்து ஓரக் கண்ணால் அவளை ஒரு பார்வை பார்த்தாள் சின்னவள். யோசிப்பது போலப் பாவனை செய்து "இது... சீனாவில் இருந்து வந்தது என்று நினைக்கிறேன் அக்கா. அவர்கள்தானே மீ செய்வதில் தனித் தேர்ச்சி பெற்றவர்கள். கோழி மட்டும் நம் பக்கம் உள்ளதுதானாம்" என்று சிரித்தாள்.

மறைப்பதற்குரியதைச் செய்தவள், இப்படிக் கொண்டு வந்து தருவாளா? அல்லது, கிண்டலடிப்பாளா?

மனம் நிம்மதியுற்றபோதும் "ஆனாலும் சீனத்து மீயும் நம் நாட்டுக் கோழியும் பார்சல் கட்டி வந்ததுதான் புரியவில்லை. தேவிமா வீட்டை சாப்பாட்டுக்கடை ஆக்கி விட்டார்களா?" என்று தங்கையின் பாவனையிலேயே விசாரித்தாள்.

சிரித்துவிட்டு "தேவிமா அப்பா கேட்டால், ஆளை விட்டு அடித்து விடுவார். இந்தியாவிலிருந்து ஏதோ கண்காட்சியாம். அவள் வீட்டுக்கு வந்த விருந்தினரோடு நாங்கள் எல்லோருமாக வெளியே போய்ச் சாப்பிட்டோம். சூடு ஆறுமுன் சாப்பிடச் சொன்னால், சொன்னதைச் செய்யாமல் இது என்ன அக்கா வளவளப்பு?" என்று மீ பிரட்டலை தமக்கையின் கையில் திணித்துவிட்டு உள்ளே சென்றாள் சின்னவள்.

அறைக்குள் செல்லுமுன் கதவருகில் நின்று திரும்பிப் பார்த்து ரீல் சுற்றுவது போலக் கைஜாடை காட்டி "இன்பன் சார் வந்திருந்தார் போல" என்று கண் சிமிட்டிவிட்டுப் போனாள்.

தன்னை மீறி புவனேசுவரியும் முறுவலிக்க தங்கையைப் பற்றி அப்போதைக்குப் பெரியவளின் மனம் முழுமையாக அமைதிப்பட்டு விட்டது.

ஆனால் அந்த அமைதிக்கு ஆயுசு ரொம்பவே குறைவு என்று அப்போது அவளுக்குத் தெரியாது.

# 2

**வ**ருங்காலத்தைப் பற்றிப் பல கணக்குகள் போட்டுத்தான் புவனேசுவரி, இன்பநாதனின் திருமணம் பேச்சுக்குச் சம்மதம் தெரிவித்தது.

லோகேசும் "ஹையா. நம் வீட்டில் கல்யாணமா? விருந்தெல்லாம் வைப்பார்கள் இல்லையா?" என்று குதூகலமாகத்தான் இருந்தாள்.

"மாமா... மா:மா" என்று கூப்பிட்டுப் பேசவும் செய்தாள்.

ஆனால், இன்பநாதன், அவளிடம் குறை கண்டுபிடிக்கத் தொடங்கியதில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக, அவளும் ஒதுங்கிப் போகத் தொடங்கி-மாமாவும் இன்பன் சாராகி விட்டது.

ஆனால் அவளைப் பொறுத்த வரையில் சிரிப்பு, கோபம் எதுவுமே நிலைத்து நில்லாது. எனவே இன்பநாதன் பிரியம் காட்டினால், அவளும் அதற்குத் தக மாறி விடுவாள் என்பதால் அவளைப் பற்றி புவனேசுவரி அதிகம் கவலைப்படவில்லை.

அவள் படித்து முடித்து வேலைக்குப் போகத் தொடங்கி விட்டால் இன்பனும் சரியாகி விடுவான் என்பது அவளது நம்பிக்கை. அவனது கோப தாபங்கள் எல்லாம் பணக்கணக்கை வைத்துத்தான் என்று புரிந்து கொண்டதால், அதைப் பற்றியும் கவலையின்றி, அவள் நிம்மதியாகவே இருந்தாள்.

ஆனால்...

இப்போதெல்லாம் லோகேசுவரிக்கு வீடு என்று ஒன்று இருக்கிற நினைவே மறந்து விட்ட மாதிரி, அவள் வீடு திரும்ப மேலும் மேலும் அதிகத் தாமதம் ஆகிக் கொண்டே இருந்தது.

தங்கை வரத் தாமதம் ஆக ஆகப் புவனேசுவரியின் மனம் தானாகப் பதறத் தொடங்கியது.

அதுவும் இன்று பன்னிரண்டு மணியாகியும் அவள் வீடு திரும்பவில்லை.

இந்த நேரத்தில் யார் வீட்டுக்கு ஃபோன் செய்து என் தங்கை அங்கே இருக்கிறாளா என்று கேட்க முடியும்?.

புவனேசுவரி, தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தபோது வாயிலில் கார் நிற்பதுபோல மெல்லிய ஓசை கேட்டது. உயர் ரகக் காரின் அடங்கிய ஓசை.

தேவிமாராணிதான் நேரமாகிவிட்டது என்று அவளுடைய தந்தையின் காரில் லோகேசை அனுப்பியிருந்தாளோ.

அவசரமாகச் சென்று பார்க்கும் போது, யாரோ லோகேசுவரியை விட்டுப் பிரிந்து போய்க் காரில் ஏறுவது தெரிந்தது.

விட்டுப் பிரிந்து.

ஒட்டி நின்றுவிட்டு விட்டுப் பிரிந்து செல்கிறானா?

ஒட்டி நின்று என்றால் அணைத்துக் கொண்டா?



வயிறு காலியாகி விட்ட உணர்வில் புவனேசுவரி திகைத்து நிற்கையில் தன் சாவியைக் கொண்டு கதவைத் திறந்து கொண்டு, லோகேசுவரி வீட்டினுள் வந்தாள்.

விளக்கைப் போடாமலே ஷூக்களைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு ஓசையற்று உள்ளே நுழையப் போனவள் "யார் அது லோகேஸ்?" என்று குரலைக் கேட்டதும் துள்ளிக் குதித்தாள்.

"விளக்கைப் போட்டுக் கொண்டு இருப்பதற்கென்ன அக்கா?" என்று ஸ்விட்சைப் போட்டு விட்டு காலணிகளை அவற்றுக்குரிய இடத்தில் வைத்தாள்.

அடுத்த கையில் இருந்த பைகளை சின்ன சோஃபாவில் வீசிப் போட்டவள், "இது என்ன..." என்று கேள்வி கேட்க முற்பட்ட தமக்கையை கை உயர்த்தி அடக்கினாள்.

"நடு ராத்திரி. இதுவரை ஃபோகஸ் ஒன்னில் நடனம் ஆடி ஆடி என் கால்கள் கெஞ்சுகின்றன. இதற்குமேல் நின்றால் நின்றபடியே தூங்கி விடுவேன். அதனால் நீங்கள் கேட்க வேண்டியதை எல்லாம் விடிந்த பிறகு கேட்டுக் கொள்ளுங்கள். குட்நைட்" என்று கூறியபடியே உள்ளே போனவள், படுக்கையில் தொப்பென்று விழும் சத்தம் கேட்டது.

பாறையாய்க் கனத்த கால்களை நகர்த்தி உள்ளே சென்று பார்த்தால் அவளது படுக்கையின் குறுக்கே குப்புறப்படுத்துத் தூக்கிக் கொண்டிருந்தாள், அவளுடைய அருமைத் தங்கை.

தவறே செய்த போதும், அதைத் தமக்கை அறிந்துவிட்டாள் என்ற போதும், லோகேசுவரி அடித்துப் போட்டாற்போலக் கட்டையாக உறங்கிவிட கண் மூடாமல், மூட முடியாமல் புவனேசுவரி விழித்துக் கொண்டு கிடந்தாள்.

தன்னை அறியாமல் விழி மயங்கிய ஒரு சில தருணங்களிலும், முகம் தெரியாத யாரோ தங்கையை அணைப்பது போலக் கனவு வந்துவிட, அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்தாள்.

அப்படி விழித்தெழும் ஒவ்வொரு தடவையும், அடுத்த படுக்கையில் கிடந்தவளின் அயர்ந்த தூக்கம், அவளைப் பார்த்துக் கெக்கலி கொட்டுவது போல இருந்தது.

படுத்திருக்க மாட்டாமல் முன்னறைக்குச் சென்றாள்.

சோஃபாவில் லோகேஸ் வீசியிருந்த பைகள் கிடந்தன.

ஒரு கணம் யோசித்துவிட்டுப் பைகளை எடுத்துப் பார்த்தாள்.

எல்லாம் மேகாமாலில் உள்ள கடைகளின் பைகள். அங்கே போய் ஷாப்பிங் செய்திருக்கிறாள். செய்திருக்கிறார்கள். ஏனெனில், அங்கெல்லாம் சென்று இவ்வளவு வாங்குவதற்கு லோகேசுவரியிடம் காசு கிடையாது.

ஒருவேளை, மலிவு விலைப் பொருட்களோ?

சட்டெனப் பைகளைப் பிரித்துப் பார்த்தாள், புவனேசுவரி.

மலிவு விலையா? அப்படி ஒன்று உண்டு என்றுகூட அறியாதவர்கள் மட்டுமே வாங்கக் கூடிய விலை உயர்ந்த ஆசைகள், சம்கியும், கண்ணாடியும், பல வண்ணக் கற்களும் தைத்தும் ஒட்டியும், உடைகள் கதகதத்தன. ஒரு செட் நகை கூட இருந்தது.



கடவுளே.. எவனோ ஒருவன் லோகேசுக்கு இவ்வளவு வாங்கிக் கொடுப்பது என்றால் மேலே எண்ணிப் பார்க்கக்கூட, புவனேசுவரியால் முடியவில்லை.

நாகரீகம் என்று நினைத்துக் கொண்டு அவளுடைய அருமைத் தங்கை, நாசப் படுகுழியில் விழுந்துவிட்டளா?

'ஷுகர் டாடி' என்று பணம் படைத்த சபலக்காரக் கிழவர்களுடன் நெருக்கமாகப் பழகிக் கொண்டு, அந்த நெருக்கத்தின் விலையாக விலை உயர்ந்த பொருட்களை வாங்கி அனுபவகிக்கும் நாகரீகம், இளம் பெண்களிடையே வளருவதைக் குறித்து, இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் அவள் வேலை பார்க்கும் பள்ளியுடைய தலைமை ஆசிரியர் வருத்தத்துடன் குறிப்பிட்டிருந்தார்,

அப்படியெல்லாம் யாரும் நடக்கமாட்டார்கள். இது ஏதோ வதந்தி என்று புவனேசுவரி , அவரிடமே எதிர்த்து வாதிட்டாள்.

எல்லோரையும் உன்னைப் போல எண்ணாதே, மகளே. உனக்கு உலகம் தெரியவில்லை என்று முடித்தார் அவர்.

கடைசியில், அவளுடைய தங்கையே, அந்தக் கூட்டத்தில் ஒருத்தியா?

இல்லை, இல்லை. அவளைக் கொண்டுவந்து விட்டுவிட்டுப் போனவன் வயதானவன் அல்ல என்று தங்கைக்கு ஆதரவாய் எண்ணமிடும்போதே, மீண்டும் சோர்ந்தாள் அவள்.

இளைஞனோ, கிழவனோ, தப்பு ஒரே விதம்தானே?

இதை இனியும், சும்மா விட முடியாது என்று முடிவு செய்து மறுநாள் காலையிலேயே பள்ளிக்கு ஃபோன் செய்து உடம்பு சரியில்லை என்று விடுமுறை போட்டுவிட்டு, லோகேசுவரி எழுவதற்காகக் காத்திருந்தாள் அவள்.

அவளைப் பிடித்து உலுக்கி எழுப்ப வேண்டும் என்று ஆத்திரம்தான்.

ஆனால் அயர்ந்து தூங்கும்போது எழுப்பினால் சின்னவள் அதற்கு வேறு அலறுவாள். பேசித் தீர்க்க வேண்டிய முக்கியப் பிரச்சனையை பின்னே தள்ள விட்டுவிடக்கூடாதே.

பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு புவனேசுவரி காத்திருந்தாள்.

ஒன்பது மணிக்கு மேலாக, ஒரு வழியாகச் சோம்பல் முறித்தபடி எழுந்த தங்கைக்குக் காஃபியை ஊற்றிக் கொடுத்துவிட்டு, அவளையே பார்த்தபடி, புவனேசுவரி உட்கார்ந்திருந்தாள்.

சிறு வியப்புடன் "பள்ளி என்ன ஆயிற்று?" என்று கேட்டாள் லோகேசுவரி.

"இன்று போகவில்லை" என்றாள் பெரியவள் சுருக்கமாக.

பாதி மூடிய விழிகளின் வழியே தமக்கையை நோட்டம் விட்ட சின்னவள், "என்னக்கா, வைத்த கண் வாங்காமல் பார்க்கிறாயே,. என் முகத்தில் தேன் எதுவும் வடிகிறதா? எனக்கு அப்படி ஒன்றும் உணர்வில்லையே" என்று முகத்தைத் தடவியவாறு விளையாட்டாகக் கேட்டாள்.

எதிலும் லோகேசுவரிக்கு ஓர் அலட்சியம் உண்டுதான். ஆனாலும் இவ்வளவு திண்ணக்கமா?



பேச மாட்டாமல் மூத்தவளுக்குத்தான் குரல் நடுங்கியது. ஒன்றும் பேசாமல் முன்னறைக்குச் சென்று முன் தினம் தங்கை கொணர்ந்த பார்சல்களை எடுத்துக் கொண்டு வந்து அவள் முன் போட்டாள். "இதெல்லாம் என்ன?" என்றாள் ஆத்திரத்துடன்.

பார்சல்கள் பிரிக்கப்பட்டிருப்பதைக் கவனித்து "பார்த்து விட்டீர்களா? ரொம்ப அழகாக இல்லை?" என்று ஆர்வமாகக் கேட்டவாறு அவற்றைக் கடை பரப்பி ரசித்தாள் லோகேசுவரி.

"லோகேஸ், இதெல்லாம் வாங்கப் பணம் ஏது?"

"பணம் நான் கொடுக்கவில்லை அக்கா. என்னிடம் பணம் கிடையாது என்று உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் கொடுக்கும் கைப்பணம் "இருப்பதில் விலை குறைவான இந்தச் சிவப்பு மேச்சிக்கே போதாதே" என்று சந்தடி சாக்கில் தன் குறையை வெளிப்படுத்தினாள்.

சமயத்தில் எரிச்சல் மூட்டுவதில் லோகேசுவரிக்கு நிகர் அவள் மட்டும்தான். மூத்தவள் என்ன கேட்கிறாள் என்று அவள் புரியாமலா இருக்கிறாள்? வேண்டும் என்றே உப்பு சப்பில்லாத ஏதோ ஒரு குறையை இப்போது கிளப்புகிறாள்.

இந்த அளவு கைப்பணம் கொடுப்பதற்கே, அக்கா எவ்வளவு சங்கடப்பட வேண்டியிருக்கிறது என்று விளக்கப் போனால், அப்போதைய பிரச்சனையை பேச முடியாமலே போய்விடக்கூடும்.

ஒரு வேளை அதற்காகத்தான் இந்தக் குத்தலோ?

எனவே அவளது குறிப்பை ஒதுக்கி "இன்றைக்கு என்னவோ நான் கொஞ்சம் முட்டாள் ஆகிவிட்டேன் என்று தோன்றுகிறது. நீ பணம் கொடுக்காமல் இந்தப் பார்சல்கள் எல்லாம் நம் வீட்டுக்கு எப்படி வந்தன என்று எனக்குப் புரியவே இல்லையே" என்று கிண்டலாகவே வருத்தப்பட்டுவிட்டு "புத்திசாலியான நீதான் எனக்கு விளக்கிச் சொல்லேன்" என்றும் கேட்டுக் கொண்டாள்.

உதட்டைக் கடித்துக் கொண்டு ஒரு கணம் மௌனமாக இருந்து யோசித்த லோகேசுவரி, ஒரு முடிவுக்கு வந்தவள் போலத் தோளைக் குலுக்கினாள். "யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று வைத்திருந்தோம். ஆனால் இனி நீங்கள் விட மாட்டீர்கள். உங்களிடம் ஒரேயடியாக மறைக்கும் ஆசை, எனக்கும் இல்லை. அக்கா, கேட்டுக் கொள்ளுங்கள். இதையெல்லாம் எனக்கு வாங்கித் தந்தது சுகன்தான்" என்றாள் நிதானமாக.

"நேற்று இரவில் உன்னை இறக்கி விட்டுவிட்டுப் போனவன்."

"ஆமாம்" என்றாள் தங்கை நிமிர்வுடனேயே.

"நீ இவ்வளவு இறங்கிப் போவாய் என்று நான் நினைக்கவே இல்லையே. இன்பன் சொன்னபோது அவரையல்லவா, மட்டம் தட்டி விரட்டிவிட்டேன்" என்றாள் தமக்கை வேதனையுடன்.

"வாழ்க்கையில் முதல் முறையாக ஒரு காரியம் சரியாகச் செய்திருக்கிறீர்கள்" என்று கிண்டலாகப் பாராட்டினாள் லோகேசுவரி. "ஆனால் சரியான காரியம்

செய்துவிட்டு என்னைத் திட்டுவானேன்?"

"திட்டாமல் என்ன செய்வது? எவனோ ஒருத்தன் இவ்வளவு விலை உயர்ந்த பொருட்களைப் பரிசு கொடுத்தால், வெட்கமின்றி, அதை வாங்கிக் கொண்டு வந்து நிற்கிறாயே. அவன் என்ன எண்ணி..."

"போதும்... அக்கா... என்னைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறவர் எனக்குப் பரிசு கொடுத்தால், அதைப் பெற்றுக்கொள்ள நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? மணந்து கொள்ளப் போகிற பெண்ணுக்குச் சிறு பரிசு கொடுப்பதற்குக் கூடக் கணக்குப் பார்க்கும், அந்தக் கஞ்சப் பிசுநாரியின் சகவாசம், உங்களையும் ரொம்பவே கெடுத்து விட்டது என்று தோன்றுகிறது" என்று படபடவென லோகேசுவரி பொரியவும் புவனேசுவரி அயர்ந்து போனாள்.

மணந்து கொள்ளப் போகிறவன். இந்த அளவுக்கு வந்திருக்கிறது. கூடப் பிறந்தவளிடம் ஒரு வார்த்தை சொல்லவில்லையே இந்தப் பெண்.

அதைக் கேட்டபோது "கொஞ்ச நாள், அவருடைய அண்ணனின் திருமணம் முடிகிற வரையில், யாரிடமும் கூற வேண்டாம் என்று சுகன் சொன்னார்" என்றாள் தங்கை.

ஏனோ மனம் கலங்கியது மூத்தவளுக்கு.

"லோகேஸ், கோபப்படாமல் கொஞ்சம் யோசி. இது, ஏதோ... நீ என் தங்கை. உன் நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன். யோசித்துப் பார்த்தால் திருமணப் பேச்சை எடுக்காமல் தள்ளிப் போடுகிற மாதிரி இல்லை? அவருடைய அண்ணனுக்கு எப்போது திருமணம் ஆகி அதன் பின் இந்த சுகனின் கல்யாணம் பற்றிய பேச்சே எப்போது எடுப்பார்களோ..."

நல்ல வேளையாக, லோகேசுவரி பதில் சொன்னாள். அக்கா தனக்காகத்தான் யோசிக்கிறாள் என்று புரிந்து கொண்டாளோ, என்னவோ. நிதானமாகவே, "அப்படியெல்லாம் அதிக நாள் தள்ளிப் போகாது அக்கா. அவர் அண்ணனுக்குப் பெண் தயாராம். அவள் ஏதோ இவர்களின் தொழில் தொடர்பாக மேல் படிப்புக்காக வெளிநாட்டுக்குப் போயிருக்கிறாளாம். இன்னும் சில மாதங்களில் வந்து விடுவாளாம். அவள் வந்த உடனேயே அண்ணனின் திருமணமாம். அப்புறம் உடனேயே இவரதுதானாம். அண்ணன் திருமணத்தின் போதே வீட்டில் சொல்லி விடுவதாகச் சத்தியம் செய்திருக்கிறார்" என்று தமக்கைக்கு விளக்கினாள்.

ஆனால் "எதற்கும் திருமணம் பற்றி வெளிப்படையாகச் சொல்லும் வரை அவரோடு தனியே சுற்றுவதையும் இப்படி வாங்குவதையும் விட்டு விடேன்" என்று பெரியவள் சொன்னதும் அவளுக்குக் கோபம் வந்துவிட்டது.

"எனக்கு ஒரு நல்லது என்றாலே உங்களுக்குப் பிடிக்காதா அக்கா? தேவிமா போலச் சினேகிதிகள் வீட்டுக்குப் போய் வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டால் அதற்கு ஆயிரம் தடைகள் சொல்லுவீர்கள். எத்தனை ஆண்டுகளாக இந்த மாதிரித் துணிமணிகளுக்காக, வசதிக்காக ஏங்கினேன். கடவுளாகப் பார்த்து அதற்கு ஒரு வழி செய்து கொடுத்தால் அதையும் கெடுக்கப் பார்க்கிறீர்களே" என்று ஆத்திரப்பட்டாள்.



"என்ன லோகேஸ் இப்படிப் பேசுகிறாய்?" என்றாள் மூத்தவள் வருத்தத்துடன். "திருமணம் என்று வெளியாகும் வரை ஒதுங்கி இரு என்றுதானே சொன்னேன். அதற்குப் போய்க் கெடுப்பது என்று என்னவெல்லாம் சொல்லுகிறாய்?"

"பின்னே என்னக்கா? அந்தத் திருமணம் நடக்க இன்னும் நாலைந்து மாதம் ஆகலாம். அதுவரை சந்திக்காமல் ஒதுங்கினால், அப்புறம் சுகன் என்னை மறந்துவிட மாட்டாரா? அப்புறம் இதெல்லாம் எனக்கு எப்படிக் கிடைக்கும்?" என்று தங்கை கேட்கவும் புவனேசுவரிக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"மறப்பதா? என்னடீ சொல்லுகிறாய்? திருமணம் செய்து கொள்கிற அளவு காதலிப்பவர், எப்படி மறப்பார்?"

"மறக்க மாட்டாரா? கண்ணில் படாதது, கருத்தில் இருந்தும் மறைந்து போகும் என்று படித்தது இல்லையா? சுகன் ஒன்றும் இன்பன் மாமா மாதிரி மரக்கட்டை திணுசு இல்லை. உற்சாகமும், துடிதுடிப்பும் உள்ளவர். இன்னும் இன்னும் என்று ஏதாவது செய்து கொண்டே இருப்பவர். நான் எங்கோ இருந்து கொண்டு நீயும் அப்படி இருக்க வேண்டுமென்றால், அவரால் முடியுமா? அத்தோடு, நல்ல பண வசதி வேறு. பச்சையும் சிவப்புமாய் அமெரிக்கன் டாலரும், நம் ரிங்கேட்டும் கட்டுக் கட்டாக எவ்வளவு வைத்திருக்கிறார் தெரியுமா? அதற்காக அவரை எத்தனை பேர் சுற்றுகிறார்கள். அவர்களிடமிருந்து அவரைப் பாதுகாக்க வேண்டாமா? சுகன் கூடவே நான் இருந்தால்தானே என் உரிமையை நிலை நாட்டி அந்தப் பெண்களை விரட்ட முடியும்? அத்தோடு, இது போல சுகன் எனக்கு வாங்கித் தருவதைப் பார்க்கும் போது அந்தப் பெண்களுக்கும் விஷயம் புரியும். எனக்கும் லாபம். நான் ஆசைப்பட்டதை எல்லாம் வாங்கிக் குவிக்கலாம்.

புவனேசுவரியின் மனம் கலங்கியது. அந்த சுகனின் பரிசுகளால் தங்கையின் மனம் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருப்பது போல அவளுக்குத் தோன்றியது. இவைகளுக்காக லோகு இவ்வளவா ஏங்கினாள். கொடிதிலும் கொடிது இளமையில் வறுமை என்று சும்மா சொல்லவில்லை போலும். அந்தப் பரிசும் பணமும் இல்லாவிட்டால் இந்த முடிவுக்குத் தங்கை வந்திருப்பாளா என்பதே இப்போது பெரியவளுக்குச் சந்தேகமாக இருந்தது.

"என்னவோ எல்லாம் தப்பு போலத் தோன்றுகிறதே, லோகும்மா" என்றாள் கவலையுடன்.

அலட்சியமாகத் தலையைச் சிலுப்பினாள் தங்கை. "ஒரு தப்பும் கிடையாது. பழங்காலக் கட்டுப் பெட்டிகள் போல இல்லாமல் நீங்கள்தான் காலத்துக்கு ஏற்றபடி மாறுவதற்குக் கொஞ்சம் முயற்சியுங்கள். என் விஷயத்தை நானே பார்த்துக் கொள்வேன். நீங்கள்தான்... ச்சு... அது உங்கள் விஷயம்" என்று முடித்தாள்.

இன்பநாதனைப் பற்றிய எதையோ சொல்லத் தொடங்கிவிட்டுத் தங்கை நிறுத்தியிருக்கிறாள் என்று புவனேசுவரிக்குப் புரிந்தது. இருவருக்கும்தான் இப்போது எல்லாம் பொருத்தமாக இருக்கிறதே. எனக்குப் பிடிக்காவிட்டாலும் உன் விஷயத்தில் நான் தலையிடாதது போல் என் விஷயத்தில் நீ மூக்கை நீட்டாதே என்று சொல்லாமல் சொல்லுகிறாளா?



லோகேசுவரி நேரிடையாகவே அப்படிச் சொல்லக் கூடியவள்தான். ஆனால் அதற்காகப் புவனேசுவரி சும்மா இருந்து விட முடியாதே. பெரியவள் என்பதோடு, அன்னையிடம் ஒத்துக் கொண்ட பொறுப்பும் இருக்கிறதே. நல்ல வார்த்தையில் கேட்காவிட்டால் அம்மா பெயரைச் சொல்லி அதட்ட வேண்டியதுதான்.

அந்த முடிவோடு சுகனை நேரில் சந்திக்க வேண்டும் என்று தங்கையிடம் சொன்னாள் தமக்கை. ஆனால் சுகன் அந்தக் கோரிக்கையைத் தட்டிக் கழித்த விதம் புவனேசுவரியின் வயிற்றில் புளியைக் கரைத்ததோடு, லோகேசுவரியின் எதிர்காலத்தையும் கேள்விக் குறியாக்கியது.

# 3

சுகனை நேரில் பார்க்க வேண்டும் என்று புவனேஸ்வரி கேட்டது, அவளுடைய தங்கைக்கே, முதலில் அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

"இந்த விஷயத்தை வெளியே சொல்ல வேண்டாம் என்றார். நீங்கள் பார்க்க வேண்டும் என்றால், எப்படி?" என்று தயங்கினாள்.

"அவர் வீட்டில், அண்ணன் திருமணத்துக்காகக் காத்திருப்பதால் தடுக்கக்கூடும் என்றுதானே, அப்படிச் சொல்லுகிறார்.! அவருடைய குடும்பத்துக்குத்தானே, தெரியக் கூடாது.! நம் வீட்டில், அப்படி ஒரு தடையும் இல்லையே.! நான் தடுக்கப் போவதே இல்லை.! என் தங்கையுடைய வருங்காலக் கணவர்.! பார்த்தால், அடையாளம் கூடவா, தெரியாமல் இருப்பது? என் செல்லத் தங்கையும், அவளுடைய அவரும் பேசிப் பழகுவதைப் பார்க்க, உன் ஒரே உறவு, எனக்கு ஆசையாக இராதா?" என்று குழைந்து, வழிந்து, தங்கையை ஒப்புக்கொள்ள வைத்தாள்.

"எனக்கே, அவர் உன்னோடு நன்றாகப் பழக வேண்டும் என்று, ஆசைதான் அக்கா.!" என்று, லோகேசுவரி சொன்னபோது, அவளுக்கு மகிழ்ச்சியாகவும் இருந்தது.

ஆனால், அக்காவும் தங்கையும் ஆசைப்பட்டதுதான் லேசில் நடப்பதாக இல்லை.!

முதலில், லோகேசுவரி சொன்னது போல, விஷயத்தை விளம்பரப்படுத்த வேண்டாம் என்றானாம். லோகேஸ் ரொம்பவும் எடுத்துச் சொன்ன பிறகு, வீட்டுக்கு வர ஒப்புக் கொண்டிருக்கிறான்.! ஆனால், அதையும் இன்று நாளை என்று நாள் கடத்தினான்.

அவன் வருவதாகச் சொன்னான் என்று, புவனேசுவரி, மூன்று தினங்கள், பள்ளிக்கு லீவு போட்டுவிட்டு, கேசரியும் வடையும் செய்து வைத்துக்கொண்டு காத்திருந்ததுதான் மிச்சமாயிற்று.!

கொசுறாகக் கிடைத்தது. "என்னம்மா, அடிக்கடி விடுமுறை எடுக்கிறாய்? பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறவள்.. கொஞ்சம் பொறுப்போடு நடந்துகொள்.!" என்று தலைமை ஆசிரியரிடம் ஒரு குட்டு.!



கடைசி நேரத்தில், அந்த சுகனுக்கு, ஏதாவது வேலை வந்துவிடும்.!

"அவர், நம்மைப் போலவா, அக்கா? இந்த பொருட்காட்சிக்கே, பல லட்சம் பெறுமானமுள்ளது கொண்டு வந்திருக்கிறார்கள்.! அதைப் பாராமல், இங்கே வந்தாக வேண்டும் என்று சொல்ல முடியாதில்லையா?" என்று சமாளித்த தங்கையைப் பார்க்கையில், புவனேசுவரிக்குப் பரிதாபத்தோடு, தவிப்பாகவும் இருந்தது.!

இவன், லோகேசை ஏய்த்து விடுவானோ? திருமணத்தில் உறுதியாக இருப்பவனுக்கு, காதலியுடைய குடும்பத்தைச் சந்திக்க இவ்வளவு தயக்கம் ஏன்?

சுகனைச் சந்தித்தே ஆக வேண்டும் என்று பிடிவாதத்தோடு, அவன் தங்கியிருக்கும் 'ஹில்டன் ஹோட்டலு'க்கே போய்ப் பார்க்கலாம் என்றாள் பெரியவள்.

அவனிடம் கேட்டதற்கு, அவனுடைய அண்ணன் வந்திருப்பதால், அந்தப் பக்கமே தலை காட்டக் கூடாது, என்றுவிட்டான் சுகன்.!

மனம் பொறுக்காமல், தங்கையிடம் சொல்லாமலே, அந்த இந்தியப் பொருட்காட்சிக்கே போனாள் புவனேசுவரி.!

அந்த சுகனைக் கண்ணாலாவது பார்த்தே ஆக வேண்டும் என்கிற வேகம்.! அவன் எப்படிப்பட்டவன் என்று, கொஞ்சமேனும் கணிக்கலாமே.!

சுகன் குடும்பத்தின் முக்கியத் தொழில் காஃபியும் வாசனைத் திரவியங்களும்.! பல திணுசு காஃபிக் கொட்டைகள், தூள் திணுசுகள், 'இன்ஸ்டன்ட்' வகைகள் என்று, காஃபியே, பிரமிக்க வைத்தது.! அடுத்து, ஏலம், கிராம்பு, மிளகு போன்றவைகளும் திணுசுவாரியாகப் பதப்படுத்தப்பட்டு, வைக்கப்பட்டிருந்தன.!

இந்தப் பொருட்களை, அவர்கள் உலகம் முழுவதற்கும் ஏற்றுமதி செய்துகொண்டு இருந்தார்கள்.

அது பற்றிய விவரங்களைப் பார்ப்பது போலப் பாவனை செய்துவிட்டு, "எனக்கு இன்னும் கொஞ்சம் விவரங்கள் தேவை. இன்னும் கொஞ்சம் பொறுப்பானவர் யாரிடமாவது பேச முடியுமா?" என்று, பணப் பொறுப்பில் அமர்ந்திருந்த மனிதரிடம், புவனேசுவரி வினவினாள்.

"என்ன விவரம் வேண்டும்?" என்று கேட்டார் அவர். புள்ளி விவரங்கள், இதோ இந்தக் குறிப்புகளில் இருக்கின்றன. "என்று அருகில் இருந்த சில காகிதங்களை எடுத்துக் கொடுத்தார் அவர்.

"அதில்லை. எனக்கு... வேறுமாதிரி விவரங்கள் தேவை. என் தோழியுடைய தந்தை, இந்த 'இன்ஸ்டன்ட்' காஃபி இறக்குமதி பண்ணலாம் என்று பார்க்கிறார். ஆனால் அதற்கான கமிஷன் பற்றித் தீர்மானம் எடுக்கக்கூடிய நிலையில்.. கொஞ்சம் பெரிய பதவியில் உள்ள யாரிடமாவது பேசிவிட்டு வரச் சொன்னார்..."

அவளை ஏற இறங்கப் பார்த்தார் அவர்.

சற்று நல்ல சேலையை எடுத்துக் கட்டிக்கொண்டு வந்த தன் கெட்டிக்காரத்தனத்தை புவனேசுவரி உள்ளூர மெச்சிக் கொண்டபோது, அது சரியே என்பது போலக் கணக்காளர் பேசினார். "உட்காருங்கள் அம்மா." என்று உபசரித்துவிட்டு, "கமிஷன் பற்றியெல்லாம் முடிவு செய்வது, எம்டி தான். அவர் நாளை

மறுநாள் வருவார். இப்போது, பொறுப்பு, அவருடைய தம்பி.. சுகன் தம்பியும் ஒரு டைரக்டர்தான், அவர்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவரிடம் பேசுவதானால்... கொஞ்சம் முன்னால்தான், அவரும் வெளியே போனார். நாலாவது... ஐந்தாவது ஸ்டாலில் இருப்பார்." என்றவரின் குரலில், சற்றே ஏளனம் தொனித்ததோ.

ஆனால், அதைவிடப் பெரிய அதிர்ச்சி, நிறுவனத்தின் எம்டியான அண்ணன், நாளைதான் வருவான் என்ற தகவல். அவன் வந்திருப்பதால் அல்லவா, அவன் தங்கியிருந்த ஹோட்டல் பக்கம் வரக்கூடாது என்று, சுகன் சொல்லியிருந்தான்.!

ஒரு வேளை... ஒரு வேளை அவனுடைய அண்ணன், இங்கும் அங்குமாக ஷட்டில் அடித்துக்கொண்டு இருக்கிறானோ? முக்கிய முடிவுகளை எடுக்கிறவன் அவன்தான் என்றால், அது அவசியமாகவே இருக்கக்கூடும். ஆனால், நேற்று முன்தினம் அவன் இங்கே இருந்தானா என்று என்ன காரணம் காட்டி விசாரிப்பது?

யோசனையோடு, "அவர் மிஸ்டர் சுகன் திரும்பி வர நேரம் ஆகுமா?" என்று தம்பியையே விசாரித்தாள் அவள்.

"அதை, நான் எப்படியம்மா சொல்ல முடியும்? அங்கே அவருக்கு என்னென்ன வேலையோ? அது எப்போது முடியுமோ? நான் வெறுமனே, பில்லைப் போட்டுப் பணத்தை வாங்குகிற அலுவலுக்கு வந்தவன்தானே?"

கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்ததாலோ, என்னவோ, இப்போது அந்தக் கணக்காளரின் முகத்திலேயே மாறுதலைக் கண்டுகொள்ள அவளால் முடிந்தது.!

காரணம்?

"சார், நான் இன்னும் சில ஸ்டால்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது.! மிஸ்டர் சுகனின் உடை, தோற்றம் பற்றிக் கொஞ்சம் சொல்கிறீர்களா? செல்லுகிற வழியில் பார்க்க நேர்ந்தால், பேசிக் கொள்வேனே. என் வேலையும், அப்படியே முடிந்துவிடும்.!"

ஒரு கணம் தயங்கிவிட்டுத் தலையாட்டினார், கணக்காளர். "வெள்ளை ஜீன்ஸ் பாண்ட், அம்மா.! மேலே, சிவப்பும் கறுப்புமாகக் கட்டம் போட்ட டீஷர்ட். கறுப்புக் கண்ணாடி.. விலை உயர்ந்த ரகம்.. ரேபர்ன்., குடும்ப வாகு, நல்ல உயரம். ஒல்லி, பார்க்கப் பளிச்சென்று இருப்பார்.. மன்னித்துக் கொள்ளுங்கள் தாயி. இதற்கு மேல், எனக்குத் தெளிவாகச் சொல்லத் தெரியவில்லை.! ஆங், முக்கியமானதை விட்டு விட்டேனே.! எங்கள் பாட்ஜ் குத்தியிருப்பார்.! இதுபோல்." என்று, தன் தோள்ப்புறமாகக் குத்தியிருந்ததைக் காட்டினார்.

இனி இலகுவாகக் கண்டுபிடித்து விடலாம் என்று புவனேசுவரி எண்ணமிடும் போதே, "ஆனால், உடைக்குப் பொருத்தமாக இல்லை என்று, தம்பி அதைக் கழற்றிப் போடாமல் இருக்க வேண்டும். எதற்கும் போய்ப் பாருங்கள். உங்கள் அதிருஷ்டமும், எங்கள் நல்ல நேரமும் சரியாக இருந்து, அவர் உங்கள் கண்ணுக்குத் தென்படட்டும்.!" என்றுரைத்து, அவளை வழியனுப்பி வைத்தார் அவர்.

என் தங்கையின் நேரம் சரியாக இருப்பதுதான், எல்லாவற்றையும் விட முக்கியம் என்று எண்ணியவாறே, நாலாவது ஸ்டாலை நோக்கி நடந்தாள் புவனேசுவரி.!

அங்கே அவன் இல்லை. என்ன செய்வது என்று யோசித்தபடியே அடுத்த



ஸ்டாலுக்குள் அவள் நுழையப் போனபோது, அதனுள்ளிருந்து, அவனே வெளியே வந்தான்.

கணக்காளர் சொன்ன மாதிரியே, அடையாள வில்லையை அவன் கழற்றியிருந்த போதும், அவன்தான் சுகன் என்று, புவனேசுவரிக்குத் தெளிவாகவே தெரிந்து போயிற்று.

கண்ணில் இருக்க வேண்டிய ரேபர்ன், கையில் சுழன்று கொண்டிருந்தது. மற்றபடி, கணக்காளர் சொன்ன அடையாளம் அச்சாய்ப் பொருந்தியது. அதிகப்படியாகக் கண்களில் தெரிந்த ஓர் அலட்சியம்.! உடம்பில் காணப்பட்ட ஒரு திமிர்வு! கையில் மாட்டியிருந்த ரோலக்ஸ். வைர மோதிரம்.

நான் அழகன்., பணக்காரன் என்று, அவனது ஒவ்வோர் அசைவும் சொல்லாமல் சொன்னது.! இவனிடம், லோகேசுவரி மயங்கியதில் அதிசயம் என்ன இருக்கிறது?

மயங்கி நிற்பது, லோகேஸ் மட்டும் அல்ல என்று, தொத்தும் கிளியாய், அவன் தோளைப் பற்றியபடி நின்ற ஓர் அழகி காட்டிக் கொண்டாள்.

தன் மயக்கத்தைக் காட்டிக் கொண்டது மட்டுமல்ல.!

அவன் முகத்தைக் கையால் திருப்பி, "ஏன்லா, இவ்வளவு அழகாய் இருக்கிறாய்? அங்கே பார், வழியில் நின்று, ஒன்று, உன்னையே பார்த்து 'ஜொள்ளு' விட்டுக்கொண்டு இருக்கிறது.!" என்றாள்.

சுகன் திரும்பிப் பார்த்த பிறகுதான், அந்தப் பெண் தன்னைப் பற்றியே அவ்வளவு இகழ்ச்சியாகப் பேசினாள் என்பதை உணர்ந்து, புவனேசுவரியின் முகம் கன்றியது.!

அதற்குள் அவளை ஒரு தரம் பார்த்துவிட்ட சுகன் முன்னே வந்து, "எதற்காகவாவது, என்னைத் தேடி வந்தாயா?" என்று ஆங்கிலத்தில் கேட்டான்.

கேள்வியைக் கௌரவமாகவே எடுத்துக் கொள்ளலாம்.! விழி மலர்த்தி அவன் கேட்ட விதம்.. அதிலும், ஆவல் இருந்ததே தவிர, ரொம்ப அயோக்கியத்தனமாக எதுவும் இல்லை.! ஆனால், "என்னைத் தேடி வரும் பெண்களுக்கு, நான் எதையும் மறுப்பது இல்லை.!" என்று கண் சிமிட்டி, அவன் முறுவலித்ததுதான், அவளை உறுத்தியது.!

அந்த முறுவல், எதிராளியை விழத் தட்டுவதற்காகவே செய்யப்பட்டது.! விழத் தட்டும் என்று, அறிந்து செய்யப்பட்டது.!

எந்தப் பெண்ணிடமும் இவன் இப்படித்தான் என்றால், லோகேசுவரி மட்டும் என்ன தனி? அவள் தன்னைத் 'தனி'யாக நினைப்பதில், ஏதாவது அர்த்தம் இருக்கிறதா? அல்லது, அவள் தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்கிறாளா?

அறிந்தே ஆக வேண்டும்.! அதையும் எவ்வளவு சீக்கிரமாக முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாக அறிந்து கொண்டாக வேண்டும்.!

"என்னைத்தான் தேடி வந்ததாகத் தோன்றுகிறது.!" என்று கேட்டவனின் பார்வை, பக்கத்தில் பொறுமையற்று நின்ற கிளியையும், அவளையும் மாறி மாறிப் பார்த்தது.! இருவரில் யார் மேல் என்று அளவிடுவது போல.!



அருவருப்பாய் உணர்ந்து, புவனேசுவரி சட்டெனப் பேசினாள். "நான் தேடி வந்தவர் நீங்கள்தான் என்பதற்கான அடையாளம் எதையும் காணோமே, உங்கள் நிறுவன அடையாளம்.!" என்றாள் பரபரப்பு காட்டாத, அமைதியான குரலில்.

"அடையாளம் இல்லாவிட்டாலும் பேசலாமே.!" மீண்டும் வசியப் புன்னகை.!

என்ன பைத்தியக்காரத்தனம்.! பெண் என்று மட்டைக்குத் துணியைச் சுற்றி வைத்தாலும் இளிப்பான் போல இருக்கிறது.! இத்தனைக்கும் வயது கூட அவள் அளவுதான் இருக்கக்கூடும்.! இருந்திருந்து, இவனிடமா, லோகேஸ் மனதைப் பறிகொடுக்க வேண்டும்?

பெருமூச்சை அடக்கிக் கொண்டு, "நீங்கள் 'உதயம்' காஃபி நிறுவனத்தவரா? அங்கே, உங்கள் அடையாளம் சொன்னபோது, பாட்ஜ் குத்தியிருப்பீர்கள் என்றார்கள்." என்றாள் அமைதியாகவே.

மறுபடியும் புன்னகை.! "என் உடைக்கு, அந்த நீலக் கலர் பாட்ஜ் கொஞ்சமும் பொருந்தவில்லை.! அதனால்தான்... என்று பைக்குள் கையை விட்டு, பாட்ஜை எடுத்துக் காட்டினான். "இனிப் பேசுவோமா? ஏதாவது, ரெஸ்டாரண்டில் உட்கார்ந்து, சாப்பிட்டுக்கொண்டே பேசலாம்.! அல்லது, மெகா மால், ஜஸ்கோ எங்காவது போய், ஷாப்பிங் செய்து கொண்டே பேசுவோமா?"

நெஞ்சு எரிந்தது புவனேசுவரிக்கு.!

இப்படித்தான் என் தங்கையை விழத்தட்டினாயாடா என்று, அவனது சட்டையைப் பற்றி உலுக்க வேண்டும் போல, அவள் மனம் துடித்தது.!

ஆனால், அவனால் அழைக்கத்தானே முடியும்? அவன் அழைத்தபோது, கூடப் போனது, அவளது தங்கை செய்த தவறல்லவா?

இவனிடம் கேட்டாலும், அதைத்தான் சொல்லுவான்.! அவளே அழைத்தாள் என்று அசிங்கமாகக் கூடப் பேசலாம்.! இவன் அப்படிப்பட்டவனாகத்தான் தெரிகிறது.! தன்னிடம் எல்லோருமே மயங்கி விடுவார்கள் என்ற எண்ணம்.!

அந்த இடத்தில் நிற்கப் பிடிக்காமல், "எனக்கு உங்கள் பொருளுக்கு எவ்வளவு கமிஷன் கொடுப்பீர்கள் என்று தெரிய வேண்டும். ஆனால் அது பற்றி எம்டிதான் முடிவு எடுக்க வேண்டும் என்று, உங்கள் ஸ்டாலில் சொன்னார்கள்.! அவர் எப்போது வருவார்? அதைச் சொன்னீர்கள் என்றால் நான் கிளம்பி விடுவேன்.!" என்று, அதற்காகவே வந்தது போல, கொஞ்சம் கம்பீரமான குரலில் விவரம் கேட்டாள்.

சுகனுக்குத் தொழில் பேச்சு பிடிக்காதோ, அல்லது அண்ணனிடம் பயமோ, "அண்ணன் வாரம் ஒருமுறைதான் வருவார். நாளன்று காலை பத்து மணிக்கு மேல் வந்தால் பார்க்கலாம்.! மற்றபடி.. வேறு விவரங்கள் தேவையானால், 'ஹில்டனு'க்கு வந்து என்னைச் சந்திக்கலாம், வரவேற்பில் என் பெயரைச் சொன்னாலே, அறைக்குக் கூட்டி வந்து விடுவார்கள்.! இப்போது வரட்டுமா?" என்று, அப்போதும், தன் முறுவலைக் காட்டிய பிறகே, விடை பெற்றுச் சென்றான் சுகன்.

அந்தப் பெண்ணோடுதான்.!



இந்த சுகன், லோகேசுவரியை மணப்பான் என்கிற எதிர்பார்ப்பு, புவனேசுவரிக்கு அடியோடு அற்றுப் போயிற்று.! ஆனால், இதைத் தங்கையை உணர வைப்பது எப்படி?

அவளால் உணரச் செய்ய முடியவில்லை.!

"இன்னொரு பெண்ணோடு, நானே பார்த்தேன்.!" என்று புவனேசுவரி சொன்னபோதும், "அவரைப் பெண்கள் சுற்றுகிறார்கள் என்று நான் சொன்னது சரியாகிப் போயிற்றா? அதற்காகத்தான், அவர் கூடவே இருக்கலாம் என்று நினைத்தேன்.! ஆனால், படிப்பை அடியோடு விடவும் மனமில்லை.! அவர்கள் வீட்டிலேயே, அவருடைய அண்ணனுக்கு மனைவியாகப் போகிறவள், அமெரிக்காவில் எம்எஸ் படித்துக்கொண்டு இருக்கிறாள்.! நான் இதையும் விட்டுவிட்டால், நன்றாக இராதே.!" என்று புலம்பினாள்.!

தலையில் அடித்துக் கொள்ளலாம்போல இருந்தபோதும், பொறுமையை இழுத்துப் பிடித்துக்கொண்டு, "இத்தனை பெண்களுடன் சுற்றுகிறவர், உன்னை மணப்பார் என்று, என்ன லோகேஸ் நிச்சயம்?" மென் குரலிலேயே, மூத்தவள் வினவினாள், "இப்படிப்பட்ட மனிதரிடம் இருந்து, விலகி விடுவது நல்லது அல்லவா?"

அவ்வளவுதான்.! லோகேசுவரி குதிக்கத் தொடங்கிவிட்டாள்.!

இவ்வளவு காலம் கஷ்டப்பட்டாயிற்று., இப்போது அவளுக்கு ஒரு நல்ல காலம் அமைவது, அக்காவுக்குப் பிடிக்கவில்லையாம்.! இன்பநாதன் போதனையாம்.!

அண்ணன் வந்திருப்பதாக அன்று அவன் பொய் சொன்னதை, அவள் பொருட்படுத்துவதாகவே இல்லை.! அவனுக்கு ஏதாவது காரணம் இருக்குமாம்.! பெரிய இடத்துப் பையன்கள் அப்படி இப்படி இருப்பதைப் பொருட்படுத்தக் கூடாதாம்.! திருமணமானால் சரியாகி விடுமாம்.!

அறியாத்தனத்தோடு, பணமும் சேர்ந்து, சின்னவளின் கண்ணை மறைக்கிறது.!

எவ்வளவுதான் பணம் இருந்தாலும், நிம்மதியான வாழ்க்கைக்கு, அது ஈடாகாது என்று அவளுக்குத் தெரியவில்லையே.!

தங்கையை, அவளிடமிருந்தே கூடக் காப்பாற்ற, வேறு வழி தேடிய புவனேசுவரி, கடைசியாக, சுகனுடைய அண்ணனைச் சந்திக்க, முடிவு செய்தாள்.! தங்கைக்குத் தெரியாமல்தான்.!

## 4

'உதயம் காஃபி'யின் எம்டி திரு. தயாளந்தனைச் சந்திப்பது, அப்படியொன்றும் இலகுவாக இருக்கவில்லை.!

எவ்வளவுக்கு, அவனுடைய தம்பி பெண்களை நெருங்கிப் பார்க்கத் துடித்துக் கொண்டு இருந்தானோ, அவ்வளவுக்கு அண்ணன்காரன் பெண் என்றாலே, ஒதுங்கிக் கொள்வது போலப் புவனேசுவரிக்குத் தோன்றியது.!

மற்றபடி, 'பார்க்க வேண்டும்' என்றால், யார், என்ன எதற்காக என்று ஆயிரம்

விவரங்களை வேறு யாரோ கேட்டார்கள்.! 'சொந்த விஷயம்' என்றாலும், 'அது என்ன சொந்த விஷயம்?' என்று விவரம் கேட்டார்கள்.! 'அதை, அவரிடம் நேரில்தான் சொல்ல வேண்டும்' என்றால், சற்று நேரம் டெலிஃபோனில் சத்தமே இல்லாது போயிற்று.! அவளது பொறுமையிழந்த பல 'ஹலோ'க்களுக்குப் பின், "இந்த முறை உங்களைச் சந்திக்க அவருக்கு நேரம் இல்லை.! தேவைப்பட்டால், அடுத்த முறை வரும்போது அவரை நேரில் பார்க்க, இப்போதே ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்.!" என்று முடித்தார் ஃபோனில் பேசியவர்.!

அடுத்த முறை வரும்போது.!

அதற்குள், இவன் தம்பி, என் தங்கையின் வாழ்க்கையை நாசமாக்கி விட்டால்?

அவளும்தான் மூளையே இல்லாமல் பேசுகிறாளே.!

அடுத்த முறை வரும்போது சந்திப்பதற்கு, இப்போதே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டுமா? இந்த மகாராஜாவை. அவள் இப்போதே சந்தித்தாக வேண்டும்.!

சட்டென முடிவு செய்து, அவசரமாகக் கிளம்பி ஓடினாள்.

அந்தத் தயானந்தன், 'ஹில்டனி'ல் இருந்துகொண்டுதான், அடுத்த ஆளை விட்டுப் பேசினான்.! அங்கேயே, நேரில் போய் நின்றால்?

பெரிய ஹோட்டல்.! அங்கே உள்ளவர்கள் முன்னிலையில் அசிங்கமாக எதுவும் நடப்பது, அந்தப் பெரிய மனிதனுக்கும் பிடிக்காதுதானே? அதற்காகவேனும், அவளது பேச்சை, அவன் கேட்டுத்தான் ஆக வேண்டும்.!

நாலுபேர் பார்க்க 'டிராமா' போட, புவனேசுவரிக்கும் பிடிக்காதுதான்.! ஆனால், இப்போது வேறு வழி இல்லை.!

மின்னல் வேகத்தில் கிளம்பி, செலவைப் பாராமல், டாக்சியில் ஏறி, கேஎல்லின் சீரான சாலைகளில் வழுக்கிக் கொண்டு சென்று, புவனேசுவரி ஹோட்டலை அடையப் பதினைந்து நிமிஷங்கள்தான் ஆகியிருந்தன.!

வரவேற்புக்கு விரைந்து சென்று விசாரித்தபோது, "மிஸ்டர் தயானந்தன் சாரா? இப்போதுதான் சாவியைக் கொடுத்துவிட்டுப் போகிறார்.! அதோ, அதோ போகிறார்கள். பாருங்கள்.! நெடுநெடுவென்று, என்ன உயரம்.! என்ன நடை பாருங்கள்.!" என்று சிலாகித்து முடித்தபோது, அவள் அங்கே இல்லை.!

காலையில் வழக்கமாக 'ஜாகிங்' செய்கிறவனின் வேக நடையோடு சென்று கொண்டிருந்தவனை எட்டிப் பிடிக்க, புவனேசுவரி, ஓட்டமும் நடையுமாகத்தான் செல்ல வேண்டியிருந்தது.!

"சார், சார்.!" என்று பின்னே சென்றபடி அழைத்தபோது, அவன் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.! கூடச் சென்றவனின் தலை லேசாகத் திரும்பியபோதும், அவனது நடைவேகமும் குறையவில்லை.!

முகம் கன்றியபோதும், 'லோகேசுக்காக' என்று மனதில் உருப்போட்ட வண்ணம், ஓடிப்போய், அந்தத் தயானந்தனுக்குச் சரியாகப் பக்கவாட்டில் வேகமாக நடந்தபடி, "சார், நான் உங்களிடம் சற்றுப் பேசியே ஆக வேண்டும்.! இப்போதே.!" என்றாள் மூச்சு வாங்க.!



சற்றும் நடை தளராமல், "அது எனக்கு அவசியம் இல்லை என்றால்?" என்றான் அவன்.

பல்லைக் கடித்து, "இந்த இடத்தில், நாலு பேர் பார்க்க, உங்களை வழி மறித்து, கலாட்டா பண்ணுவேன்.! நின்று பேசாவிட்டால், அதுதான் நடக்கும்.!" என்றாள் அவள் இறுகிய குரலில்.

லாபியைக் கடந்து, ஹோட்டல் கட்டடத்தின் வாயிற்புறம் வந்திருக்கிறார்கள்.!

நின்று, அவன், சற்று ஏளனமாகப் பார்க்கவும், புவனேசுவரியின் முகம் கன்றியது.!

"நம்புங்கள், சார்.! எனக்கும், இந்த மாதிரி ரகளை செய்வதில் ஆசை கிடையாது.! ஆனால் இது.. இது ஒரு பெண்ணின் வாழ்க்கைப் பிரச்சினை என்பதால், எனக்கு வேறு வழியில்லை.! நான், உங்களிடம் பேசியே தீர வேண்டும்.!" என்றாள் அவள்.

தயானந்தனின் முகத்தில் இருந்த ஏளனம் மாறவில்லை. ஆனால், "என் கார் வரை செல்ல, மூன்று நிமிஷங்கள் ஆகும்.! அதுவரை, உனக்கு அவகாசம்.! பேசு.!" என்றான் அவன்.

நடையின் வேகம் சற்றுக் குறைந்தது. அவ்வளவே.!

கூடவே நடந்த அடுத்தவனைப் பார்த்துவிட்டு, "நான்... தனியே பேச வேண்டுமே.!" என்று தயங்கினாள் அவள்.

"குடும்பமோ, தொழிலோ, எதிலும், என் முடிவுகளைச் செயல்படுத்துவது, சங்கர்தான். இவன் எனது வலது கை.! அவனுக்குத் தெரியாத ரகசியம் கிடையாது.! மெய்யாகவே ஏதாவது சொல்ல வேண்டுமானால், சீக்கிரமாகச் சொல்லு.!"

கொஞ்சமும் இளக்கமற்ற குரல்.! ஊடுபா போல, உள்ளூர அந்த ஏளனம்.! ஏன்?

ஆனால், அதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்க அவளுக்கு அவகாசமில்லை என்று உணர்ந்து, நேரே விஷயத்துக்கு வந்தாள். "நான்.. என் தங்கையைப் பற்றிப் பேச வந்தேன்.! என் தங்கையும், உங்கள் தம்பியும் ஒன்றாகச் சுற்றுகிறார்கள்.! என் தங்கைக்கு அது நல்லதில்லை.! அதனால், அவர்கள் பழகுவதை, நீங்கள் தடுத்து நிறுத்த வேண்டும்.!" என்று கொட்டி முடித்தாள்.

"ஏன்?"

திகைத்துப் போனாள், புவனேசுவரி.

பொருத்தம் அற்ற வாழ்க்கைத் தரங்களில் உள்ள இருவர் நெருங்கிப் பழகும்போது, மேல்படியில் இருப்போர்தான், அதைத் தடுப்பதில், ரொம்பவும் தீவிரமாக இருப்பார்கள் என்ற கருத்து, அவளுக்கு இருந்தது.! இவனானால், இப்படிக் கேட்கிறானே.!

இதனால், லோகேசுவரியை, இவன் தம்பிக்குத் திருமணம் செய்து வைத்து விடுவான் போலவும் அவளுக்குத் தோன்றவில்லை.!

பின்னே?

தலையைத் திருப்பி அவனைப் பார்த்தபோது, அவர்கள் இருவரும் கூட நின்று விட்டிருந்தனர். கூடவே, அவர்கள் இருவரின் முகத்திலும் சிரிப்பு இருந்தது.! ஏதோ, வேடிக்கையைக் கண்ட மாதிரியான சிரிப்பு.!



"கேள்வி புரியவில்லை.!" என்றாள் அவளும் சுருக்கமாகவே.!

சங்கரைப் பார்த்து முறுவலித்துவிட்டு, "தம்பி சின்னப் பையன்.! உனக்கும் தங்கை என்கிறாய். இந்த வயதில், இவர்கள் இப்படிக் கவலையற்று சுற்றுவது இயல்புதானே? தடுப்பானேன்?" என்று கேட்டான் தயானந்தன்.

மகா உத்தமத் தம்பியை உடையவனைப் போலக் கேள்வி பிரமாதம்தான்.!

"அவர்கள் எல்லை தாண்டிப் பழகினால்?"

"எங்கள் வீட்டில் அவரவர் செயல்களில் அடுத்தவர் அதிகம் தலையிடுவது இல்லை. தேவைப்பட்டால் நீ உன் தங்கையை கட்டுப்படுத்து" எளிதாகச் சொல்லிவிட்டான்.

"அதுதான், உங்கள் தம்பியின் பணத்திலும் பகட்டிலும், லோகேஸ் மதி மயங்கி நிற்கிறாளே.!" என்றபோது, ஆத்திரமும் இயலாமையுமாக, அவள் குரல் நடுங்கியது.! அதையும் சும்மா உட்கார்ந்து பார்த்துக்கொண்டு இருப்பார்களாமா?

உதட்டைக் கடித்துத் தன்னைச் சமாளித்துக்கொண்டு, "பாருங்கள் சார், என் தங்கை லோகேசுவரி, உலகம் அறியாத சின்னப் பெண்.! உங்கள் தம்பி சுகன் அப்படியல்ல என்று, உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். அவளது அறியாத்தனத்தைப் பயன்படுத்திக்கொண்டு... லோகேசுக்கு ஏதேனும் நேர்ந்தால், அந்தப் பாவம், உங்களைச் சும்மா விடாது.!" என்று கொதிப்புடன் பொருமினாள்.!

அவளை விசித்திரமாய் நோக்கி, "இந்த அழகான மலை நாட்டின் சுற்றுப்புறமே சூடாகி விடும்போல, எவ்வளவு கோபம்.!" என்று வியந்தான் அவன். "யோசி, இந்தக் கண்காட்சி, என்றென்றைக்கும் நடக்கப் போவது இல்லை.! இரண்டே வாரங்களில் முடிந்துபோகும்.! அது முடிந்ததும் சுகனும் தாய்நாட்டுக்குக் கிளம்பி விடுவான். ஒரு கனவு போல, உன் தங்கையும், அவனை மறந்து போவாள்.! அந்த நாளை எண்ணி நிம்மதியாக இருக்கலாமே.! அனாவசியாக, ஏன் இந்தக் கவலை?" என்று முறுவலித்தான்.

சிரிப்பு வேறா?

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வினாடியும் அவள் படுகிற கவலை,-இவனுக்கு வேடிக்கையாக இருக்கிறதா? இவனுக்கெல்லாம் பட்டால்தான் தெரியும்.!

இவனுக்கும் ஒரு தங்கை, ஒரே ஒரு தங்கை இருந்து, அவளும் லோகேஸ் மாதிரி, அவளது நிலைமையிலும் இருந்தால், ஒரு வேளை புரியலாம்.! ஆனால், எங்கே? இவர்கள் எல்லாம், மறு நிமிஷமே துடைத்துப்போட்டு விட்டு, அடுத்த உல்லாசம் தேடிப் போய்விடுவார்கள்.! இந்தத் துன்பம் இவர்களுக்கு, ஒரு நாளும் புரியாது.!

இதற்கு மேல், இவனிடம் என்ன பேசுவது?

சட்டெனத் திரும்பி நடந்தாள் புவனேசுவரி.

நிமிஷங்கள் மணியாகி, மணிகள் நாளாகி, ஒரு வழியாக, இந்தியப் பொருட்காட்சியும் முடிந்தது.

அந்தத் தயானந்தன் சொன்னதுபோல, சுகனும், தாய்நாட்டுக்குத் திரும்பிப் போய்விட்டான்.!



ஆனால் அத்தோடு எல்லாம் முடிந்து போய்விடவில்லை.!

நம்பிக்கையும், அவநம்பிக்கையுமாக, லோகேசுவரி தவிப்பதை, அவள் பக்கத்திலேயே இருந்து, புவனேசுவரி பார்க்கும்படி ஆயிற்று.!

தங்கையின் தவிப்பைத் தீர்க்க, எதுவும் செய்ய முடியாத கையாலாகாத்தனம்.! ஒன்றும் செய்ய முடியாத நிலை, பெரியவளை வெகுவாகத் தாக்கியது. ஆனால், இதைப் பற்றிப் பேசினாலும் லோகேசுவரிக்குப் பிடிக்கவில்லை.! பேசாமல் இருந்தால், அதற்கும் கோபப்பட்டாள்.!

மொத்தத்தில், அவள் கண்ணில் படாமல் ஒதுங்கிப் போவதே, வீட்டின் அமைதிக்குத் தேவைப்பட்டது.!

அன்றும் அதுபோல, வேலை முடிந்ததும் வீட்டுக்குச் செல்ல மனமற்று, 'ட்வின் டவர்ஸ்' பக்கம் போனாள்.

விண்ணை எட்டி நின்ற எஃகுக் கோபுரங்களைப் பார்க்கையில், மனதில் திடம் உண்டாகும்.! கூடவே, 'டவர்'களின் பின்புறமாக, நீர் ஊற்றுகள், தடாகங்களைப் பார்த்தபடி, அமர்ந்திருப்பது, அவளுக்கு எப்போதுமே பிடிக்கும்.!

இப்போது, அதுவே ஆறுதலாகவும் இருந்தது.! சிற்றருவியாய் விழுந்த நீரில் நனைந்து விளையாடிய சிறார்களைப் பார்த்தபோது, மனதுக்கு இதமாகக் கூட இருந்தது.!

ஆனால், நாள் முழுவதும் இப்படி உட்கார்ந்திருக்க முடியாதே.!

லோகேஸ், சுகனை எப்போது மறப்பாள்?

அந்தத் தயானந்தன் சொன்னது போலச் சீக்கிரமே மறந்து விட்டால், நன்றாக இருக்கும்.!

அவன் - அந்தத் தயானந்தனின் பேச்சு, அவன் முகத்தை நினைவுக்குக் கொணர்ந்தது.!

அவன் ஏன் அவளை ஏளனமாகப் பார்த்தான்?

முதலில் இருந்தே.. அவன் குரலில் ஏளனம் இருந்தது.!

ஒரு வேளை, அவளை அவன் நம்பவில்லையா? இவனிடம் பேசுவதற்காகச் சும்மா ஒரு பொய்ச் சாக்கோடு வந்ததாக எண்ணமா? என்ன அநியாயம்.!

இருந்திருந்து, அவளைப்போய்...

அருகில் யாரோ அமர்வதை உணர்ந்து திரும்பிப் பார்த்தால், அவள் மனத்திரையில் தோன்றி அவளுக்கு எரிச்சல் மூட்டிக் கொண்டிருந்த, அதே தயானந்தன்.!

அவள் முகத்தில் எதைக் கண்டானோ, "என்ன, இன்னும் கோபம் தீரவில்லையா?" என்று இலகுவாகக் கேட்டான் அவன்.

ரொம்பத் தெரிந்தவன் போலக் கேட்கிறானே.!

அவள் வெட்டுவது போலப் பார்த்துத் தலையைத் திருப்பிக் கொள்ளவும், "சுகனைத்தான், ஊருக்கு அனுப்பி விட்டோமே.! அப்புறம் என்ன கோபம்?" என்று சாதாரணமாக வினவினான்.!

"என்ன செய்வது? உங்களைப்போலக் கண்ணுக்கு மறைந்ததுமே கருத்திலிருந்தும் அகற்றி விடுகிற திறமை, என் தங்கைக்கு இல்லையே.! அதுதா ஆத்திரம்.!" என்றாள் அவள் எரிச்சலை மறைக்காமல்.!

"அதற்கு, உன் அசட்டுத் தங்கை மீதல்லவா ஆத்திரப்பட வேண்டும்.! என் தம் என்ன செய்வான், பாவம்.!" என்று, தன் தம்பிக்கு வக்காலத்து வாங்கினான் அவன்

"அது சரி.! உங்கள் தம்பி என்ன செய்வார், பாவம்.! வாயில் விரலை கொடுத்தால், கடிக்கக் கூடத் தெரியாத பாப்பா.!"

"அடேடே.! அப்படியா? இது, எனக்குத் தெரியாதே.! இந்த மாதிரி வெண்டை பிஞ்சு விரலைக் கொடுத்தால், நானாக இருந்தால் என்ன செய்வேன், தெரியுமா?"

"விரல் என்னதாக இருந்தால், கன்னம் பழுத்துவிடும்.!"

"அடக் கடவுளே.! இந்த அநியாயத்தை, உங்கள் கோர்ட்டு மலை பிள்ளையார்தான் கேட்க வேண்டும்.! கை குலுக்கிறவர்களைக் கன்னத்தில் அடிக்கி பழக்கம் இந்த மலேசியாவில் உண்டு என்று எனக்கு, இதுவரை தெரியாதே.!"

"அப்படியெல்லாம் கிடையாது.!"

"பின்னே, சொன்னாயே.!"

"கடவுளே, நான் அப்படியா..." என்று தொடங்கியவள், அவன் சிரிக்கவும் தன்னை மீறி முறுவலித்தபடி, "சரியானபடிக்கு, உங்களைப் பற்றித்தான், கோர்ட்டு மலைப் பிள்ளையாரிடம் புகார் கொடுக்க வேண்டும்.!" என்றாள் அவள்.!

"அவரிடம் நான் ஏற்கனவே முந்திக் கொண்டுவிட்டேன்.! நீ வேண்டுமானா பத்து மலை முருகனிடம் பிராது கொடு.!"

மீண்டும் முறுவலிக்கத் தொடங்கியவளுக்கு, அவன் எதிரி என்பது சட்டென நினைவு வந்தது.!

அவனை ஆத்திரமாக நோக்கி, "உங்கள் கண்காட்சிதான் முடிந்துவிட்டதே. நீங்கள் ஏன், இன்னும், இந்தியாவுக்குப் போகாமல் இங்கேயே உட்கார்ந்து இருக்கிறீர்கள்?" என்று, கறார்க் குரலில் வினவினாள்.!

"பிரமாதமான விருந்துபசாரம்.!" என்று தோளைக் குலுக்கினான் அவன். "வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை வா, வா என்கிறது, உங்கள் அரசாங்கம். நீயானால் விரட்டி அடித்து விடுவாய் போல இருக்கிறதே.!" என்றான் கிண்டலாக.

"சுற்றுலாப் பயணி என்றால் வரவேற்கலாம்.! ஆனால், வேலையாக வந்தவர்கள் வந்த வேலை முடிந்ததும் கிளம்ப வேண்டியதுதானே?" என்றாள் அவளும் விடாமல்.

"வேலை முடிந்ததும் கிளம்ப வேண்டும்.!....." என்று தொடங்கியவன் பேச்சை முடிக்குமுன் குறுக்கிட்டு, "கண்காட்சிதான் முடிந்துவிட்டதே.! அப்புறம், இங்கே உங்களுக்கு என்ன வேலை?" என்று அவசரமாகச் சொன்னாள் புவனேசுவரி.

"வேலை இருக்கிறதே.!" என்றான் அவன் சோகமாக.!

அவள் சந்தேகமாக நோக்கவும், "நிஜம்.! ஸ்டாலில் பார்த்தாயல்லவா, எவ்வளவு சாமான்கள் இருந்தன? கண்காட்சி முடிந்தது என்று, எல்லாவற்றையும் அப்படியே விட்டு விட்டுப் போய்விட முடியுமா? என் தம்பி இருந்து செய்திருக்க வேண்டியது.!



...னால், அவனை விரட்டிவிட்டு, நான் இருந்து செய்கிறேன்.! நீயானால், அதையும் ...ற கூறுகிறாயே.!" என்று தயானந்தன் வருத்தம் காட்டிப் பேசிய தினுசில், ...னேசுவரிக்குச் சிரிப்பு வந்தது.!

கூடவே, கோபமும் வந்தது.! என்னவோ, அவளால்தான் அவன் இங்கே ...ருப்பது போலப் பேசுகிறானே.! இவன் தம்பியின் திருவிளையாடல்தானே ...டிப்படைக் காரணம்?

கோபம், சிரிப்பு இரண்டையுமே அவனுக்குக் காட்டாமல் மறைக்கும் முயற்சியில், ...ரத்தில் கத்திச் சிரித்த குழந்தைகளைப் பார்க்கும் சாக்கில், அவள் தலையைத் ...திருப்பிக் கொண்டாள்.

சில வினாடிகள் அமைதியில் கழிய, "இரண்டு காஃபி வாங்கி வருகிறேன்." என்று ...ழுந்தான் அவன்.

எரிச்சல் முழுவதும் மறையாத நிலையில், அவனை நிமிர்ந்துப் பார்த்து, "இடது ...கையால் மட்டுமாகச் சமாளிப்பீர்களா?" என்று கேட்டாள் அவள்.!

வினாடிக்கும் குறைவான நேரத்தில், அவன் கண்ணில் தோன்றிய திகைப்பு ...மறைந்து, சிரிப்பு பரவியது.!

"கஷ்டம்தான்.! ஆனால், சமாளிக்கிறேனா, இல்லையா, பாரேன்.!" என்று ...விட்டுப்போய், இரண்டு கப் ஆவி பறக்கும் காஃபியுடன் திரும்பி வந்தான்.!

ஒன்றை அவளிடம் கொடுத்துவிட்டு, "என் வலதுகை மட்டும் இங்கிருந்தால், இருந்த இடத்திலேயே, காஃபி கைக்கு வந்திருக்கும்.!" என்று பெருமூச்சு விட்டான்.

"இணைபிரியாத உடம்பை, இப்படிக் கஷ்டப்பட விட்டுவிட்டு, வலது கை எங்கே போய்விட்டது? ஒரு வேளை, மூட்டை கட்டிக்கொண்டு இருக்கிறதோ?"

"ஒரு வகையில் அதுவும் சரிதான்.! எல்லாப் பொருட்களையும் விமானத்தில் கொண்டுபோவது என்றால், கட்டுப்படி ஆகாது. அதனால், கப்பலில் அனுப்ப, கண்டெயினர் சர்வீசுக்காக மிஸ்டர் அறிவைப் பார்த்துப் பேசப் போயிருக்கிறான். பேசி முடித்துவிட்டு இங்கே வருவான்.!"

அதுவரை, பொழுது போவதற்காக, இவளோடு வார்த்தையாடிக்கொண்டு இருக்கிறான்.!

என்னவோ அவமதிப்பாய் உணர்ந்து, "எனக்கு நேரமாகிறது.!" என்று எழுந்தாள் அவள்.

"அவசரமா, புவனேசுவரி?"

அவள் திகைத்து நோக்கவும், "ஏன், புவனேசுவரிதானே, உன் பெயர்? சரியாகத்தானே, சொன்னேன்?" என்று கேட்டான் தயானந்தன்.

"என் பெயர் எப்படித் தெரியும்?" என்றாள் அவள் இன்னமும் திகைப்பு மாறாமலே.!

"இரண்டும் இரண்டும் நாலு.! உன் முகவரி கூட, எனக்குத் தெரியுமே.!" என்று புன்னகை செய்தான் அவன்.

"புரியவில்லை."



"பொருட்காட்சி ஸ்டாலில் உள்ளே வந்ததும், பெயர் விலாசம் எழுத சொல்லுவார்கள். அதில் சரியாக எழுதிவிட்டு, பொய்யாக ஒரு தொழில் பேச பேசிவிட்டு, சுகனைப் பற்றி விசாரித்திருக்கிறாய்.! அடையாளக் கார்டு கூட கொடுக்காமல், யாரும் இறக்குமதி செய்யப் பேச்சு வார்த்தை நடத்த மாட்டார்கள். அப்புறம், 'ஹில்டனி'ல் உன் வேகம்.! இருவரும் ஒருவரே.! அதாவது, இரண்டும் இரண்டும் நாலு.!"

என்ன இலகுவாகப் பேசுகிறான்.! உள்ளே சிரித்துக்கொண்டு இருக்கிறானா?

"பரவாயில்லை, சார்.! இன்னொரு தொழிலாகத் துப்பறியும் தொழிலை தொடங்கினால், அதிலும் நன்றாகவே, சம்பாதிப்பீர்கள்.! செய்யுங்கள்.!" என்றவள் அதற்கு மேல் நில்லாமல், மடமட வென்று வேகமாக நடந்து சென்றுவிட்டாள்.

ஆனால் அன்றிரவு, ஏனோ அவளால் தூங்கவே முடியவில்லை.!

தயானந்தனின் பேச்சும் சிரிப்பும் ஓயாமல் நினைவு வந்துகொண்டே இருந்தது.

புதியவள் என்பதே இல்லாமல், என்ன இலகுவாகப் பேசுகிறான்.! அவளது முகவரி கூடத் தெரியும் என்றானே.! தெரிந்து என்ன செய்வான்? ஒரு வேளை வருவானோ என்று எண்ணும்போது, அவள் மனம் படபடத்தது.!

கடவுளே, வேண்டாமய்யா, வேண்டாம்.! அந்தக் குடும்பத்தின் சங்காத்தமே வேண்டாம்.! அவனுடைய குடும்பத்தில் யார் தொடர்புமே இல்லாதிருப்பதுதான் இந்தக் குடும்பத்தின் மனஅமைதிக்கு நல்லது.!

திரிகரண சுத்தியாக என்பார்களே. அதுபோல, புவனேசுவரி, முழு மனதோடுதான் அப்படி நினைத்தாள்.! ஆனால், தலைவிதி வேறு மாதிரி இருந்தது. இரண்டே நாட்களில், அவளாவே, தயானந்தனுக்கு டெலிஃபோன் செய்து பேசுமாறு நேர்ந்தது.!

## 5

முழு மனதோடு, ஒரு தீர்மானம் செய்துவிட்ட பிறகு, அன்றைய இரவில், புவனேசுவரியால் ஒருவாறு தூங்க முடிந்தது.! அமைதியான ஆழ்ந்த உறக்கம் என்று சொல்ல முடியாதுதான்.!

அடுத்த கட்டிலில், லோகேசுவரி புரண்டு, புரண்டு படுக்கும்போது அப்படி உறங்குவது முடியாத காரியமும் கூட.!

ஏதாவது வேண்டுமா? என்று தங்கையிடம் கேட்டுவிட்டு, ஒன்றும் வேண்டாம்.! என்னை நிம்மதியாகத் தூங்க விட்டால் போதும்.!" என்று அவள் எரிந்து விழுந்ததைக் கேட்டுவிட்டுத் தூங்குவது கடினமே.!

ஆனால், தங்கையை அறிந்தவள் என்பதோடு, தன் மனதை அடக்கவும் பயின்று வைத்திருந்ததால், புவனேசுவரிக்கு ஓரளவு நல்ல தூக்கம்தான்.!

காலையில் எழுந்து பார்த்தால், லோகேசுவரி வெளியே செல்லத் தயாராகிக் கொண்டிருந்தாள்.



கேள்வியாய் நோக்கிய தமக்கையிடம், "ஒரு கைஃபோன் வாங்கச் சொன்னால், ஒரே இல்லைப் பாட்டு.! இப்போது, வெளியே சென்று பேச வேண்டியிருக்கிறது.!" என்று, அப்போதும் எரிந்து விழுந்தாள் அவள்.

"இந்த நோக்கில், யார் வீட்டுக்கு... லோகேஸ்.!"

"இந்தியாவுக்கு.!"

அந்த சுகனுக்கா? அவனை மறக்கவே மாட்டாளா என்று உள்ளூர நொந்தபடி, "இந்தியாவில், இப்போது எல்லோரும் அயர்ந்த தூக்கத்தில் இருப்பார்கள், லோகும்மா.! நமக்கு இரண்டரை மணி நேரம் கழித்துதான் அங்கே பொழுது விடியும் என்று மறந்துவிட்டதா?" என்று நினைவூட்டினாள் புவனேசுவரி.

"சை.!" என்று கைப்பையை விட்டெறிந்தாள் லோகேசுவரி. "மறந்துபோய், அங்கே முதலில் விடியும் என்று நினைத்து, அவசரமாக எழுந்து, தொலைத்துவிட்டேனே.! சுகன் ஜாகிங்குக்குப் போகுமுன், அவரைப் பிடிக்க நினைத்தேன்.. சே.! எல்லாம் தப்பு.!" என்றவள் முகத்தை மூடிக்கொண்டு விம்மி அழுதாள்.!

அவள் தப்பு என்றது விடிகாலையில் விழித்ததை மட்டுமல்ல என்பதைப் புவனேசுவரியால் புரிந்துகொள்ள முடிந்தது.!

ஆனால், தங்கை அழுவது தாங்காமல், அவளை ஆறுதல் படுத்த முயன்றால், அவள் அதற்கும் இடம் கொடுக்கவில்லை.!

"என்னைக் கொஞ்சம் தனியே விடுகிறீர்களா?" என்று ஒதுக்குகிறவளிடம், நெருங்குவது எப்படி?

பள்ளியில் பெரிய பிரச்சினை உருவாகும் என்று தெரிந்த போதும், புவனேசுவரியால், தங்கையைத் தனியே விட்டுவிட்டு, அன்றைக்குப் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை.!

ஆனால், அவள் லீவு போட்டும் ஒரு பயனும் இல்லை.!

ஏதோ முணுமுணுத்துவிட்டு வெளியே சென்றுவிட்ட லோகேசுவரி, வீடு திரும்ப வெகுநேரம் ஆகிவிட்டது.!

வந்ததும், உணவை மறுத்துவிட்டு, நேரே போய்ப் படுத்துவிட்டாள்.

அசையாமல் படுத்துக்கிடந்த போதும், அவள் தூங்கவில்லை என்பது புவனேசுவரிக்கு நன்றாகவே தெரிந்தது.!

சிறு துன்பங்களுக்கும், அழுது ஆர்ப்பாட்டம் செய்கிறவள் லோகேசுவரி.

அவள் இப்படி அடங்கிக் கிடப்பது, புவனேசுவரிக்கு வியப்போடு, ஒருவிதப் பயத்தையும் அளித்தது.!

இது, ஏதோ பெரிய விஷயம்.! சுகன் ஒரேயடியாகக் கை கழுவி விட்டான் என்பதை, இப்போதுதான் முழுமையாகப் புரிந்து கொண்டாளோ?

ஆனால் அந்த உண்மையை ஒத்துக்கொண்டுவிட்டால், அப்புறம் அதிலிருந்து தங்கை மீளத் தொடங்கிவிடுவாள் என்ற நம்பிக்கை, அவளுக்குச் சற்று ஆறுதலையும் அளிக்க, லோகேசாகச் சொல்லட்டும் என்று பொறுமையாகக் காத்திருந்தாள் அவள்.

ஆனால், லோகேசின் செய்தி, அவளையே அதிர வைத்துவிட்டது.!

மறுநாள் தமக்கையைப் பள்ளிக்குப் போக வேண்டாம் என்று, சின்னவளே சொல்லி நிறுத்தினாள். அக்கம்பக்கத்தில் எல்லோரும் வெளியேறி, சந்தடி அடியோடு அடங்கிய பிறகு, தமக்கையை அருகே அழைத்து உட்காரச் சொல்லி, யோசித்துப் பேசினாள்.

"அக்கா, எத்தனையோ ஆண்டுகளாக என்னை, ஒரு தாய் போலவே, நீங்கள் வளர்த்திருக்கிறீர்கள்.! ஆனால், அடித்ததே கிடையாது.! அதற்கெல்லாம் சேர்த்து, என்னை நன்றாக அடித்து விடுங்கள்.!" என்று தொடங்கி, வெகு சிரமப்பட்டு, தன் சேதியைச் சொன்னாள்.!

லோகேசுவரி கருவுற்றிருக்கிறாள்.! சுகன் கை கழுவி விட்டான்.!

சற்று நேரம் புவனேசுவரிக்கு ஒன்றுமே தோன்றவில்லை.!

மடியில் குப்புறக் கவிழ்ந்து கிடந்து, குலுங்கிய லோகேசுவரியின் விசும்பல் சத்தம் அவளை நனவுலகுக்கு இழுத்து வந்தது.!

இனி, இந்தப் பெண்ணின் எதிர்காலம் என்ன ஆகும்?

மோசமான நடத்தை என்று, முத்திரை குத்தி விடுவார்களே.! உடனொத்தவர்கள், விலக்கி வைப்பார்கள்.! யாரும் மணந்துகொள்ள மாட்டார்கள்.! தனி மரமாக... கடவுளே.!

தன் போக்கில், அவளது கரங்கள், தங்கையின் முதுகை, ஆறுதலாகத் தடவி விட்டுக் கொண்டிருந்தன.!

முதுகின் குலுங்கல் மெல்லக் குறைந்து நின்றது.! அவளை எழுப்பி உட்கார வைத்துவிட்டு, உள்ளே சென்று, கொஞ்சம் தயிர்சாதம் பிசைந்து கொண்டு வந்து ஊட்டினாள்.

கலங்கி, பெரிய சொட்டு நீர் மணிகளை உதிர்த்த போதும், லோகேசின் முகத்தில், கொஞ்சம் உயிர் வந்தது.!

"ஒன்றுமே சொல்லவில்லையே, அக்கா.!" என்றாள் வேதனையுடன்,

"என்ன சொல்வது? நீயேதான் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறாயே.! ஆனால் நம் அம்மாவுடைய மகள் இப்படி நடந்துவிட்டாயே.! அதுதான் வேதனையாக இருக்கிறது.!" நீர்மணிகள் சற்று வேகமாகப் பொழிந்தன.!

பிறகு, "பணம் காசைக் காட்டியதும், கிறங்கிப் போனேன், அக்கா.! உங்களைப் போல, வீடு, வேலை என்று அடங்கிக் கிடக்க என்னால், முடியவில்லை.! ஆனால் என்னைத் திருமணம் செய்து கொள்ளுவதாக அவன் சொன்னான், அக்கா.! சத்தியம் செய்தான்.! ந..நம்பி விட்டேன்.!... இப்போது என்னக்கா செய்வது? எனக்கு, ஒன்றுமே புரியவில்லையே.!... என்று, மீண்டும் ஒரு மூச்சு அழுதாள் லோகேசுவரி.!

அழுது, அழுது ஓய்ந்து உறங்கிவிட்ட சின்னவளைப் பார்த்தபடி நின்ற புவனேசுவரிக்கு நெஞ்சு கொதித்தது.!

'இதோ வருகிறேன்' என்று எழுதி வைத்துவிட்டு, வெளியே சென்று ஃபோன் செய்தாள்.



நல்லவேளையாக, 'ஹில்டன்' ஹோட்டல் அறையிலேயே இருந்தார்கள்.

டெலிஃபோனை எடுத்தது சங்கர்தான். பேசுவது புவனேசுவரி என்றதுமே, தயானந்தனிடம் ரிசீவரைக் கொடுத்துவிட்டான்.

தயானந்தன் குரல் கேட்டதுமே, புவனேசுவரி பொரிந்து கொட்டிவிட்டாள்.!

"சொன்னேன்.! சின்னப் பெண். அறியாப் பெண் என்று, அவ்வளவு சொன்னேனே.! நீங்கள் மட்டும் மனம் வைத்துத் தடுத்திருந்தால், என் தங்கைக்கு இந்த நிலை நேர்ந்திருக்குமா? கல்யாணம் இல்லாமல், வயிற்றைத் தள்ளிக் கொண்டு... கடவுளே.! அவளது எதிர்காலமே பாழாகி விட்டதே.! அண்ணனும் தம்பியுமாக, அவளை நாசமாக்கி விட்டீர்களே.! ஒரு பெண்ணின் வாழ்க்கை என்றால், உங்களுக்கு, அவ்வளவு அலட்சிமாக இருக்கிறதா? பாவிகளா, ஒரு சின்னப் பெண்ணை இந்தக் கதிக்கு ஆளாக்கி விட்டீர்களே.!" என்று, பொருமித் தீர்த்தாள்.!

அவளது பேச்சின் தொடக்கத்தில் ஓரிரு முறை குறுக்கிட முயன்றவன் அவள் கொட்டித் தீர்த்துவிட்டு, அவள் மூச்சுவாங்கி நிறுத்தியதும் "இனியேனும் கொஞ்சம் அமைதியாக யோசி.! அது என்ன பெரிய கதி? கருவுற்றுவிட்டாள். அவ்வளவுதானே? இதை விளம்பரப்படுத்தாமல், சத்தமின்றிக் கலைத்துவிடு.!" என்று யோசனை சொன்னான் தயானந்தன்.!

"என்னது?.!" என்று அதிர்ந்தாள் புவனேசுவரி.!

கலைப்பது என்றால்; தோன்றிவிட்ட ஓர் உயிரை அழிப்பதா? என்ன ஒரு கல் நெஞ்சம்.! பெயரைப் பார்.! தயானந்தனாம்.! தயவே இல்லாத அரக்கன்.! தம்பிக்கு மேல் இருக்கிறானே.!

அவளது எண்ண ஓட்டத்தை அறியாமல், "என்ன, சத்தத்தையே காணோம்? ஒருவேளை, உங்கள் நாட்டுச் சட்டப்படிக் கருக்கலைப்பு குற்றமா? அப்படியானால் அது சட்டப்படி ஒத்துக்கொள்ளப்படும் நாட்டுக்குப் போய்க் கலைத்துவிடு.! செலவுக்குப் பார்ப்பதானால், என் தம்பியின் முட்டாள்தனம் என்பதால், தேவைப்பட்டதை நான் தருகிறேன்.!" என்று தொடர்ந்து பேசினான் அவன்.

"எல்லாப் பாவங்களையும் பணத்தால் சரி செய்து விடலாம் என்று எண்ணும் உங்களைப் போன்றவர்களை, அந்தக் கடவுள்தான் கேட்க வேண்டும்.!" என்றவளின் குரல், கோபத்தில் கீச்சிட்டது.!

"இதற்கு ஏன், இவ்வளவு ஆத்திரப்படுகிறாய் புவனேசுவரி..."

"ஏன் ஆத்திரமா? நீங்கள் ஓர் உயிரை அழிப்பது பற்றிப் பேசுகிறீர்கள், மிஸ்டர் தயானந்தன்.! அதை, நினைவு வைத்துக்கொண்டு, கொஞ்சமேனும் பெயருக்கேற்றபடிப் பேசுங்கள்.!" என்று படபடத்தாள் புவனேசுவரி.

"புவனேசுவரி, ப்ளீஸ்..! இப்போது, உன்னிடம் விவாதம் செய்துகொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை.! நானும் சங்கரும் விமான நிலையத்துக்கு கிளம்பிக் கொண்டு இருக்கிறோம்.! அதற்குமுன், நான் சொல்வதை மட்டும் சற்றுக் காது கொடுத்துக் கேள்..! எந்த ஒரு செயலாகட்டும்., பொருளாகட்டும்., அதற்கு, அந்தந்த சமயத்துக்கு உரிய முக்கியத்துவம்தான் கொடுக்க வேண்டும்.! பெரிதாக உயிர் என்றாய்.! இந்த



விநாடியில், ஒரு புழு பூச்சி அளவு கூட, உணர்வு அற்ற வெறும் திசுக் கூட்டம்தான் அது.! இதைக் காப்பாற்றுவதற்காக, உன் தங்கை, வாழ்நாள் முழுவதும் சிலுவை சுமக்க வேண்டுமா?

காப்பாற்றிப் பெற்றாலும், சமூகத்தில், அந்தக் குழந்தையின் நிலைதான் என்ன? என் தம்பி, உன் தங்கை இருவருக்குமே, மிகவும் சின்ன வயது.! விளைவு தெரியாமல், அளவு மீறி விட்டார்கள். இதில் யாரையும் ஒரேயடியாகக் குற்றம் கூற முடியாது என்பது, என் அபிப்பிராயம்.! ஆனால், இது உன் தங்கையைப் பாதிக்காமல் காப்பதுதான், இப்போதைக்கு முக்கியம் என்று எனக்குத் தோன்றுகிறது.! அமைதியாக உட்கார்ந்து யோசித்தால், நீயும் இந்த முடிவுக்குத்தான் வருவாய்.! எதற்கும் என் கார்டை, உனக்கு அனுப்புகிறேன்.! தேவைப்பட்டால், தயங்காமல் தொடர்பு கொள்.! இனி நேரமில்லை.! வைக்கிறேன்.!" என்று, பேச்சை முடித்துவிட்டான், தயானந்தன்.!

சோர்வுடன் திரும்பினாள் புவனேசுவரி.!

அதற்குள் லோகேசுவரி விழித்து, நடுங்கியபடி, உட்கார்ந்திருந்தாள்.

புவனேசுவரியைக் கண்டதும், "எங்கே போனீர்கள், அக்கா? நீங்கள், என்னை விட்டுப் போய் விட்டீர்களோ என்று பயந்து போனேன்.!" குரல் நடுங்க, தமக்கையைக் கட்டிக் கொண்டாள்.!

தங்கையை வருடியவாறு, "பைத்தியம்.! உன்னை விட்டு நான் எங்கே போவேன்? ஏன் போவேன்? " என்றாள் தமக்கை.!

"இல்லைக்கா.! என்னால், அவமானம் ஆகிவிட்டது என்று... இன்பன் மாமா, அவர் அம்மா எல்லாம் என்ன சொல்லுவார்களோ என்று, ஒரே பயமாக இருக்கிறது.! சும்மாவே, அவர்களுக்கு என்னைப் பிடிக்காது.! ... அதனால் நீங்களும்..."

"ஷ்.! சும்மா அசட்டுப் பேச்செல்லாம் பேசக்கூடாது.! எனக்கு, உன்னைத் தவிர, ஒன்றும் முக்கியம் அல்ல.! என்னைப் பிடித்தால், அவர்களுக்கு, உன்னையும் பிடித்தே தீர வேண்டும்.! பிடிக்கும். கவலைப்படாதே.!" என்று தங்கையைத் தேற்றினாள் புவனேசுவரி.

தங்கையின் ஆறுதலுக்காகச் சொன்னாளே தவிர, உள்ளூர, அவளுக்கும் இது பற்றி உதைப்புதான்.

சும்மாவே, லோகேசுவரியைப் பற்றி, இன்பநாதன் ஆயிரம் குறை சொல்லுவான்.! இப்போது நல்ல அவல் கிடைக்கும்போது அதைப் பயன்படுத்தாமல் சும்மா விட்டு விடுவானா?

மறுநாள், கூரியரில், தயானந்தன் அனுப்பிய கடித உறையினுள், அவனது 'விசிட்டிங் கார்டு'டன் ஐயாயிரம் ரிங்கெட்டுக்கான காசோலையும் இருந்தது.!

அவனுடைய தம்பி, லோகேசுடன் பழகியதற்காக, அவன் செலுத்தி முடித்துவிட்ட அபராதத் தொகையா?

துண்டு துண்டாகக் கிழித்து, அவனுக்கே அனுப்ப வேண்டும் என்று தோன்றிய வேகத்தை, எதுவோ சற்றே தேக்கியது.!



வேறு எதுவும் அல்ல.! தயானந்தனின் பேச்சுதான். அதில் இருந்த ஓர் உண்மைதான்.!

லோகேசுவரி, கட்டுப்பாடோடு இருந்திருக்கலாம்தான்.! ஆனால், அசட்டுத்தனமாக அவள் செய்த அந்த ஒரு பிழைக்காக, அவள் காலம் முழுவதும் கண்ணீர் வடிக்கத்தான் வேண்டுமா?

அது, புவனேசுவரிக்கே நியாயமாகத் தெரியவில்லை.!

கொலையே செய்தாலும், அதற்குரிய தண்டனை, இளம் குற்றவாளிகளுக்கு விதிக்கப்படுவது இல்லை.!

இந்தப் பிழைக்கு மட்டும், சின்னப்பெண் என்ற இளக்கமே கிடையாதா? தங்கை என்பதாலோ, என்னவோ, பதினெட்டு வயதிலும், லோகேசுவரி, பச்சைக் குழந்தையாகவே தோன்றினாள். அவளுடைய தமக்கைக்கு.!

ஆனால், அதற்காக...

குழப்பத்துடன், கார்டையும் காசோலையையும், அலமாரியுள் வைத்தாள் புவனேசுவரி.!

நிலை குலைந்திருந்த லோகேசைத் தனியே விட்டுவிட்டுப் போக முடியாது என்பதால், பள்ளிக்கு மொத்தமாக ஒரு வாரம் லீவு கேட்டுக் கடிதம் அனுப்பிவிட்டு, புவனேசுவரி, தங்கையோடு வீட்டிலேயே இருந்துவிட்டாள்.!

தலைமை ஆசிரியர், கருணையுள்ள மனிதர். "அவளது உடம்புக்கு என்னவோ என்று பார்த்துப் போவதற்காக, நேரிலேயே வந்துவிடக்கூடும்.! அப்படி அவர் வந்து நின்றால் என்ன செய்வது என்று அவள் மனம் கலங்கிக் கொண்டிருக்க, " என்ன புவனேசுவரி, உனக்கு உடம்பு சரியில்லை என்று பள்ளியில் சொன்னார்களே.!" என்று ரஸ்க்கும், ஹார்லிக்ஸ் பாட்டிலுமாக, இன்பநாதன் வந்து நின்றான்.!

இவனிடம் என்ன சொல்வது?

என்றென்றைக்கும் இவனுக்குச் சொல்லாமல் மறைத்து வைப்பது சரியா, தப்பா என்பதோடு, மறைப்பது முடியுமா, முடியாதா என்றும் அக்கா, தங்கை இருவருமே தடுமாறினர். இருவரும் விழிப்பதைப் பார்த்து, அவனுக்கும் சந்தேகம் வந்து, தூண்டித்துருவினான்.

தங்கைக்குப் பார்வையால் தைரியம் சொல்லிவிட்டு, "வாருங்கள், இன்பன். சற்று நேரம் வெளியே நடக்கலாம். அப்படியே கடையில், வீட்டுக்குக் கொஞ்சம் பொருட்களும் வாங்கி வந்து விடுவேன்.!" என்று கூறி, அவனை அழைத்துக்கொண்டு வெளியே சென்றாள்.

மெல்ல விவரம் சொன்னாள்.

விஷயத்தை அறிந்ததும், தலையை ஆட்டி, "இவள் இப்படி ஏதாவது செய்து வைப்பாள் என்று, எனக்கு நன்றாகத் தெரியும்.! கேடு கெட்டவள்.! முதலில், அவளை வீட்டை விட்டுத் துரத்து.!" என்றான் அவன்.

"அவள் என் தங்கை என்பதை மறந்து பேசுகிறீர்கள் இன்பன்" என்றாள் புவனேசுவரி அதிர்ச்சியுற்று.

"அது உன் துரதிர்ஷ்டம்.! அக்கா தங்கை என்பதை விடக் கணவன் மனை உறவு, எவ்வளவு நெருக்கமானது.! அப்படியும், உன் அம்மா மானத்தைப் பெரித நினைத்து, குணம் கெட்ட தன் கணவனை விரட்டி விடவில்லை? நீயும், இவள விலக்கிவிடுவதுதான் சரி.!"

எப்படி இரக்கமற்றுப் பேசுகிறான்.! தயவே இல்லாத அந்தத் தயானந்தன்கூட லோகேசின் நன்மைக்காகத்தான், கருவைக் கலைக்கச் சொன்னான்.! இவனானா உறவாகப் போகிறவள் என்பதையே மறந்து, விரட்டச் சொல்லுகிறானே.!

ஆத்திரமுற்று, "அதே என் அம்மாதான், லோகேசின் பொறுப்பை என்னிட ஒப்படைத்ததும்.! எனக்குத்தான், அவளைச் சரியாக வளர்க்கத் தெரியாது போயிற்று என் தப்புக்கு, நான் அவளைக் கைவிட முடியாது, இன்பன்.!" என்றாள் புவனேசுவரி.

"உன் தப்பு கிடையாது.! அவளுக்குக் கேடுகெட்ட அவளுடைய அப்பன் புத்தி.!"

"என் தந்தையும் அவர்தான் என்பது, நினைவிருக்கட்டும், இன்பன்.!" என்று எச்சரிப்பதுபோலப் பேசினாள் புவனேசுவரி. "என் அப்பா பற்றிய பேச்சு, இப்போது வேண்டாம்.! அத்தோடு, லோகேசையும் நான் விட முடியாது.!" என்றாள் கறார்க் குரலில்

சட்டென, இன்பநாதனின் குரல் தணிந்தது.! புவனேசுவரி, நான் என்ன, அவளைத் தெருவிலா விரட்டிவிடச் சொல்லுகிறேன்? இப்படித் தப்பு செய்த பெண்களுக்கான சீர்திருத்த விடுதியில் சேர்த்துவிடு. அங்கேயே குழந்தை பிறக்கட்டும். அங்கேயே, இவளும், விரும்பியது படிக்கட்டும்.! அதற்குத் தக்க ஏதாவது வேலை பார்த்துப் பிழைக்கட்டும்.! அவளைப் பற்றிய கவலையற்று, நாமும் நிம்மதியாக இருக்கலாம்.! கல்யாணம்கூடச் சீக்கிரமே செய்து கொள்ளலாம்.! இனி நீ அவளுக்குச் செலவு செய்ய வேண்டியது இல்லை. பார்.!" என்று, தங்கள் எதிர்காலத்தைக் கோடி காட்டிப் பேசினான்.

சரியான கசாப்புக் கடைக்காரன் என்ற எண்ணம் தானாகத் தோன்றியது புவனேசுவரிக்கு.! ஆட்டின் தசையோடு, தோல், ரத்தம் என்று அவன் கணக்கிடுவது போலல்லவா, இவனும் லாபக்கணக்குப் பேசுகிறான்.! பலியாகிக் கொண்டு இருப்பது, ஒரு பெண்ணின் எதிர்காலம் என்ற பரிதாபமே இல்லையே.!

மனம் கசந்துவிட, "கடையில் சாமான் வாங்கிக்கொண்டு, நான் சீக்கிரமாகப் போக வேண்டும், இன்பன்.! இது பற்றி இன்னொரு நாள் பேசலாம்.! அதுவரை, இந்த விஷயம், யாரிடமும் சொல்ல வேண்டாம்.!" என்று கடைப்பக்கம் திரும்பினாள் அவள்.

"ஆமாம். வெளியே தெரிந்தால், கேவலம் ஆயிற்றே.! ஆனால், அம்மாவிடம் மட்டும் சொல்ல வேண்டும்.! அவர்கள் புத்திசாலி.! இப்படி நடக்கும் என்று, முன்பே சொன்னார்கள்.!"

"கடவுளே.!" என்று கத்திவிட்டாள் அவள்.! "தயவு பண்ணி, இப்போதைக்கு, உங்கள் தாயாரிடம் கூடத் தெரிவிக்க வேண்டாம், இன்பன்.! நல்லதற்கு வந்து புத்தி சொன்னால்கூட, அதைத் தாங்குகிற மனநிலை, இப்போது எனக்கோ, லோகேசுக்கோ



இல்லை.! நீங்கள்கூட, ஒரு நாலைந்து நாள் கழித்தே வாருங்கள்.!" என்றவள், அவனது பதிலை நின்று கேளாமல், கடைக்குள் சென்றுவிட்டாள்.!

ஏதோ, முடிவு நெருங்கிக் கொண்டிருக்கிற உணர்வு அவளது மனதிற்குள் உண்டாயிற்று.

இன்பநாதனைப் பார்த்த பிறகு, லோகேசுவரி, இன்னமும் சோர்ந்து போனாள்.!

பழைய அச்சமற்ற போக்கு, பிடிவாதம், எடுத்தெறிந்த பேச்சு, தன் விருப்பத்தை மட்டுமே நினைத்து ஆர்ப்பாட்டம் செய்வது... எல்லாம் அடியோடு காணாமல் போயிற்று.!

உலகில் ஒரே ஆதாரமாக இருக்கிற தமக்கையும் தன்னை விட்டுப் போய்விடுவாளோ என்ற அச்சம், அவளது மனதோடு, உடலையும் சேர்த்துப் பாதித்தது.!

தொடர்ந்த சில நாட்கள், தங்கையைத் தேற்றுவதிலேயே, புவனேசுவரிக்குச் சரியாகிப் போயின.!

ஒரு வார லீவும் முடிந்துவிடவே, லோகேசுவரிக்கு ரொம்பவும் தைரியம் சொல்லிவிட்டு, புவனேசுவரி, அன்று பள்ளிக்குக் கிளம்பிச் சென்றாள்.!

பாதியிலேயே, அவளுக்குத் தலைமை ஆசிரியர் அறையிலிருந்து, அழைப்பு வந்துவிட்டது.!

நிறைய லீவு எடுத்தது பற்றிக் கேட்கப் போகிறாரோ என்று கலக்கத்துடனேயே சென்று பார்த்தால், அங்கே தயானந்தன் உட்கார்ந்திருந்தான்.!

# 6

திடுமெனத் தயானந்தனை, அவள் வேலை செய்யும் பள்ளித் தலைமை ஆசிரியரின் அறையில் பார்த்ததும், புவனேசுவரி திகைத்துப் போனாள். ஆனால், அதைக் காட்டிக் கொள்ளாமல், தலைமை ஆசிரியருக்கு வணக்கம் தெரிவித்தாள்.

"வாம்மா.!" என்றார் தலைமை ஆசிரியர் ராஜ மாணிக்கம்.! "உன் தங்கைக்கு உடம்பு சரியில்லையாம்.! மிஸ்டர் தயானந்தன், உன்னை அழைத்துப் போக வந்திருக்கிறார்.! இவரோடு போகிறாயா?" என்று வினவினார் அவர்.

வந்திருப்பவன் பெரிய மனிதனாகத் தோன்றினாலும், அவன் சொல்வது மெய்தானா என்று கேளாமல் கேட்கிறார்.!

புவனேசுவரி திகைப்புடன் தயானந்தனைப் பார்த்தாள்.!

'ப்ளீஸ்.!' என்பது போல, அவனது உதடுகள் ஓசையின்றி அவளைக் கெஞ்சின. கூடவே, அவன் முகத்திலும், ஏதோ மாற்றம்.!

மறுப்பாய்ப் பேச வாயெடுத்தவள், அதை மாற்றி, "போகிறேன், சார்.!" என்றாள். "கார்.. கொண்டு வந்திருக்கிறீர்கள் அல்லவா?" என்று தயானந்தனிடம் கேட்டு, அவனைத் தெரிந்தவனாகக் காட்டிவிட்டு, மீண்டும் ராஜமாணிக்கத்திடம் திரும்பினாள்.

"எனக்கு, இன்னும் இரண்டு வகுப்பு எடுக்க வேண்டுமே, சார்.!" என்றாள்.

"அதற்கு நான் ஏற்பாடு செய்து கொள்ளுகிறேன். நீ போம்மா.! இப்போதுதான், நீ எழுந்து வந்தாய். அதற்குள், தங்கைக்குப் படுத்துகிறதே, பாவம்.! அவளைப் போய்ப்பார்.!" என்று பரிவுடன் அனுப்பி வைத்தார் தலைமை ஆசிரியர்.!

பள்ளிக் கட்டிடம் கண்ணுக்கு மறைந்ததும், "என்ன விஷயம் சொல்லுங்கள்." என்று கேட்டாள்.

"சொல்லுகிறேன்.!" என்றவன், அடுத்து வந்த 'பார்க்கிங்' பகுதியில் காரை "நிறுத்தி விட்டு, வேறு கேள்வி கேட்டான்.! உன் தங்கைக்கு அவசரப்பட்டு குழந்தையை ஏதும் செய்துவிடவில்லையே, புவனேசுவரி?" என்று கவலையுடன் வினவினான்.

தவிப்புடன் என்று கூடச் சொல்லலாம்.!

அத்தோடு, 'திசுக் கூடம்', 'குழந்தை'யாகி இருக்கிறது.!

லேசாகத் தலை சரித்து, அவனைத் திரும்பிப் பார்த்தாள் புவனேசுவரி. "என்னது, குழந்தையா? புழு, பூச்சியை விடக் கேவலமான திசுக்கூட்டம் என்றல்லவா..."

சட்டென, அவள் கையைப் பற்றி, "புவனேசுவரி, ப்ளீஸ்.! அதெல்லாம் இப்போது வேண்டாம்.! குழந்தையை அழித்துவிட வில்லையே?" என்று, மீண்டும் தவிப்புடனேயே கேட்டான் அவன்.!

கையை விலக்கிக்கொண்டு, "இல்லை." என்றாள் அவள்.

"தாங்க் காட்.!" என்று அவன் சொன்னதை அலட்சியம் செய்து, "அது பற்றி, நாங்கள் இன்னமும் ஒரு முடிவும் எடுக்கவில்லை.! ஆனால், திசுக்கூட்டம் குழந்தை ஆனது எப்படி என்று நீங்கள் இன்னும் சொல்லவில்லையே.!" என்றாள் அவள் குத்தலாகவே.

"சொல்லுகிறேன்." என்றவனின் குரல் லேசாகக் கம்மியது.! ஒரு வினாடி அமைதியின் பின், "அன்றைக்குக் கடவுள்தான் கேட்க வேண்டும் என்றாயல்லவா? கேட்டுவிட்டார்.! சுகன்... ஒரு விபத்தில் போய்விட்டான்.!" என்றான்.

"ஐயோ.!" என்றாள் அவள் அதிர்ச்சியுற்று.!

மீண்டும் பார்த்தபோதுதான், அவனிடம் என்ன மாற்றம் என்று புரிந்தது.!

தயானந்தன் சோர்ந்திருந்தான்., களைத்திருந்தான்., வாடியிருந்தான்.!

அவனைச் சந்தித்த இரு தருணங்களிலும் அவனிடம் காணப்பட்ட, சிறு கர்வத்துடன் கூடிய இலகுத் தன்மை காணாமல் போயிருந்தது.!

கூடப் பிறந்தவனை இழப்பது என்றால் எவ்வளவு கஷ்டம்.!

லோகேசுக்கு ஒரு துன்பம் என்றால், அவளுக்குத் தாங்க முடிகிறதா? உடலுக்கோ, உள்ளத்துக்கோ வருத்தம் என்றாலே பொறுக்க முடியாதபோது, இப்போது, இவனுக்கு எப்படி இருக்கும்?

சட்டெனப் புவனேசுவரியின் உள்ளம் உருகிப் போயிற்று.!

"சாரி.!" என்று மெல்லிய குரலில், வருத்தம் தெரிவித்தாள்.!

அவன் அசையாது அமர்ந்திருக்கவும், அவனது கையைத் தொட்டு, "என்ன



ஆயிற்று? .. சொல்வது, வருத்தத்தைக் கிளறும் என்றால், சொல்ல வேண்டாம்.! விட்டுவிடுங்கள்.!" என்று இதமாகப் பேசினாள்.

சிறு மௌனத்தின்பின், அவன் சொன்னான். "எப்போதுமே, சுகந்தன் ஒரு மாதிரி அமைதியற்ற பிறவி.! ஆட்டமும் ஓட்டமும் அதிகம்.! வளர்ந்த பிறகும், அது போகவில்லை.! கார் ரேஸ், விமானம் ஓட்டுவது என்று, ஏதாவது செய்வான், சொல்லிப் பார்த்துவிட்டு, நாங்கள் எல்லோருமே விட்டுவிட்டோம்.! இன்னொரு வகைத் தப்புக்கு, இது மேல், என்று, நாங்களும் கண்டு கொள்ளாமல் விட்டது பெரிய தப்பாகிவிட்டது. பயிற்சி விமானத்தில், வேடிக்கை பண்ணப் பார்த்திருக்கிறான்.! உயிரையே பலி வாங்கிவிட்டது.!"

மீண்டும் சற்று நேரம் நிலவிய மௌனத்தில், புவனேசுவரி யோசித்தாள்.!

சுகன் என்றேனும் ஒரு நாள் திருந்தி வந்து, லோகேசுவரியை மணக்கக்கூடும் என்று, அவள் கற்பனை கூடச் செய்தது இல்லை.! அவனை ஒரு முறை பார்த்ததே, அந்த மாதிரி எண்ணம் தோன்றுவதைக் கூடத் தடுக்கப் போதுமானதாக இருந்தது.!

ஆனால், லோகேசுவரியின் வயிற்றில் வளரும் குழந்தையுடைய தந்தை இறந்துவிட்டான் என்றால், ஏதோ ஒரு வகையில், தங்கைக்குப் பெரும் இழப்பாகவே, அவளுக்குத் தோன்றியது.!

குழந்தையைப் பற்றிய எண்ணம், இன்னொன்றை அவளுக்கு நினைவூட்டியது.!

'அழித்துவிடு' என்று, அன்றைக்கு அவ்வளவு எளிதாகக் கூறியவன், இன்று அதைப் பற்றிக் கருத்தோடு கேட்பானேன்?

ஆனால், இழப்பின் வேதனையில், உள்ளே துடித்துக்கொண்டு இருப்பவனை மேலும் வருத்த மனமின்றி, அதைப் பற்றிய பேச்சை விடுத்தாள்.

ஆனால், இப்படியே எவ்வளவு நேரம் உட்கார்ந்திருப்பது?

லேசாகச் செருமி; "என்னை வீட்டில் விட வேண்டும் என்பதில்லை.! நான் இப்படியே இறங்கிக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் வேலையைப் பார்க்கப் போங்கள்.!" என்று காரின் கதவைத் திறக்கத் திரும்பினாள் புவனேசுவரி.

"பொறு." என்று தடுத்தான் அவன். "நானே வருகிறேன். உன்னுடனும், லோகேசுவரியுடனும் பேச வேண்டியிருக்கிறது.!"

"இந்த விஷயம் சொல்வதற்காக மட்டும் என்றால், அதை நானே சொல்லிக் கொள்கிறேன்." என்றாள் புவனேசுவரி.

"அது மட்டும் அல்ல.! தயவுசெய்து என்னை விரட்ட முயற்சிக்காதே.!" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டுக் காரை எடுத்தான் அவன்.

'விரட்ட முயற்சிக்காதே' என்றவனிடம், மேலும் தடுத்துப் பேசவும் அவளுக்குப் பிடிக்கவில்லை.! அதே சமயம், லோகேசுவரியை, இவன் இப்போது சந்தித்து, இந்த விஷயமாகப் பேசுவதும், நல்லதாகத் தோன்றவில்லை.! ஏதோ, கொஞ்சம் தேறி வருவது கெட்டுவிடக் கூடும்.! தம்பியை இழந்து வந்திருக்கும், இவனிடமே, அவள் கடுமையாகப் பேசிவிடலாம்.

இன்னும், வீட்டை வேறு எப்படி வைத்திருக்கிறாளோ.!



அப்படி, அவளிடமும் பேச, இவனுக்கு என்ன இருக்கிறது?

எப்படியோ, சொல்வதற்காக வந்திருக்கிறான்., சொல்லாமல் போவதாக இல்லை என்றால், அவன் விருப்பம்.! சொல்வதைச் சொல்லட்டும்.! என்னவென்று, லோகேசிடம் அவன் சொல்லும்போதே, தெரிந்து கொள்ளலாம்.!

சுகன் விஷயத்தை அறிந்தபோது, புவனேசுவரி அளவு, அவளுடைய தங்கை அதிர்ச்சி அடையவில்லை.!, வருத்தமும் காட்டவில்லை.!

"என்னைப் பொறுத்தவரை, அந்தத் துரோகி இறந்து, இரண்டு வாரங்கள் ஆகிவிட்டன.!" என்றாள் வெறுப்புடன்.! "பொய் சொல்லி.! ஏமாற்றுக்காரன்.! பாவி.!"

"இந்த உலகத்தில் இல்லாமல் போனவர்களைப் பற்றி, அப்படிப் பேசக்கூடாது, லோகேஸ்.!" என்றாள் புவனேசுவரி.

"நான் உண்மையைத்தானே சொன்னேன்.! இதோ, சுகனுடைய சொந்த அண்ணன், இவர் கூட, அதை மறுக்க முடியாதே.!" என்றாள் தங்கை விடமால்.!

"உண்மைதான்.!" என்று, அவளை ஒட்டியே பேசினான் தயானந்தன். "வீட்டில்கூட, 'கறுப்பு ஆடு' என்பார்களே, அதுபோலத்தான் அவன். கொஞ்சம் வாழ்க்கையில் அடிபட்டால் சரியாகி விடுவான் என்று நினைத்தோம்.! ஆனால், அதற்குள், கடவுள் அவனுக்குத் தண்டனை கொடுத்துவிட்டார்.!" என்று வருத்தமாகச் சொன்னான்.!

தாக்கிப் பேசினால், திட்டலாம். ஆனால், அவனோ, இவர்களோடு சேர்ந்து பேசும்போது என்ன செய்வது?

இவன் வெறுமனே தம்பியைத் திட்டுவதற்கு வரவில்லை.! வேறு என்னவோ விஷயம் இருக்கிறது என்று தோன்ற, புவனேசுவரி யோசனையோடு தயானந்தனைப் பார்த்தாள்.!

ஆனால், அவன் பேச்சை ஏற்று, "சுகனால், எனக்கு எவ்வளவு கஷ்டமாகி விட்டது, பாருங்கள்.! இப்போது, என்ன செய்வது என்றே தெரியவில்லை.! எதிர்காலத்தை நினைத்தால், ஒரே இருட்டாக, பயம்மாக இருக்கிறது.!" என்று தன் கவலையைச் சொன்னாள் லோகேசுவரி.!

இதைத்தான் தயானந்தனும் எதிர்பார்த்தானோ?

தங்கையின் பேச்சில் குறுக்கிட்டு, "நம் துன்பம் நம்மோடு.! அதைப்போய், எல்லோரிடமும் சொல்வார்களா? விடு, லோகேஸ்.!" என்று, அவளை அடக்க முயன்றாள் பெரியவள்.

"அதெப்படிச் சொல்ல முடியும்? சுகனால் வந்த கஷ்டம்.! அதை, அவனுடைய அண்ணனிடம் சொல்லாமல், வேறு யாரிடம் சொல்லிப் பரிகாரம் தேட முடியும்?" என்றான் தயானந்தன்.

பரிகாரம்.!

இரு பெண்களுமே, சட்டென அவனைப் பார்த்தார்கள்.!

வந்த காரணம் இப்போதுதான் வெளிவரப் போகிறதா என்று புவனேசுவரியும், கணக்கிடுவது போல லோகேசுவரியும்.!



உடனே நினைவு வர, "உங்கள் காசோலை அப்படியே இருக்கிறது.! வாங்கிக் கொண்டு போங்கள்.!" என்றாள் தமக்கை.!

"முதலில் அவர் சொல்ல வந்ததைச் சொல்லட்டும்.!" என்றாள் தங்கை.!

தயானந்தனுடைய குடும்பத்தில், அவனுடைய பாட்டிதான் எல்லோருக்கும் மூத்தவர். சுகன் திருமணம் ஆகாமல், சந்ததியற்று மறைந்துவிட்டான் என்று வருந்திக் கொண்டு இருந்தார். அப்போது, லோகேசுவரி பற்றி தயானந்தன் கூறவும், உடனே அழைத்து வருமாறு கூறியிருக்கிறார். அவருடைய பேரன் குழந்தை, அவன் வாரிசாக, அங்கே பிறக்க வேண்டுமாம்.! அதற்காகத்தான், தயானந்தன் உடனே கிளம்பி வந்திருக்கிறான்.!

"தந்தை பேர் சொல்ல முடியாமல் குழந்தை பிறக்குமே., மற்றவர் முன் கேவலமே" என்றெல்லாம், இனிமேல் கவலைப்பட தேவையில்லை.!.."

"கொரியாவிலோ, எங்கோ, திருமணம் ஆகாமல் செத்துவிட்டால், அவர்கள் படத்துக்குக் கல்யாணம் செய்து வைப்பார்களாமே.! அதுபோல, ஏதும் செய்வீர்களா? எந்த நிலையிலும், அந்தப் பொறுக்கியுடைய மனைவி ஆவதற்கு, நான் தயாரில்லை.!" என்றாள் லோகேசுவரி.!

"அதெல்லாம் வேண்டாம்.! எதற்காக நாடு விட்டு, நாடு போய்... என்ன பைத்தியக்காரத்தனமான பேச்சு இது?" என்றாள் புவனேசுவரி, சற்றுக்காரமாகவே.!

"எப்படியாவது இந்தியாவுக்கு வந்து, தாஜ்மகாலைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, பாஸ்போர்ட் மட்டும் எடுத்து வைத்தோம்.!" என்றாள் லோகேசுவரி அவசரமாக.

"லோகேஸ்.!" என்று அதட்டினாள், அவளுடைய தமக்கை.!" என்ன சொல்லுகிறாய் என்று யோசித்துத்தான் பேசுகிறாயா? இவர் சொன்னது முடிகிற காரியமா?"

ஆனால், "பின்னே, என்ன அக்கா? தெரிந்தவர்கள் மத்தியில், வயிற்றைத் தள்ளிக்கொண்டு எப்படி இருக்கப் போகிறோமோ என்று நான் பயந்தது, எனக்கல்லவா, தெரியும்? எல்லோரும் என்னென்ன பேசுவார்கள், எப்படி அவமதிப்பார்கள்.. இன்பன் மாமா ஒருவர் போதுமே.!" என்று தங்கை கண்ணீருடன் கூறவும், புவனேசுவரியால், அதற்கு மேல் பேச முடியாது போயிற்று.!

"அது யார், இன்பன் மாமா? உறவா?

"அக்காவை மணக்க.. மணக்கக் கேட்டிருப்பவர்.!" என்றாள் லோகேசுவரி.

"ஓகோ.!" என்ற தயானந்தன், அதற்குமேல், இன்பநாதனிடம் அக்கறை காட்டினானில்லை.! "சரி.! உங்களால், எவ்வளவு சீக்கிரம் கிளம்ப முடியும்? வேலையை விட்டு விலகுவது பற்றி, நீ பள்ளிக்கு முன் அறிவிப்பு மாதிரிக் கொடுக்க வேண்டுமா? அல்லது, ஒரு மாதச் சம்பளம், ஆறு மாதச் சம்பளத்தைக் கட்டி, விலகிக் கொள்ளலாமா? எவ்வளவு பணம் வேண்டுமானாலும் கட்டி விடலாம்.!" என்று, திட்டமிடத் தொடங்கினான் தயானந்தன்.

கஷ்டப்பட்டுப் படித்துப் பெற்ற வேலை.! அவளுக்குப் பிடித்தமானதும் கூட.!

அதை விட்டு விலகுவது பற்றி, எவ்வளவு இலகுவாகத் திட்டம் போடுகிறான்.! இவ
ஒன்று நினைத்தால், மற்றவர்கள் அதை, நடத்தியே ஆக வேண்டுமா? அதெல்லாம்

"ஆமாம், அக்கா.! நாம் இருவருமாக இந்தியாவுக்குப் போகலாம்.!" என்றா
தங்கையும்.

ஆக, போவதென்று முடிவே செய்துவிட்டாளே.! கூடப் பிறந்தவளிடம் கலந்து
ஆலோசியாமலே.! உள்ளூர வலியுடன், "அழைப்பு உனக்குத்தான், லோகேஸ்.!"
என்றாள் புவனேசுவரி.

"இல்லை.! இருவருக்கும்தான்.! நீங்கள் இருவருமே வரவேண்டும்.!" என்றான்
அவன்.

"உங்கள் வீட்டு வாரிசு, லோகேஸ் வயிற்றில்தான் வளர்கிறது.!"

"அதற்காக? உனக்குத் தங்கை மேல் நிறையப் பாசம் உண்டு என்று
எண்ணினேனே.!"

சுருசுருவென்று கோபம் பெருக, "பாசம் இல்லை என்று சொல்லும்படி, இப்போது
என்ன நடந்துவிட்டது?" என்று புவனேசுவரி வெடுவெடுத்தாள்.

"வேறென்ன நடக்க வேண்டும்? அயல்நாட்டுக்குத் தனியே போகச்
சொல்லுகிறாய்.! அதுவும் இப்படிப்பட்ட உடல்நிலையில்.!"

"இந்த மாதிரி நிலையுள்ள உடம்பைப் பார்த்துக்கொள்ளத்தான், உங்கள்
வீட்டில் அனுபவப்பட்ட எத்தனையோ பேர் இருப்பார்களே.! இதுபற்றி, எனக்கு என்ன
தெரியும்?"

"ஆனால் மனது? உன் தங்கையின் மனம், திடத்துக்கு உன்னைத்தானே
தேடும்? சும்மாவே, மனம் நொந்து இருப்பவள்.! புது இடத்தில், தனியாக, அவளால்
எப்படிச் சமாளிக்க முடியும்?" என்று விடாமல் கேட்டான் அவன்.!

"ஆமாம் அக்கா.! இங்கே இருந்தால், நான் மனம் குன்றியே செத்து விடுவேன்.!
ஆனால் நீங்கள் வராமல், என்னால் போகவும் முடியாது.! நான் மனம் நொந்து
சாவதுதான், உங்களுக்குப் பிடித்தமா? அப்படியானால் சரி., நாம், இங்கேயே இருந்து
விடலாம்.!" என்று, கண்ணீருடன் தங்கை புலம்பவும் அதற்குமேல், மறுப்புக்கூற,
புவனேசுவரியால் முடியாது போயிற்று.

"அங்கே செல்ல, விசா எடுக்க வேண்டுமே.!" என்று தன் ஒப்புதலை, அவள்
மறைமுகமாகச் சொல்ல, "அதெல்லாம் நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம்.!"
என்றான்.

பார்த்துக் கொள்ளுகிறோம்.!

கண்ணீர்க் கறையைக் கழுவிவிட்டு வருவதாகத் தங்கை செல்ல, "வலதுகை?"
என்று தலை சரித்து வினவினாள் புவனேசுவரி.

அன்றையத் தினம் முதல் முறையாகத் தயானந்தனின் முகத்தில் புன்னகை
மலர்ந்தது.! ஒப்புதலாய்த் தலையாட்டி, "வலது கையேதான்.! நிறைய விஷயங்களை
சங்கரிடம் விட்டுவிட்டு, நாம் நிம்மதியாக இருக்கலாம். தெரியுமா?" என்றான் அவன்.

"பாவம்.! உங்கள் நிம்மதிக்காக, அவர் பாடுபட வேண்டியிருக்கிறது." என்று,



சங்கரிடம் அவள் போலியாகப் பரிதாபப்பட, அவன் மீண்டும் முறுவலித்தான்.!

தயானந்தன் சென்ற பிறகு, புவனேசுவரி, மீண்டும் தங்கையிடம் சொல்லிப் பார்த்தாள். "தெரியாத கணவானை விட, தெரிந்த திருடன் மேல்.! என்று பழமொழி இருக்கிறது, லோகும்மா.! இங்கே சிரமம் என்று, இந்தியாவுக்குப் போக நினைக்கிறாய்.! அங்கே நிலைமை, இதைவிட மோசமாக இராது என்று வினவினாள்.

"என்னக்கா, திரும்பவும் தொடங்குகிறீர்கள்?" என்று எரிச்சல்பட்டாள் மற்றவள்.

"அதில்லைம்மா. அங்கே தெரியாத மனிதர்கள், தெரியாத இடம்.! இங்கேயானால், ஏதோ ஓர் அவசரத்துக்கு, அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் இருக்கிறார்கள்..."

"அதற்காகத்தானே, போக வேண்டும் என்று, நான் சொல்வதும்? நம்மை அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் என்ன செய்வார்கள்? தேவிமாராணி, மோகன ஜோதி, கிளார்ா, யார் வீட்டிலாவது, இனி என்னோடு பழக விடுவார்களா? அக்கம்பக்கத்தில், என்னவோ, உலகத்தில் இல்லாத குற்றம் செய்துவிட்ட மாதிரி, என்னைப் பார்த்தாலே, முகத்தைத் திருப்புவார்கள்.! இன்பன் மாமா வீட்டில் கேட்கவே வேண்டாம்.! இதைவிட மோசமான நிலைமை என்ன வர முடியும்? சுகன் வீட்டுக்கும், நாமாக ஒன்றும் காலில் விழுந்து, காப்பாற்றச் சொல்லிக் கெஞ்சி, அங்கே போகவில்லை. அவர்களாக வந்து, அழைத்து, கௌரவமாகத்தான் போகிறோம்.! அத்தோடு, இன்னொன்றும் யோசித்தேன். சுகன் வீட்டு வாழ்க்கைத்தரம் எப்படித் தெரியுமா? நல்ல உணவு, நல்ல கார், நல்ல இருப்பிடம்.! அன்றைக்கு, உங்களுக்கு மீ பிரட்டல் வாங்கி வந்தேனே, சுவை நினைவிருக்கிறதா? அதெல்லாம் சும்மா கிடைக்கும்போது, ஏன் விட வேண்டும்? தயவு பண்ணி, கண்டதை நினைத்துக் குழம்பி, என்னையும் குழப்பாமல், பிரயாணத்துக்குத் தயார் பண்ணுங்கள்.!" என்றாள் தங்கை, தெளிவாக.

தீர்மானமாகவும்.!

இவ்வளவு பட்டும், இன்னும் பணம், வசதிக்காக ஏங்குகிறாளே என்று வருந்திய போதும், தங்கை சொன்ன மற்றவற்றைப் புவனேசுவரியாலும் மறுக்க முடியவில்லை.!

கடமை நிமித்தம், இன்பநாதனுக்கு விவரம் தெரிவிக்க வேண்டியிருந்தது.!

உடனே வந்தவன், "அவள் செய்த பாவம்.! அயல்நாட்டில் போய், அவளே அனுபவிக்கட்டும்.! நீ கூடப் போகாதே.! அவள் போய்விட்டால், நமக்கும் நிம்மதி.! அனாவசியச் செலவு நின்று, முழுப்பணமும் கையில் நிற்கும்.! தொல்லை விட்டது என்று, திருமணம் செய்துகொண்டு, நான் திட்டமிட்டபடி நன்றாக வாழலாம்.!" என்று சொன்னது, ஆத்திரத்தைக் கிளப்ப, அவளுள்ளும் பயணம் உறுதிப்பட்டுவிட்டது.!

அதற்குமேல், அவனது கெஞ்சல், கோபம், கொஞ்சல் எதற்கும் மதிப்பே இருக்கவில்லை.!

கடைசியாகச் சாபமிடுவது போல, "சரி போ.! ஆனால், அங்கே படாத பாடு பட்டு, ஏங்கி, இளைத்து சீக்கிரமே திரும்பிவந்து என் காலில் விழுவாய்.! இது நிச்சயம்.!" என்றுவிட்டுப் போனான் இன்பநாதன்.

# 7

**கி**ளம்புவதில் உறுதியாக இருந்தபோதும், லோகேசுவரி உள்ளூரக் கலங்கியது,
அவளது உடலில் தெரிந்தது.!

மசக்கையும் சேர்ந்துகொள்ள, உட்கார முடியாமல் சுருண்டு, சுருண்டு
படுத்தாள்.

பயணத்திலும் கண்களை இறுக மூடிக்கொண்டு அமர்ந்திருந்தவள், அப்படியே
உறங்கிவிட்டாள்.

அவளுக்கு வசதியாக, இருக்கையைச் சாய்வாய் இழுத்து விட்டுவிட்டு,
மறுபுறத்தில் தன் அருகே வந்து அமருமாறு, புவனேசுவரி எழுந்து சென்றாள்.

எழுந்து, ஓரத்தில் அவளை உட்கார வைத்துவிட்டு, உட்புறமாக அமர்ந்தான்
அவன்.

விமானப் பணிப் பெண்ணை அழைத்து, பழச்சாறு கொண்டுவரச் சொல்லி,
அவளிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை அருந்தலானான்.

புவனேசுவரியின் பார்வை அடிக்கடி வெளியே சென்று மீள்வதைக் கவனித்து,
"கீழே, அங்கங்கே குட்டித் தீவுகள், கப்பல்களின் விளக்குகள், மேலே நட்சத்திரங்கள்.!
இடையே நாம் பறந்து போவது, பெரிய சாதனையாக, எனக்குத் தோன்றுவது உண்டு.!"
என்றான்.

"கஷ்டப்பட்டு விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள் வேறுயாரோ.! சாதனை
உங்களுதா?" என்று கிண்டலாக கேட்டாள் புவனேசுவரி.

"மனித குலத்தின் சாதனை என்ற பெருமிதம்.! அதில் பங்கெடுத்துக்
கொள்ளக்கூடாதா என்ன? ஆனால், ஒன்று தெரிகிறது.! குட்டுவதற்கு வாய்ப்புக்
கிடைத்தால், நீ விடுவதே இல்லை. அப்படித்தானே?" என்று முறுவலித்தான் அவன்.!
"என்னிடம் மட்டும்தான் இப்படியா? அல்லது, வழக்கமே இதுதானா?"

"இரண்டும் இல்லை.! ரைட் சகோதரர்களில் தொடங்கி, எத்தனையோ பேர்
வெகுவாக முயன்று, இந்த அளவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.! நீங்கள்
ஒன்றுமே பண்ணாமல், சாதித்ததாகச் சொல்லுகிறீர்களோ என்று எண்ணி..
அதனால்தான்."

"ஓகோ.! ஆசிரியை அம்மா அல்லவா? தப்பைக் கண்டதும், சுட்டிக்காட்டி
விட்டீர்களாக்கும்.! போகட்டும்.! உன் இன்பன் என்ன சொன்னார்?"

திடுமென அவன் கேட்ட விதத்தில், புவனேசுவரி, தடுமாறிப் போனாள். நல்ல
வேளையாகப் பழச்சாறு கிட்டத்தட்டக் காலியாகிவிட்ட நிலை.! அல்லது, மேலே
கொட்டி விட்டிருக்கும்.!

அதையும் கவனித்து, "என்ன அவ்வளவு அதிர்ச்சி? வழி மறித்துப் படுத்தவரைத்
தாண்டிக் கொண்டு வந்தாயா?" என்றான் அவன் கேலிக்குரலில்.



"திடுமென இப்படிக் கேட்டால் திடுக்கிடாதா? ஆனால், அவர் ஏன் வழி மறிக்க
வேண்டும்?" என்றாள் அவள் ஆத்திரத்துடன்.!

"பின்னே மாட்டாரா? மணக்க இருப்பவர். ஆசைக் காதலியைப் பல மாதங்கள்
பிரிந்து இருக்கப் பிடிக்குமா என்ன? தடுப்பது இயற்கைதானே?"

"அவர் புரிந்து கொள்வார்." என்றாள் அவள் சுருக்கமாக.!

மற்றபடி, இன்பநாதனின் கசாப்புப் பேச்சையா, சொல்ல முடியும்?

தயானந்தனின் பேச்சு, அவள் கேட்க நினைத்த இன்னொன்றைத் தொடங்க
வழி வகுத்துத் தந்தது.! உங்கள் பாட்டி சொன்னார்கள் என்று அழைத்துப்
போகிறீர்களே.! அங்கே, மாற்று அபிப்பிராயமும் இருக்கும் அல்லவா? இன்பநாதன்
தடையை எதிர்பார்த்ததாகச் சொன்னீர்களே.! அதைப்போல, அங்கே யார் யார்?

கீழ்க் கண்ணால், அவன் தன்னைப் பார்ப்பதை அவளால் உணர முடிந்தது.!

அதாவது, அங்கேயும் எதிர்ப்பு இருக்கிறது.!

சட்டென அவ்ள் மனம் துடித்தது.! மற்றவர் முன் அவமானப்படக் கூடாது
என்பதற்காகவே நாடு விட்டு நாடு வரும், லோகேசுவரி, இங்கும் இகழ்ச்சி என்றால்
தாங்குவாளா?

தன் எண்ணத்தை வாய்விட்டு, அவள் சொன்னபோது, தயானந்தன்
தலையசைத்தான்.! "நான் சொல்வது உனக்குப் பிடிக்காது.! ஆனால், ஒரு சில
வார்த்தைகளில் துவண்டுவிட, உன் தங்கை ஒன்றும் 'மோப்பக் குழையும் அனிச்ச
மலர்' அல்ல.! உன்னைவிட, அவளுக்கு மனோதிடம் அதிகம்.!.."

"ஆனால், அவள் இங்கு வந்த காரணம் என்ன தெரியுமா? பிறர் ஏச்சுக்கு..?"

"உன்னை விட, நன்றாகவே தெரியும்.! அவளுக்குக் கைச்செலவுக்கு எவ்வளவு
வேண்டும் என்பது வரை, அவள் என்னிடம் பேசியிருக்கிறாள், தெரியுமா?" என்று
கேட்டு, மீண்டும் ஒரு தரம் அவளை அதிர வைத்தான் அவன்.!

இதை, லோகேசுவரி அவளிடம் சொல்லவே இல்லையே.! இவன் சொல்வது
மெய்யாக இருக்குமா? ஆனால், தங்கை மறைத்துப் பேசக்கூடியவள்தான்.!

அவள் கையில் இருந்த ஜூஸ் கப்பை வாங்கி, முன்னே இருந்த சிறு மடக்குத்
தட்டில் வைத்துவிட்டு, அவன் சொன்னான். "தங்கை மனம் நொந்துவிடுமோ என்று,
அவள் தூங்கிய பின், இங்கே வந்து அமர்ந்து நீ கேட்டதை, அவள் அங்கேயே
கேட்டுவிட்டாள். சுகனின் மரணம் ஒவ்வொருவரை ஒவ்வொரு விதமாக தாக்கி
இருக்கிறது. எல்லோரும் சமநிலைக்கு வருமுன் பேசுவதைப் பெரிதாக
எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று அவளிடம் சொல்லியிருக்கிறேன். அவளும்
அதை ஒத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் பெரிதாக ஒன்றும் கவலைப்படாதே"
என்றான். ஒரேயடியாக முட்டாளைப் போல அல்ல என்றாலும், ரொம்பவே அறிவு
கட்டையாக உணர்ந்தாள் புவனேசுவரி. இதையெல்லாம் அவள் முன்பே
விசாரித்திருக்க வேண்டாமா? இப்போது கேட்டு என்ன பயன்? அவன் சொல்லும்
விவரங்கள் பிடிக்கவில்லை என்றால், பஸ், ரயில் போல, இடையில் இறங்கி ஓடிவிடவா
முடியும்?



இது விமானம். இதிலிருந்து இறங்குவது என்றால், அதாவது இறங்க
முடிந்தாலும், நடுக் கடலில்தான் குதித்தாக வேண்டும்.!

அது, அவளது முட்டாள்த்தனத்துக்குச் சரியான தண்டனையாகவும் இருக்கும்.!

ஆனால், அவள் அறியாதபடி, லோகேஸ் எப்போது கேட்டிருக்க முடியும்?

அவளது கேள்விப் பார்வையைப் புரிந்துகொண்டு, "என்னைத் தவிர்ப்பதற்காக,
நீ ஏதேதோ வேலைகளைக் காரணம் காட்டி, அங்குமிங்கும் அலைந்து
கொண்டிருந்தாயே, அப்போது கேட்டுத் தெரிந்துகொண்டாள்,!" என்றான் அவன்
கேலிக்குரலில்.!

திணறிப் போனாள் புவனேசுவரி. அவன் வரக்கூடிய நேரங்களில், ஏதாவது
சாக்கிட்டு, அவள் வெளியே சென்றதன் காரணத்தை, வெகு சரியாகக் கணித்து
வைத்திருக்கிறானே.!

சிரமப்பட்டு சமாளித்து, "அப்படியெல்லாம் இல்லை.! அந்த வேலைகளையும்
செய்தாக வேண்டும் அல்லவா?" என்றாள் அவள்.

"ஆனால், அதை நான் வரும் நேரத்தில்தான் செய்ய வேண்டும் என்பது
இல்லையே.!

"நான் அந்த வேலைகளைச் செய்வதற்காகச் சென்ற நேரம் பார்த்து, நீங்கள்
வந்ததாகவும் சொல்லலாமே.!" என்றாள் அவள் பதிலுக்கு.!

"தாராளமாகச் சொல்லலாம்.! ஆனால், உண்மை என்னவென்று, உனக்கும்
தெரியும்., எனக்கும் தெரியும்.!" என்று மெல்லச் சிரித்தான் தயானந்தன்.!

மேலே வாதாட முடியாமல் போய்விட, உதட்டைக் கடித்துக்கொண்டு
பேசாதிருந்தாள் புவனேசுவரி. சிறு மௌனத்தின் பின், "அங்கே, யார் யார்
இருக்கிறார்கள்?" என்று சின்னக் குரலில் கேட்டாள்.!

அவனும் கேலி, கிண்டல் இல்லாமல் பதில் சொன்னான்.

"முதலாவதாக, மூத்த தலைமுறையாக எங்கள் பாட்டி.! நீங்கள் இங்குவரக்
காரணமே, பாட்டிதான். பாட்டி, குரலை உயர்த்திச் சொன்னால், எல்லோரும் பணிந்து
விடுவோம்.! ஆனால், லேசில் அவர்கள் குரலை உயர்த்துவது இல்லை.! முடிந்தவரை
அவர்கள் சொல்லுக்கு எதிராகப் பேச வேண்டாம்.! வயது, எழுபதுக்கும் மேல் ஆகிறது.
தனியாகத்தான் வசிக்கிறார்கள்.! இழப்பை அறிந்தவர்கள்.! மகளையும்,
மருமகனையுமே.! நாலு வயதிலிருந்து, அத்தை மகன் சரவணன் அவர்களோடு
இருக்கிறான்.

"அடுத்து எங்கள் வீடு. அப்பா, அம்மா, தங்கை சுதா.! ஒன்று விட்ட சித்தப்பா
வீடு சற்றுத் தள்ளி இருக்கிறது.! அதை ஒட்டியே, சித்தப்பா மகள் மானசி வீடு.!
அவளுடைய கணவர் மாதவன், சரவணனுடைய அப்பா வகையில் உறவு.
மாதுவுடைய கடைசித் தங்கை இப்போது, அங்கே வந்திருக்கிறாள்.."

நிறைய மனிதர்கள். முதலில் குழப்பமாக இருக்கக் கூடும்.! பழகப் பழகச்
சரியாகிவிடும்.!



"எல்லோருக்கும் தனித்தனி வீடுகள்தான்.! ஆனால், சின்ன விஷயம் என்றாலும்
அனைவரும் எங்கள் வீட்டில் சேர்ந்து கொள்வோம்.! அநேகமாக, நாளைக்கு
எல்லோரையுமே நீ சந்திக்ககூடும்.!"

தன் குடும்பத்தார் பற்றி, மேற்கொண்டு பேச அவன் தயாரில்லை.!

ஏன்? இன்பனைப் பற்றி, அவள் பேச விரும்பாத மாதிரியா? பேசினால், குறை
தெரியவரும் என்பதால், அந்தப் பேச்சையே தவிர்க்கிறானோ?

புவனேசுவரியின் மனம் மேலும் கனத்தது.!

தங்கையின் பக்கம் பார்த்துவிட்டு, "லோகேஸ் விழித்து விடக்கூடும்.! நான்
அங்கே போகிறேன்." என்று, அவன் எழுந்து வழி விடக்காத்திருந்தாள்.!

ஆனால் அசையாமல் அமர்ந்திருந்தபடி, "நீ அருகில் உட்காரும் அசைவிலேயே,
அவள் விழித்து விடலாம்.! ஆனால், ஒரு வேளை, என் பக்கத்தில் உட்கார்ந்திருக்க
உனக்குப் பிடிக்கவில்லையோ என்னவோ?" என்றான் அவன்.

சும்மா, சும்மா இவனுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவிப்பதா?

அவசரமாக யோசித்து, என்னைப் பார்க்க முடியாது என்று மறுத்தவர்,
பிடிவாதமாக நான் வந்து பார்த்தபோதும், நின்று பேசாமல் விரட்ட முயன்றது
நீங்கள்தான். நினைவிருக்கட்டும்.!" என்றாள் அவள் கிண்டல் போல.!

முறுவலித்து, "அந்தக் கோபம் இன்னுமா இருக்கிறது?" என்று வினவினான்
தயானந்தன்.

"அடியோடு மறையவில்லை.!" என்று, தன் ஒதுக்கத்துக்கு அதுதான் காரணம்
போலக் காட்டியவள், அவன் புருவம் சுருக்கி, யோசிக்கவும், அவசரமாக, "ஆமாம்,
அன்று நீங்கள் ஏன் அப்படி... உதாசீனமாக நடந்து கொண்டீர்கள்?" என்று
வினவினாள்.

தோளைக் குலுக்கி, "என்னுடைய இருபத்தி ஒன்றாவது வயதில் இருந்து,
ஏதாவது சாக்கிட்டுப் பெண்கள் என்னை நெருங்க முயல்வது, புதிது அல்ல.! அப்படி
யாரோ என்றுதான்..." என்று, முடிக்காமலே நிறுத்தினான் தயானந்தன்.

கண்கள் பளிச்சிட, "ஓகோ.! காஃபிக் கொட்டை மகாராஜா.! மன்மதக் குஞ்சுக்கு
வலை வீச வந்ததாக எண்ணிவிட்டீர்களாக்கும்.!" என்று அவள் சிரிக்க, அவனும்
லேசாக நகைத்தான்.

"நான் பாவம், உங்கள் வலது கையின் வேலையோ என்று, உள்ளூர அவரை
அல்லவா, திட்டிக் கொண்டிருந்தேன்.! ஆமாம், உங்கள் வலது கை பற்றி, ஒன்றுமே
சொல்லவில்லையே.! அவர் எங்கே வசிக்கிறார்?"

"என்னோடுதான்.! சித்தியுடைய தங்கை மகன். மாற்றாந்தாயிடம் தங்கை மகன்
கொடுமைப்படுவதைப் பார்த்துச் சித்தி, கூடவே கூட்டி வந்து விட்டார்கள்.!
அவனுடைய கெட்டிக்காரத்தனத்தைப் பார்த்து அப்பாவுக்குப் பிரியம். நாங்கள்
இருவரும் ஒன்றாகவேதான் தொழில் பயின்றோம்.! மற்ற எல்லோரையும் விட, எனக்கு
நெருக்கமான நட்பு, உறவு எல்லாம் சங்கர்தான்.! நீ பேசிய போதுகூட, முதலில்

எடுத்தது அவன்தானே.! குரல் உண்மையானதாக இருக்கிறது என்று, பேசும்படிய கூறினான்.!"

உள்ளூர, அவன் மேல் நன்றி சுரந்தது புவனேசுவரிக்கு.! "இப்போது அவ எங்கே?" என்று விசாரித்தாள்.

"ராணிமார் வருகைக்கு ஏற்பாடு செய்ய, முன்னதாகப் போயிருக்கிறான்.!" என்று சிரித்தான் அவன்.

"ஓ.!" என்றவளின் முகத்தில் கவலை படிவதைக் கவனித்து, பேச்சை மாற்றினான் தயானந்தன்.

எண்ணிறந்த விளக்குகளுடன், சென்னை மாநகரத்தின் இரவுத் தோற்றம் மிகவும் ரம்மியமகாத்தான் இருந்தது.! ஆனால், விமானம் தரையைத் தொட்டபோது, வயிற்றினுள் குளிர், பரவுவதைப் புவனேசுவரியால் தடுக்க முடியவில்லை.!

நாடு விட்டு, நாடு வந்தாயிற்றே.!

'உதயா'வின் விருந்தினர் இல்லத்திலேயே, இரவுத் தங்கலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.!

ஓய்வு எடுத்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டு தயானந்தன், அவனது அறைக்குச் சென்றுவிட, சோர்வுடன் படுக்கையில் விழுந்தாள் புவனேசுவரி.

அரையடி அமுங்கிக் கொடுத்தது மெத்தை.! ஏசியின் இதக் குளிர் வேறு.! ஆயினும், கடலுக்கு அப்பால் இருந்த ஒற்றைப் படுக்கையறை வீட்டுக்காக ஏங்கியது அவள் மனம்.!

ஒரு நல்ல குடும்ப வாழ்க்கையை இதமாக எதிர்பார்த்தபடி சுகமாக இருந்தாளே.!

ஆனால், இன்பன் இவ்வளவு சுயநலமியாக இருப்பான் என்று, அப்போது அவள் எண்ணிக்கூடப் பார்த்தது இல்லை.! ஒரு வேளை, அவளைப் பிரிய நேருமோ என்ற வேகத்தில் பேசிவிட்டு, அவன் இப்போது வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறானோ?

அப்படித்தான் இருக்கும்.! மற்றபடி, அவன் கெட்டவன் இல்லை., அவனுக்கு ஃபோன் செய்து பேச வேண்டும்... என்று நினைத்தவாறே, புவனேசுவரி தூங்கிப் போனாள்.!

மறுநாள் விழித்தெழுந்து கிளம்புகிற வேகத்தில், ஃபோன் நினைவே அவளுக்கு வரவில்லை.!

நான்மாடக்கூடலாம் மதுரையின் கோபுரங்களை அவள் ஆவலாகப் பார்க்கவும், 'அதிக அலுப்புப்படுத்திக் கொள்ள வேண்டாம்' என்று, லோகேசுவரியை 'பாண்டியன்' ஹோட்டல் அறையில் ஓய்வெடுக்கும்படி செய்துவிட்டு, மற்றவளை மாலையில் கோயிலுக்கு அழைத்துச் சென்றான் தயானந்தன்.

ஏசி காரில் செல்லும்போது ஒன்றும் தெரியாவிட்டாலும், காரைவிட்டு இறங்கியதுமே, "ஒரே தூசி!" என்றாள் புவனேசுவரி.

"உங்கள் நாட்டில் இருந்து வருகிறவர்கள் எல்லோரும், ஒரே குரலாக முழங்குவது, இதைத்தான்.! நீயும் மாறுபடவில்லை.!" என்றான் அவன்.!

"ஏன், சுத்தமாக வைத்துக் கொள்வதற்கென்ன?"



" 'எறும்பூரக் கல் தேயும்.!' என்று படித்திருக்கிறாயா? கல் தேய்வது என்றால் என்ன அர்த்தம்? கடினமான கல்லே பொடிப்பொடியாய்ப் புழுதியாகி விடுகிறது.! எறும்பு ஊர்வதிலேயே, அப்படி.! நூறு கோடி மக்கள், ஏற்றவாறு வாகனங்கள், கால்நடைகள், புழு, பூச்சிகள்,.. கூடவே எறும்புகள்.! நாட்டில் எவ்வளவு புழுதி உண்டாகும்.! அத்தோடு, உங்கள் நாட்டில், அதிகபட்சமாக மூன்று நாட்களுக்கு ஒரு தரமேனும் மழை பொழிந்து, தூசியைக் கழுவி விட்டுவிடுகிறது.! தூசி கிளம்பாமலும் செய்து விடுகிறது.! இங்கே, மாரிக் காலத்தில் மழை பெய்வதே அதிசயம் ஆகிவிடும் போல இருக்கிறதே.!"

"ஒத்துக் கொள்ளுகிறேன்.! உங்கள் நாட்டில் தூசி இருப்பதுபோல நியாயமான விஷயம், உலகத்திலேயே கிடையாது.!" என்றாள் அவள் கேலியாக.!

"நியாயம் என்று சொல்லமாட்டேன்.! தொடர்ந்து தூசி இருக்கும் என்பதும் இல்லை.! ஆனால் இப்போதைக்குத் தவிர்க்க முடியவில்லை.! அவ்வளவே.!" என்றான் அவன்.!

"தவிர்க்க ஒரு வழி இருக்கிறது.!" என்றாள் புவனேசுவரி.

அவன் சன்னமாய் இமையிடுக்கி, சந்தேகமாக நோக்கவும், அப்பாவியாய் விழிகளை விரித்து "மெய், சார்.! சற்றுமுன் பழமொழி சொன்னீர்களே.! அதுபோல, அந்தக் காலப்பாடல் ஒன்று நான் படித்திருக்கிறேன். 'நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு, எல்லோர்க்கும் பெய்யும் மழை' என்று முடியும்.! இங்கேயும், யாராவது ஒருவராவது நல்லவர் ஆகிவிட்டால், உங்கள் பிரச்சினை, முழுமையாகத் தீர்ந்து போகுமே.!" என்றாள் அவள் சாது போல.!

அவன் கண்கள் பளிச்சிட்டன. "இனிமேல், ஒருவரைப் பிடித்து நல்லவர் ஆக்குவது கடினம்.! ஆனால், அதற்கு அவசியமே இல்லாமல், நீதான் வந்துவிட்டாயே.! இனி மழை கொட்டோ கொட்டென்று கொட்ட வேண்டியதுதானே?"

அடக்க மாட்டாமல் சிரிக்கும்போது, கேலியைப் புரிந்துகொண்டு, பட்டுப் பட்டென்று பதில் கொடுப்பவரோடு வார்த்தையாடுவது நன்றாகத்தான் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டாள் புவனேசுவரி.!

இன்பனோடு, இப்படிப் பேசிச் சிரித்ததே கிடையாது.! கேலியை அவ்வளவாகப் புரிந்து கொள்ள வராது அவனுக்கு.! 'என்ன' என்று, அவளிடமே விளக்கம் கேட்டான். அவன் வரத் தொடங்கிய பிறகு, லோகேசும் அவளும் பேசிச் சிரிப்பது கூடக் குறைந்து விட்டது.!

அவனோடான வாழ்க்கையும் அப்படித்தான் இருக்குமா?

"என்ன விஷயம்?"

திகைத்துத் திரும்பியவளிடம், "திடுமென முகம் மாறி விட்டதே, ஏன் என்று கேட்டேன்.!" என்றான் தயானந்தன்.

"அஅது. இவ்வளவு பெரிய கோயிலை, மின்சாரம் போன்ற விஞ்ஞான சாதனைகள் எல்லாம் கண்டுபிடிக்கும் முன்பாகவே, எப்படித்தான் கட்டினார்களோ

என்று பிரமித்துக் கொண்டிருந்தேன்.!" என்று சமாளித்தாள் புவனேசுவரி.!

ஆனால், 'தன்னெஞ்சறிய பொய்யற்க' அல்லவா? தயானந்தனிடம் சமாளித்து, பதில் சொன்ன மாதிரி, அவளது உள்ளத்தில் எழுந்த கேள்விக்குப் பதில் அளிக்க அவளால் இயலவில்லை.!

# 8

**கோ**யிலை விட்டு வெளியே வரும்போது, "ஆடை, அணிமணிகள் தேவைப்பட்டது வாங்கிக் கொள்.!" என்றான் தயானந்தன்.

"வேண்டியது இருக்கிறது.!" என்று மறுத்துவிட்டு, "உங்கள் செக். அங்கே தேவைப்படவில்லை.! இந்தாருங்கள்.!" என்று, அவன் முதலில் அனுப்பியதை, வாய்ப்புக் கிடைக்கும்போது திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கைப்பையிலேயே வைத்திருந்த காசோலையை, எடுத்துக் கொடுத்தாள் அவள்.

அவனுக்கு வாங்கிக் கொள்ளப் பிடிக்கவில்லை என்று நன்றாகவே தெரிந்தது.! ஆனால், மறுக்க மாட்டாமல் வாங்கியவன், "உன் பெயரில் உள்ள செக்.!" அங்கேயே பயன்படுத்தியிருக்க வேண்டும். நான் வைத்திருந்து என்ன செய்வது?" என்று கிழித்துக் குப்பைத் தொட்டிக்குள் வீசினான்.

அவனது கோபம் அர்த்தமற்றதாக, தோன்றியபோதும், அவளது மனதைச் சங்கடப்படுத்தியது.! ஆனால், "நீங்கள் எதற்காகக் கொடுத்தீர்களோ, அதைச் செய்யாதபோது, உங்கள் செக்கை எப்படி, சார் பாவிப்பது.." என்று அவள் விளக்குகையில், அவன் மீண்டும் எரிச்சல் பட்டான்.!

"முதலில் ஒன்றை நீ கவனி, இனி நாம் செல்ல இருக்கிற இடத்தில், பணியாட்கள் தவிர, என்னை யாரும் சார், மோர் என்று அழைக்க மாட்டார்கள்.! பெயர் சொல்லிக் கூப்பிடுவார்கள்., அல்லது, உறவு முறையில் அழைப்பார்கள்.!.."

சடக்கெனத் திரும்பி, "உங்களை நான் எந்த உறவு முறையில் அழைக்கட்டும்?" என்று குத்தலாகக் கேட்டாள் அவள்.

"அதை, உன் தங்கையிடம் கேள் என்று நானும் சொல்ல முடியும்.!" என்றாள் அவன் பதிலுக்கு.!

"ஆனால், எனக்குக் குதர்க்கத்தில் விருப்பம் இல்லை.! நாம் ஒன்றும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ, மத்தியிலோ இல்லையே.! பெயரைச் சொல்லியே கூப்பிடலாம்.!" என்றவன் அவள் மேலும் தயங்கவும், "என்னவோ, சிங்கமே, புலியே, கிங்கரனே என்று கூப்பிடச் சொல்லுகிற மாதிரி நடுங்குகிறாயே.! என் பெயர் ரொம்ப அழகானதும்மா.! சொல்லிப் பார்.! தயா." என்று ஒவ்வோர் எழுத்தாகச் சொல்லத் தொடங்க, புவனேசுவரி தானாக முறுவலித்தாள்.

"உங்கள் பெயர் உலக மகா அழகானதுதான், ஒத்துக் கொள்ளுகிறேன்.! ஆனால், எனக்கு, மனதில் கொஞ்சம் பழகட்டும், அப்புறம்தான் வாயில் இயல்பாக வரும்.."

"பரவாயில்லை.! நல்ல சமாளிப்பு.! இப்போதைக்கு வெற்றிகரமாகத் தள்ளிப்



போட்டாயிற்று.! போகட்டும்.!" என்று விட்டுக் கொடுத்தான் தயானந்தன்.

அப்பாடி என்று அவள் மூச்சு விடும்போதே, ஆனால், 'இன்பநாதன்' எத்தனை நாளில் வாய்க்கு இலகுவாயிற்றோ, தெரியவில்லையே?" என்றுரைத்து, மீண்டும் அவளைத் திணற வைத்தான் அவன்.

நல்ல வேளையாக, அதற்குள் ஹோட்டல் வந்துவிட, நிம்மதியோடு அறைக்குச் சென்றாள் புவனேசுவரி.

ஆனால், "எனக்குத் துணையாக வந்துவிட்டு, என்னைத் தனியே விட்டுவிட்டு, ஜாலியாக ஊர் சுற்றப் போய்விட்டீர்களே.!" என்று குறை கூறினாள் லோகேசுவரி.!

ஜாலியாகவா? என்று பெருமூச்சு விடப் போன புவனேசுவரி, திடுமெனத் திகைத்தாள்.!

அவ்வப்போது சில திணறல்கள், கோபங்கள் ஏற்பட்ட போதும், தயானந்தனுடன் வெளியே சென்றது, அவளுக்கு உற்சாகமாகத்தான் இருந்தது.!

இதழ்களில் சிறு முறுவலுடன், "மதுரை மீனாட்சி அம்மன், நம் மாரியம்மனைப் போலச் சக்தியுள்ள தெய்வமாம்.! நீ நல்லபடியாகப் பெற்றுப் பிழைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளப் போனேன் லோகும்மா.!" என்று அவள் பரிவாகப் பதில் சொல்ல, லோகேசுவரியின் எரிச்சல் மறைந்தது.!

புவனேசுவரி சொன்னது உண்மையும்கூட.! உலகம் காக்கும் அன்னையிடம், அவள் அப்படித்தான் வேண்டியிருந்தாள்.!

கூடவே, தங்கை மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்றும்.! அது நடக்கக் கூடுமா?

சுமார் இரண்டு மணி நேரப் பயணத்தில் பாதி மலைப் பாதையில் ஏறிப் பக்கவாட்டில் திரும்பிச் சென்றது கார்.

கொஞ்ச நேரத்தில், 'உதயா' என்ற பெரிய எழுத்துக்களை, உயரத்தில் பார்த்ததுமே, இறங்க வேண்டிய இடம் வந்தாயிற்று என்று இரு பெண்களும் புரிந்து கொண்டனர்.

வேறு யாரும் கண்ணில் படவில்லை என்றாலும், சிரித்த முகமாய், சங்கர் அங்கே ஒரு சிறு வீட்டின் முன் நின்று கொண்டிருந்தான்.!

கார் நின்றதும், "வெல்கம்!" என்று கூறி கார் கதவைத் திறந்துவிட்டான்.

வரவேற்க ஒருவர் இருப்பது ஆறுதலைத் தர, புவனேசுவரி அவனைப் பார்த்து முறுவலித்தாள்.

பதிலாக, "பயணம் வசதியாக இருந்ததா?" என்று விசாரித்தான் அவன்.

"இம்ம்..." என்று புவனேசுவரி தலையாட்டினாள்.

"நீயும் லோகேசுவரியும் இங்கே தங்கிக் கொள்ளுங்கள். சாப்பாட்டுக்கு, அங்கே வந்துவிடுங்கள்.." என்று தயானந்தன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, "எனக்குப் படுக்க வேண்டும்.!" என்றாள் லோகேசுவரி தீனக் குரலில்.

எல்லோருமே, அவசரமாய் அவளது தேவைகளைக் கவனிக்க, விரைவிலேயே, அவள் படுக்க வைக்கப்பட்டாள்.



என்னென்ன, எங்கெங்கே இருக்கின்றன என்று காட்டிவிட்டு, ஆறு மணிக்கு வந்து அழைத்துப் போவதாகவும், அதுவரை ஓய்வெடுக்குமாறும் கூறி, இரு ஆண்களும் விடை பெற்றுச் சென்றனர்.

தமக்கையை அருகில் அழைத்து, அவள் கையைப் பிடித்துக்கொண்டு அசையாமல் படுத்துக் கிடந்தாள் லோகேசுவரி.

"உடம்பை ஏதும் பண்ணுகிறதா, லோகேஸ்?" என்று புவனேசுவரி கவலையுடன் வினவினாள்.

"கொஞ்சம் களைப்பாக... அக்கா, எனக்கு, ஏன் இங்கே வந்..தோம் என்று இருக்கிறதே.!" என்றாள் மெல்லிய குரல் நடுங்க.!

இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்? நீதானே, பிடிவாதம் பிடித்தாய் என்று குத்திக் காட்டவா, முடியும்? அதுவும் அவளே கலங்குகிறபோது.!

தங்கையின் கையைத் தட்டிக் கொடுத்து, "எல்லாம் சரியாகிப் போகும், லோகும்மா.!" என்று ஆறுதல் படுத்த முனைந்தாள் அவள்.

"எப்படிச் சரியாகிப் போகும்? இன்னும் கொஞ்ச நாளில், என் வயிறு பீப்பாய் மாதிரி அசிங்கமாக இருக்கும்.! யாருக்கும் என்னைப் பார்க்கவே பிடிக்காமல் போய்விடும்.!"

"என்ன பேத்தல், இது? உன் முகத்தைப் பார்த்த பிறகு, உன்னை யாருக்காவது, பிடிக்காமல் போகுமா? எங்கள் புத்திசாலி லோகும்மா, திடீரென்று ஏன் இப்படியெல்லாம் உளறுகிறது?" என்று இலகுவாகப் பேசினாள் பெரியவள்.

"பின்னே, ஏன் யாரும் என்னிடம் பேச மாட்டேன் என்கிறார்கள்? தயானந்தனும் உங்களிடம்தான் பேசுகிறார்.! கோயிலுக்கெல்லாம் அழைத்துப் போகிறார்.! அந்த சங்கரும் உங்களைப் பார்த்துதானே சிரித்தார்.! நான் தப்பாக நடந்துவிட்டேன் என்றுதானே என்னை ஒதுக்குகிறார்கள்? இவர்களே இப்படி என்றால், இங்குள்ள மற்றவர்கள்..."

"என்ன அசட்டுப் பேச்சு, இது? நீ வந்து.. இது மாதிரி நிலையில் இருப்பவள்.! களைத்துப் போய் இருப்பாய் என்று, முடிந்தவரை நீ ஓய்வாக இருக்க வேண்டும் என்று எண்ணிச் செய்வதை நீ தப்பாக எண்ணுகிறாயே.! நீ படுக்க வேண்டும் என்றதும், எப்படி இருவருமே மின்னல் வேகத்தில் செயல்பட்டார்கள்? படுக்கையை விரிப்பதும், ஜன்னலைச் சாத்தி ஏசி போடுவதுமாக.. நீயும் பார்த்துக் கொண்டுதானே இருந்தாய்? பிடிக்காதவர்களுக்குத்தான் இந்த மாதிரி வேலைகள் எல்லாம் செய்வார்களாக்கும்? அதுவும், இவ்வளவு உயர்ந்த நிலையில் இருப்பவர்கள்.!"

சிறு கண்டிப்புடன் கூடிய கனிவான பேச்சு, சின்னவளின் முக வெளுப்பைக் கொஞ்சம் மாற்றியது.!

"அப்படியானால், எல்லோரும் என்னிடம் பிரியமாகத்தான் இருப்பார்கள்.! இல்லையாக்கா? கேவலமாக நடத்த மாட்டார்கள்தானே?"

தப்பைச் செய்யும்போது, லட்சியமே செய்யவில்லை.! ஆனால், விளைவை அனுபவிக்கும்போது, என்ன பாடு பட வேண்டியிருக்கிறது.!

"நிச்சயமாய்.!" என்று, தனக்கு இல்லாத நம்பிக்கையைத் தங்கைக்கு



உண்டாக்கினாள் புவனேசுவரி.! "நீயே சொல்லவில்லையா, அவர்கள் அழைத்துத்தானே, நாம் இங்கே வந்திருக்கிறோம்? கேவலமாக நினைப்பவர்களா, வீட்டுக்கு அழைப்பார்கள்?"

"இல்லை.. ஆனாலும், என்னவோ வயிற்றுக்குள் பட்டாம்பூச்சி பறப்பதுபோலக் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது.!" என்றாள் தங்கை.!

"இந்த மாதிரி உடல்நிலையில் அப்படித்தான் இருக்குமாம்.! சற்று நேரம் படுத்துத் தூங்கு.! தூங்கி விழித்தால், எல்லாம் சரியாகி விடும்.!" என்று, கேட்டறிந்த அளவில், தனக்குத் தெரிந்ததைச் சொல்லித் தங்கையைத் தேற்றினாள் தமக்கை.!

அந்த அளவில் அமைதியுற்று, லோகேசுவரியும் உறங்கிவிட்டாள்.!

அவள்தான், இப்போதெல்லாம் ஓயாது தூங்குகிறாளே.!

ஆனால், புவனேசுவரிக்குத்தான், கொஞ்ச நஞ்சம் இருந்த அமைதியும் கெட்டுப்போயிற்று.!

பொதுவாக, லோகேசுவரி, தன் விருப்பம் தவிர, அடுத்தவர் என்ன நினைப்பார் என்று எண்ணிப் பார்ப்பதே இல்லை.! இப்போது, தப்பு செய்த குற்ற உணர்வு, பயண அலைச்சல்., இவைகளோடு கூட அவளது உடல் நிலையும் சேர்ந்து, அவளது மனதைப் பலவீனப்படுத்திவிட்டன போலும்.!

கடவுளே.! எல்லோரும், என் தங்கையிடம் பிரியமாக இருக்கட்டும் என்று வேண்டிக் கொண்டாள் அவள். ஏனெனில், எந்தவித முகம் திருப்பலையும் இப்போது, லோகேசுவரி தாங்குவது கடினம்.!

மதுரைக் கோவிலில் நன்றாக அலைந்து திரிந்துவிட்டு வந்திருந்த போதும், புவனேசுவரிக்குத் தூக்கம் வரவில்லை.! மனம் அலை பாய்ந்தது.!

சற்று தூரம் வெளிக்காற்றில் நடந்து வர எண்ணி எழுந்தாள் அவள்.

லோகேசுவரி நன்றாகத் தூங்கிக் கொண்டு இருக்கவே, சத்தமின்றி மெல்லக் கதவைத் திறந்து, வெளியே சென்றாள்.

சுற்றிலும் இருந்த பசுமை மனதிற்கு இதமாக இருக்க, அருகிலேயே, லோகேசுவரி கூப்பிட்டால் கேட்கக்கூடிய தூரத்திலேயே, மெல்ல நடக்கலானாள்.

சற்று நேரம் சுகமாகத்தான் இருந்தது.! மனதில் இருந்த குழப்பங்கள் வடிந்து, அமைதியாவது போல உணர்ந்தாள். எங்கெங்கோ சுற்றிவிட்டு, வீடு வந்த உணர்வு.!

ஆனால், சற்றுநேரம்தான்.!

ஏதோ உறுத்தல்.! முதுகில் ஊசி கொண்டு குத்துவது போலத் தோன்ற திரும்பிப் பார்த்தாள்.

மாடியும், கீழுமாகப் பெரிய வீடு அங்கேதான் இருந்தது.! தயானந்தனும், சங்கரும்கூட, அந்தப் பக்கம்தான் போனார்கள்.! அங்கிருந்துதான் யாரோ பார்க்கிறார்களோ?

அதற்கு மேல், அங்கே நடக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. உள்ளே சென்று, சோர்ந்து கிடந்த லோகேசுவரியைப் பார்த்தபடி அமர்ந்தாள்.

சற்று நேரத்தில் விழித்தெழுந்த லோகேசுவரிக்கு, சோர்வு நீங்கிவிட்டதாலோ,

என்னவோ, தன்னையே பார்த்தபடி அமர்ந்திருந்த தமக்கையைப் பார்த்ததும் சிரிப்பு வந்தது.!

"என்னக்கா, என்னைக் காக்காய் தூக்கிப் போய்விடாமல் காவல் காக்கிறீர்களா?" என்று கிளுகிளுத்தபோது, அவள் பழைய லோகேசாகவே தோன்ற, புவனேசுவரியும் முறுவலித்தாள்.

சுவரில் தொங்கிய கடிகாரத்தைக் காட்டி, "கிளம்ப வேண்டும்.!" என்று நினைவூட்டினாள்.

மறைய முயன்ற சிரிப்பைப் பிடிவாதமாக இழுத்துப் பிடித்தவாறே "இதோ.!" என்று குளியல் அறைப் பக்கம் போனாள் சின்னவள்.

ஆனால், தயானந்தனுடைய குடும்பத்தினரைச் சந்திக்கச் செல்லுவதற்காக அவள் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்ட விதம்தான், கொஞ்சம் அதிகப்படியாகப் புவனேசுவரிக்குத் தோன்றியது.!

லோகேசுவரி, பிறர் கூறிக் கேட்பவள் அல்ல என்றாலும், மெள்ளச் சொல்லிப் பார்த்தாள். "சும்மா, அவர்கள் வீட்டுக்குச் சாப்பிடப் போகிறோம்.! அவ்வளவுதானே? கொஞ்சம் சாதாரணமாக, ஏதாவது அணிந்து கொள்ளேன்.!" என்றதை சின்னவள் சட்டை செய்யவே இல்லை.!

"அழுது வடிகிற உடையெல்லாம், இன்பன் மாமா வீட்டுக்குத்தான் பொருந்தும்.! இங்கே சரிப்படாது.! இங்கெல்லாம், பார்த்த உடனே, பிரமிக்க வைக்க வேண்டும்.!" என்றுவிட்டு, உடைக்குப் பொருத்தமான ஐஷேடோவை, லேசாகத் தடவிக்கொண்டு, "எப்படி இருக்கிறேன்?" என்று தமக்கையிடமே கேட்டாள்.!

மொத்தத்தில் பார்க்க, லோகேசுவரி மிகவும் அழகாகவே இருந்தாள்.! ஆனால்...

ஒருவேளை, அவர்களது குறுகிய காலப் பழக்கத்தில், தன் வீட்டுப் பெண்களின் பழக்கவழக்கங்கள் பற்றி, சுகன், லோகேசிடம் சொல்லியிருக்கலாம்.! அதற்குத்தக, இவளும் அலங்கரித்துக் கொண்டாளோ, என்னவோ? ஆனாலும்...

"லோகேஸ் நீ ரொம்பவே அழகாகத்தான் இருக்கிறாய். ஆனால், அவர்கள் வீட்டில் சமீபத்தில்தான் ஒரு துக்கம் நேர்ந்திருக்கிறது. அதனால்..."

"அது நடந்துதான் ஒரு மாதத்துக்கும் மேலாக ஆகிவிட்டதே.! இன்னுமா, சுகனையே நினைத்துக் கொண்டிருப்பார்கள்? தயானந்தன் எப்படிப் பேசிச் சிரிக்கிறார்.! ப்ளீஸ் அக்கா, எதையாவது சொல்லி, என் மூடைக் கெடுக்காதீர்கள்.!"

எப்படியாயினும், தங்கையைப் போல உடையணியவோ, ஒப்பனை செய்யவோ பிடிக்காமல், புவனேசுவரி, சாதாரணமாகவே அலங்கரித்துக் கொண்டாள்.! சற்றுப் புதியதான, ஆனால் வழக்கமான உடை..., மெல்லிய சங்கிலி., உதடு, நகங்களில் பொருத்தமான சாயம்.!

"ஐயோ, சகிக்கவில்லை.!" என்று தலையில் அடித்துக் கொண்டாள் லோகேசுவரி.

இரு பெண்களையும் அழைத்துப்போக வந்தவன் சங்கர்.

கண்ணிமைப்பால் கூட, அவன் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.!



இருவரையும் ஒரே மாதிரிப் பார்த்து முறுவலித்தான்.

'ஓய்வெடுத்தார்களா?, வசதியாக இருந்ததா? லோகேசுவரியின் உடல் நிலை பரவாயில்லையா?'

சிக்கலற்ற கேள்விகள்.!அவைகளுக்கு எளிதாகப் பதில் சொல்ல முடிந்ததே, மனதின் இறுக்கத்தைத் தளர்த்தியது.!

செல்லும் வழியில், அந்தப் பகுதிக்கே உரிய சில ஃபெர்ன் வகைகளைக் காட்டி அவன் விவரம் சொல்ல, அதற்குள் வீடே வந்துவிட்டது.!

தயானந்தனுடைய தந்தைக்கு, இவனைச் சும்மா பிடித்துப் போகவில்லை என்று மனதில் எண்ணிக் கொண்டாள் புவனேசுவரி.!

மெல்லப் படியேறி உள்ளே சென்ற போது, ஹாலில் தயானந்தனுடைய தாயார் இருந்தாள்.

சங்கர் அறிமுகப்படுத்தி வைத்தான்.

கண்களில் வலி இருந்தபோதும், இரு பெண்களையும் நல்லபடியாக வரவேற்று பக்கவாட்டில் ஓர் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

அங்கே, தயானந்தன் சொன்னவர்களில், கிட்டத்தட்ட எல்லோருமே, அவன் உட்பட இருந்தார்கள்.!

பாட்டி மாதிரி யாரையும் காணோமே என்று புவனேசுவரி யோசித்தபோது, "பாட்டியை, நாளைக்குப் பார்க்கலாம்.! இப்போது அறிமுகப்படுத்தினால், அந்தப் பரபரப்பில், அவர்களுக்கு இரவுத் தூக்கம் கெட்டுவிடும்.!" என்றான் தயானந்தன்.

பொதுவான அறிமுகம் நடந்தது.!

அறிமுகம் முடிந்ததும், "இன்றைக்கே எல்லோர் பெயரையும் மனப்பாடம் செய்து சிரமப்பட வேண்டாம்.! அவ்வப்போது பார்க்கையில், தானாக மனதில் பதிந்துவிடும்." என்று இதமாகப் பேசினாள் தயானந்தனுடைய தாயார் மனோகரி.

இதையேதான் இன்னொரு மாதிரியாக தயானந்தனும் சொன்னான்.!

மிகவும் சுவையான ஒரு பழச்சாறு வந்தது.!

பிறகு சாப்பிடப் போனார்கள்.

யாரும் அவர்களிடம் பேசாமல் முகம் திருப்பினார்கள் என்று சொல்ல முடியாது.! தயானந்தனுடைய சித்தி, சித்தி மகள் மானசி இருவரும், அவர்களாகவே, மலேஷியா பற்றி, ஓரிரு கேள்விகள் கேட்டார்கள்.! இவர்களும் பதில் சொன்னார்கள்.!

ஆனாலும், தாங்கள் மட்டும் தனித்து விடப்பட்டது போன்ற பிரமை, சகோதரிகள் இருவருக்குமே உண்டாயிற்று.! புவனேசுவரி, தங்கைக்காகவும் தவித்தாள்.

சாப்பாடு முடிந்ததும், பழ சாலட் பரிமாறப்பட்டது.!

சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்த தந்தை, அருகில் இருந்த சிறிய தந்தை இருவருக்கும் இருபுறமும் அமர்ந்து தயானந்தனும் சங்கரும் பெரியவர்களுடன், ஏதோ தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.! ஒரு புறமாக அமர்ந்து, சரவணன் அதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

மாதவனும் மானசியும் தங்களுக்குள்ளே மூழ்கியிருந்தனர்.



வயதில் பெரிய பெண்கள் இருவரும் அவர்கள் பிரச்சினைகளை அலசிக் கொண்டிருந்தனர்.

சொல்லி வைத்திருந்தது போல, சுகனின் பெயர், யார் பேச்சிலும் வரவே இல்லை.! யாரும் சோகம், வருத்தம் காட்டவும் இல்லை.!

அவனது நினைவே யாருக்கும் வரவில்லை என்று சொல்ல முடியாமல், அவனுடைய பெற்றோர், தமையன், சிறிய தந்தை, சரவணன் முதலியோரின் முகங்களில், அவ்வப்போது, திரை விழுந்தாற்போல, ஒரு தோற்றம் தோன்றி மறைந்துகொண்டுதான் இருந்தது.!

அந்த இருள், சுகனின் நினைவால் உண்டானது என்று சொல்லப் பிரமாதமான ஊக சக்தி தேவையிருக்கவில்லை.! ஆனால், அதைப் பெரிதுபடுத்திக் காட்டி, மற்றவர்களின் மனநிலையைக் கெடுக்காமல், தனக்குள்ளேயே வைத்துக் கொண்டது போற்றப்படத் தகுந்ததாகப் புவனேசுவரிக்குத் தோன்றியது.!

அவளுடைய தாயாரின் கொள்கையும் அதுவே.! மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்., துக்கத்தைத் தனக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்பாள் கோமதி.!

மற்றவர்களை விடவும், அந்தக் குடும்பத்துடைய தலைவி மனோகரி, கைதட்டிப் பாராட்டப்பட வேண்டியவள் என்று நினைத்தாள்.! பத்து மாதம் சுமந்து பெற்று, இருபது ஆண்டுகளுக்கு மேலாக வளர்த்தவள் ஆயிற்றே.!

அவ்வளவு நேரமும், இந்தச் சகோதரிகளில் இருந்து, முடிந்த அளவு தூரத்தில் அமர்ந்து, தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டிருந்த தயானந்தனுடைய தங்கை சுதாவும், மாதவனுடைய தங்கை வீணாவும், இன்னொரு கப் பழ சாலட் எடுத்துப் போயினர்.

திரும்பிப் போகும் வழியில் சற்று நின்ற சுதா, "உன்னிடம் கறுப்புக் கண்ணாடி இருக்கிறதா, வீணா? இனி இந்த வீட்டுக்குள்ளேயே, அதை அணியாமல் முடியாது போலக் கண் கூசுகிறதே.!" என்றாள் சுதா.!

"என்ன சொல்லுகிறாய், சுதா?" என்று சற்றுத் தடுமாறினாள் அந்த வீணா.

"பழைய காலத் தெருக்கூத்துகளில், ராணி வேஷக்காரி, இப்படித்தான் பளபளா என்று ஜிகினாவில் வந்து நிற்பாளாம்.! அந்தப் பளபளப்பை எடுத்துக் காட்டுவதற்காக, தோழி வேஷம் போடுகிறவள், கோணிச் சாக்கைச் சுற்றிக்கொண்டு வருவாளாம்.! அந்த இரண்டுமாக எப்படி இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.! இப்போது, நேரே கண்ணால் பார்த்த பிறகுதான் விஷயம் புரிகிறது.!" என்று சிரித்தாள் சுதா.!

குறிப்பாய் அவள் விஷயம், வந்திருந்த இரு பெண்களுக்கும் கூடத் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.!

சுதாவுக்கு, அவர்களது வரவு கொஞ்சமும் பிடிக்கவில்லை என்பதும்கூட.!



# 9

சுதாவின் நக்கலான பேச்சு, தங்களை அவமானப்படுத்தவே சொல்லப்பட்டது என்று நன்றாகப் புரிந்துவிட, சீற்றத்துடன் திரும்பிய லோகேசுவரியின் கையைப் பிறர் அறியாமல் பற்றி அழுத்தினாள் புவ்னேசுவரி.

அவளுக்கும் ஆத்திரம்தான்.! ஆனால், இங்கே வந்து, இந்த வீட்டுப் பெண்ணுடன் வாய்ச் சண்டை இடுவது, அதுவும் வந்த அன்றே வாய்ப்போரைத் தொடங்குவது அநாகரீகம் என்பது அவளுக்கு.!

சுதாவுக்கு இணக்கமாகப் பேசப் பிடிக்காமலோ, அல்லது, என்ன சொல்வது என்று அறியாமலோ, அந்த பெண் வீணா விழித்துக் கொண்டு நிற்க, தந்தையின் அருகிலிருந்து, "யார், சுதாக்குட்டியா சிரிப்பது? என்ன ஜோக், சுதா? சொல்லு, நாங்களும் சிரிக்கிறோம்.!" என்றான் தயானந்தன்.!

சுதா பதில் சொல்லத் திணறும்போதே, இவர்கள் பக்கம் ஓரமாக அமர்ந்திருந்த சரவணன், "வேடிக்கைதான் தயாண்ணா.! கல்லூரி நாடகத்தில், கண்ணைக் கூச வைக்கும் ஜிகினா உடை ராணி, அல்லது கோணிச்சாக்கைச் சுற்றிக் கொண்டு நிற்கும் தோழி பாத்திரம், சுதாவுக்காம்.! சில பேருக்கானால், எதை அணிந்தாலும், நன்றாகவே இருக்கிறதாம்.! ஆனால், இவளுக்கு இரண்டுமே பொருந்தாதே என்று, ஒரே பொருமல்.! அதை, அவளுக்கே உரிய பாணியில், 'விட்டி'யாகச் சொல்லிச் சிரிக்கிறாள்." என்று விளக்கினான்.!

"ஏன்? சுதாம்மாவுக்குக் கூட, எல்லாமே நன்றாக இருக்கும்.! எதில் நிறைய வசனம் இருக்கிறதோ, அந்த வேஷமே நீ போட்டுக் கொள், கண்ணு.!" என்று உள் விஷயம் அறியாமல், தயானந்தனுடைய சித்தப்பா செல்லமாகக் கூறினார்.

ஒன்றும் சொல்ல மாட்டாமல் சுதாவின் முகம் சிவக்க, லோகேசுவரி உரக்கச் சிரித்தாள்.!

"ஷ். சும்மா இரு, லோகேஸ்." என்று தங்கையை அடக்க முயன்றாள் புவனேசுவரி.!

"உங்கள் தங்கையின் சிரிப்பு, வெகு அழகாக இருக்கிறது., அதைப் போய் அடக்குகிறீர்களே, பு... பு... புவனேஸ்வரிதானே, உங்கள் பெயர்?" என்று கேட்டான் சரவணன்.

"இல்லையே.!" என்ற தங்கையை, வியப்புடன் நோக்கினாள் பெரியவள்.

"அப்படித்தானே, தயாண்ணா சொன்ன ஞாபகம்?" என்று அவனும் வியப்புடனேயே வினவினான்.

"இல்லையே, என் அக்காவின் பெயர்,"புவனேசுவரி என்றுதான் சொன்னாரே தவிர, பு பு புவனேசுவரி என்றா சொன்னார்?" என்று, அவள் குறும்புடன் கூற, சரவணன் வாய்விட்டு நகைத்தான்.!

ஆக, அந்தக் குடும்பத்தில் ஒரு நண்பனும் இருக்கிறான்.!

மகிழ்ச்சியுடன் தங்கை முறுவலிப்பதைத் திருப்தியுடன் கண்டாள் புவனேசுவரி.!

இதுபோலத் தாங்கிப் பேச, ஒருவர் இருந்தாலும், மனம் திடமுற்றுவிடும்.!

அதன்பின், அவர்கள் அருகிலேயே அமர்ந்து சரவணன் பேசிக் கொண்டிருக்கவும், பொழுது ஓரளவு இலகுவாகவே போயிற்று.!

'உணவு அங்கேதான்' என்று தயானந்தன் கூறியிருந்ததால், காலையில் எப்போது வர வேண்டும் என்று கேட்பதற்காக, மனோகரியைத் தேடிப் போனாள், புவனேசுவரி.

மனோகரி, வேலையாளிடம் ஏதோ சொல்லி அனுப்பும் சத்தம், அடுத்த அறையில் இருந்து கேட்கவும், அங்கே சென்றாள்.

திடுமென, மனோகரிக்கு பதிலாக, சுதாவின் குரல் கேட்டது.! "இனித் தினமும், இதுகளோடு உட்கார்ந்துதான் சாப்பிட வேண்டும் என்றால், எனக்கு, இங்கே சாப்பாடே வேண்டாம்.! நான் வீணாவோடு, சித்தப்பா வீட்டிலேயே சாப்பிட்டுக் கொள்கிறேன்.!" என்று, ஆத்திரத்துடன் சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.!

"ஷ்.! மெள்ளப் பேசும்மா.! யார் காதிலாவது விழுந்துவிடப் போகிறது.! அப்புறம், அண்ணன் கோபப்படுவான்.!" என்று, மகளை அடக்க முயன்றாள் தாய்.

"ஆமாம். பார்த்துப் பார்த்துக் கூட்டி வந்திருக்கிறார் பாருங்கள்.! ஆள் மயக்கியும், அவளுக்கு ஆயாவும் மாதிரி.! சீ.! எனக்குப் பார்க்கவே, பிடிக்கவில்லை.!"

"ஒரேயடியாக, அப்படிச் சொல்லக் கூடாதுடா.! சின்னவள் கொஞ்சம் குறைத்திருக்கலாம்., பெரியவள், கொஞ்சம் அதிகரித்திருக்கலாம்.! மற்றபடி, குணத்தில், மோசமாகத் தோன்றவில்லை..."

"மோசம் இல்லாமல்தான், கல்யாணத்துக்கு முன்னாலேயே, வயிற்றில் சுமந்துகொண்டு வந்து நிற்கிறாளாக்கும்? ஓசிச் சாப்பாட்டுக்கு, அடுத்தவளும் கூட வந்து நிற்கிறாள்.! சும்மா, சப்பைக்கட்டுக் கட்டாதீர்கள் அம்மா.! சாப்பாடு பற்றி, நான் சொன்னால், சொன்னதுதான்.! அப்புறம், அதுகள் கிளம்புகிறபோது, கையாட்டி விடை கொடுக்கவெல்லாம் என்னால் முடியாது.! அண்ணன் கேட்டால், தலைவலி என்று வெளியே நடக்க.. இல்லை, படுக்கப் போய்விட்டதாகச் சொல்லி விடுங்கள்.! சே.! இனி, நம் வீட்டில் நம் இடத்தில் விருப்பம்போல நடக்கக்கூட முடியாதுப்பா.! ஏதாவது ஒன்று எதிரே வந்து நின்று தொலைக்கும்.! அதிலும், பெரிது ஓய்வில்லாமல் நடக்கும்போல.!"

காலைத் தொப் தொப்பென்று வைத்தபடி, சுதா நடந்து வேறுபுறமாகப் போவது கேட்டது.!

ஆக, முன் மாலையில், இவள்தான் இங்கிருந்து பார்த்திருக்கிறாள்.! இவ்வளவு வெறுப்பு, அவள் மனதில் வைத்திருப்பதால்தான், உடம்பில் ஊசியால் குத்துகிற மாதிரி இருந்திருக்கிறது.!

உள்ளே அசரவம் கேட்டது.!

மனோகரி எந்த நேரமும் வெளியே வந்துவிடலாம்.! இனித் திரும்பிப் போனாலும், தெரிந்துவிடும்.!



அவசரமாக யோசித்து, அறை வாயிலில் மனோகரியின் நிழலாடவும், அப்போதுதான் வருவதுபோல, முன்னோக்கிச் சென்றாள்.

திகைத்து நின்ற மனோகரியின் முகம் லேசாகக் கன்றியது.! இந்தப் பெண்ணின் காதில் என்னென்ன விழுந்ததோ என்ற உறுத்தலா?

'எல்லாமே கேட்டுவிட்டேன்' என்று காட்டி, சமாளிப்பதற்கு இந்த அம்மாள் படும் பாட்டை ரசிக்க வேண்டும் போல, ஒரு கணம் புவனேசுவரிக்குத் தோன்றியது.!

ஆனால், உடனேயே மனம் மாறிவிட்டது.! பாவம், மகள் பேச்சுக்கு தாயைத் துன்புறுத்துவது என்ன நியாயம்? நல்லவனோ, கெட்டவனோ, தலைக்கு மேல் வளர்ந்த மகனைப் பறிகொடுத்துவிட்டு நிற்கிறவள் வேறு.!

"உங்களிடம் ஒன்று கேட்க வந்தேன்.!" என்று தொடங்கி, "ஒவ்வொரு வேளையும் இங்கே வந்து சாப்பிடுவது, அவ்வளவு சரியாக வராது என்று தோன்றுகிறது.! லோ.. லோகேசுக்கு, இன்ன நேரத்தில்தான் சாப்பிட முடியும் என்று சொல்லுவதற்கு இல்லை.! அதனால், அதனால், முதலில் ஓரிரு நாட்களுக்கு மட்டும், உணவை அங்கே அனுப்ப முடியுமா? பிறகு, நானே சமைத்துக் கொள்கிறேன்.!" என்றாள் புவனேசுவரி அமைதியாக.

திகைப்புடன் சின்னவளின் முகத்தைக் கூர்ந்து பார்த்த மனோகரி மெல்லப் பெருமூச்சு விட்டாள். நிம்மதிப் பெருமூச்சு.!

"நீ சொல்லுவதும் சரிதானம்மா.! இந்த நேரத்தில், அப்படித்தான் இருக்கும்.! ஆனால், நீ சமைப்பது எல்லாம் வேண்டாம்.! இங்கே சமையல் ஆனதுமே, செல்லோவில் எடுத்துவைத்து அனுப்பி விடுகிறேன்.! உன். த... வந்து, லோகேசுவரி விரும்பும்போது, சூடு ஆறாமல் சாப்பிடலாம்.! நீ வேண்டுமானால் இங்கே..." என்றவளின் பேச்சில் குறுக்கிட்டு, "இல்லை ஆன்ட்டி.! லோகேசைத் தனியே விட்டு விட்டு, நான் இங்கே வருவது சாத்தியம் இல்லை.! தவறாகக் கருதாமல் மன்னித்துக் கொள்ளுங்கள்.!" என்று முடித்தாள் புவனேசுவரி.

"அப்படியா? சரி. உன் விருப்பம்.!" என்றாள் மனோகரி, விட்டுக் கொடுப்பது போல.!

உன் விருப்பமா?

சட்டெனக் கொதித்துக் கொண்டு வந்துவிட்டது, புவனேசுவரிக்கு.! "என் விருப்பமா?" என்றாள் ஆத்திரத்துடன்.!

மனோகரி திகைத்து நோக்கவும், குரலைத் தணித்து, "என் விருப்பத்தைக் கேட்டிருந்தால், எங்கள் சொந்த மண்ணை விட்டு, நாங்கள் இங்கே வந்திருக்கவே மாட்டோம். இதை நம்புவது உங்களுக்குக் கடினமாகத்தான் இருக்கும், ஆன்ட்டி.! ஆனால், நான் சொல்வது உண்மை.!" என்றுரைத்துவிட்டு, திரும்பிச் சென்று, தங்கையின் அருகில் அமர்ந்தாள்.

கிளம்புவதில் அவள் காட்டிய அவசரம், மனோகரிக்கு உறுத்தியது போலும்.!

சற்றுப் பொறுக்குமாறு கூறி, உள்ளே சென்று, சில டப்பாக்கள் அடங்கிய கூடையுடன் வந்தாள். "கொஞ்சம் நொறுக்குத் தீனி, அம்மா.! ரிபன் பக்கோடா,



முறுக்கு மாதிரி.! லோகேசுவரிக்கு, வாய்க்கு நன்றாக இருக்கும்... சங்கர், யாரப்பா இவர்களைக் கொண்டுவிடப் போவது? இந்தக் கூடையைக் கையோடு கொண்டு போய்க் கொடுத்துவிடுங்கள்.!" என்றாள்.

மகளின் பேச்சுக்குப் பிராயச்சித்தமாக என்று எண்ணிய போதும், தங்கைக்கு என்ற பிறகு மறுக்க மாட்டாமல், "இதோ, அருகில்தானே இருக்கிறது? கொண்டு விடுவது எல்லாம் எதற்கு? இதையும், நாங்களே கொண்டுபோய் விடுகிறோம்." என்று புவனேசுவரி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, சரவணன் எழுந்து வந்தான்.!

"அவ்வளவு எளிதாக, எங்களை உதறிவிட்டு, ஓடி விடலாம் என்று பார்த்தீர்களா?" என்று அவளிடம் முறுவலித்துவிட்டு, "என்னிடம் கொடுங்கள், அத்தை.! இவர்களைக் குடிலில் விட்டுவிட்டு, அப்படியே நானும் வீட்டுக்குப் போகிறேன்.! ஒரு வேளை, பாட்டி விழித்துக்கொண்டு இருந்தாலும் இருப்பார்கள்.! லோகேசுவரி எப்படி, அவள் அக்கா எப்படி என்று.. அதாவது வெளிநாட்டுக்காரர்கள் ஆயிற்றே.! அவர்களுக்குக் கொம்பு இருக்கிறதா? வால் இருக்கிறதா என்றெல்லாம் தெரிந்தாக வேண்டாமா?" என்று உண்மை போல விளக்கினான்.

"முதலில், உனக்கு வால் இருக்கிறதா என்று சோதிக்க வேண்டும்.!" என்று சிரித்து விட்டு, "கொஞ்சம் பொறு, உனக்கும் ஒரு டப்பாவில் எடுத்து வருகிறேன்." என்றாள் மனோகரி.

"அத்தை, அத்தை, வேண்டாம்.! உங்கள் நளபாகத்தைக் குறை சொல்லுவதாக எண்ணாதீர்கள்.! ஆனால், நீங்கள் நேற்றுத் தந்தது இன்னும் காலியாகவில்லை.! அது முடிந்ததும், நானே வந்து வாங்கிக் கொள்ளுகிறேன்.! இப்போது, பை.!" என்று கூடையைத் தூக்கிக் கொண்டு கிளம்பினான் அவன்.

சுருக்கமான விடை பெறலுடன் கிளம்பியபோது, புவனேசுவரிக்குத் தயானந்தன் மீதுதான் அதிகக் கோபமாக இருந்தது.! அவன்தானே, பிடிவாதமாக, அவர்களை இங்கே அழைத்து வந்தான்.! இங்கே, அவர்களுக்கு என்ன நடந்தாலும், அது, அவன் பொறுப்பு அல்லவா? சின்னப் பிள்ளை மாதிரி தந்தை, சிறிய தந்தையிடமே பேசிக்கொண்டு இருந்தானே தவிர, வாதாடி, வருந்திக் கூட்டி வந்த பெண்களை, அவன் கண்டுகொள்ளவே இல்லையே.!

அவனுடைய தங்கையின் வெறுப்பு, அவனுக்குத் தெரியாமலா இருக்கும்? அவளை, அவன் அடக்கி வைக்கவில்லையே.! அவள் மீது, ஒரு கண்ணைக் கூட, வைத்திருக்கவில்லையே.!

அவள் குணம் தெரிந்து, செய்திருக்க வேண்டாமா?

அவன் தங்கையும்தான் என்ன பேச்சு பேசினாள்.! அப்படித் தூக்கி எறிந்து பேசுவதற்கு, சகோதரிகள் அவர்களிடம் பிச்சையா கேட்டு வந்தார்கள்?

லோகேசுவரி அறியாமல், தயானந்தனிடம் இன்னொரு விஷயமும் பேச வேண்டும் என்று மனதுள் குறித்து வைத்தாள், புவனேஸ்வரி.

இறுக்கம் தளர்விப்பது, சங்கருக்குக் கைவந்த கலை என்றால், சிரிக்க வைக்கிற வித்தையை சரவணன் அறிந்து வைத்திருந்தான்.!



வாயிலிலேயே நின்று பேசி, இரு பெண்களையும் சற்று நேரம் சிரிக்க வைத்துவிட்டுத்தான், அவன் கிளம்பிச் சென்றான்.

அன்றைய நிகழ்ச்சிகளைப் பேசி, அப்போதைக்கு நன்றாக இருக்கும் மனதைக் கெடுத்துக்கொள்ள இருவருக்குமே விருப்பம் இல்லாததால், சற்று நேரம் டீவி பார்த்து விட்டு, அப்படியே படுத்து உறங்கி விட்டனர்.!

உணவுக்காக, அந்த வீட்டுக்குப் போகத் தேவையில்லை என்பதில், லோகேசுவரிக்கும் மகிழ்ச்சிதான்.!

அந்த வீட்டுத் தங்கைக்காரி மீது, அவளுக்குப் பொல்லாத கோபம்.! தான் பார்த்துப் பார்த்து வாங்கிய உடையையும், கவனத்துடன் செய்த அலங்காரத்தையும் என்னவெல்லாம் சொல்லிவிட்டாள்.!

"அவளுக்கு, என் அழகைப் பார்த்துப் பொறாமை, அக்கா.! அதனால், மட்டம் தட்டுவதற்காக, உளறியிருக்கிறாள்.!" என்றாள்.

"அவளது பேச்சு அநியாயம்தான். ஆனால், எனக்குமே, நேற்று நீ அந்த உடை அணிந்தது, அவ்வளவாகப் பிடிக்கவில்லை, லோகும்மா.! நாம் என்ன, கல்யாண வீட்டுக்கா போனோம், அந்த அளவு கண்ணாடியும் ஜிகினாவுமாகப் பளபளப்பதற்கு?" எடுத்துச் சொன்னாள் தமக்கை.!

"ஆனால், அந்த மாதிரி அடக்கமான சின்ன வேலைப்பாடுகளுடன் என்னிடம் எதுவும் இல்லையே.! சுகன் வாங்கித் தந்தது எல்லாம் இப்படித்தான். அல்லது, பெர்முடா, குட்டைப் பாவாடை... இப்படித்தானே இருக்கிறது? அல்லது, ஜீன்ஸ் போட்டுக் கொள்ளலாமா?" என்று சின்னவள் குழம்பினாள்.

மறுநாள், பாட்டியைப் பார்க்கப் போனார்கள்.

மூத்தவளின் சுரிதார் செட்டை, அவளது ஆலோசனைப்படி, அணிந்து சென்றாள் லோகேசுவரி.

இள மஞ்சளில், பச்சைப் பூக்கள்., பச்சையில் சல்வார்.! அதிகப்படியான ஒப்பனைகளும் இல்லாமல், லோகேஸ் சிறுமியாகவே தோன்றினாள்.!

காணப்போவது வயதான பெண்மணி ஆயிற்றே என்று, புவனேசுவரி, தன் மூன்று சேலைகளில் ஒன்றைக் கட்டியிருந்தாள்.!

வந்து அழைத்துச் சென்றது, சரவணன்.!

வீட்டுக்காரனாக அவன் விருந்தோம்பல் செய்தபோதுதான், பெற்றோரை இழந்து, அவன் பாட்டியுடனேயே வசிப்பவன் என்பது, புவனேசுவரிக்கு நினைவு வந்தது.!

அதைச் சொன்ன தயானந்தன் எங்கே ஆளையே காணோம்? கொண்டு வந்து தள்ளியதோடு, பொறுப்பு தீர்ந்தது என்று, கைகழுவிவிட்டானா?

"நீ சேலை கட்டுவது இல்லையாம்மா?" என்று, லோகேசுவரியிடம் பாட்டியம்மாள் வினவினார்.

"கால் தட்டி விழுந்து விடுவேனோ, என்று பயம், பாட்டி.!" என்றாள் அவள்.

"ஹையோ.! அப்புறம், போகிற வருகிற வழியில், நாம் புதைத்து வைத்திருக்கும் புதையல்கள், ஒன்று கூட மிச்சம் இராது.! விழுந்து, விழுந்து, அத்தனையையும்,

லோகேசுவரி அடித்துக் கொண்டு போய்விடுவாள்.! அதனால், அம்மா தாயே தயவுபண்ணிச் சேலையே கட்டாதேம்மா.!" என்று சரவணன் கூற, எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.!

"கவலைப்படாதீர்கள்.! நீங்களே, கெஞ்சிக் கேட்டால்கூட, நான் சேலை கட்டமாட்டேன்.! உங்கள் புதையல்கள் பத்திரமாகவே இருக்கும்.!" என்றாள் லோகேசுவரி பதிலுக்கு.!

அவன் ஏதோ திருப்ப, இருவரும் சிரித்துப் பேசலாயினர்.

சின்னவர்களின் பேச்சையும் சிரிப்பையும், பாட்டி புன்னகையோடு கவனித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, புவனேசுவரிக்கு நிம்மதியாக இருந்தது! வேடிக்கையாகவும்.!

இருப்பவர்களில் வயதில் சின்னவளான பேத்தி, கடித்துக் குதறுகிறாள். எல்லோரையும் விட மூத்த பாட்டியம்மா, முறையுற்றுப் பிள்ளை சுமக்கிறவளை ரசித்துப் பார்க்கிறாரே.

# 10

தயானந்தனுடைய பாட்டியைச் சந்திக்கவென்று கிளம்பும்போது, புவனேசுவரிக்கு, உள்ளூரக் கவலைதான்.

ரத்த வாரிசை விட்டு விடக் கூடாது என்று அழைத்து வரச் சொன்னவர், 1சமூக சட்ட திட்டங்களிலும் கறாராகத்தானே, இருப்பாள். என்னென்ன வசைகள் சொல்லுவாரோ, என்று கலக்கமே.

ஆனால், முந்தைய நாள் சந்தித்த மற்றவர்களை விட, இந்த முதிய தலைமுறையிடம் உரையாடுவது, அவளுக்கு இலகுவாக இருந்தது.

அது வியப்பாகவும் இருந்தது.

புவனேசுவரியின் கவனத்தை உணர்ந்தவள் போல, "எல்லாச் சுற்றமும் சுகங்களும் இருந்த போதும், சுகனிடம் அமைதியோ, ஆனந்தமோ தென்படாது. ஆனால், எதுவும் இல்லாவிட்டாலும், இந்தப் பையன் இருக்கும் இடத்தில் சந்தோஷம் இருக்கும்" என்றார் சற்றுத் தணிந்த குரலில்,

முதல் முதலாக, சுகனைப் பற்றி ஒரு பேச்சு.

ஆனால், அதைத் தொடர மனமற்று, மற்றவனைப் பற்றியே, புவனேசுவரி பேசினாள், "பெற்றவர்களுக்கு மேலாக, நீங்கள் எல்லோரும் அவரிடம் பிரியமாக இருக்கும் போது, இவருக்கும், குறை தெரிய வாய்ப்பேது?" என்றாள்.

அவளை ஊடுருவிப் பார்த்து விட்டு, "உண்மைதான். மனோகரி, தாய்க்குத் தாயாகத்தான் பார்த்துக் கொள்ளுகிறாள். அதுதான் ஆறுதல்" என்ற முதியவளின் கண்களின் ஒளி, ஒரு கணம் மங்கியது.

மறைந்த மகனை நினைக்கிறார் என்று உணர்ந்த புவனேசுவரிக்கு தாயின்



நினைவு வந்தது.

தங்கையைத் தன்னிடம் ஒப்படைத்ததும், ஆனால், அந்தப் பொறுப்பைச் சரியாகச் செய்யவில்லையே.

"உங்களுக்கும் யாரும் இல்லை என்று, தயாப்பையன் சொன்னான். பாவம், அது சின்னப் பெண், உனக்கும் அதிக வயதில்லை. ...ச்சு, ரொம்பக் கஷ்டம்தான்"

மனமுணர்ந்த அந்தப் பரிதாபத்தில், சட்டெனப் புவனேசுவரியின் கண்கள் கலங்கி விட்டன. கண்ணீரைக் காட்ட மனமின்றி, தரையைப் பார்த்த வண்ணம் தலைகுனிந்து அமர்ந்திருந்தாள்.

அவள் கையைத் தட்டிக் கொடுத்து, "கவலைப்படாதே, இங்கே வந்து விட்டீர்கள் அல்லவா? இனி எல்லாம், தயா பார்த்துக் கொள்ளுவான்" என்றார் பெரியவர் ஆறுதலாக.

தயானந்தனா? அவன் எங்கே பார்க்கப் போகிறான்? கொண்டு வந்து தள்ளியதோடு கடமை முடிந்தது என்கிற மாதிரி ஆளையே காணவில்லை.

ஏதோ ஆல்பத்தை சரவணனோடு சேர்ந்து பார்த்துக் கொண்டிருந்த தங்கையின் பக்கம் ஒரு பார்வையைச் செலுத்தி விட்டு, "நீங்கள் லோகேசை வெறுப்பீர்களோ என்று, ரொம்பக் கவலைப்பட்டேன், அம்மா" என்றாள் புவனேசுவரி.

"சுகனைப் பற்றி... எல்லோருக்கும் தெரியும், அப்படியிருக்க, இந்தச் சின்னப் பெண்ணைப் போய் யார் வெறுப்பார்கள்? அவன் அம்மா கூட, அப்படிச் செய்ய மாட்டாள்" என்றவர் தொடர்ந்து, "எல்லோரையும் போல நீயும் என்னைப் பாட்டி என்றே கூப்பிடு. அதற்காக வருத்தப்படுகிற வயதெல்லாம் தாண்டி விட்டது. ஆனால், என்ன வயது என்று மட்டும் கேட்டு விடாதே. அது, எனக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம்" என்று சிரித்தாள்.

"சரவணன் எப்படிக் கேலியும் சிரிப்புமாக இருக்கிறார் என்று இப்போது புரிகிறது" என்று புவனேசுவரியும் சேர்ந்து நகைத்தாள்.

முறுவலித்துவிட்டு, "நீ கெட்டிக்காரி என்று தயா சொன்னான்" என்றார் பாட்டி,

வேறு என்னென்ன சொன்னான் என்று வினவத் துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் புவனேசுவரி.

அதற்குப் பதிலாக, "அவரை எங்கே? ஆளையே காணோமே" என்று, முயன்று சாதாரணமாக்கிக் கொண்ட குரலில் வினவினாள்.

"அவன்... தயாப் பையன் எப்போது திரும்பி வருகிறான், சரவணா?" என்று பாட்டி கேட்ட பிறகுதான், அவன் ஊரில் இல்லை என்பது புரிந்தது.

அதனால் தான் கண்ணில் படக்கூட இல்லையா என்று எண்ணும் போதே, சொல்லி விட்டுப் போயிருக்கலாமே என்று குறையாகவும் இருந்தது.

"நாளை மறுநாள். ஏற்காட்டில் இரண்டு நாள் வேலையாம். இரவில்தான் திரும்புவார்" என்றான் சரவணன்.

சரி, இன்னும் இரண்டு தினங்கள், அவன் வருகிறானா என்று தேடத் தேவையில்லை என்று எண்ணும் போதே, புவனேசுவரி திகைத்துப் போனாள்.



அவள் அவனைத் தேடுவதா? என்ன பைத்தியக்காரத்தனம்? எதற்காகத் தேட வேண்டும் என்று தன்னைத்தானே சாடும் போதே, அவனை எதற்காகத் தேடியிருக்கக் கூடும் என்பது ஞாபகம் வந்தது.

அவனிடம் பேச வேண்டியிருக்கிறாதே வரட்டும்.

"ஏற்காட்டிலும் நமக்குக் கொஞ்சம் காஃபித் தோட்டங்கள் இருக்கிறதில்லையா? அதைப்பார்த்து வரப்போயிருப்பான். அதில் ஏதோ பிரச்சினை என்று சின்னவன் சொல்லிக் கொண்டிருந்தான்" என்றார் பாட்டி.

"சின்னவன் என்றால், சின்ன மாமா நேற்று வந்திருந்தாரே. அவர் தான் பயிர் வளர்ப்பைக் கவனிக்கிறவர். சேர்ந்துதான் போயிருக்கிறார்கள்" என்று விளக்கம் கொடுத்தான் சரவணன்.

மொத்தத்தில், பாட்டியின் வீட்டில் பொழுது நல்லபடியாகவே கழிந்தது!.

"தினமும் வந்து, இந்தப் பழைய தலைமுறையிடம் பேசிக் கொண்டிருப்பது என்றால்,கடமை மாதிரி சீக்கிரமே வெறுத்து விடும். அதனால், எப்போதாவது பொழுது போகாதபோது, இந்தப் பக்கம் எட்டிப்பாருங்கள்" என்று அவர்களை வழியனுப்பி வைத்தார் பாட்டியம்மாள்.

"தேவையில்லை! வழி தெரியும்!" என்று இரு பெண்களும் மறுத்த போதும், "கூட்டி வந்தவன் கொண்டு போய் விட்டு விட்டு வரவேண்டாமா? "என்று, ஏற்கனவே எழுந்துவிட்ட சரவணனிடம் பாட்டி கூற, அவனும் கூட வந்தான்.!

"பாட்டி, ரொம்ம நல்லவர்களாக இருக்கிறார்கள். முதல் தடவையாகப் பார்க்கிறபோதே;மிகவும் பிரியமாகப் பேசுகிறார்களே.!" என்று புவனேசுவரி சொல்ல, அவளுடைய தங்கையும் அதை ஒத்துப் பேசினாள்.

"ஐயோ,அப்படியெல்லாம் பாட்டியை, ரொம்ப நல்லவிதமாக எண்ணி விடாதீர்கள்! அவர்களுக்கு யாரையாவது பிடிக்கவில்லை என்றால், ஆட்டி வைத்து விடுவார்கள்! அந்த லீனா, பாட்டியிடம் படுகிறபாடு! குரங்காட்டம் தான்" என்று எதையோ நினைத்துச் சிரித்தான் சரவணன்.

"அது யார், லீனா?" என்று கேட்டாள் லோகேசுவரி.

மனதுள் ஓர் ஊகம் தோன்ற "சொல்லாதீர்கள், சரவணன்! இதுவரை, அறிமுகம் ஆனவர்களின் பெயர்களும், உறவு முறையுமே, ஒரே குழப்பமாக இருக்கிறது! இன்னுமொன்று, இப்போது வேண்டாம்." என்றாள் புவனேசுவரி.

"ஆமாமாம்! அக்கா சொல்வது சரிதான்! ஒன்று சொல்லுங்கள், சரவணன், மானசி என்பது, உங்கள்... இல்லையில்லை, தயானந்தனுடைய சித்தியா அல்லது மகளா," என்று சின்னவள் அப்பாவியாய் விழி விரித்து சந்தேகம் கேட்க, மற்ற இருவரும் நகைத்தனர்.

இது போலச் சிரிப்பும் கேலியுமாகப் பேசும் போது, லோகேஸ் எப்படி மனதைக் கவருகிறாள் என்று, பெருமிதமாக எண்ணினாள், பெரியவள்!

இரண்டு தினங்கள் மெல்ல நகர்ந்தன.

மூன்றாம் நாள் தயானந்தன், அவர்களைச் சந்திக்கக் குடிலுக்கு வந்தபோது,



அப்போது தான், அவர்களுக்குக் காஃபி, காலைப் பலகாரத்தைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்தான் வேலையாள்.

அவன் செல்லும் வரை காத்திருந்து, "என்ன இது?" என்று வினவினான் தயானந்தன்.

"பார்த்தால் தெரியவில்லையா, காலைச் சிற்றுண்டி"

"அது தெரிகிறது. ஆனால், அது ஏன் இங்கே வந்திருக்கிறது? நீங்கள் உணவருந்த அங்கே வருவதாக அல்லவா ஏற்பாடு?"

"ஏற்பாடு பிடிக்காததால் மாற்றி விட்டோம்" என்றாள் அவள். முன் போலவே அலட்சியமான குரலில்.!

அன்று அவனுடைய தங்கை சுதாவின் பேச்சு, இன்னமும் ஆறாத ரணமாக வலித்துக் கொண்டு தான் இருந்தது.!

ஆனால், அதைச் சொல்லி, அவன் முன் அழுது புலம்ப வேண்டுமா? அதற்கு, அவள் ஆளல்லவே!

"நான் ஒரு ஏற்பாடு செய்தால், அதை மாற்றுமுன், என்னிடம் கலந்து பேச வேண்டும் என்பது இல்லையா?"

"சாப்பாடு, உங்கள் அம்மாவின் அதிகாரத்துக்கு உட்பட்டது.! அவர்களுக்குச் சம்மதம் எனும் போது, நீங்கள் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்?"

"ஏன் என்பது, கொஞ்சம் யோசித்தால் தெரியும்! லோகேசுவரி, அங்கே வீட்டினர் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்று நினைத்தேன்! உணவு நேரத்தில் கூட இருந்தால், உறவாய்த் தோன்றத் தொடங்கும்!"

"ஆனால்..." என்று தொடங்கிய புவனேசுவரி உடனே பேச்சை நிறுத்தினாள். !

இவன் தங்கை பேசிய பேச்சு பற்றி, இவனுக்கு என்ன தெரியும்? அது அவளுடைய தங்கையின் காதுகளில் விழுந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? இவனிடம், சுதாவைப் பற்றிச் சொல்லலாம்! இவன், அவளைக் கண்டிக்கவும் செய்யலாம்! ஆனால், அப்படிக் கோள் சொல்லும் அளவுக்கு இறங்கப் புவனேசுவரிக்கு மனமில்லை.! அத்தோடு, இவன் கண்டிப்பதால் மட்டும், சுதா இவர்களிடம் உருகி வழியப் போகிறாளா? இன்னமும் வெறுப்புதான் அதிகம் ஆகும்.!

"என்ன ஆனால்?"

"ஒன்றும் இல்லை! அது சரிப்பட்டு வராது! அவ்வளவு தான்!"

அவளைக் கூர்ந்து நோக்கி விட்டு, "என்னை எதற்காகத் தேடினாய்?" என்று வினவினான் தயானந்தன்.

தேடியதற்குக் காரணத்தைத் தனக்குள் அவளே கண்டு பிடித்து வைத்திருந்த போதும், அவன் திடுமெனக் கேட்கவும், சட்டெனக் குழம்பி, முகம் சிவந்து போனாள், "நான்... நான் ஒன்றும்..." என்று சற்றுத் தடுமாறி விட்டு, ஒருவாறு சுதாரித்தாள்.!

உள்ளே லோகேசுவரி குளித்துக் கொண்டிருந்த குளியலறைப் பக்கம் ஒரு தரம் பார்த்து விட்டு, "நான் உங்களைத் தேடவில்லை! கண்ணில் படவில்லையே... எங்கே என்று கேட்டேன். அவ்வளவு தான்! இப்போது, நாம் அங்கே போய் உட்கார்ந்து

பேசுவோம்!" என்று முன் வராந்தாவை நோக்கி நடந்தாள். "விருந்தோம்பல் பரவாயில்லை. இவ்வளவு நேரத்துக்குப் பிறகாவது உட்காரச் சொல்லலாம் என்று தோன்றியதே என்றபடி அமர்ந்தான் தயானந்தன்.

அவள் தங்கை சுதாவின் பேச்சு தானாக நினைவு வர, "விருந்தோம்பலைப் பற்றி, நீங்கள் சொல்லுகிறீர்களா?" என்று, சட்டெனக் கேட்டுவிட்டு, நாக்கையும் கடித்துக் கொண்டாள் புவனேசுவரி.

அதற்குள்ளாகவா, தீர்மானத்தை மறந்து விடுவது?

அவனாக விவரம் கேட்பதற்குள்ளாக அவசரமாக, "எங்களை இங்கே கூட்டி வந்து விட்டவர், அதன் பிறகு, ஆளையே காணோம்!" என்று வெகு வேகமாகச் சொல்லி முடித்தாள்!.

"மெள்ள! மெள்ள! சற்று மூச்சு விட்டுக் கொண்டே, நிதானமாகப் பேசலாமே!" என்றான் அவன் கிண்டல் குரலில்,

நம்பியிருப்பாளா என்று, அவள் யோசிப்பதற்குள் "இரண்டே நாட்களில் தான், திரும்பி வந்து விடப் போகிறோமே என்று நினைத்தேன்!. ஆனால் அதற்குள் நீ என்னைத் தேடுவாய் என்று, எனக்குத் தெரியாதே!" என்றான் மீண்டும்!

அவள் ஆத்திரத்துடன் நிமிரவும், சிரித்துக் கொண்டே, "ஓகே! ஓகே! நீ என்னைத் தேடவே இல்லை! ஒத்துக் கொள்ளுகிறேன்! இப்போது, லோகேசுவரி அறியாமல் என்னிடம் என்ன கேட்பதற்காக, இங்கே வந்து உட்காரச் சொன்னாய்? அல்லது, இப்படியே வெளியே நடந்தபடி பேசுவோமா? பொதுவாக, இங்கே நடப்பதற்கு நன்றாக இருக்கும்! உன் தங்கை குளித்து முடித்து வந்து விட்டாலும். பேச்சை நிறுத்த வேண்டியிராது!" என்று அவன் கூறியது அவளுக்கும் சரியாகப் பட்டது.

குளியலறைக் கதவைத் தட்டித் தங்கையிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டு, அவனோடு வெளியே நடந்தாள் அவள்.

"பாட்டிக்கு, உங்கள் இருவரையுமே பிடித்திருக்கிறது!" என்றான் அவன்.

"எங்களுக்கும் அப்படித்தான்! ரொம்ப நல்லவர்களாகத் தெரிகிறார்கள்!"

"ஓகோகோ! உங்களைப் பிடித்தால், அவர்கள் நல்லவர்கள்! இல்லாவிட்டால் கெட்டவர்களாக்கும்! பரவாயில்லையே! இப்போது, எனக்குக் கூட உன்னைப் பிடித்துதான் இருக்கிறது. அப்படியானால், நானும் நல்லவன்தானே?!" என்று புன்னகை செய்தான் தயானந்தன்.

பிடித்திருக்கிறதா?

புவனேசுவரியின் இதயம் ஒரு கணம் நின்று, பின் துடித்து! இப்படியெல்லாம் பேசித்தான் அந்த சுகன் லோகேசை வீழ்த்தினானோ?

லோகேசுவரியின் நினைவு அவளை நிமிர வைத்தது.

"ப்ளீஸ்! வார்த்தைக்கு வார்த்தை உங்களோடு மல்லுக்கட்ட, நான் உங்களோடு வரவில்லை! இப்போது லோகேசின் நிலை என்ன என்று, எனக்குத் தெரிய வேண்டும்!"

அவனும் முகம் மாற, "அவள், சுகனுடைய குழந்தைக்குத் தாய்!" என்றான் அவன் 'நிதானமாக



"அது, இயற்கையின் வழி! மற்றபடி? இங்கே, அவளது நிலை என்ன? அன்றைக்கு நீங்கள் என்னவோ, சகல உரிமைகளும் உண்டு என்றீர்களே!" என்றாள் அவள் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு!

"நான் குழந்தையைப் பற்றிச் சொன்னேன்! சுகனின் உரிமைகள் அனைத்தும், அவனுடைய குழந்தைக்கு இருக்கும்!"

"ஆனால், பத்து மாதங்கள் அதைச் சுமந்து பெறப் போகிற தாய்க்கு, ஒன்றும் கிடையாது! அவள் உங்கள் தயவில் பிச்சைக்காரியாக வாழ வேண்டும்! அப்படித்தானே? இதில், துணைக்கு நான் வேறு! கேவலம்! இங்கே எனக்கு ஏதாவது வேலை கிடைக்குமா? நான்..."

குறுக்கிட்டு, "என்னைச் சற்றுப் பேச விடுகிறாயா? லோகேசுவரியின் நிலை பற்றித் தெரிய வேண்டும் என்றாய்," அதைச் சொல்லி முடிப்பதற்குள், ஏதேதோ பேசுகிறாயே! இந்த வீட்டுக் குழந்தையுடைய தாய் என்ற முறையில், ஒரு பெரிய தொகை, அவள் பெயரில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு இருக்கிறது! கைச் செலவுக்காக, மாதாமாதம் அவளாகக் கேட்டிருப்பதே, ஐயாயிரம் ரூபாய். ஆனால் அதை, அவள் செலவு செய்யத் தேவையே இல்லாதபடி, இங்கேயே, எல்லாம் கிடைக்கும்! பொறு புவனேசுவரி! தயவு பண்ணி நான் சொல்வதை முழுவதும் கேட்டு விட்டுப் பிறகு பேசு! சுகனுடைய குழந்தை பிறந்த பின், லோகேசுவரி இங்கேயே இருக்க விரும்பினால், விற்க, விலை செய்ய முடியாத சில சொத்துகளும், அவற்றின் வருமானமும், அவளுக்குத் தொடர்ந்து கொடுக்கப்படும்! இதற்கு மேல்; என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?" என்ற கேள்வியோடு, தன் பேச்சை முடித்தான் தயானந்தன்.

"விற்க விலை செய்ய முடியாதது என்றால், நீங்கள் அவளை நம்பவில்லை, நம்ப மாட்டீர்கள் என்றுதானே அர்த்தம்? அது, அவமானப்படுத்துவது போல ஆகாதா?"

கையை அவள் முன் குறுக்காக நீட்டி, அவள் மேலே போக முடியாதபடி தடுத்து நிறுத்தினான் அவன்.

அவள் திகைத்து நோக்கவும் "என் முகத்தை நேரே பார்த்துச் சொல்லு! எங்கள் வீட்டாரின் நிலையில் நீ இருந்தால், அவளை நீ முழுக்க நம்புவாயா? அல்லது இதைவிட அதிகமாகத்தான் செய்வாயா?" என்று, அவள் கண்களை நேராகப் பார்த்துக் கேட்டான் அவன். உள்ளே நேர்மை இருந்ததால் அவன் பேச்சை அவள் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது.!

முன்னரே, அவள் போய், விலகச் சொல்லும்படிக் கேட்டிராவிட்டால், சுகனுடைய மகவு என்று, நம்பக்கூடத் தோன்றியிராது.!

"நீங்கள் சொல்லுவது சரிதான். ஆனால், சுகன் இப்படிப்பட்டவர் என்று தெரிந்திருந்தும், அவரைப் பற்றி நான் உங்களிடம் சொன்ன போது, விரலைக் கூட அசைக்காமல் இருந்து விட்டீர்களே.! நீங்கள் கொஞ்சம் முயன்றிருந்தால், இந்த வேதனை நேர்ந்திராதே.!" என்று குறைப்பட்டாள் அவள்.

"நீ ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும், புவனேசுவரி. என் தம்பி சுகன், பிறர் சொல்லிக் கேட்கிறவன் அல்ல.! ஏன், நீ சொன்னதை, உன் தங்கை கேட்டாளா?



அதிலும், யாரேனும் தடுக்கும்போது, சுகனின் வேகம் இரு மடங்காகி விடும்.!... அத்தோடு, அந்த விளையாட்டு விளையாடுகிறவர்கள், விதிமுறைகளை அறிந்திருப்பார்கள் என்றும் எண்ணினேன்.! உன் புகாரை, ரொம்பப் பெரிதாக நினைக்கவும் இல்லை..." என்று யோசனையாகப் பேசியவன், "ஒரு வேளை, சுகனுக்கு ஒரு பிள்ளை பிறக்க வேண்டும் என்று விதி இருந்ததோ, என்னவோ.! சுகன் இறந்து நான் இந்த விஷயம் முழுவதையும் கூறியபோது, பாட்டி அப்படித்தான் சொன்னார்கள்.!" என்று முடித்தான்.!

"அப்புறம், இன்னொரு விஷயம்.! ஒவ்வொரு முறையும், புவனேசுவரி..' என்று நீளமாய்க் கூப்பிடுவது, சிரமமாக இருக்கிறது.! அதனால், 'புவனா, அல்லது புவனி' என்று உன்னை அழைக்க முடிவு செய்து விட்டேன்.! நீ கூட, 'தயா' என்றோ, 'ஆனந்த்' என்றோ, எது உனக்கு வசதியோ, அப்படி அமைத்துக் கொள்ள, என் பூரண அனுமதி உண்டு.! இந்தத் 'தயானந்தன்' நீளமாக இருப்பதால்தான், நீயும் பெயர் சொல்லிக் கூப்பிடச் சிரமப்படுகிறாய்.!" என்று, நமுட்டுச் சிரிப்புடன் தயானந்தன் கூற, புவனேசுவரியின் முகம் லேசாகச் சிவந்தது.!

அவள் இன்னமும் அவனை பெயர் சொல்லிக் கூப்பிடவில்லையாம்.!

"முதலில், இந்த இடம் பழகட்டும்.! பிறகு, அவசியப்பட்டால், மற்றதைப் பார்ப்போம்.!" மிடுக்காகக் கூறியவளுக்குச் சிரிப்பையும் அடக்க முடியவில்லை.!

கீழ்க் கண்ணால், அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, "எப்போதும், இப்படிச் சிரித்துக்கொண்டு இருப்பதற்கென்ன?" என்றான் அவன்.!

சிறு திகைப்புடன் அவள் திரும்புகையில், "பக்கத்தில்தான், பாட்டி வீடு.! இவ்வளவு தூரம் வந்தோம். போய்ப் பார்த்துவிட்டுத் திரும்புவோமா?" என்று கேட்டான்.!

லோகேசுவரியைப் பார்க்கத்தானே, பாட்டிக்கு ஆசை இருக்கும் என்று, சற்றுத் தயங்கினாலும், பாட்டியைப் பார்க்கும் ஆவல் அவளுக்கும் இருந்ததால், இருவருமாக அங்கே சென்றனர்.!

அவர்கள் இருவரையும் சேர்த்துப் பார்த்ததும், பாட்டிக்கு, ஒரே சந்தோஷம்.! மகிழ்ச்சியில் கண்ணீர்கூட வந்துவிட்டது.! அவருக்காகச் செய்யப்பட்டிருந்த சத்துமாவுக் கஞ்சியில், தேங்காய்ப் பாலும், சர்க்கரையும் சேர்த்து, ஏலக்காயும் தட்டிப்போட்டுப் பாயசம் போலாக்கிக் கொண்டு வரச் சொல்லிக் குடிக்கச் சொன்னார்.

ஒரு பெண் மருத்துவர் பெயரைச் சொல்லி, லோகேசுவரியை, மாதாமாதம் அவரிடம் காட்டச் சொன்னார்.! கைராசி உள்ளவராம்.!

லோகேசுவரி தனியாக இருப்பதால், உடனே போக வேண்டும் என்று புவனேசுவரி கூறியபோது, தடை சொல்லாமல், அனுப்பத் தயாரானார்.

சரவணன், வேலைக்குச் சென்றிருந்தான்.

எனவே, தயானந்தனிடம் சாவியைக் கொடுத்து அனுப்பி, பீரோவிலிருந்து, எதையோ எடுத்து வரச் செய்தார்.

"அன்றைக்கே தந்திருக்க வேண்டியதும்மா.! அளவு தெரியாததால், செய்து



வைக்க முடியவில்லை.! இந்தா. எடுத்துப்போ.! ஒன்று லோகேசுவரிக்கு.! இன்னொன்று, உனக்கு.!" என்று கொடுத்தார்.!

இரண்டு நகைப் பெட்டிகள்.! வளையல் டப்பா.!

தங்கைக்கானதை வாங்கிக் கொண்டவளுக்கு, மற்றதை வாங்க முடியாமல், கை பின்னுக்கிழுத்தது.!

"என்னம்மா, நீ? என் பேரனுடைய பிள்ளையைத் தாங்குவதால், லோகேசுவரி, எனக்குப் பேத்தி.! பேத்தியுடைய அக்கா யார்? அவளும் பேத்திதானே? பாட்டியாக இருந்து, ஆசையாகத் தந்தால், வாங்கிக் கொள், கண்ணம்மா.!"

கண்கள் நனைய, அதற்கு மேல் மறுக்க மாட்டாமல் பெற்றுக் கொண்டாள் அவள்.!

"பாட்டிக்குச் சொந்த பந்தங்கள் என்றால், ரொம்பப் பிடிக்கும்.!" என்றான் தயானந்தன்.

உண்மையே.! லோகேசும், அவளும் இங்கே வந்திருப்பதே, அதற்குச் சாட்சிதானே?

பாட்டியிடம் விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து வெளியேறி, வீட்டருகே தயானந்தனிடமும் விடை பெற்றுக்கொண்டு, அன்று வரை அறியாத ஒரு மகிழ்ச்சியோடு உள்ளே சென்றால், அங்கே கண்ட காட்சி, புவனேசுவரியை மருட்டியது.!

சாப்பாட்டு மேஜையில், தோசை, இடியாப்பம், சப்பாத்தி எல்லாவற்றையும், உரிய வியஞ்சனங்களோடு தட்டில் பரப்பி வைத்துக்கொண்டு அதன் முன் அமர்ந்து, தேம்பி அழுது கொண்டிருந்தாள் லோகேசுவரி.!

## 11

**பொ**துவாக, லோகேசுவரி உணவில் விருப்பம் உள்ளவள். வகை வகையாக வைத்துக் கொடுத்தால், ரசித்துச் சாப்பிடுவாள். ஆனால், அதற்காக, உடம்பில் சதை போட விட்டுவிட மாட்டாள். கொஞ்சமாக, ஆனால் ஒவ்வொரு கவளத்தையும் அனுபவித்து உண்பவள்.!

'ஜென்' சாமியார்கள், தண்ணீரைக்கூட, ரசித்துக் குடிப்பார்களாம்.! அதுபோல.!

ஆனால், அவர்கள் கிடைப்பதை ரசித்து உண்பார்கள்.! இவளுக்கு, அவள் ரசிக்கிற மாதிரி உணவு இருக்க வேண்டும்.! எல்லாம் உயர் வகை உணவுகளாக, சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.!

அந்த மாதிரி உணவுகளுக்காகத்தானே, அவள் தோழிமார் வீட்டில் கிடந்ததே.!

தயானந்தன் வீட்டு உணவில், அவள் குறைபட எதுவும் கிடையாது.! அதிலும், இடியாப்பமும் குருமாவும் அவளுக்கு ரொம்பவே பிடிக்கும்.!

அப்படியிருக்க, அவள் அழுவானேன்.?

அருகில் சென்று அமர்ந்து, "என்ன லோகும்மா, எதற்காக அழுகிறாய்? உடம்பு ஏதேனும் செய்கிறதா?" என்று கவலையும் பரிவுமாக வினவினாள் புவனேசுவரி.

"உடம்பு.! அது தவிர, ஒன்றும் கேட்க மாட்டீர்களா?" என்று விசும்பல்களுக்கு இடையே, எரிந்து விழுந்தாள் லோகேசுவரி.!

வேறு என்ன?

அவள், தயானந்தனிடம் கேட்ட கேள்விகள், லோகேசுவரிக்கும் தோன்றியிருக்குமோ? எதிர்காலத்தை நினைத்துதான் அழுகிறாளோ?

"என்ன லோகும்மா, உனக்கு என்ன தேவை? சொல்லு.! என்னால், முடிந்தவரை நான் செய்கிறேன்.!" என்றாள்.

"உங்களால் என்ன செய்ய முடியும், சொல்லுங்கள்? எல்லாம் என் தப்புக்குத் தண்டனை.! ருசி ருசியாகச் சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.! மானம் மரியாதை பாராமல், அடுத்தவர் வீடே கதியாய்க் கிடந்தேன்.! அதைவிட... அதைவிட... எந்த அளவுக்குப் போனேன்? கடைசியில், இங்கே இத்தனை விதம் விதமாக அனுப்புகிறார்கள், என்னால் ஒரு வாய் சாப்பிட முடியவில்லையே.! சாப்பாட்டு விஷயத்தில், எப்படியெல்லாம் பேசி, உங்களை எவ்வளவு நோகடித்திருப்பேன்.! அதற்கு, எனக்குச் சரியான தண்டனைதான்.!" என்று கண்ணீர் சொரிந்தாள் சின்னவள்.!

தங்கை சொன்னதில் ஒன்று மனதை மிகுதியாக உறுத்த, "சாப்பிட முடியவில்லையா? உப்பு காரம் சரியாகத்தானே பாவிக்கிறார்கள்? நம் வீட்டு அளவுதான் இருக்கிறது என்று நினைத்தேனே.!" என்று சொல்லும்போதே, கருவுற்றிருந்த சக ஆசிரியை ஒருத்தி, சாப்பிட முடியாமல் தவித்தது அவளுக்கு நினைவு வந்தது.!

சில நாட்களாகவே, லோகேசுவரி சரியான அளவு சாப்பிடாததின் காரணம், மனநிலை, புதிய இடம் இங்கு பாவிக்கப்படும் மசாலை என்றெல்லாம் அவள் எண்ணியது, தவறோ? மசக்கை என்று சூரியவதனி சொன்னது போலவா?

அதற்குச் சரியாக, "அதெல்லாம் இல்லை.!" என்றாள் தங்கை சோர்வுடன். பாட்டி வீட்டு வேலைக்காரி, அப்போதே சொன்னாள். நீங்கள் பாட்டியோடு பேசிக்கொண்டு இருந்தபோது.! சிலபேருக்கு, உப்பு, புளிப்பு, இனிப்பு என்று, ஒவ்வொரு சுவை பிடிக்குமாம்.! சிலபேர், ரொம்பவே சாப்பிடுவார்களாம்.! ரொம்பச் சிலருக்கு என்னை மாதிரி, ஒன்றுமே பிடிக்காமல் போகுமாம்.! நான் செய்த பாவத்துக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டாமா? பசி ஒரு பக்கம் குடலைச் சுருட்டுகிறது.! நல்ல நல்ல உணவு வகைகள்.! ஆனால், வாய்கிட்டே, கொண்டு போக முடியவில்லையே.! சாரி, அக்கா.! இனிமேல், இந்தச் சாப்பாட்டுக்காக, நான் ஒரு தப்பும் செய்யவே மாட்டேன்.!" என்று வருத்தத்துடன் கூறினாள் லோகேசுவரி.

"சீச்சீ.! இதெல்லாம் என்ன பேச்சு? எதற்குத்தான், சாரி சொல்வது என்று இல்லையா? என்னோடு வேலை செய்தார்களே, சூரியாவதனி, அவர்கள்கூட, மசக்கை என்று, இப்படித்தான் கஷ்டப்பட்டார்கள்.! சிலபேரின் உடல்வாகு.! அதற்காகப் பாவம்,



அது, இது என்று பேசாதே.! பாட்டி, ஒரு டாக்டரிடம் போகச் சொன்னார்கள். இதற்குக் கூட, இப்போது மருந்திருக்கலாம்.! எப்படியும், இரண்டொரு மாதங்களில், எல்லாம் சரியாகிப் போகும்.! நன்றாகச் சாப்பிடலாம்.!" என்று, புவனேசுவரி தங்கையைத் தேற்றினாள்.!

"எப்படியும், நான் இனிமேல் சாப்பாடு, சாப்பாடு என்று பறக்கப் போவதே இல்லை.!" என்று சபதம் செய்தாள் லோகேசுவரி.!

அதுமட்டும் அல்ல.! அவள் விலகி உட்கார்ந்துகொண்டு, தமக்கையைக் கட்டாயப்படுத்திச் சாப்பிட வைத்தாள்.! தனக்காக உருகி தமக்கை பட்டினி கிடந்துவிடக் கூடாதாம்.!

இந்த அளவு லோகேசுவரி யோசித்ததே, அறியாப் பருவம் மாறி, அவள் வளர்ந்து வருவதின் அறிகுறியோ என்று தோன்றியது, மற்றவளுக்கு.!

பாட்டி கொடுத்த பரிசைக் கொடுத்தபோதும், "வளையல்கள் அழகாக இருக்கின்றன.!" என்று மகிழ்ச்சிதான்.! ஆனால், முன்னைப் போலப் புதியதைக் கண்டதும், தொட்டுத் தொட்டுப் பார்ப்பதும், அணிவதும், சிரிப்பதும், அதைப் பற்றியே பேசுவதுமாக இருக்கவில்லை.!

அதைவிட தமக்கைக்கும் கொடுத்ததையே பெரிதாக எண்ணி மகிழ்ந்தாள் எனலாம்.! "இவர்கள் நல்ல விதம்தான்.! இல்லையாக்கா? முக்கியமாகப் பாட்டியும், சரவணனும்.!"

சாப்பாடு, துணிமணி, நகை, பணம் இவற்றுக்கு வாழ்க்கையில் என்ன மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று அவள் தெரிந்து கொள்வது மகிழ்ச்சி அளித்த போதும், அதற்கு என்ன விலை கொடுத்துவிட்டாள் என்று, புவனேசுவரிக்கு வருத்தமாகவும் இருந்தது.!

லோகேசுவரியை, மருத்துவரிடம் அழைத்துப் போவதற்கு பாட்டியின் அனுமதியோடு, சரவணன் காருடன் வந்தது இரு பெண்களுக்குமே சந்தோஷமாகவே இருந்தது.!

லோகேசுவரியின் ஆரோக்கியம் பற்றிக் கவலைப்பட ஒன்றும் இல்லை என்று சொல்லி, மசக்கைத் தொல்லையைக் குறைக்க வழி முறை கூறி அனுப்பினார் டாக்டர்.!

அவரது ஆலோசனைப்படி, லோகேசுவரியைக் காலை மாலை நடக்க வைக்கும் பொறுப்பையும், சரவணனே ஏற்றுக் கொண்டான்.!

ஆற்று நீரோட்டம் போல, அவனோடு இயல்பாக கலகலவென்று பேசியவாறே, நடப்பது, லோகேசுவரிக்கும் பிடித்துப் போயிற்று.!

அப்படி அவள் செல்லும் நேரத்தில் வீடு சுத்தம், உடை சுத்தம் போன்ற வேலைகளை அதற்கென மனோகரி அனுப்பிய ஆட்களைத் திருப்பி அனுப்பிவிட்டு புவனேசுவரியே செய்தாள்.! ஆனால், எவ்வளவு நேரம் இதைச் செய்ய முடியும்?

நடைமுடிந்து வந்தால் டீவி பார்ப்பதும், தூங்குவதுமாக லோகேசுவரியின் பொழுது கழிந்துவிட, சும்மா இருந்து பழக்கமற்ற மற்றவளுக்குப் போரடித்தது.

இதற்கிடையே, தயானந்தன், அவனுடைய தாயிடம் தனியே பேசினான்.!

வந்த பெண்கள் இருவரும், அவர்கள் தங்கியிருந்த குடிலிலேயே சாப்பிடுவ தன் ஏற்பாடே என்று, முழுப்பழியையும் தன்மீது ஏற்றுக்கொண்டாள் அவள்.!

"விருப்பம் அற்றவர்களை, நான்தான் பீடிவாதமாக இங்கே அழைத்து வந்தேன். அவர்களது சாப்பாடு ஏற்பாடும் என்னதே. நீங்களே, அதை அலட்சியப்படுத்தினால் அப்புறம் ஏன் வார்த்தைக்கு என்ன மதிப்பு, சொல்லுங்கள்?" என்று, வருத்தத்துடன் வினவினான் மகன் 'பார்த்துப் பார்த்துச் செய்வதைப் பார்த்தால், உங்களுக்கு அவர்களிடம் வெறுப்பு இருப்பதாகத் தெரியவில்லை... என்னம்மா? சுதா, ஏதாவது சொன்னாளா?.

சட்டெனப் பிரச்சினையின் மையத்தைக் கண்டுபிடித்துவிடும் இந்த மகனிடம், மனோகரிக்கு எப்போதுமே சிறு பயம் கலந்த பெருமிதம் உண்டு.

அவன் தந்தை நோயில் விழுந்த இந்த ஏழு ஆண்டுக்ளாக, தன் இருபதாவது வயதில் இருந்து, ஒரு குறை சொல்ல முடியாதபடி தொழிலை நடத்துவதோடு, வளர்த்தும் வருகிறான். இவனிடம் எதை எப்படி மறைப்பது?

ஆனால், மகளை முழுதாகக் காட்டிக் கொடுக்கவும் மனமற்று, "அது ... அந்தப் பெண்களின் உடை.... சின்னவளாவது, கொஞ்சம் அதிகப்படியாக என்றாலும், ஏதோ அலங்காரமாவது செய்கிறாள். உன் தங்கை, அதையும் ஏளனமாகப் பேசுவாள்...' என்றபோது, தயானந்தன் குறிக்கிட்டு, "ஓ அது தான், அந்தக் கூத்து ராணி வேஷமா?" என்று வினவினான்.

ஒத்துக் கொள்ளும் ஒரு வினாடி மௌனத்தின் பின், 'எதற்கு, எல்லோருக்கும் வீண் மனக்கஷ்டம் என்று தான்...' என்று நிறுத்தினாள் தாயார்.

"ம்ம்ம்... இனிமேல் இந்த ஏற்பாட்டை மாற்றினால், உங்கள் மதிப்புக்குச் சரிப்படாது. இப்படியே இருக்கட்டும் அம்மா. சரி, சுதாவிடம் நான் பேசுகிறேன். அவர்கள் சங்கடப்படாமல்... வேண்டாதவர்கள் என்கிற மாதிரி எண்ணம் வராமல், நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்" என்றான் மகன்.

"சரிம்மா. ஆனால் சுதாவை ரொம்பத் திட்டி விடாதே." என்று கேட்டுக் கொண்டாள் மனோகரி.

"திட்டுவதா? என்னம்மா, நீங்கள்? இதற்காக என்று திட்டினால், வெறுப்பு தானே வளரும்? அதைவிட, விருந்தோம்பலைப் பற்றி, ஒரு சிறு பாடம், இன்னும், இரண்டு, மூன்று ஆண்டுகளில், அவளுக்கும் திருமணம் நடத்த வேண்டுமே. விருந்தினரை நடத்தும் விதம் பற்றியெல்லாம், அவள் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? என்று அவன் முறுவலிக்க, தாயின் மனமும், மகளின் திருமணம் பற்றி எண்ணி மகிழத் தொடங்கியது.

தாயிடம் பேசிய தயானந்தன், அடுத்து புவனேசுவரியிடம் வந்தான்.

"ரோமாபுரியில், ரோமர்களைப் போல நடந்து கொள்ள வேண்டும்' என்று, ஒரு பழமொழி இருக்கிறது" என்று தொடங்கினான்.

அவன் சொல்ல வருவது புரிந்து விட "அதை, ரோமுக்குப் போகிறபோது பார்த்துக் கொள்ளலாம் என்றாள் புவனேசுவரி கிண்டலாக.



"இங்கே யாரோ, வார்த்தைக்கு வார்த்தை மல்லுக் கட்ட வேண்டாம் என்று சொன்ன நினைவு வருகிறதே" என்றான் அவன்.

லேசாக முறுவலித்து, அப்படி வித்தியாசமாக என்ன செய்து விட்டோம்? சொல்லுங்கள் என்று கேட்டாள் அவள்.

"உடை" என்றான் அவன். "இது போலத் தொள தொளப்பான பான்ட், மேலே..."

அவன் சொல்லத் தெரியாமல் தடுமாறியபோது, "லாங் பிளவுஸ்" என்று எடுத்துக் கொடுத்தாள் அவள்.

"ம்ம்ம்... லாங் பிளவுஸ், பெர்முடா எல்லாம் வசதியாக இருக்கலாம். ஆனால், இங்கே,இந்தக் குடும்பங்கள் முன் அவ்வளவாகச் சரிப்பட்டு வராது. சுரிதார் செட், சேலை மாதிரி அணிந்தால் நன்றாக இருக்கும். உங்களிடம் இல்லை என்றால், மதுரைக்குப் போய் வாங்கிக் கொள். போக்குவரத்துக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்" என்று, சற்றுத் தணிவான குரலிலேயே கூறினான் அவன்.

"நாங்கள் வந்த அன்று, சுதா, வீணா, மானசிக்கா எல்லோரும் அணிந்திருந்தது, நன்றாக இருந்தது." என்று ஏதோ வாரப் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த லோகேசுவரி, திடுமென அவர்கள் பேச்சில் குறுக்கிட்டுச் சொன்னாள்.

"லோகேஸ் என்றாள் புவனேசுவரி எச்சரிக்கும் குரலில் வாக்கிங் போகச் சரவணன் வந்து கொண்டிருக்கிறாரா, பார்" என்று அவள் உத்தரவிட, தமக்கையைப் பார்த்து மூக்கைச் சுருக்கி அழகு காட்டிய போதும், அவள் சொன்னதைச் செய்தாள் தங்கை.

"என்ன, காட்டுக் குதிரை, வீட்டுப் பசுவாகிறது போல" என்றான் அவன் சிறு வியப்புடன்.

"வலிக்க அடி விழும்போது, வளர்ச்சி தானாக வருகிறது" என்றாள் புவனேசுவரி ஒரு வறண்ட குரலில். "அப்புறம், நீங்கள் சொன்னது எங்களது இந்த உடையே கௌரவமாகத் தான் இருக்கிறது. நாங்களும் அப்படித்தான்." என்றாள் சற்று அழுத்தமாக.

"ம்ம்ம்..." என்றவனின் பார்வை, வெளியே சரவணனுக்காகக் காத்து நின்ற சின்னவளின் மீது யோசனையோடு படிந்தது.

தன்னை மீறி முகம் சிவக்க, "அது ஓர் அசட்டுத்தனம்" என்றாள் அவள்,

உச்சுக் கொட்டி, "அதற்காகப் பார்க்கவில்லை. இது போல விஷயங்களில், லோகேசுவரி சொன்னால் கேட்பாளே என்று எண்ணினேன். மற்றபடி, நீ சொன்னது போல அசட்டுத் தனமாகவே இருந்தாலும், ஒரு பானைச் சோற்றுக்கு, ஒரு சோறு பதம் என்று பலர் நினைக்கக் கூடும்" என்றான் அவன் சோகம் போலக்காட்டி.

கிண்டலா என்று உள்ளூரப் புகைந்தபடி, "பதம் பார்க்கும் சோறாக, என்னை எடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள்" என்றாள் அவள் பதிலுக்கு.

அவள் சொல்லி முடிக்கும் போதே, "அதற்காகத்தானே, உடையை மாற்றச் சொல்லுகிறேன்" என்று அவன் வெற்றிக் குரலில் கூறவும், தன்னை மீறிப் புன்னகை செய்தாள் அவள்.

"என்ன? வாங்கிக் கொள்கிறாயா?"

"என்னிடமே சிலது இருக்கிறது. அங்கே, கோயிலுக்கும், விழாக்களுக்கும் செல்லும்போது, சேலை அல்லது சுரிதார்தான். இனி, அவைகளை அணிந்து கொள்கிறோம்" என்றாள் புவனேசுவரி.

"எங்கள் வீட்டைக் கோயிலுக்கு ஒத்திட்டதற்கு நன்றி." என்று அவன் கண்ணால் சிரிக்க, "சேலை, சுரிதார் அணியத் தயங்கியதே, உங்கள் வீடு என்பதால் தானே" என்று ஒரு போடு போட்டாள் அவள்.

"யப்பா, ஓர் இம்மி அளவு கூட விட்டுக் கொடுத்து விடக்கூடாதே" என்று அவன் சிரிக்கும் போதே, "செலமாட் பாகி" என்று வெளியே சரவணனின் குரல் கேட்டது.

லோகேசுவரி ஏதோ சொல்ல, சிரித்தபடியே வாயில் அருகே வந்து, "தயாண்ணா, செலமாட் பாகி" என்றான் மீண்டும்.

"யாரவர்?" என்று தயானந்தன் கேட்கவும், மற்ற மூன்று பேரும் சேர்ந்து சிரித்தனர்.

"அண்ணா, நீ சுத்த மோசம். இதுவரை நாலு தடவை மலேஷியாவுக்குப் போய் வந்திருக்கிறாய், 'செலமாட் பாகி' என்றால் யார் என்று கேட்கிறாயே" என்றான்.

"ஆமாப்பா, அந்தக் கனவானை நான் சந்தித்ததே இல்லை எனும்போது, யார் என்று, கேட்டுத்தானே ஆக வேண்டும்?" என்றவன் தொடர்ந்து "ஆனால் முதலில் நீ எனக்குக் காலை வணக்கம் சொன்னதற்கு, நானும் பதிலுக்கு உன்னை வாழ்த்தி விடுகிறேன். செலமாட் பாகி," என்று கூற, மற்ற மூவரும் "ஹே..." என்று கை தட்டி, மீண்டும் நகைத்தனர்.

"எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஒரு நாட்டுக்கு நாலு தடவை போய்விட்டு, இந்த மாதிரிச் சில வார்த்தைகளாவது படிக்காமல் நீ இருக்க மாட்டாயே என்று நினைத்தேன். அண்ணா நான், இந்த லோகா ஒருத்தியாலேயே மலாய் பேசப் படித்து விடுவேன் போல இருக்கிறது. நேற்று, மெயின் ரோடு வரை நடந்தோமே? டீ குடிக்க ஐடியா வந்தது இந்தம்மா, அங்கே போய் உட்காந்து கொண்டு... அதென்னது ... ம்ம், நினைவு வந்த விட்டது. 'தேத்தாரே டு வா' என்று ஆர்டர் கொடுக்கிறாள். இல்லைம்மா. என் பெயர் நாராயணன் என்கிறான் சர்வர் பையன். இவளுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை விவரம் தெரிந்ததும், எல்லோருமே விழுந்து விழுந்து சிரித்தோம் கிளம்புகிறபோது. 'தேத்தாரம்மா, வணக்கம், என்கிறான் அவன். இனிமேல், கொஞ்ச நாள் அந்தப்பக்கம் போகக்கூடாது அல்லது 'தேத்தாரம்மனு'க்குக் கோயிலே கட்டி விடுவார்கள். நேரமாகிறது. வருகிறோம் புவனா, அண்ணா பை" என்று கலகலத்தபடி, லோகேசுவரியோடு வெளியேறினான் சரவணன்.

"பை" என்று லோகேசுவரியின் குரலும் ஒலித்துத் தேய்ந்தது.

அவர்கள் செல்வதைப் புன்னகையோடு பார்த்திருந்து விட்டு, "இன்று நானே மதுரைக்குப் போக வேண்டியிருக்கிறது. கூட வந்தால், வேண்டியதைப் பார்த்து வாங்கிக் கொண்டு வரலாம் வருகிறாயா, புவனா?" என்று அழைத்தான் தயானந்தன்.

அவள் அதிர்ந்து நோக்கவும், "தம்பி கெட்டிக்காரன். அவன் அனுமதியே



கேட்டிருக்க மாட்டான் என்று எண்ணுகிறேன். லோகா, புவனா, பரவாயில்லை. ஆனால் இப்போது அது விஷயம் அல்ல, என்ன வருகிறாயா?" என்றான் மீண்டும்.

சற்று யோசித்தாள் புவனேசுவரி.

இங்கே, இத்தனை பேர் அறிய, அவனோடு தனியே செல்ல, அவளுக்குத் தயக்கமாக இருந்தது. அத்தோடு லேகேஸை மணிக்கணக்கில் தனியே விட்டுச் செல்லவும் மனம் வராமல், மறுப்பாய்த் தலையசைத்து விட்டாள். அவளையும் கூட அழைத்துச் செல்வதும் சரியாகத்தோன்றவில்லை.

நன்றாகச் சாப்பிட முடியாததாலோ என்னவோ, இந்தக் காலை நேரத்து நடை முடிந்து வந்தால் அப்படியே அயர்ந்து படுத்து விடுவாள் அவள்

அவளை எங்கே, மணிக்கணக்கில் காரில் அழைத்துப் போய் அலைய வைப்பது?

லோகேசுவரி வர முடியாத காரணத்தைச் சொல்லி, அதனால் தானும் வருவதற்கு இல்லை என்று கூறவும் தயானந்தனின் முகம் கடுத்தது.

# 12

சட்டென தயானந்தனின் முகம் மாறவும், புவனேசுவரி திகைத்தாள்.

இப்போது என்ன நடந்துவிட்டது என்று இவன் முகம் சுளிக்கிறான்?

தொடர்ந்து, "என்னது? லோகேசுவரி கூட வராவிட்டால், நீயும் வர மாட்டாயா? ஏன்? என்னோடு நீ தனியாக வெளியே வந்ததே இல்லையா? அன்று பாட்டி வீட்டுக்கு வரவில்லை? மதுரையில் கோயிலுக்குப் போனோம்... அப்போது இல்லாத தயக்கம் இப்போது என்ன வந்தது? ஓகோ. மணிக்கணக்காக, இவனோடு எப்படிப் போவது, என்று இருக்கிறதாக்கும்?" என்று கோபமாகப் படபடத்தான் அவன்.

தயானந்தனின் கோபம், தன்னை இவ்வளவு பாதிக்கும் என்று, புவனேசுவரியே எதிர்பார்க்கவில்லை. கோபத்தின் காரணமும் புரியாமல் திகைத்தாள். வெறுமனே, கடைக்கு வரவில்லை என்று சொன்னதற்காக, இவ்வளவு கோபம் வருமா?

மனம் தாளாமல், "பின்னே நீங்கள் சொல்லுங்கள், லோகேஸை அவ்வளவு நேரம் தனியாக விட்டு விட்டுப் போக முடியுமா? சும்மாவே அவள் ஒரு மாதிரி, தைரியம் இல்லாமல் சட்டென அழுகிறாள். அதற்காக மறுத்தால், கோபப்படுகிறீர்களே" என்றாள் அழாக்குறையாக.

தயானந்தனின் முகம் லேசாகக் கன்றியது. கண நேரத் தயக்கத்தின் பின் "சாரிம்மா. நான் தப்பாக நினைத்து விட்டேன். என்னோடு தனியே வரப்... சரி, அது போகட்டும். இந்த ஒரு முறை நானே வாங்கி வருகிறேன். உனக்கு என்னென்ன வண்ணங்கள், மாதிரிகள் பிடிக்கும் சொல்லு. ஏனென்றால், நீ தகராறுக்காரி, நன்றாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு போவது நல்லது. லோகேசுவரி அப்படியல்ல. பளிச்சென்று எதைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளுவாள்" என்றான் தயானந்தன்.

சட்டென நிமிர்ந்து, கலக்கத்துடன் அவனைப் பார்த்தாள் புவனேசுவரி.



அவன் "என்ன?" என்று கேட்கவும் "எங்கள் ஒட்டு மொத்த மலேஷியத் தமிழ்ப் பெண்களுக்கும் லோகேஸ் பிரதிநிதி அல்ல. அவளைக் கொண்டு எல்லோரையும் எடைபோடாதீர்கள்" என்றாள் இம்மிய குரலில். வியந்த பார்வை உடனே மாற அவள் அருகில் வந்து அமர்ந்தான் தயானந்தன். "நீ ஏன் இப்படி பிரசுரித்துப் பேசுகிறாய் புவனி? மலேஷியத் தமிழர். இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் என்று பிரித்துப் பேசலாமா? உலகம் முழுவதும் பரந்து, விரிந்து கிடக்கும், நம் தமிழினம் எல்லாமே, ஓரினம் தான். என்ன ஒரு பிரச்சினை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, நம் வள்ளுவர் பெருமான், 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்', என்றெல்லாம் எழுதி வைத்து விட்டார். அதனால் நாம் எல்லோரும், மற்றவர்களை விட, ஒழுக்கத்துக்குக் கொஞ்சம் அதிப்படியாக மதிப்புக் கொடுத்து அதிகமாகவே அலட்டிக் கொள்ளுகிறோம். நிறையப் பேர், இதைப் பெரிதாக நினைப்பதே இல்லை. என் "பாய் ஃப்ரண்டைக் கேட்டுக் கொண்டு, இரவை உன்னுடன் கழிக்க வருகிறேன் என்று இயல்பாகச் சொல்லும் இனமும் இருக்கிறது, தெரியுமா?"

"நம்மிடமும், மாற்றமே இல்லை என்று சொல்ல முடியாது. உலகமே, ஒரு 'குளோபல் வில்லேஜ்' என்கிற போது, பல்வேறு வர்க்கத்தினரின் தாக்கம், நம்மிடையேயும் இருக்கத்தான் செய்கிறது. பழைய மாதிரி, நிமிர்ந்து பார்த்தாலே பாவம் என்று சொல்வதெல்லாம்,எப்போதோ போய்விட்டது. ஆனாலும், நடை முறைக்கு ஒவ்வாததை விட்டிருக்கிறோமே தவிர, மற்றவர்களை விட, கூடக் கொஞ்சம் அதிக ஒழுக்கம், நாம் கடைப்பிடிக்கத்தான் செய்கிறோம். அதில், வழுகல் நேர்ந்தால் ரொம்ப அதிகமாகவே வருத்தப்படுகிறோம்."

"யோசி, லோகேசுவரி செய்த தவறை, இந்தியாவில் உள்ளவள் செய்ய மாட்டாளா? இலங்கை, கனடா, ஆஸ்திரேலியா... எந்த நாட்டில் உள்ள தமிழ்ப் பெண்ணும் செய்ததில்லையா? அதற்காக, அந்த நாட்டு நம் பெண்களே மோசம் என்று சொல்ல முடியுமா? ஏன், சுகனை வைத்து, இந்தியத் தமிழ் ஆண்கள் அத்தனை பேரும் அயோக்கியர்கள் என்று முத்திரை குத்தி விடுவாயா?"

"ஆண் பெண் உறவு என்பது, உலகத்துக்கே பொது. அதில் தவறுதலும், தெரிந்தே பிழை புரிதலும் கூட காலம் காலமாக நடந்து வரும் பொதுவான குறைபாடுகளே. அதனால், இந்தக் குற்றத்தை எந்த ஓர் இனத்தின் மீதும் தனிப்படச் சுமத்த முடியாது. தெரிந்துக் கொள் புவனி."

நீளமாக அவன் பேசி முடித்த போது, அவளுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது.

"எப்போதுமே, எனக்கு இது ஒரு பயம் இருந்தது. எங்களை வைத்து, நாட்டையே எடை போட்டு விடுவீர்களோ என்று உள்ளூரக் கலங்குவேன். இப்போதுதான் நிம்மதி ஆயிற்று" என்று அவனைப் பார்த்துப் புன்னகை செய்து, அவள் நன்றி கூற,

"உண்மையைச் சொல்வதற்கு நன்றி எதற்கு?" என்று அவனும் முறுவலித்தான்.

ஆனால் இந்த முறுவல், "சாரி, அமெரிக்க டாலர்களாகத்தான் இருக்கிறது." என்று, அவன் வாங்கி வந்த சுரிதார்களுக்கான பணத்தைப் புவனேசுவரி கொடுக்க முயன்ற போது, துணி கொண்டு துடைத்தாற்போல, அடியோடு மறைந்து விட்டது.



"ஏன் இப்படி என்னை அவமானப்படுத்துகிறாய்?" என்றான் அவன் ஆத்திரத்தோடு.

"நீங்கள்தான் அவமானப்படுத்துகிறீர்கள். ஒரு காரணத்துக்காக அழைத்து வந்தீர்கள். உணவு, இருப்பிடம் தருவதை ஒத்துக் கொள்ளலாம். ஆனால், உடுக்கும் துணியைக் கூடவா, ஓசியில் பெறுவது?" என்றாள் அவள் பதிலுக்கு.

"இதோ பார், நான் உனக்கு மட்டுமாக வாங்கி வரவில்லை. லோகா, சுதா, மானசி அவளுடைய நாத்தனார் வீணா, எல்லோருக்கும்தான் வாங்கி வந்தேன். இவர்களில் யாரும் இப்படிப் பணத்தை நீட்டி,என்னைக் கேவலப்படுத்தவில்லை." என்றான் தயானந்தன் அதிகரித்த சினத்துடன்.

"அவர்கள் எல்லோரும், உங்கள் சொந்தக்காரர்கள், ஒரு வகையில் லோகேசும்"

"ஏன் நீ உறவில்லையா? பாட்டி சொல்லவில்லை? சுகனுடைய குழந்தையைத் தாங்குவதால், லோகா பேத்தி, அவளுக்கு அக்கா, நீயும் பேத்தி தான் என்று சொன்னபோது மட்டும், சொட்டுக் கண்ணீர் வேறு விட்டு, ஒத்துக் கொண்டாயே ஓ, இப்போது தெரிகிறது. நீ என்னை மட்டும் தான், ஒதுக்குகிறாய், பாட்டி கொடுத்த வளையலை, ஏற்றுக் கொள்ளலாம். அம்மா அனுப்பும் உணவைச் சாப்பிடலாம். ஆனால், நான் வாங்கி வந்தால் மட்டும் விலை கொடுத்து வாங்கி, வேற்றாராக்கி விட வேண்டும். இதுவே இன்பநாதன் கொடுத்திருந்தால், அணிந்து வந்து, முன்னே நின்றிருக்க மாட்டாயா? "

இன்பநாதன்.

அவன், அவளுக்கு எதுவுமே வாங்கிக் கொடுத்ததே இல்லையே, கொடுக்க வேண்டும் என்று, அவள் எதிர்பார்த்ததும் இல்லை.

""ஏன் புவனேசுவரி, ஏன்? ஏன், என்னை மட்டும் வேற்றாளாக்கி, விலக்கி நிறுத்த வேண்டும் என்று எண்ணுகிறாய்? அப்படி என்ன உரிமை எடுத்துக் கொள்வேன் என்று பயப்படுகிறாய்?"

திடுக்கிட்டுப் போனாள் புவனேசுவரி.

அவனைப் பேச விடுவது, இவளது அமைதிக்குக் குந்தகமாகும் என்று தோன்றி விட, "தயானந்தன், ப்ளீஸ், என்னைக் கொஞ்சம் பேச விடுகிறீர்களா? எங்களைப் பற்றி, உங்களுக்குத் தெரியும், என் அம்மாவுக்குச் சுய மரியாதை மிகவும் அதிகம். எங்கள் அத்தையிடம் கூட, அம்மா எதையும் வாங்கிக் கொண்டது இல்லை அப்போது, லோகேஸ் சின்னப் பெண், விலையில்லாது கிடைக்கும் பொருள் ஒன்றுமே கிடையாது என்று அம்மா சொல்வது, இன்னும் என் காதில் ஒலிக்கிறது. பாட்டியிடம் வாங்கிக் கொள்ளவும், முதலில் நான் தயங்கவில்லையா? ஆனால் அவர்களிடம் மறுக்க முடியவில்லை. ஓசிச் சாப்பாடு சாப்பிடுகிறோம் என்று என் மனம் எப்படிக் குறுகுகிறது தெரியுமா? சாப்பாடு, தவிர்க்க முடியாது. தங்குமிடமும் அப்படித்தான்., இது... இதையாவது கொடுக்கலாம் என்று பார்த்தேன் ..." என்று உண்மையும் பொய்யுமாகச் சொல்லி முடித்தாள் அவள்.

இதற்கு மேல், எப்படிச் சமாளிப்பது?

அவன் நம்பினானோ, இல்லையோ, அது பற்றி மேலும் பேசுமுன், உள் அறைக் கதவைத் திறந்து கொண்டு லோகேசுவரி வந்தாள்.

அவளுக்காக வாங்கியிருந்த புதிய சுரிதார் ஒன்றை, அளவு பார்ப்பதற்காக அணிந்து வந்திருந்தாள்.

"அளவு சரிதான், அக்கா எனக்கு நன்றாக இருக்கிறதா? நிறம், எனக்குப் பிடித்திருக்கிறது. தயாண்ணா" என்றாள் அவள்.

"தாங்க்ஸ்மா" என்றான் அவன், உரிய பதிலாக.

லோகேசுவரியின் மெலிவை எடுத்துக் காட்டிய போதும், அந்தச் சுரிதார் செட் அவளுக்கு அழகாகவே இருந்தது.

அதைப்பற்றிப் புவனேசுவரி கூறியபோது, "உங்கள் இருவருக்கும் தேர்ந்தெடுத்தது, அம்மா. மதுரையில் தெரிந்த கடையிலிருந்து, அவர்கள் கொடுத்ததை மூட்டையாய்க் கொண்டு வந்து போட்டது மட்டும்தான் நான்" என்று உணர்ச்சியற்ற குரலில் கூறினான் தயானந்தன்.

"அடடா! அனுபவசாலியாக, ஆளாளுக்குப் பொருத்தம் பார்த்து நீங்கள் தான் வாங்கியிருப்பீர்கள் என்றெல்லவா நினைத்தேன். ஆனால் ஆன்டியின் தேர்வு என்றால் எனக்கும் இதேபோல அழகாக இருக்கும் என்று அணிந்து பார்க்காமலே சொல்விடலாம்."

'ஆலிவ் பிரான்ச்' என்பார்களே, அது போலச் சமாதான முயற்சி. ஏனோ, அவனது கோபம் மனதைப் பாதித்ததால், அவன் பேச்சை ஏற்றுக் கொண்டதைச் சொல்லாமல் சொல்லும் முயற்சி. புரிந்துக் கொண்டு ஏற்பானா?

புரிந்து கொள்வதில் பிரச்சினை இல்லை என்று, அவனது பதிலில் தெரிந்தது. "உண்மைதான். அவரவருக்குப் பொருத்தம் பார்த்துத் தெரிவு செய்வதில், அம்மாவுக்கு நிகர், அவர்களே தான். இப்போது இந்தப் பணத்தை எடுத்து உள்ளே வைக்கிறாயா? இன்னொரு முறை போகும் போது மணி சேஞ்சரிடம் கொடுத்து இந்திய ரூபாயாக மாற்றி தருகிறேன். வேறு ஏதாவது தேவை நேர்ந்தால் சட்டெனச் செலவு செய்ய வசதியாக இருக்கும்"

வேறு வழியின்றி அவள் பணத்தை எடுத்துக்கொள்ள, அவன் முறுவலித்தான். இருக்கட்டும் இன்னொரு வழி பார்க்கிறேன் என்று உள்ளூரக் கறுவிய போதும், மனப்பாரம் நீங்கிவிட, அவளும் முறுவலித்தாள்.

"நாளைக்குப் பாட்டி வீட்டுக்கு வரும்போது, ஊதாவில், ரோஜா வண்ண வேலைப்பாடு செய்த சுரிதாரை அணிந்து கொண்டு வாயேன். அம்மாவே பார்த்து எப்படியிருக்கிறது என்று சொல்லட்டும்" என்று அவள் அந்தச் சுரிதார்களில் ஒன்றை உடனடியாக அணிவதையும் உறுதி செய்து கொண்டுதான், அவன் கிளம்பினான்.

பாட்டி வீடு, தனக்கும் சாதகம் என்று புவனேசுவரி எண்ணினாள். அங்கே வைத்து,இவன் கோபத்தைக் காட்ட முடியாது. . .யாருமே தான்.

அவன் சொல்லை மீற மாட்டாமல் சுரிதாரை அணிந்து கொண்டு கண்ணாடியில் பார்த்தபோது, புவனாவுக்கே, தன் தலையலங்காரம் பொருத்தமற்றுத் தோன்றியது.



கொண்டையை அவிழ்த்து, ஜடையாகப் போட்டுக் கொள்ளலாமா என்று அவள் யோசிக்கும் போது, லோகேசுவரி தயாராகி வந்தாள்.

தமக்கையைப் பார்த்ததும், "என்னக்கா, நீங்கள்" என்று அருகில் வந்து கொண்டை வலையை அகற்றிக் கூந்தலைப் பிரித்தாள். "உங்களை விடப் பெரியவர்கள், அந்த மானசி, எப்படித் தலை அலங்காரம் செய்திருந்தார்கள். வாருங்கள் இன்றைக்கு நான் உங்களுக்குத் தலை வாரி விடப் போகிறேன்" என்று முன்புற கூந்தலைச் சேர்த்து வாரி, பின்னுச்சியில் கிளிப் மாட்டி, மீதியை லூசாக விட்டாள்.

"ஏய் லோகேஸ் தோளில் கையில் எல்லாம் கூந்தல் படுவது ஒரு மாதிரி இருக்கிறதுப்பா" என்று மூத்தவள் ஆட்சேபிக்கவும், மொத்தக் கூந்தலையும் சேர்த்து, பதினைந்து சென்டிமீட்டர் இடைவெளியில் இரண்டு இடங்களில், உடைக்கேற்ற வண்ணத்தில் பாண்ட் போட்டு விட்டாள்.

அவர்களை அழைத்துப் போக வந்த் சரவணன், புவனேசுவரியைப் பார்த்ததும் "ஐயய்யோ" என்று கத்தி விட்டு, "இந்த மாதிரி, உங்கள் நாட்டிலிருந்து ஒவ்வொருவராக எல்லோரும் இங்கே வந்து சேர்ந்து விட்டால், எங்கள் நாட்டுக்காரர்களுக்கு இடம் எங்கே இருக்கும்?" என்று கேட்டான். "சும்மாவே இது மக்கள் தொகை மிகுந்த நாடு".

இருவரும் திகைத்து நோக்க, "பின்னே என்னப்பா? அக்காவும் தங்கையுமாக, முதலில் இரண்டு பேர் வந்தீர்கள். இப்போது ஓசைப்படாமல், இதோ இன்னொரு தங்கையையும் வரவழைத்திருக்கிறீர்களே. என்ன அநியாயம்" என்று அவன் புவனாவைக் காட்டவும், இரு சகோதரிகளும் கலகலவென்று நகைத்தனர்.

சிரித்து முடித்ததும், "நீங்கள் வாயாடி என்பது சரியாகத்தான் இருக்கிறது" என்று, புவனேசுவரி சிறு வெட்கச் சிவப்புடன் கூற, "பொய்,பொய் எல்லோரையும் போலத்தானே, என் வாயும் இருக்கிறது? அது மட்டும் தனியாகத் 'தையாதக்கா' என்று ஆடிக்கொண்டா இருக்கிறது? ஏன், லோகா? இல்லைதானே? நன்றாகப் பார்த்து;உன் அக்காவிடம் சொல்லு" என்று சரவணன் கூற, மீண்டும் சிரித்தபடியே மூவருமாகக் கிளம்பிச் சென்றனர்.

எல்லோரு புவனேசுவரியை வியந்துதான் நோக்கினர்.

"எப்போதும், இப்படி இருப்பதற்கென்னம்மா?" என்றாள் மனோகரி.

"அப்படியானால், அந்தக் கொண்டைக்குள் இருந்தது எல்லாமே சொந்தக் கூந்தல்தானா? எவ்வளவு அடர்த்தி" என்று ஆச்சரியப்பட்டாள் சுதா.

"பிரமாதம்" என்று மானசியும், "அழகாக இருக்கிறது" என்று வீணாவும் பாராட்டினர்.

லோகேசுவரியின் உடையைப் பாராட்டியும், ஓரிரு வார்த்தைகள் சொல்லப்பட்டன என்ற போதும், ஒரு சிறு ஒதுக்கம் இருப்பது புரிய, புவனேசுவரி உள்ளூர வருந்தினாள்.

அதைத் தானும் உணர்ந்தாற் போல பாட்டியம்மாள், லோகேசுவரியை அழைத்துத் தன்னருகே அமர்த்தி, அவளுடன் பேச்சுக் கொடுத்தார்.

கிடைத்த முதல் வாய்ப்பில், புவனேசுவரியின் அருகே வந்து அமர்ந்து கொண்டு "லோகாவுக்கு என் பாராட்டுக்கள்" என்றான் தயானந்தன்.

அவள் வியப்பும் திகைப்புமாக நோக்கவும், "எப்படித் தெரியும் என்று இருக்கிறதா? நீயாக, உன் அருமைக் கொண்டையை விட்டுக் கொடுத்திருக்க மாட்டாய் என்பது எனக்கு நிச்சயம்" என்று சிரித்தான் அவன். "நான் சொல்வது சரிதானே?"

ஒப்புதலாகத் தலையாட்டியவளுக்கு இதுதான் வரியாக வாய்ப்பு என்று தோன்றி விட, "எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டாள்.

"சொல், என்ன வேண்டுமானாலும் செய்கிறேன் என்று சொல்ல ஆசைதான், ஆனால் வாக்குக் கொடுத்துவிட்டு மாட்டிக் கொள்ளக் கூடாது அல்லவா? என்ன உதவி என்று சொல்லு, முடிந்தால் செய்கிறேன்" என்றான் அவன்.

சற்றுத் தயங்கிவிட்டு, "எனக்கு ஒரு வேலை வேண்டும்..." என்றாள் அவள்.

"ஏன்? சாப்பாடு, துணி மணிக்கு ஈடு கட்டவா?" என்று உடனே கேட்டான் அவன்.

"நீ வெளிநாட்டுக் குடிமகள், உனக்கு வேலையோ, 'அதற்குச் சம்பளமோ தருவது சரியல்ல என்பது, உனக்குத் தெரியாது என்றா சொல்லுகிறாய்?"

இதற்குப் பதில், அவள் வைத்திருந்தாள். "சுறுசுறுப்பாக வேலை செய்து பழக்கப்பட்டவள் நான். நாள் முழுவதும் சும்மா உட்கார்ந்திருப்பது போரடிக்கிறது... சும்மா ஏதாவது உதவி மாதிரியாவது..."

உதட்டைப் பிதுக்கினான் தயானந்தன். நல்ல வாதம் தான். ஆனால், அதிலும் ஒரு பலவீனம் இருக்கிறது. ஒரு நாள், சில மணி நேரம் அவளைத் தனியே விட முடியாது என்றாயே தினந்தோறும், நாள் முழுவதும் அவளை விட்டு விட்டு எப்படியம்மா வேலைக்குப் போவாய்?"

இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்?

புவனேசுவரியின் திகைப்பைப் பார்த்து விட்டு, "என்னை நீ ஜெயிக்க முடியாது புவனி" என்று சிரித்தான் அவன். தொடர்ந்து, "நானாகத் தோற்றால் தான் உண்டு தோற்கட்டுமா?" என்றான் குரலைத் தணித்து, ரகசியம் போலக் கேட்டான்.

சட்டென மூச்சடைத்தது அவளுக்கு. இதற்கு என்ன அர்த்தம்?

புவனா பதில் சொல்லத் தோன்றாமல் பேந்த விழிப்பதைக் கவனித்தோ அல்லது இந்தப் பேச்சையே கவனித்துக் கொண்டு இருந்ததாலோ, பாட்டி அருகில் வந்தார்.

"என்ன விஷயம், தயாம்மா?" என்று மென் குரலில் வினவினார்.

கண்ணில் சிரிப்புடன், "பெரிதாக ஒன்றும் இல்லை பாட்டி. உங்கள் பேத்திக்கு வேலை வேண்டுமாம். சும்மா இருப்பது போரடிக்கிறதாம்" என்று செல்லப் பேரனாகப் புகார் செய்தான் தயானந்தன்.

எல்லாக் கதையும் சொல்லப் போகிறானா? சுரிதாருக்கு விலை கொடுப்பதற்காக அவள் வேண்டும் என்றே வேலை கேட்டதைச் சொன்னால், பாட்டி தப்பாக நினைப்பாரோ?



புவனேசுவரி நிமிரவும், "இந்தம்மா ஆசிரியை, பாட்டி நாம் என்ன பள்ளியா நடத்துகிறோம். இவர்களுக்கு வேலை கொடுக்க?" என்றான் பேரன்.

"அதற்கென்னடா? கூட்டிக் கழிக்கிற மாதிரி, கணக்கெழுதுகிற மாதிரி ஏதாவது வேலை இராதா? பொழுது போகத்தானே, கேட்கிறாள்? கொடு." என்று வற்புறுத்தினார் பாட்டி. "நீயே பத்திரமாகக் கூட்டிப்போய், நீயே கூட்டி வந்துவிடு" என்று பேரனைப் பார்த்தார்.

அவளுக்காகப் பேசுகிற மாதிரிதான் இருந்தது. ஆனால், அவளுக்குத் தெரியாமல் அவர்கள் இருவரும் ரகசியம் பேசுகிற மாதிரி ஓர் உணர்ச்சியும் புவனேசுவரிக்கு உண்டாயிற்று.

ஆனால், இதில் என்ன ரகசியம் இருக்க முடியும்?

இப்போது , பேரன் பாட்டியைப் பார்த்தான் "நான் வெளியூர் செல்லும் போது? அத்தோடு, லோகாவைத் தனியே விட்டு விட்டு,புவனி மணிக்கணக்காக வெளியே போக முடியுமா?" என்று கேட்டான்.

"அதற்கென்னடா? வெளியூர் செல்லும்போது, புவனாவுக்கு ஒரு கார் ஏற்பாடு பண்ணிவிட்டுப் போய்வா. புவனா வீட்டில் இல்லாத நேரம் முழுவதும் லோகா, என்னோடு இங்கே இருக்கட்டும்" என்று சற்று அழுத்தத்துடன் கூறிவிட்டுப் பாட்டி அகன்றார்.

பாட்டியின் குரல் அழுத்தத்தில், சில தலைகள் திருப்பிப் பார்த்தன.

பாட்டியைப் போலவே, புவனேசுவரியும், அப்படியே நகர்ந்திருப்பாள்.

அதற்குள், "ஒரு வாரம் பத்து நாளில், ஒரு வேலை காலியாகும். ஆனால், அதற்கு நீ பொருந்துவாயா... உன்னால், அதைச் செய்ய முடியுமா என்பது தான், ரொம்...பச் சந்தேகமாக இருக்கிறது" என்றான் தயானந்தன் யோசனையோடு.

"ஏன்? ஏன் அந்த சந்தேகம்? உங்கள் தொழில் சம்பந்தமானது என்றால் கூடக் கற்றுக் கொண்டு செய்வேன்..."

"செய்வேன்... அப்புறம்? 'சரவணன்' வருகிறது. 'மாதவன்' வருகிறது 'தயானந்தன்' மட்டும் என்ன பாவம் பண்ணினான்? ம்?"

"செய்வேன் தயானந்தன்" என்று மெதுவாக அவன் பேரைச் சேர்த்துச் சொன்னாள் அவள் "ஆனால், அந்த வேலையில் என்ன பிரச்சினை?"

"அந்த வேலை செய்பவருக்கு இருக்க வேண்டிய முக்கியமான தகுதி, பொறுமை, கோபமே படக்கூடாது. அது உன்னால் முடியாதே என்றுதான்..."

வேலைக்குத் தகுதி பொறுமையாம், இது என்ன கதை?

சட்டென மூண்ட ஆத்திரத்துடன், "நீங்கள் சொன்னதெல்லாம், பொய். அப்படித்தானே? இந்த மாதிரி வேடிக்கை எல்லாம் என்னிடம் வேண்டாம்" என்று வெடுவெடுத்தாள்.

"மெய், புவனி. நம் ஏற்றுமதிப் பகுதியில் வேலை. சரக்கு அனுப்பச் சொல்லி, ஆர்டர் போட்டதுமே அனுப்பியாயிற்றா? இன்னும் வரவில்லையே என்று ஆலாய்ப் பறப்பார்கள். அரைமணிக்கொரு தரம் போன் செய்வார்கள். அவர்களிடம், இன்ன



தேதியில், இன்ன மாதிரி அனுப்பியிருக்கிறது, இப்படி வரும் என்று திரும்பத் திரும்ப பொறுமையாகச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். உன்னால் எப்படி முடியும் பார் அதற்குள் ஆத்திரப்படுகிறாயே."

"அது.... பொதுவாக நான் பொறுமைசாலி தான் தயானந்தன். ஆனால்..."

"ஆனால், என்னிடம் மட்டும்தான் கோபம் வருகிறதா? ஆஹா அப்படியானால் சரி. இப்படி நீ ஆத்திரப்பட, நான் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே" என்று நகைமுகமாகக் கூறி, மீண்டும் அவளுக்குச் சினமூட்டி சிரித்தான் தயானந்தன்.

# 13

ஏதாவது காரணம் காட்டி, வாரத்துக்கு ஓரிரு முறை, அந்தக் குடும்பங்களில் எல்லோரும் யார் வீட்டிலாவது கூடுவது வழக்கமாக இருந்தது. அதில் கலந்து கொள்ளப் பெரும்பாலும், தயானந்தனே இரு சகோதரிகளையும் அழைத்துப் போனான்.

அதனாலோ என்னவோ, எல்லோரும் இவர்களிடமும் நன்றாகப் பழகலாயினர்.

தயானந்தன் செய்வது சரியாக இருக்கும் என்பது, பொதுவான கருத்து. அதைப் பின்பற்றுவதும் தானாக வந்தது. எனவே, முதல் நாள் போல அல்லாமல், எல்லோரிடமும் பேசிப் பழகவும் முடிந்தது.

சுதாவுடனும் கூட.

தயானந்தனே இரு முறை அவளை அழைத்துக் கொண்டு, குடிலுக்கு வந்தான்.

மனோகரி இருமுறை வந்து, நலம் விசாரித்து, பலகாரங்கள் கொடுத்து விட்டுப் போனாள்.

லோகேசுவரிக்கு இன்னும் சரியாகச் சாப்பிட முடியவில்லை. அவளுக்குப் பிடித்த மலேஷியப் பதார்த்தங்கள் சில செய்து கொடுத்தால் சாப்பிடுவாளோ என்று புவனேசுவரிக்குத் தோன்றிற்று. குடிலில் சமையல் செய்ய எல்லா வசதிகளும் இருந்ததால், மனோகரியிடம் சொல்லித் தேவையான பொருட்களைத் தருவித்து தருவித்து, மீகோரேங், சம்பல் போலச் சிலது செய்து தங்கைக்குக் கொடுத்தாள்.

மனோகரி பலகாரங்கள் அனுப்புவதை எண்ணி, இவைகளையும் நிறையவே செய்து அங்கேயும் அனுப்பினாள்.

சுவை பிடித்துப் போனது மட்டுமின்றி, 'இன்றைக்குச் சாப்பாட்டுக்கு, நீ ஒரு பதார்த்தம், இது செய்து வருகிறாயா' என்று கேட்கும் அளவுக்கு, எல்லோருடனும் பழக்கமும் அதிகரித்தது.

தமையனோடு, தாயும் சொன்னதாலோ என்னவோ, சுதாவுமே ஓரளவு இயல்பாகப் பழகலானாள்.

எனவே, தனித்து நிற்பது போன்ற உணர்வு வெகுவாக மறைந்து விட்டது.

ஆயினும், ஒரு சிறு உறுத்தலும், புவனேசுவரிக்கு, அடிக்கடி ஏற்பட்டது.

அந்த உறுத்தலின் காரணம், 'லீனா' என்ற பெயர். அங்கிருந்த மற்றவர்கள்



பேச்சில் அடிக்கடி அந்த பெயர் அடிபட்டது.

அவளது மாடல் மாதிரி அழகு, சுறுசுறுப்பு எல்லாம் பேசப்பட்டது.

அவள் நாடு திரும்பியதும், நிறுவனத்தின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ளப் போகிறாள். அதன் பிறகு திருமணம் பேச, ஊட்டியில் இருக்கும் அவளுடைய பெற்றோர் வருவார்கள் என்றெல்லாம், சற்றுத் தணிந்த குரலில் பேசினார்கள். லீனா படிக்கவென்று, யுஎஸ்ஸுக்குப் போயிராவிட்டால், சில ஆண்டுகளுக்கு முன்னரே திருமணம் நடந்திருக்கும் என்றும் சொல்லிக் கொண்டார்கள்.

எப்படியும், அவள் வருவது நிச்சயம், தயானந்தனின் தொழிலிலும், வாழ்விலும் அவளது பங்கும் நிச்சயம் என்பது எல்லோரின் ஊகமாகவும் இருந்தது.

இவையெல்லாமே, புவனேசுவரியின் அமைதியைக் கெடுத்தன.

ஏன் என்று யோசித்த போது, அவளுக்குக் காரணமும் புரிந்தது.

இப்போது தான் ஒரு வழியாக, இங்கே எல்லோருடனும் பழக முடிந்திருக்கிறது. புதியவளாக லீனா வரும்போது, மீண்டும் இதை, அடியிலிருந்து தொடங்க நேரும்.

அவள் எப்படிக் குணமோ? லோகாவைப் பார்த்து முகத்தைத் திருப்பினால்? கவலை இருக்கத்தான் செய்யும். அமைதியும் குறையத்தான் செய்யும்.

பெருமூச்சுடன் எழுந்து, மற்ற வேலைகளில் மனதைச் செலுத்த முயன்றாள் புவனேசுவரி.

தயானந்தன் சொன்னபடி, அவளுக்கு வேலை கொடுத்தான்.

அவன் சொன்னது போலவே, பொறுமையைச் சோதிக்கும் வேலைதான்.

அப்போதுதான் சொல்லியிருப்பாள், இன்ன எண்ணுள்ள பார்சல், இந்த விமானம் அல்லது கப்பலில் பதிவு பண்ணி ஏற்றியாயிற்று. இன்ன நேரம் உங்களுக்குக் கிடைக்கும் என்று, தெளிவாகச் சொல்லியிருப்பாள். அவள் சொன்ன அரைமணி நேரத்துக்கும் குறைவான நேரத்திலேயே, அதே இடத்தில் இருந்தே, அடுத்த 'கால்' வந்து விடும். எல்லோரும், அதே போலப் பேசினார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், பலர் பொறுமையற்று எரிச்சல் காட்டினார்கள்.

பல நாடுகளில் இருந்து பல ஊர்களில் இருந்து போன் அழைப்புகள் வந்து கொண்டே இருந்தன.!

அத்தனைக்கும் இனிய குரலில் பதில் சொல்லிக்கொண்டே இருக்க நேர்ந்தது.!

அதுவரை இந்த வேலையைச் செய்து வந்தவள், அன்று முழுவதும் இருந்து, கற்றுக் கொடுத்துவிட்டுப் போனாள்.

"வேறு வேலைக்குப் போகிறீர்களா?" என்று பேச்சுவாக்கில் புவனேசுவரி கேட்டதற்கு, "இல்.. அது.. வந்து...!" என்று அசடு வழிந்துவிட்டு "இப்போதைக்குக் கொஞ்சம் ஓய்வு எடுத்துவிட்டு, அப்புறமாக யோசிக்க வேண்டும்.!" என்று முடித்தாள் அவள்.!

இந்த வேலையைத் தொடர்ந்து செய்தால், தானும் இப்படித்தான்

# 7

கிளம்புவதில் உறுதியாக இருந்தபோதும், லோகேசுவரி உள்ளூரக் கலங்கியது, அவளது உடலில் தெரிந்தது.!

மசக்கையும் சேர்ந்துகொள்ள, உட்கார முடியாமல் சுருண்டு, சுருண்டு படுத்தாள்.

பயணத்திலும் கண்களை இறுக மூடிக்கொண்டு அமர்ந்திருந்தவள், அப்படியே உறங்கிவிட்டாள்.

அவளுக்கு வசதியாக, இருக்கையைச் சாய்வாய் இழுத்து விட்டுவிட்டு, மறுபுறத்தில் தன் அருகே வந்து அமருமாறு, புவனேசுவரி எழுந்து சென்றாள்.

எழுந்து, ஓரத்தில் அவளை உட்கார வைத்துவிட்டு, உட்புறமாக அமர்ந்தான் அவன்.

விமானப் பணிப் பெண்ணை அழைத்து, பழச்சாறு கொண்டுவரச் சொல்லி, அவளிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டுத் தானும் ஒன்றை அருந்தலானான்.

புவனேசுவரியின் பார்வை அடிக்கடி வெளியே சென்று மீள்வதைக் கவனித்து, "கீழே, அங்கங்கே குட்டித் தீவுகள், கப்பல்களின் விளக்குகள், மேலே நட்சத்திரங்கள்.! இடையே நாம் பறந்து போவது, பெரிய சாதனையாக, எனக்குத் தோன்றுவது உண்டு.!" என்றான்.

"கஷ்டப்பட்டு விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள் வேறுயாரோ.! சாதனை உங்களுதா?" என்று கிண்டலாக கேட்டாள் புவனேசுவரி.

"மனித குலத்தின் சாதனை என்ற பெருமிதம்.! அதில் பங்கெடுத்துக் கொள்ளக்கூடாதா என்ன? ஆனால், ஒன்று தெரிகிறது.! குட்டுவதற்கு வாய்ப்புக் கிடைத்தால், நீ விடுவதே இல்லை. அப்படித்தானே?" என்று முறுவலித்தான் அவன்.! "என்னிடம் மட்டும்தான் இப்படியா? அல்லது, வழக்கமே இதுதானா?"

"இரண்டும் இல்லை.! ரைட் சகோதரர்களில் தொடங்கி, எத்தனையோ பேர் வெகுவாக முயன்று, இந்த அளவுக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.! நீங்கள் ஒன்றுமே பண்ணாமல், சாதித்ததாகச் சொல்லுகிறீர்களோ என்று எண்ணி.. அதனால்தான்."

"ஓகோ.! ஆசிரியை அம்மா அல்லவா? தப்பைக் கண்டதும், சுட்டிக்காட்டி விட்டீர்களாக்கும்.! போகட்டும்.! உன் இன்பன் என்ன சொன்னார்?"

திடுமென அவன் கேட்ட விதத்தில், புவனேசுவரி, தடுமாறிப் போனாள். நல்ல வேளையாகப் பழச்சாறு கிட்டத்தட்டக் காலியாகிவிட்ட நிலை.! அல்லது, மேலே கொட்டி விட்டிருக்கும்.!

அதையும் கவனித்து, "என்ன அவ்வளவு அதிர்ச்சி? வழி மறித்துப் படுத்தவரைத் தாண்டிக் கொண்டு வந்தாயா?" என்றான் அவன் கேலிக்குரலில்.



"திடுமென இப்படிக் கேட்டால் திடுக்கிடாதா? ஆனால், அவர் ஏன் வழி மறிக்க வேண்டும்?" என்றாள் அவள் ஆத்திரத்துடன்.!

"பின்னே மாட்டாரா? மணக்க இருப்பவர். ஆசைக் காதலியைப் பல மாதங்கள் பிரிந்து இருக்கப் பிடிக்குமா என்ன? தடுப்பது இயற்கைதானே?"

"அவர் புரிந்து கொள்வார்." என்றாள் அவள் சுருக்கமாக.!

மற்றபடி, இன்பநாதனின் கசாப்புப் பேச்சையா, சொல்ல முடியும்?

தயானந்தனின் பேச்சு, அவள் கேட்க நினைத்த இன்னொன்றைத் தொடங்க வழி வகுத்துத் தந்தது.! உங்கள் பாட்டி சொன்னார்கள் என்று அழைத்துப் போகிறீர்களே.! அங்கே, மாற்று அபிப்பிராயமும் இருக்கும் அல்லவா? இன்பநாதன் தடையை எதிர்பார்த்ததாகச் சொன்னீர்களே.! அதைப்போல, அங்கே யார் யார்?

கீழ்க் கண்ணால், அவன் தன்னைப் பார்ப்பதை அவளால் உணர முடிந்தது.!

அதாவது, அங்கேயும் எதிர்ப்பு இருக்கிறது.!

சட்டென அவள் மனம் துடித்தது.! மற்றவர் முன் அவமானப்படக் கூடாது என்பதற்காகவே நாடு விட்டு நாடு வரும், லோகேசுவரி, இங்கும் இகழ்ச்சி என்றால் தாங்குவாளா?

தன் எண்ணத்தை வாய்விட்டு, அவள் சொன்னபோது, தயானந்தன் தலையசைத்தான்.! "நான் சொல்வது உனக்குப் பிடிக்காது.! ஆனால், ஒரு சில வார்த்தைகளில் துவண்டுவிட, உன் தங்கை ஒன்றும் 'மோப்பக் குழையும் அனிச்ச மலர்' அல்ல.! உன்னைவிட, அவளுக்கு மனோதிடம் அதிகம்.!.."

"ஆனால், அவள் இங்கு வந்த காரணம் என்ன தெரியுமா? பிறர் ஏச்சுக்கு..?"

"உன்னை விட, நன்றாகவே தெரியும்.! அவளுக்குக் கைச்செலவுக்கு எவ்வளவு வேண்டும் என்பது வரை, அவள் என்னிடம் பேசியிருக்கிறாள், தெரியுமா?" என்று கேட்டு, மீண்டும் ஒரு தரம் அவளை அதிர வைத்தான் அவன்.!

இதை, லோகேசுவரி அவளிடம் சொல்லவே இல்லையே.! இவன் சொல்வது மெய்யாக இருக்குமா? ஆனால், தங்கை மறைத்துப் பேசக்கூடியவள்தான்.!

அவள் கையில் இருந்த ஜூஸ் கப்பை வாங்கி, முன்னே இருந்த சிறு மடக்குத் தட்டில் வைத்துவிட்டு, அவன் சொன்னான். "தங்கை மனம் நொந்துவிடுமோ என்று, அவள் தூங்கிய பின், இங்கே வந்து அமர்ந்து நீ கேட்டதை, அவள் அங்கேயே கேட்டுவிட்டாள். சுகனின் மரணம் ஒவ்வொருவரை ஒவ்வொரு விதமாக தாக்கி இருக்கிறது. எல்லோரும் சமநிலைக்கு வருமுன் பேசுவதைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று அவளிடம் சொல்லியிருக்கிறேன். அவளும் அதை ஒத்துக்கொண்டிருக்கிறாள். ஆனால் பெரிதாக ஒன்றும் கவலைப்படாதே" என்றான். ஒரேயடியாக முட்டாளைப் போல அல்ல என்றாலும், ரொம்பவே அறிவு கட்டையாக உணர்ந்தாள் புவனேசுவரி. இதையெல்லாம் அவள் முன்பே விசாரித்திருக்க வேண்டாமா? இப்போது கேட்டு என்ன பயன்? அவன் சொல்லும் விவரங்கள் பிடிக்கவில்லை என்றால், பஸ், ரயில் போல, இடையில் இறங்கி ஓடிவிடவா முடியும்?



இது விமானம். இதிலிருந்து இறங்குவது என்றால், அதாவது இறங்க முடிந்தாலும், நடுக் கடலில்தான் குதித்தாக வேண்டும்.!

அது, அவளது முட்டாள்த்தனத்துக்குச் சரியான தண்டனையாகவும் இருக்கும்.!

ஆனால், அவள் அறியாதபடி, லோகேஸ் எப்போது கேட்டிருக்க முடியும்?

அவளது கேள்விப் பார்வையைப் புரிந்துகொண்டு, "என்னைத் தவிர்ப்பதற்காக, நீ ஏதேதோ வேலைகளைக் காரணம் காட்டி, அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தாயே, அப்போது கேட்டுத் தெரிந்துகொண்டாள்,!" என்றான் அவன் கேலிக்குரலில்.!

திணறிப் போனாள் புவனேசுவரி. அவன் வரக்கூடிய நேரங்களில், ஏதாவது சாக்கிட்டு, அவள் வெளியே சென்றதன் காரணத்தை, வெகு சரியாகக் கணித்து வைத்திருக்கிறானே.!

சிரமப்பட்டு சமாளித்து, "அப்படியெல்லாம் இல்லை.! அந்த வேலைகளையும் செய்தாக வேண்டும் அல்லவா?" என்றாள் அவள்.

"ஆனால், அதை நான் வரும் நேரத்தில்தான் செய்ய வேண்டும் என்பது இல்லையே.!

"நான் அந்த வேலைகளைச் செய்வதற்காகச் சென்ற நேரம் பார்த்து, நீங்கள் வந்ததாகவும் சொல்லலாமே.!" என்றாள் அவள் பதிலுக்கு.!

"தாராளமாகச் சொல்லலாம்.! ஆனால், உண்மை என்னவென்று, உனக்கும் தெரியும்., எனக்கும் தெரியும்.!" என்று மெல்லச் சிரித்தான் தயானந்தன்.!

மேலே வாதாட முடியாமல் போய்விட, உதட்டைக் கடித்துக்கொண்டு பேசாதிருந்தாள் புவனேசுவரி. சிறு மௌனத்தின் பின், "அங்கே, யார் யார் இருக்கிறார்கள்?" என்று சின்னக் குரலில் கேட்டாள்.!

அவனும் கேலி, கிண்டல் இல்லாமல் பதில் சொன்னான்.

"முதலாவதாக, மூத்த தலைமுறையாக எங்கள் பாட்டி.! நீங்கள் இங்குவரக் காரணமே, பாட்டிதான். பாட்டி, குரலை உயர்த்திச் சொன்னால், எல்லோரும் பணிந்து விடுவோம்.! ஆனால், லேசில் அவர்கள் குரலை உயர்த்துவது இல்லை.! முடிந்தவரை அவர்கள் சொல்லுக்கு எதிராகப் பேச வேண்டாம்.! வயது, எழுபதுக்கும் மேல் ஆகிறது. தனியாகத்தான் வசிக்கிறார்கள்.! இழப்பை அறிந்தவர்கள்.! மகனையும், மருமகளையுமே.! நாலு வயதிலிருந்து, அத்தை மகன் சரவணன் அவர்களோடு இருக்கிறான்.

"அடுத்து எங்கள் வீடு. அப்பா, அம்மா, தங்கை சுதா.! ஒன்று விட்ட சித்தப்பா வீடு சற்றுத் தள்ளி இருக்கிறது.! அதை ஒட்டியே, சித்தப்பா மகள் மானசி வீடு.! அவளுடைய கணவர் மாதவன், சரவணனுடைய அப்பா வகையில் உறவு. மாதுவுடைய கடைசித் தங்கை இப்போது, அங்கே வந்திருக்கிறாள்.."

நிறைய மனிதர்கள். முதலில் குழப்பமாக இருக்கக் கூடும்.! பழகப் பழகச் சரியாகிவிடும்.!



"எல்லோருக்கும் தனித்தனி வீடுகள்தான்.! ஆனால், சின்ன விஷயம் என்றாலும் அனைவரும் எங்கள் வீட்டில் சேர்ந்து கொள்வோம்.! அநேகமாக, நாளைக்கு எல்லோரையுமே நீ சந்திக்கக்கூடும்.!"

தன் குடும்பத்தார் பற்றி, மேற்கொண்டு பேச அவன் தயாரில்லை.!

ஏன்? இன்பனைப் பற்றி, அவள் பேச விரும்பாத மாதிரியா? பேசினால், குறை தெரியவரும் என்பதால், அந்தப் பேச்சையே தவிர்க்கிறானோ?

புவனேசுவரியின் மனம் மேலும் கனத்தது.!

தங்கையின் பக்கம் பார்த்துவிட்டு, "லோகேஸ் விழித்து விடக்கூடும்.! நான் அங்கே போகிறேன்." என்று, அவன் எழுந்து வழி விடக்காத்திருந்தாள்.!

ஆனால் அசையாமல் அமர்ந்திருந்தபடி, "நீ அருகில் உட்காரும் அசைவிலேயே, அவள் விழித்து விடலாம்.! ஆனால், ஒரு வேளை, என் பக்கத்தில் உட்கார்ந்திருக்க உனக்குப் பிடிக்கவில்லையோ என்னவோ?" என்றான் அவன்.

சும்மா, சும்மா இவனுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவிப்பதா?

அவசரமாக யோசித்து, என்னைப் பார்க்க முடியாது என்று மறுத்தவர், பிடிவாதமாக நான் வந்து பார்த்தபோதும், நின்று பேசாமல் விரட்ட முயன்றது நீங்கள்தான். நினைவிருக்கட்டும்.!" என்றாள் அவள் கிண்டல் போல.!

முறுவலித்து, "அந்தக் கோபம் இன்னுமா இருக்கிறது?" என்று வினவினான் தயானந்தன்.

"அடியோடு மறையவில்லை.!"என்று, தன் ஒதுக்கத்துக்கு அதுதான் காரணம் போலக் காட்டியவள், அவன் புருவம் சுருக்கி, யோசிக்கவும், அவசரமாக, "ஆமாம், அன்று நீங்கள் ஏன் அப்படி... உதாசீனமாக நடந்து கொண்டீர்கள்?" என்று வினவினாள்.

தோளைக் குலுக்கி, "என்னுடைய இருபத்தி ஒன்றாவது வயதில் இருந்து, ஏதாவது சாக்கிட்டுப் பெண்கள் என்னை நெருங்க முயல்வது, புதிது அல்ல.! அப்படி யாரோ என்றுதான்..." என்று, முடிக்காமலே நிறுத்தினான் தயானந்தன்.

கண்கள் பளிச்சிட, "ஓகோ.! காஃபிக் கொட்டை மகாராஜா.! மன்மதக் குஞ்சுக்கு வலை வீச வந்ததாக எண்ணிவிட்டீர்களாக்கும்.!" என்று அவள் சிரிக்க, அவனும் லேசாக நகைத்தான்.

"நான் பாவம், உங்கள் வலது கையின் வேலையோ என்று, உள்ளூர அவரை அல்லவா, திட்டிக் கொண்டிருந்தேன்.! ஆமாம், உங்கள் வலது கை பற்றி, ஒன்றுமே சொல்லவில்லையே.! அவர் எங்கே வசிக்கிறார்?"

"என்னோடுதான்.! சித்தியுடைய தங்கை மகன். மாற்றாந்தாயிடம் தங்கை மகன் கொடுமைப்படுவதைப் பார்த்துச் சித்தி, கூடவே கூட்டி வந்து விட்டார்கள்.! அவனுடைய கெட்டிக்காரத்தனத்தைப் பார்த்து அப்பாவுக்குப் பிரியம். நாங்கள் இருவரும் ஒன்றாகவேதான் தொழில் பயின்றோம்.! மற்ற எல்லோரையும் விட, எனக்கு நெருக்கமான நட்பு, உறவு எல்லாம் சங்கர்தான்.! நீ பேசிய போதுகூட, முதலில்

எடுத்தது அவன்தானே.! குரல் உண்மையானதாக இருக்கிறது என்று, பேசும்படியு கூறினான்.!"

உள்ளூர, அவன் மேல் நன்றி சுரந்தது புவனேசுவரிக்கு.! "இப்போது அவ எங்கே?" என்று விசாரித்தாள்.

"ராணிமார் வருகைக்கு ஏற்பாடு செய்ய, முன்னதாகப் போயிருக்கிறான்.!" என்று சிரித்தான் அவன்.

"ஓ.!" என்றவளின் முகத்தில் கவலை படிவதைக் கவனித்து, பேச்சை மாற்றினான் தயானந்தன்.

எண்ணிறந்த விளக்குகளுடன், சென்னை மாநகரத்தின் இரவுத் தோற்றம், மிகவும் ரம்மியமகாத்தான் இருந்தது.! ஆனால், விமானம் தரையைத் தொட்டபோது, வயிற்றினுள் குளிர், பரவுவதைப் புவனேசுவரியால் தடுக்க முடியவில்லை.!

நாடு விட்டு, நாடு வந்தாயிற்றே.!

'உதயா'வின் விருந்தினர் இல்லத்திலேயே, இரவுத் தங்கலுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.!

ஓய்வு எடுத்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டு தயானந்தன், அவனது அறைக்குச் சென்றுவிட, சோர்வுடன் படுக்கையில் விழுந்தாள் புவனேசுவரி.

அரையடி அமுங்கிக் கொடுத்தது மெத்தை.! ஏசியின் இதக் குளிர் வேறு.! ஆயினும், கடலுக்கு அப்பால் இருந்த ஒற்றைப் படுக்கையறை வீட்டுக்காக ஏங்கியது அவள் மனம்.!

ஒரு நல்ல குடும்ப வாழ்க்கையை இதமாக எதிர்பார்த்தபடி சுகமாக இருந்தாளே.!

ஆனால், இன்பன் இவ்வளவு சுயநலமியாக இருப்பான் என்று, அப்போது அவள் எண்ணிக்கூடப் பார்த்தது இல்லை.! ஒரு வேளை, அவளைப் பிரிய நேருமோ என்ற வேகத்தில் பேசிவிட்டு, அவன் இப்போது வருத்தப்பட்டுக் கொண்டு இருக்கிறானோ?

அப்படித்தான் இருக்கும்.! மற்றபடி, அவன் கெட்டவன் இல்லை., அவனுக்கு ஃபோன் செய்து பேச வேண்டும்... என்று நினைத்தவாறே, புவனேசுவரி தூங்கிப் போனாள்.!

மறுநாள் விழித்தெழுந்து கிளம்புகிற வேகத்தில், ஃபோன் நினைவே அவளுக்கு வரவில்லை.!

நான்மாடக்கூடலாம் மதுரையின் கோபுரங்களை அவள் ஆவலாகப் பார்க்கவும், 'அதிக அலுப்புப்படுத்திக் கொள்ள வேண்டாம்' என்று, லோகேசுவரியை 'பாண்டியன்' ஹோட்டல் அறையில் ஓய்வெடுக்கும்படி செய்துவிட்டு, மற்றவளை மாலையில் கோயிலுக்கு அழைத்துச் சென்றான் தயானந்தன்.

ஏசி காரில் செல்லும்போது ஒன்றும் தெரியாவிட்டாலும், காரைவிட்டு இறங்கியதுமே, "ஒரே தூசி!" என்றாள் புவனேசுவரி.

"உங்கள் நாட்டில் இருந்து வருகிறவர்கள் எல்லோரும், ஒரே குரலாக முழங்குவது, இதைத்தான்.! நீயும் மாறுபடவில்லை.!" என்றான் அவன்.!

"ஏன், சுத்தமாக வைத்துக் கொள்வதற்கென்ன?"



" 'எறும்பூரக் கல் தேயும்.!' என்று படித்திருக்கிறாயா? கல் தேய்வது என்றால் என்ன அர்த்தம்? கடினமான கல்லே பொடிப்பொடியாய்ப் புழுதியாகி விடுகிறது.! எறும்பு ஊர்வதிலேயே, அப்படி.! நூறு கோடி மக்கள், ஏற்றவாறு வாகனங்கள், கால்நடைகள், புழு, பூச்சிகள்,... கூடவே எறும்புகள்.! நாட்டில் எவ்வளவு புழுதி உண்டாகும்.! அத்தோடு, உங்கள் நாட்டில், அதிகபட்சமாக மூன்று நாட்களுக்கு ஒரு தரமேனும் மழை பொழிந்து, தூசியைக் கழுவி விட்டுவிடுகிறது.! தூசி கிளம்பாமலும் செய்து விடுகிறது.! இங்கே, மாரிக் காலத்தில் மழை பெய்வதே அதிசயம் ஆகிவிடும் போல இருக்கிறதே.!"

"ஒத்துக் கொள்ளுகிறேன்.! உங்கள் நாட்டில் தூசி இருப்பதுபோல நியாயமான விஷயம், உலகத்திலேயே கிடையாது.!" என்றாள் அவள் கேலியாக.!

"நியாயம் என்று சொல்லமாட்டேன்.! தொடர்ந்து தூசி இருக்கும் என்பதும் இல்லை.! ஆனால் இப்போதைக்குத் தவிர்க்க முடியவில்லை.! அவ்வளவே.!" என்றான் அவன்.!

"தவிர்க்க ஒரு வழி இருக்கிறது.!" என்றாள் புவனேசுவரி.

அவன் சன்னமாய் இமையிடுக்கி, சந்தேகமாக நோக்கவும், அப்பாவியாய் விழிகளை விரித்து "மெய், சார்.! சற்றுமுன் பழமொழி சொன்னீர்களே.! அதுபோல, அந்தக் காலப்பாடல் ஒன்று நான் படித்திருக்கிறேன். 'நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு, எல்லோர்க்கும் பெய்யும் மழை' என்று முடியும்.! இங்கேயும், யாராவது ஒருவராவது நல்லவர் ஆகிவிட்டால், உங்கள் பிரச்சினை, முழுமையாகத் தீர்ந்து போகுமே.!" என்றாள் அவள் சாது போல.!

அவன் கண்கள் பளிச்சிட்டன. "இனிமேல், ஒருவரைப் பிடித்து நல்லவர் ஆக்குவது கடினம்.! ஆனால், அதற்கு அவசியமே இல்லாமல், நீதான் வந்துவிட்டாயே.! இனி மழை கொட்டோ கொட்டென்று கொட்ட வேண்டியதுதானே?"

அடக்க மாட்டாமல் சிரிக்கும்போது, கேலியைப் புரிந்துகொண்டு, பட்டுப் பட்டென்று பதில் கொடுப்பவரோடு வார்த்தையாடுவது நன்றாகத்தான் இருக்கிறது என்று எண்ணிக் கொண்டாள் புவனேசுவரி.!

இன்பனோடு, இப்படிப் பேசிச் சிரித்ததே கிடையாது.! கேலியை அவ்வளவாகப் புரிந்து கொள்ள வராது அவனுக்கு.! 'என்ன' என்று, அவளிடமே விளக்கம் கேட்பான். அவன் வரத் தொடங்கிய பிறகு, லோகேசும் அவளும் பேசிச் சிரிப்பது கூடக் குறைந்து விட்டது.!

அவனோடான வாழ்க்கையும் அப்படித்தான் இருக்குமா?

"என்ன விஷயம்?"

திகைத்துத் திரும்பியவளிடம், "திடுமென முகம் மாறி விட்டதே, ஏன் என்று கேட்டேன்.!" என்றான் தயானந்தன்.

"அஅது, இவ்வளவு பெரிய கோயிலை, மின்சாரம் போன்ற விஞ்ஞான சாதனைகள் எல்லாம் கண்டுபிடிக்கும் முன்பாகவே, எப்படித்தான் கட்டினார்களோ

என்று பிரமித்துக் கொண்டிருந்தேன்.!" என்று சமாளித்தாள் புவனேசுவரி.!

ஆனால், 'தன்னெஞ்சறிய பொய்யற்க' அல்லவா? தயானந்தனிடம் சமாளித்து பதில் சொன்ன மாதிரி, அவளது உள்ளத்தில் எழுந்த கேள்விக்குப் பதில் அளிக்க அவளால் இயலவில்லை.!

# 8

**கோ**யிலை விட்டு வெளியே வரும்போது, "ஆடை, அணிமணிகள் தேவைப்பட்டது வாங்கிக் கொள்.!" என்றான் தயானந்தன்.

"வேண்டியது இருக்கிறது.!" என்று மறுத்துவிட்டு, "உங்கள் செக். அங்கே தேவைப்படவில்லை.! இந்தாருங்கள்.!" என்று, அவன் முதலில் அனுப்பியதை, வாய்ப்புக் கிடைக்கும்போது திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று கைப்பையிலேயே வைத்திருந்த காசோலையை, எடுத்துக் கொடுத்தாள் அவள்.

அவனுக்கு வாங்கிக் கொள்ளப் பிடிக்கவில்லை என்று நன்றாகவே தெரிந்தது.! ஆனால், மறுக்க மாட்டாமல் வாங்கியவன், "உன் பெயரில் உள்ள செக்.!" அங்கேயே பயன்படுத்தியிருக்க வேண்டும். நான் வைத்திருந்து என்ன செய்வது?" என்று கிழித்துக் குப்பைத் தொட்டிக்குள் வீசினான்.

அவனது கோபம் அர்த்தமற்றதாக, தோன்றியபோதும், அவளது மனதைச் சங்கடப்படுத்தியது.! ஆனால், "நீங்கள் எதற்காகக் கொடுத்தீர்களோ, அதைச் செய்யாதபோது, உங்கள் செக்கை எப்படி, சார் பாவிப்பது.." என்று அவள் விளக்குகையில், அவன் மீண்டும் எரிச்சல் பட்டான்.!

"முதலில் ஒன்றை நீ கவனி, இனி நாம் செல்ல இருக்கிற இடத்தில், பணியாட்கள் தவிர, என்னை யாரும் சார், மோர் என்று அழைக்க மாட்டார்கள்.! பெயர் சொல்லிக் கூப்பிடுவார்கள்.. அல்லது, உறவு முறையில் அழைப்பார்கள்.!.."

சடக்கெனத் திரும்பி, "உங்களை நான் எந்த உறவு முறையில் அழைக்கட்டும்?" என்று குத்தலாகக் கேட்டாள் அவள்.

"அதை, உன் தங்கையிடம் கேள் என்று நானும் சொல்ல முடியும்.!" என்றாள் அவன் பதிலுக்கு.!

"ஆனால், எனக்குக் குதர்க்கத்தில் விருப்பம் இல்லை.! நாம் ஒன்றும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலோ, மத்தியிலோ இல்லையே.! பெயரைச் சொல்லியே கூப்பிடலாம்.!" என்றவன் அவள் மேலும் தயங்கவும், "என்னவோ, சிங்கமே, புலியே, கிங்கரனே என்று கூப்பிடச் சொல்லுகிற மாதிரி நடுங்குகிறாயே.! என் பெயர் ரொம்ப அழகானதும்மா.! சொல்லிப் பார்.! தயா." என்று ஒவ்வோர் எழுத்தாகச் சொல்லத் தொடங்க, புவனேசுவரி தானாக முறுவலித்தாள்.

"உங்கள் பெயர் உலக மகா அழகானதுதான், ஒத்துக் கொள்ளுகிறேன்.! ஆனால், எனக்கு. மனதில் கொஞ்சம் பழகட்டும், அப்புறம்தான் வாயில் இயல்பாக வரும்.."

"பரவாயில்லை.! நல்ல சமாளிப்பு.! இப்போதைக்கு வெற்றிகரமாகத் தள்ளிப்



போட்டாயிற்று.! போகட்டும்.!" என்று விட்டுக் கொடுத்தான் தயானந்தன்.

அப்பாடி என்று அவள் மூச்சு விடும்போதே, ஆனால், 'இன்பநாதன்' எத்தனை நாளில் வாய்க்கு இலகுவாயிற்றோ, தெரியவில்லையே?" என்றுரைத்து, மீண்டும் அவளைத் திணற வைத்தான் அவன்.

நல்ல வேளையாக, அதற்குள் ஹோட்டல் வந்துவிட, நிம்மதியோடு அறைக்குச் சென்றாள் புவனேசுவரி.

ஆனால், "எனக்குத் துணையாக வந்துவிட்டு, என்னைத் தனியே விட்டுவிட்டு, ஜாலியாக ஊர் சுற்றப் போய்விட்டீர்களே.!" என்று குறை கூறினாள் லோகேசுவரி.!

ஜாலியாகவா? என்று பெருமூச்சு விடப் போன புவனேசுவரி, திடுமெனத் திகைத்தாள்.!

அவ்வப்போது சில திணறல்கள், கோபங்கள் ஏற்பட்ட போதும், தயானந்தனுடன் வெளியே சென்றது, அவளுக்கு உற்சாகமாகத்தான் இருந்தது.!

இதழ்களில் சிறு முறுவலுடன், "மதுரை மீனாட்சி அம்மன், நம் மாரியம்மனைப் போலச் சக்தியுள்ள தெய்வமாம்.! நீ நல்லபடியாகப் பெற்றுப் பிழைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளப் போனேன் லோகும்மா.!" என்று அவள் பரிவாகப் பதில் சொல்ல, லோகேசுவரியின் எரிச்சல் மறைந்தது.!

புவனேசுவரி சொன்னது உண்மையும்கூட.! உலகம் காக்கும் அன்னையிடம், அவள் அப்படித்தான் வேண்டியிருந்தாள்.!

கூடவே, தங்கை மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்றும்.! அது நடக்கக் கூடுமா?

சுமார் இரண்டு மணி நேரப் பயணத்தில் பாதி மலைப் பாதையில் ஏறிப் பக்கவாட்டில் திரும்பிச் சென்றது கார்.

கொஞ்ச நேரத்தில், 'உதயா' என்ற பெரிய எழுத்துக்களை, உயரத்தில் பார்த்ததுமே, இறங்க வேண்டிய இடம் வந்தாயிற்று என்று இரு பெண்களும் புரிந்து கொண்டனர்.

வேறு யாரும் கண்ணில் படவில்லை என்றாலும், சிரித்த முகமாய், சங்கர் அங்கே ஒரு சிறு வீட்டின் முன் நின்று கொண்டிருந்தான்.!

கார் நின்றதும், "வெல்கம்!" என்று கூறி கார் கதவைத் திறந்துவிட்டான்.

வரவேற்க ஒருவர் இருப்பது ஆறுதலைத் தர, புவனேசுவரி அவனைப் பார்த்து முறுவலித்தாள்.

பதிலாக, "பயணம் வசதியாக இருந்ததா?" என்று விசாரித்தான் அவன்.

"இம்ம்..." என்று புவனேசுவரி தலையாட்டினாள்.

"நீயும் லோகேசுவரியும் இங்கே தங்கிக் கொள்ளுங்கள். சாப்பாட்டுக்கு, அங்கே வந்துவிடுங்கள்.." என்று தயானந்தன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, "எனக்குப் படுக்க வேண்டும்.!" என்றாள் லோகேசுவரி தீனக் குரலில்.

எல்லோருமே, அவசரமாய் அவளது தேவைகளைக் கவனிக்க, விரைவிலேயே, அவள் படுக்க வைக்கப்பட்டாள்.



என்னென்ன, எங்கெங்கே இருக்கின்றன என்று காட்டிவிட்டு, ஆறு மணிக்கு வந்து அழைத்துப் போவதாகவும், அதுவரை ஓய்வெடுக்குமாறும் கூறி, இரு ஆண்களும் விடை பெற்றுச் சென்றனர்.

தமக்கையை அருகில் அழைத்து, அவள் கையைப் பிடித்துக்கொண்டு அசையாமல் படுத்துக் கிடந்தாள் லோகேசுவரி.

"உடம்பை ஏதும் பண்ணுகிறதா, லோகேஸ்?" என்று புவனேசுவரி கவலையுடன் வினவினாள்.

"கொஞ்சம் களைப்பாக... அக்கா, எனக்கு, ஏன் இங்கே வந்..தோம் என்று இருக்கிறதே.!" என்றாள் மெல்லிய குரல் நடுங்க.!

இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்? நீதானே, பிடிவாதம் பிடித்தாய் என்று குத்திக் காட்டவா, முடியும்? அதுவும் அவளே கலங்குகிறபோது.!

தங்கையின் கையைத் தட்டிக் கொடுத்து, "எல்லாம் சரியாகிப் போகும், லோகும்மா.!" என்று ஆறுதல் படுத்த முனைந்தாள் அவள்.

"எப்படிச் சரியாகிப் போகும்? இன்னும் கொஞ்ச நாளில், என் வயிறு பீப்பாய் மாதிரி அசிங்கமாக இருக்கும்.! யாருக்கும் என்னைப் பார்க்கவே பிடிக்காமல் போய்விடும்.!"

"என்ன பேத்தல், இது? உன் முகத்தைப் பார்த்த பிறகு, உன்னை யாருக்காவது, பிடிக்காமல் போகுமா? எங்கள் புத்திசாலி லோகும்மா, திடீரென்று ஏன் இப்படியெல்லாம் உளறுகிறது?" என்று இலகுவாகப் பேசினாள் பெரியவள்.

"பின்னே, ஏன் யாரும் என்னிடம் பேச மாட்டேன் என்கிறார்கள்? தயானந்தனும் உங்களிடம்தான் பேசுகிறார்.! கோயிலுக்கெல்லாம் அழைத்துப் போகிறார்.! அந்த சங்கரும் உங்களைப் பார்த்துதானே சிரித்தார்.! நான் தப்பாக நடந்துவிட்டேன் என்றுதானே என்னை ஒதுக்குகிறார்கள்? இவர்களே இப்படி என்றால், இங்குள்ள மற்றவர்கள்..."

"என்ன அசட்டுப் பேச்சு, இது? நீ வந்து.. இது மாதிரி நிலையில் இருப்பவள்.! களைத்துப் போய் இருப்பாய் என்று, முடிந்தவரை நீ ஓய்வாக இருக்க வேண்டும் என்று எண்ணிச் செய்வதை நீ தப்பாக எண்ணுகிறாயே.! நீ படுக்க வேண்டும் என்றதும், எப்படி இருவருமே மின்னல் வேகத்தில் செயல்பட்டார்கள்? படுக்கையை விரிப்பதும், ஜன்னலைச் சாத்தி ஏசி போடுவதுமாக.. நீயும் பார்த்துக் கொண்டுதானே இருந்தாய்? பிடிக்காதவர்களுக்குத்தான் இந்த மாதிரி வேலைகள் எல்லாம் செய்வார்களாக்கும்? அதுவும், இவ்வளவு உயர்ந்த நிலையில் இருப்பவர்கள்.!"

சிறு கண்டிப்புடன் கூடிய கனிவான பேச்சு, சின்னவளின் முக வெளுப்பைக் கொஞ்சம் மாற்றியது.!

"அப்படியானால், எல்லோரும் என்னிடம் பிரியமாகத்தான் இருப்பார்கள்.! இல்லையாக்கா? கேவலமாக நடத்த மாட்டார்கள்தானே?"

தப்பைச் செய்யும்போது, லட்சியமே செய்யவில்லை.! ஆனால், விளைவை அனுபவிக்கும்போது, என்ன பாடு பட வேண்டியிருக்கிறது.!

"நிச்சயமாய்.!" என்று, தனக்கு இல்லாத நம்பிக்கையைத் தங்கைக்கு



உண்டாக்கினாள் புவனேசுவரி.! "நீயே சொல்லவில்லையா, அவர்கள் அழைத்துத்தானே, நாம் இங்கே வந்திருக்கிறோம்? கேவலமாக நினைப்பவர்களா, வீட்டுக்கு அழைப்பார்கள்?"

"இல்லை.. ஆனாலும், என்னவோ வயிற்றுக்குள் பட்டாம்பூச்சி பறப்பதுபோலக் கொஞ்சம் பயமாகத்தான் இருக்கிறது.!" என்றாள் தங்கை.!

"இந்த மாதிரி உடல்நிலையில் அப்படித்தான் இருக்குமாம்.! சற்று நேரம் படுத்துத் தூங்கு.! தூங்கி விழித்தால், எல்லாம் சரியாகி விடும்.!" என்று, கேட்டறிந்த அளவில், தனக்குத் தெரிந்ததைச் சொல்லித் தங்கையைத் தேற்றினாள் தமக்கை.!

அந்த அளவில் அமைதியுற்று, லோகேசுவரியும் உறங்கிவிட்டாள்.!

அவள்தான், இப்போதெல்லாம் ஓயாது தூங்குகிறாளே.!

ஆனால், புவனேசுவரிக்குத்தான், கொஞ்ச நஞ்சம் இருந்த அமைதியும் கெட்டுப்போயிற்று.!

பொதுவாக, லோகேசுவரி, தன் விருப்பம் தவிர, அடுத்தவர் என்ன நினைப்பார் என்று எண்ணிப் பார்ப்பதே இல்லை.! இப்போது, தப்பு செய்த குற்ற உணர்வு, பயண அலைச்சல்., இவைகளோடு கூட அவளது உடல் நிலையும் சேர்ந்து, அவளது மனதைப் பலவீனப்படுத்திவிட்டன போலும்.!

கடவுளே.! எல்லோரும், என் தங்கையிடம் பிரியமாக இருக்கட்டும் என்று வேண்டிக் கொண்டாள் அவள். ஏனெனில், எந்தவித முகம் திருப்பலையும் இப்போது, லோகேசுவரி தாங்குவது கடினம்.!

மதுரைக் கோவிலில் நன்றாக அலைந்து திரிந்துவிட்டு வந்திருந்த போதும், புவனேசுவரிக்குத் தூக்கம் வரவில்லை.! மனம் அலை பாய்ந்தது.!

சற்று தூரம் வெளிக்காற்றில் நடந்து வர எண்ணி எழுந்தாள் அவள்.

லோகேசுவரி நன்றாகத் தூங்கிக் கொண்டு இருக்கவே, சத்தமின்றி மெல்லக் கதவைத் திறந்து, வெளியே சென்றாள்.

சுற்றிலும் இருந்த பசுமை மனதிற்கு இதமாக இருக்க, அருகிலேயே, லோகேசுவரி கூப்பிட்டால் கேட்கக்கூடிய தூரத்திலேயே, மெல்ல நடக்கலானாள்.

சற்று நேரம் சுகமாகத்தான் இருந்தது.! மனதில் இருந்த குழப்பங்கள் வடிந்து, அமைதியாவது போல உணர்ந்தாள். எங்கெங்கோ சுற்றிவிட்டு, வீடு வந்த உணர்வு.!

ஆனால், சற்றுநேரம்தான்.!

ஏதோ உறுத்தல்.! முதுகில் ஊசி கொண்டு குத்துவது போலத் தோன்ற திரும்பிப் பார்த்தாள்.

மாடியும், கீழுமாகப் பெரிய வீடு அங்கேதான் இருந்தது.! தயானந்தனும், சங்கரும்கூட, அந்தப் பக்கம்தான் போனார்கள்.! அங்கிருந்துதான் யாரோ பார்க்கிறார்களோ?

அதற்கு மேல், அங்கே நடக்க அவளுக்குப் பிடிக்கவில்லை. உள்ளே சென்று, சோர்ந்து கிடந்த லோகேசுவரியைப் பார்த்தபடி அமர்ந்தாள்.

சற்று நேரத்தில் விழித்தெழுந்த லோகேசுவரிக்கு, சோர்வு நீங்கிவிட்டதாலோ,

என்னவோ, தன்னையே பார்த்தபடி அமர்ந்திருந்த தமக்கையைப் பார்த்ததும் சிரிப்பு வந்தது.!

"என்னக்கா, என்னைக் காக்காய் தூக்கிப் போய்விடாமல் காவல் காக்கிறீர்களா?" என்று கிளுகிளுத்தபோது, அவள் பழைய லோகேசாகவே தோன்ற, புவனேசுவரியும் முறுவலித்தாள்.

சுவரில் தொங்கிய கடிகாரத்தைக் காட்டி, "கிளம்ப வேண்டும்.!" என்று நினைவூட்டினாள்.

மறைய முயன்ற சிரிப்பைப் பிடிவாதமாக இழுத்துப் பிடித்தவாறே "இதோ.!" என்று குளியல் அறைப் பக்கம் போனாள் சின்னவள்.

ஆனால், தயானந்தனுடைய குடும்பத்தினரைச் சந்திக்கச் செல்லுவதற்காக அவள் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்ட விதம்தான், கொஞ்சம் அதிகப்படியாகப் புவனேசுவரிக்குத் தோன்றியது.!

லோகேசுவரி, பிறர் கூறிக் கேட்பவள் அல்ல என்றாலும், மெள்ளச் சொல்லிப் பார்த்தாள். "சும்மா, அவர்கள் வீட்டுக்குச் சாப்பிடப் போகிறோம்.! அவ்வளவுதானே? கொஞ்சம் சாதாரணமாக, ஏதாவது அணிந்து கொள்ளேன்.!" என்றதை சின்னவள் சட்டை செய்யவே இல்லை.!

"அழுது வடிகிற உடையெல்லாம், இன்பன் மாமா வீட்டுக்குத்தான் பொருந்தும்.! இங்கே சரிப்படாது.! இங்கெல்லாம், பார்த்த உடனே! பிரமிக்க வைக்க வேண்டும்.!" என்றுவிட்டு, உடைக்குப் பொருத்தமான ஐஷேடோவை, லேசாகத் தடவிக்கொண்டு, "எப்படி இருக்கிறேன்?" என்று தமக்கையிடமே கேட்டாள்.!

மொத்தத்தில் பார்க்க, லோகேசுவரி மிகவும் அழகாகவே இருந்தாள்.! ஆனால்...

ஒருவேளை, அவர்களது குறுகிய காலப் பழக்கத்தில், தன் வீட்டுப் பெண்களின் பழக்கவழக்கங்கள் பற்றி, சுகன், லோகேசிடம் சொல்லியிருக்கலாம்.! அதற்குத்தக, இவளும் அலங்கரித்துக் கொண்டாளோ, என்னவோ? ஆனாலும்...

"லோகேஸ் நீ ரொம்பவே அழகாகத்தான் இருக்கிறாய். ஆனால், அவர்கள் வீட்டில் சமீபத்தில்தான் ஒரு துக்கம் நேர்ந்திருக்கிறது. அதனால்..."

"அது நடந்துதான் ஒரு மாதத்துக்கும் மேலாக ஆகிவிட்டதே.! இன்னுமா, சுகனையே நினைத்துக் கொண்டிருப்பார்கள்? தயானந்தன் எப்படிப் பேசிச் சிரிக்கிறார்.! ப்ளீஸ் அக்கா, எதையாவது சொல்லி, என் மூடைக் கெடுக்காதீர்கள்.!"

எப்படியாயினும், தங்கையைப் போல உடையணியவோ, ஒப்பனை செய்யவோ பிடிக்காமல், புவனேசுவரி, சாதாரணமாகவே அலங்கரித்துக் கொண்டாள்.! சற்றுப் புதியதான, ஆனால் வழக்கமான உடை..., மெல்லிய சங்கிலி., உதடு, நகங்களில் பொருத்தமான சாயம்.!

"ஐயோ, சகிக்கவில்லை.!" என்று தலையில் அடித்துக் கொண்டாள் லோகேசுவரி.

இரு பெண்களையும் அழைத்துப்போக வந்தவன் சங்கர்.

கண்ணிமைப்பால் கூட, அவன் எதையும் காட்டிக் கொள்ளவில்லை.!



இருவரையும் ஒரே மாதிரிப் பார்த்து முறுவலித்தான்.

'ஓய்வெடுத்தார்களா?, வசதியாக இருந்ததா? லோகேசுவரியின் உடல் நிலை பரவாயில்லையா?'

சிக்கலற்ற கேள்விகள்.!அவைகளுக்கு எளிதாகப் பதில் சொல்ல முடிந்ததே, மனதின் இறுக்கத்தைத் தளர்த்தியது.!

செல்லும் வழியில், அந்தப் பகுதிக்கே உரிய சில ஃபெர்ன் வகைகளைக் காட்டி அவன் விவரம் சொல்ல, அதற்குள் வீடே வந்துவிட்டது.!

தயானந்தனுடைய தந்தைக்கு, இவளைச் சும்மா பிடித்துப் போகவில்லை என்று மனதில் எண்ணிக் கொண்டாள் புவனேசுவரி.!

மெல்லப் படியேறி உள்ளே சென்ற போது, ஹாலில் தயானந்தனுடைய தாயார் இருந்தாள்.

சங்கர் அறிமுகப்படுத்தி வைத்தான்.

கண்களில் வலி இருந்தபோதும், இரு பெண்களையும் நல்லபடியாக வரவேற்று பக்கவாட்டில் ஓர் அறைக்கு அழைத்துச் சென்றாள்.

அங்கே, தயானந்தன் சொன்னவர்களில், கிட்டத்தட்ட எல்லோருமே, அவன் உட்பட இருந்தார்கள்.!

பாட்டி மாதிரி யாரையும் காணோமே என்று புவனேசுவரி யோசித்தபோது, "பாட்டியை, நாளைக்குப் பார்க்கலாம்.! இப்போது அறிமுகப்படுத்தினால், அந்தப் பரபரப்பில், அவர்களுக்கு இரவுத் தூக்கம் கெட்டுவிடும்.!" என்றான் தயானந்தன்.

பொதுவான அறிமுகம் நடந்தது.!

அறிமுகம் முடிந்ததும், "இன்றைக்கே எல்லோர் பெயரையும் மனப்பாடம் செய்து சிரமப்பட வேண்டாம்.! அவ்வப்போது பார்க்கையில், தானாக மனதில் பதிந்துவிடும்." என்று இதமாகப் பேசினாள் தயானந்தனுடைய தாயார் மனோகரி.

இதையேதான் இன்னொரு மாதிரியாக தயானந்தனும் சொன்னான்.!

மிகவும் சுவையான ஒரு பழச்சாறு வந்தது.!

பிறகு சாப்பிடப் போனார்கள்.

யாரும் அவர்களிடம் பேசாமல் முகம் திருப்பினார்கள் என்று சொல்ல முடியாது.! தயானந்தனுடைய சித்தி, சித்தி மகள் மானசி இருவரும், அவர்களாகவே, மலேஷியா பற்றி, ஓரிரு கேள்விகள் கேட்டார்கள்.! இவர்களும் பதில் சொன்னார்கள்.!

ஆனாலும், தாங்கள் மட்டும் தனித்து விடப்பட்டது போன்ற பிரமை, சகோதரிகள் இருவருக்குமே உண்டாயிற்று.! புவனேசுவரி, தங்கைக்காகவும் தவித்தாள்.

சாப்பாடு முடிந்ததும், பழ சாலட் பரிமாறப்பட்டது.!

சக்கர நாற்காலியில் உட்கார்ந்திருந்த தந்தை, அருகில் இருந்த சிறிய தந்தை இருவருக்கும் இருபுறமும் அமர்ந்து தயானந்தனும் சங்கரும் பெரியவர்களுடன், ஏதோ தீவிரமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.! ஒரு புறமாக அமர்ந்து, சரவணன் அதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

மாதவனும் மானசியும் தங்களுக்குள்ளே மூழ்கியிருந்தனர்.



வயதில் பெரிய பெண்கள் இருவரும் அவர்கள் பிரச்சினைகளை அலசிக் கொண்டிருந்தனர்.

சொல்லி வைத்திருந்தது போல, சுகனின் பெயர், யார் பேச்சிலும் வரவே இல்லை.! யாரும் சோகம், வருத்தம் காட்டவும் இல்லை.!

அவனது நினைவே யாருக்கும் வரவில்லை என்று சொல்ல முடியாமல், அவனுடைய பெற்றோர், தமையன், சிறிய தந்தை, சரவணன் முதலியோரின் முகங்களில், அவ்வப்போது, திரை விழுந்தாற்போல, ஒரு தோற்றம் தோன்றி மறைந்துகொண்டுதான் இருந்தது.!

அந்த இருள், சுகனின் நினைவால் உண்டானது என்று சொல்லப் பிரமாதமான ஊக சக்தி தேவையிருக்கவில்லை.! ஆனால், அதைப் பெரிதுபடுத்திக் காட்டி, மற்றவர்களின் மனநிலையைக் கெடுக்காமல், தனக்குள்ளேயே வைத்துக் கொண்டது போற்றப்படத் தகுந்ததாகப் புவனேசுவரிக்குத் தோன்றியது.!

அவளுடைய தாயாரின் கொள்கையும் அதுவே.! மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்., துக்கத்தைத் தனக்குள்ளேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்பாள் கோமதி.!

மற்றவர்களை விடவும், அந்தக் குடும்பத்துடைய தலைவி மனோகரி, கைதட்டிப் பாராட்டப்பட வேண்டியவள் என்று நினைத்தாள்.! பத்து மாதம் சுமந்து பெற்று, இருபது ஆண்டுகளுக்கு மேலாக வளர்த்தவள் ஆயிற்றே.!

அவ்வளவு நேரமும், இந்தச் சகோதரிகளில் இருந்து, முடிந்த அளவு தூரத்தில் அமர்ந்து, தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டிருந்த தயானந்தனுடைய தங்கை சுதாவும், மாதவனுடைய தங்கை வீணாவும், இன்னொரு கப் பழ சாலட் எடுத்துப் போயினர்.

திரும்பிப் போகும் வழியில் சற்று நின்ற சுதா, "உன்னிடம் கறுப்புக் கண்ணாடி இருக்கிறதா, வீணா? இனி இந்த வீட்டுக்குள்ளேயே, அதை அணியாமல் முடியாது போலக் கண் கூசுகிறதே.!" என்றாள் சுதா.!

"என்ன சொல்லுகிறாய், சுதா?" என்று சற்றுத் தடுமாறினாள் அந்த வீணா.

"பழைய காலத் தெருக்கூத்துகளில், ராணி வேஷக்காரி, இப்படித்தான் பளபளா என்று ஜிகினாவில் வந்து நிற்பாளாம்.! அந்தப் பளபளப்பை எடுத்துக் காட்டுவதற்காக, தோழி வேஷம் போடுகிறவள், கோணிச் சாக்கைச் சுற்றிக்கொண்டு வருவாளாம்.! அந்த இரண்டுமாக எப்படி இருக்கும் என்று யோசித்துக் கொண்டிருந்தேன்.! இப்போது, நேரே கண்ணால் பார்த்த பிறகுதான் விஷயம் புரிகிறது.!" என்று சிரித்தாள் சுதா.!

குறிப்பாய் அவள் விஷயம், வந்திருந்த இரு பெண்களுக்கும் கூடத் தெள்ளத் தெளிவாகப் புரிந்தது.!

சுதாவுக்கு, அவர்களது வரவு கொஞ்சமும் பிடிக்கவில்லை என்பதும்கூட.!



# 9

சுதாவின் நக்கலான பேச்சு, தங்களை அவமானப்படுத்தவே சொல்லப்பட்டது என்று நன்றாகப் புரிந்துவிட, சீற்றத்துடன் திரும்பிய லோகேசுவரியின் கையைப் பிறர் அறியாமல் பற்றி அழுத்தினாள் புவ்னேசுவரி.

அவளுக்கும் ஆத்திரம்தான்.! ஆனால், இங்கே வந்து, இந்த வீட்டுப் பெண்ணுடன் வாய்ச் சண்டை இடுவது, அதுவும் வந்த அன்றே வாய்ப்போரைத் தொடங்குவது அநாகரீகம் என்பது அவளுக்கு.!

சுதாவுக்கு இணக்கமாகப் பேசப் பிடிக்காமலோ, அல்லது, என்ன சொல்வது என்று அறியாமலோ, அந்த பெண் வீணா விழித்துக் கொண்டு நிற்க, தந்தையின் அருகிலிந்து, "யார், சுதாக்குட்டியா சிரிப்பது? என்ன ஜோக், சுதா? சொல்லு, நாங்களும் சிரிக்கிறோம்.!" என்றான் தயானந்தன்.!

சுதா பதில் சொல்லத் திணறும்போதே, இவர்கள் பக்கம் ஓரமாக அமர்ந்திருந்த சரவணன், "வேடிக்கைதான் தயாண்ணா.! கல்லூரி நாடகத்தில், கண்ணைக் கூச வைக்கும் ஜிகினா உடை ராணி, அல்லது கோணிச்சாக்கைச் சுற்றிக் கொண்டு நிற்கும் தோழி பாத்திரம், சுதாவுக்காம்.! சில பேருக்கானால், எதை அணிந்தாலும், நன்றாகவே இருக்கிறதாம்.! ஆனால், இவளுக்கு இரண்டுமே பொருந்தாதே என்று, ஒரே பொருமல்.! அதை, அவளுக்கே உரிய பாணியில், 'விட்டி'யாகச் சொல்லிச் சிரிக்கிறாள்." என்று விளக்கினான்.!

"ஏன்? சுதாம்மாவுக்குக் கூட, எல்லாமே நன்றாக இருக்கும்.! எதில் நிறைய வசனம் இருக்கிறதோ, அந்த வேஷமே நீ போட்டுக் கொள், கண்ணு.!" என்று உள் விஷயம் அறியாமல், தயானந்தனுடைய சித்தப்பா செல்லமாகக் கூறினார்.

ஒன்றும் சொல்ல மாட்டாமல் சுதாவின் முகம் சிவக்க, லோகேசுவரி உரக்கச் சிரித்தாள்.!

"ஷ். சும்மா இரு, லோகேஸ்." என்று தங்கையை அடக்க முயன்றாள் புவனேசுவரி.!

"உங்கள் தங்கையின் சிரிப்பு, வெகு அழகாக இருக்கிறது., அதைப் போய் அடக்குகிறீர்களே, பு... பு... புவனேஸ்வரிதானே, உங்கள் பெயர்?" என்று கேட்டான் சரவணன்.

"இல்லையே.!" என்ற தங்கையை, வியப்புடன் நோக்கினாள் பெரியவள்.

"அப்படித்தானே, தயாண்ணா சொன்ன ஞாபகம்?" என்று அவனும் வியப்புடனேயே வினவினான்.

"இல்லையே, என் அக்காவின் பெயர்,"புவனேசுவரி என்றுதான் சொன்னாரே தவிர, பு பு புவனேசுவரி என்றா சொன்னார்?" என்று, அவள் குறும்புடன் கூற, சரவணன் வாய்விட்டு நகைத்தான்.!

ஆக, அந்தக் குடும்பத்தில் ஒரு நண்பனும் இருக்கிறான்.!

மகிழ்ச்சியுடன் தங்கை முறுவலிப்பதைத் திருப்தியுடன் கண்டாள் புவனேசுவரி.!

இதுபோலத் தாங்கிப் பேச, ஒருவர் இருந்தாலும், மனம் திடமுற்றுவிடும்.!

அதன்பின், அவர்கள் அருகிலேயே அமர்ந்து சரவணன் பேசிக் கொண்டிருக்கவும், பொழுது ஓரளவு இலகுவாகவே போயிற்று.!

'உணவு அங்கேதான்' என்று தயானந்தன் கூறியிருந்ததால், காலையில் எப்போது வர வேண்டும் என்று கேட்பதற்காக, மனோகரியைத் தேடிப் போனாள், புவனேசுவரி.

மனோகரி, வேலையாளிடம் ஏதோ சொல்லி அனுப்பும் சத்தம், அடுத்த அறையில் இருந்து கேட்கவும், அங்கே சென்றாள்.

திடுமென, மனோகரிக்கு பதிலாக, சுதாவின் குரல் கேட்டது.! "இனித் தினமும், இதுகளோடு உட்கார்ந்துதான் சாப்பிட வேண்டும் என்றால், எனக்கு, இங்கே சாப்பாடே வேண்டாம்.! நான் வீணாவோடு, சித்தப்பா வீட்டிலேயே சாப்பிட்டுக் கொள்கிறேன்.!" என்று, ஆத்திரத்துடன் சொல்லிக் கொண்டிருந்தாள் அவள்.!

"ஷ்.! மெள்ளப் பேசும்மா.! யார் காதிலாவது விழுந்துவிடப் போகிறது.! அப்புறம், அண்ணன் கோபப்படுவான்.!" என்று, மகளை அடக்க முயன்றாள் தாய்.

"ஆமாம். பார்த்துப் பார்த்துக் கூட்டி வந்திருக்கிறார் பாருங்கள்.! ஆள் மயக்கியும், அவளுக்கு ஆயாவும் மாதிரி.! சீ.! எனக்குப் பார்க்கவே, பிடிக்கவில்லை.!"

"ஒரேயடியாக, அப்படிச் சொல்லக் கூடாதுடா.! சின்னவள் கொஞ்சம் குறைத்திருக்கலாம்., பெரியவள், கொஞ்சம் அதிகரித்திருக்கலாம்.! மற்றபடி, குணத்தில், மோசமாகத் தோன்றவில்லை..."

"மோசம் இல்லாமல்தான், கல்யாணத்துக்கு முன்னாலேயே, வயிற்றில் சுமந்துகொண்டு வந்து நிற்கிறாளாக்கும்? ஓசிச் சாப்பாட்டுக்கு, அடுத்தவளும் கூட வந்து நிற்கிறாள்.! சும்மா, சப்பைக்கட்டுக் கட்டாதீர்கள் அம்மா.! சாப்பாடு பற்றி, நான் சொன்னால், சொன்னதுதான்.! அப்புறம், அதுகள் கிளம்புகிறபோது, கையாட்டி விடை கொடுக்கவெல்லாம் என்னால் முடியாது.! அண்ணன் கேட்டால், தலைவலி என்று வெளியே நடக்க.. இல்லை, படுக்கப் போய்விட்டதாகச் சொல்லி விடுங்கள்.! சே.! இனி, நம் வீட்டில் நம் இடத்தில் விருப்பம்போல நடக்கக்கூட முடியாதுப்பா.! ஏதாவது ஒன்று எதிரே வந்து நின்று தொலைக்கும்.! அதிலும், பெரிது ஓய்வில்லாமல் நடக்கும்போல.!"

காலைத் தொப் தொப்பென்று வைத்தபடி, சுதா நடந்து வேறுபுறமாகப் போவது கேட்டது.!

ஆக, முன் மாலையில், இவள்தான் இங்கிருந்து பார்த்திருக்கிறாள்.! இவ்வளவு வெறுப்பு, அவள் மனதில் வைத்திருப்பதால்தான், உடம்பில் ஊசியால் குத்துகிற மாதிரி இருந்திருக்கிறது.!

உள்ளே அசரவம் கேட்டது.!

மனோகரி எந்த நேரமும் வெளியே வந்துவிடலாம்.! இனித் திரும்பிப் போனாலும், தெரிந்துவிடும்.!



அவசரமாக யோசித்து, அறை வாயிலில் மனோகரியின் நிழலாடவும், அப்போதுதான் வருவதுபோல, முன்னோக்கிச் சென்றாள்.

திகைத்து நின்ற மனோகரியின் முகம் லேசாகக் கன்றியது.! இந்தப் பெண்ணின் காதில் என்னென்ன விழுந்ததோ என்ற உறுத்தலா?

'எல்லாமே கேட்டுவிட்டேன்' என்று காட்டி, சமாளிப்பதற்கு இந்த அம்மாள் படும் பாட்டை ரசிக்க வேண்டும் போல, ஒரு கணம் புவனேசுவரிக்குத் தோன்றியது.!

ஆனால், உடனேயே மனம் மாறிவிட்டது.! பாவம், மகள் பேச்சுக்கு தாயைத் துன்புறுத்துவது என்ன நியாயம்? நல்லவனோ, கெட்டவனோ, தலைக்கு மேல் வளர்ந்த மகனைப் பறிகொடுத்துவிட்டு நிற்கிறவள் வேறு.!

"உங்களிடம் ஒன்று கேட்க வந்தேன்.!" என்று தொடங்கி, "ஒவ்வொரு வேளையும் இங்கே வந்து சாப்பிடுவது, அவ்வளவு சரியாக வராது என்று தோன்றுகிறது.! லோ.. லோகேசுக்கு, இன்ன நேரத்தில்தான் சாப்பிட முடியும் என்று சொல்லுவதற்கு இல்லை.! அதனால், அதனால், முதலில் ஓரிரு நாட்களுக்கு மட்டும், உணவை அங்கே அனுப்ப முடியுமா? பிறகு, நானே சமைத்துக் கொள்கிறேன்.!" என்றாள் புவனேசுவரி அமைதியாக.

திகைப்புடன் சின்னவளின் முகத்தைக் கூர்ந்து பார்த்த மனோகரி மெல்லப் பெருமூச்சு விட்டாள். நிம்மதிப் பெருமூச்சு.!

"நீ சொல்லுவதும் சரிதானம்மா.! இந்த நேரத்தில், அப்படித்தான் இருக்கும்.! ஆனால், நீ சமைப்பது எல்லாம் வேண்டாம்.! இங்கே சமையல் ஆனதுமே, செல்லோவில் எடுத்துவைத்து அனுப்பி விடுகிறேன்.! உன். த... வந்து, லோகேசுவரி விரும்பும்போது, சூடு ஆறாமல் சாப்பிடலாம்.! நீ வேண்டுமானால் இங்கே..." என்றவளின் பேச்சில் குறுக்கிட்டு, "இல்லை ஆன்ட்டி.! லோகேசைத் தனியே விட்டு விட்டு, நான் இங்கே வருவது சாத்தியம் இல்லை.! தவறாகக் கருதாமல் மன்னித்துக் கொள்ளுங்கள்.!" என்று முடித்தாள் புவனேசுவரி.

"அப்படியா? சரி. உன் விருப்பம்.!" என்றாள் மனோகரி, விட்டுக் கொடுப்பது போல.!

உன் விருப்பமா?

சட்டெனக் கொதித்துக் கொண்டு வந்துவிட்டது, புவனேசுவரிக்கு.! "என் விருப்பமா?" என்றாள் ஆத்திரத்துடன்.!

மனோகரி திகைத்து நோக்கவும், குரலைத் தணித்து, "என் விருப்பத்தைக் கேட்டிருந்தால், எங்கள் சொந்த மண்ணை விட்டு, நாங்கள் இங்கே வந்திருக்கவே மாட்டோம். இதை நம்புவது உங்களுக்குக் கடினமாகத்தான் இருக்கும், ஆன்ட்டி.! ஆனால், நான் சொல்வது உண்மை.!" என்றுரைத்துவிட்டு, திரும்பிச் சென்று, தங்கையின் அருகில் அமர்ந்தாள்.

கிளம்புவதில் அவள் காட்டிய அவசரம், மனோகரிக்கு உறுத்தியது போலும்.!

சற்றுப் பொறுக்குமாறு கூறி, உள்ளே சென்று, சில டப்பாக்கள் அடங்கிய கூடையுடன் வந்தாள். "கொஞ்சம் நொறுக்குத் தீனி, அம்மா.! ரிபன் பக்கோடா,



முறுக்கு மாதிரி.! லோகேசுவரிக்கு, வாய்க்கு நன்றாக இருக்கும்... சங்கர், யாரப்பா இவர்களைக் கொண்டுவிடப் போவது? இந்தக் கூடையைக் கையோடு கொண்டு போய்க் கொடுத்துவிடுங்கள்.!" என்றாள்.

மகளின் பேச்சுக்குப் பிராயச்சித்தமாக என்று எண்ணிய போதும், தங்கைக்கு என்ற பிறகு மறுக்க மாட்டாமல், "இதோ, அருகில்தானே இருக்கிறது? கொண்டு விடுவது எல்லாம் எதற்கு? இதையும், நாங்களே கொண்டுபோய் விடுகிறோம்." என்று புவனேசுவரி சொல்லிக்கொண்டு இருக்கும்போதே, சரவணன் எழுந்து வந்தான்.!

"அவ்வளவு எளிதாக, எங்களை உதறிவிட்டு, ஓடி விடலாம் என்று பார்த்தீர்களா?" என்று அவளிடம் முறுவலித்துவிட்டு, "என்னிடம் கொடுங்கள், அத்தை.! இவர்களைக் குடிலில் விட்டுவிட்டு, அப்படியே நானும் வீட்டுக்குப் போகிறேன்.! ஒரு வேளை, பாட்டி விழித்துக்கொண்டு இருந்தாலும் இருப்பார்கள்.! லோகேசுவரி எப்படி, அவள் அக்கா எப்படி என்று.. அதாவது வெளிநாட்டுக்காரர்கள் ஆயிற்றே.! அவர்களுக்குக் கொம்பு இருக்கிறதா? வால் இருக்கிறதா என்றெல்லாம் தெரிந்தாக வேண்டாமா?" என்று உண்மை போல விளக்கினான்.

"முதலில், உனக்கு வால் இருக்கிறதா என்று சோதிக்க வேண்டும்.!" என்று சிரித்து விட்டு, "கொஞ்சம் பொறு, உனக்கும் ஒரு டப்பாவில் எடுத்து வருகிறேன்." என்றாள் மனோகரி.

"அத்தை, அத்தை, வேண்டாம்.! உங்கள் நளபாகத்தைக் குறை சொல்லுவதாக எண்ணாதீர்கள்.! ஆனால், நீங்கள் நேற்றுத் தந்தது இன்னும் காலியாகவில்லை.! அது முடிந்ததும், நானே வந்து வாங்கிக் கொள்ளுகிறேன்.! இப்போது, பை.!" என்று கூடையைத் தூக்கிக் கொண்டு கிளம்பினான் அவன்.

சுருக்கமான விடை பெறலுடன் கிளம்பியபோது, புவனேசுவரிக்குத் தயானந்தன் மீதுதான் அதிகக் கோபமாக இருந்தது.! அவன்தானே, பிடிவாதமாக அவர்களை இங்கே அழைத்து வந்தான்.! இங்கே, அவர்களுக்கு என்ன நடந்தாலும், அது, அவன் பொறுப்பு அல்லவா? சின்னப் பிள்ளை மாதிரி தந்தை, சிறிய தந்தையிடமே பேசிக்கொண்டு இருந்தானே தவிர, வாதாடி, வருந்திக் கூட்டி வந்த பெண்களை, அவன் கண்டுகொள்ளவே இல்லையே.!

அவனுடைய தங்கையின் வெறுப்பு, அவனுக்குத் தெரியாமலா இருக்கும்? அவளை, அவன் அடக்கி வைக்கவில்லையே.! அவள் மீது, ஒரு கண்ணைக் கூட, வைத்திருக்கவில்லையே.!

அவள் குணம் தெரிந்து, செய்திருக்க வேண்டாமா?

அவன் தங்கையும்தான் என்ன பேச்சு பேசினாள்.! அப்படித் தூக்கி எறிந்து பேசுவதற்கு, சகோதரிகள் அவர்களிடம் பிச்சையா கேட்டு வந்தார்கள்?

லோகேசுவரி அறியாமல், தயானந்தனிடம் இன்னொரு விஷயமும் பேச வேண்டும் என்று மனதுள் குறித்து வைத்தாள், புவனேஸ்வரி.

இறுக்கம் தளர்விப்பது, சங்கருக்குக் கைவந்த கலை என்றால், சிரிக்க வைக்கிற வித்தையை சரவணன் அறிந்து வைத்திருந்தான்.!



வாயிலிலேயே நின்று பேசி, இரு பெண்களையும் சற்று நேரம் சிரிக்க வைத்துவிட்டுத்தான், அவன் கிளம்பிச் சென்றான்.

அன்றைய நிகழ்ச்சிகளைப் பேசி, அப்போதைக்கு நன்றாக இருக்கும் மனதைக் கெடுத்துக்கொள்ள இருவருக்குமே விருப்பம் இல்லாததால், சற்று நேரம் டீவி பார்த்து விட்டு, அப்படியே படுத்து உறங்கி விட்டனர்.!

உணவுக்காக, அந்த வீட்டுக்குப் போகத் தேவையில்லை என்பதில், லோகேசுவரிக்கும் மகிழ்ச்சிதான்.!

அந்த வீட்டுத் தங்கைக்காரி மீது, அவளுக்குப் பொல்லாத கோபம்.! தான் பார்த்துப் பார்த்து வாங்கிய உடையையும், கவனத்துடன் செய்த அலங்காரத்தையும் என்னவெல்லாம் சொல்லிவிட்டாள்.!

"அவளுக்கு, என் அழகைப் பார்த்துப் பொறாமை, அக்கா.! அதனால், மட்டம் தட்டுவதற்காக, உளறியிருக்கிறாள்.!" என்றாள்.

"அவளது பேச்சு அநியாயம்தான். ஆனால், எனக்குமே, நேற்று நீ அந்த உடை அணிந்தது, அவ்வளவாகப் பிடிக்கவில்லை, லோகும்மா.! நாம் என்ன, கல்யாண வீட்டுக்கா போனோம், அந்த அளவு கண்ணாடியும் ஜிகினாவுமாகப் பளபளப்பதற்கு?" எடுத்துச் சொன்னாள் தமக்கை.!

"ஆனால், அந்த மாதிரி அடக்கமான சின்ன வேலைப்பாடுகளுடன் என்னிடம் எதுவும் இல்லையே.! சுகன் வாங்கித் தந்தது எல்லாம் இப்படித்தான். அல்லது, பெர்முடா, குட்டைப் பாவாடை.... இப்படித்தானே இருக்கிறது? அல்லது, ஜீன்ஸ் போட்டுக் கொள்ளலாமா?" என்று சின்னவள் குழம்பினாள்.

மறுநாள், பாட்டியைப் பார்க்கப் போனார்கள்.

மூத்தவளின் சுரிதார் செட்டை, அவளது ஆலோசனைப்படி, அணிந்து சென்றாள் லோகேசுவரி.

இள மஞ்சளில், பச்சைப் பூக்கள்., பச்சையில் சல்வார்.! அதிகப்படியான ஒப்பனைகளும் இல்லாமல், லோகேஸ் சிறுமியாகவே தோன்றினாள்.!

காணப்போவது வயதான பெண்மணி ஆயிற்றே என்று, புவனேசுவரி, தன் மூன்று சேலைகளில் ஒன்றைக் கட்டியிருந்தாள்.!

வந்து அழைத்துச் சென்றது, சரவணன்.!

வீட்டுக்காரனாக அவன் விருந்தோம்பல் செய்தபோதுதான், பெற்றோரை இழந்து, அவன் பாட்டியுடனேயே வசிப்பவன் என்பது, புவனேசுவரிக்கு நினைவு வந்தது.!

அதைச் சொன்ன தயானந்தன் எங்கே ஆளையே காணோம்? கொண்டு வந்து தள்ளியதோடு, பொறுப்பு தீர்ந்தது என்று, கைகழுவிவிட்டானா?

"நீ சேலை கட்டுவது இல்லையாம்மா?" என்று, லோகேசுவரியிடம் பாட்டியம்மாள் வினவினார்.

"கால் தட்டி விழுந்து விடுவேனோ, என்று பயம், பாட்டி.!" என்றாள் அவள்.

"ஹையோ.! அப்புறம், போகிற வருகிற வழியில், நாம் புதைத்து வைத்திருக்கும் புதையல்கள், ஒன்று கூட மிச்சம் இராது.! விழுந்து, விழுந்து, அத்தனையையும்,

லோகேசுவரி அடித்துக் கொண்டு போய்விடுவாள்.! அதனால், அம்மா தாயே தயவுபண்ணிச் சேலையே கட்டாதேம்மா.!" என்று சரவணன் கூற, எல்லோருக்கும் சிரிப்பு வந்தது.!

"கவலைப்படாதீர்கள்.! நீங்களே, கெஞ்சிக் கேட்டால்கூட, நான் சேலை கட்டமாட்டேன்.! உங்கள் புதையல்கள் பத்திரமாகவே இருக்கும்.!" என்றாள் லோகேசுவரி பதிலுக்கு.!

அவன் ஏதோ திருப்ப, இருவரும் சிரித்துப் பேசலாயினர்.

சின்னவர்களின் பேச்சையும் சிரிப்பையும், பாட்டி புன்னகையோடு கவனித்துக் கொண்டிருந்ததைக் கண்டு, புவனேசுவரிக்கு நிம்மதியாக இருந்தது! வேடிக்கையாகவும்.!

இருப்பவர்களில் வயதில் சின்னவளான பேத்தி, கடித்துக் குதறுகிறாள். எல்லோரையும் விட மூத்த பாட்டியம்மா, முறையுற்றுப் பிள்ளை சுமக்கிறவளை ரசித்துப் பார்க்கிறாரே.

# 10

**த**யானந்தனுடைய பாட்டியைச் சந்திக்கவென்று கிளம்பும்போது, புவனேசுவரிக்கு, உள்ளூரக் கவலைதான்.

ரத்த வாரிசை விட்டு விடக் கூடாது என்று அழைத்து வரச் சொன்னவர், 1சமூக சட்ட திட்டங்களிலும் கறாராகத்தானே, இருப்பாள். என்னென்ன வசைகள் சொல்லுவாரோ, என்று கலக்கமே.

ஆனால், முந்தைய நாள் சந்தித்த மற்றவர்களை விட, இந்த முதிய தலைமுறையிடம் உரையாடுவது, அவளுக்கு இலகுவாக இருந்தது.

அது வியப்பாகவும் இருந்தது.

புவனேசுவரியின் கவனத்தை உணர்ந்தவள் போல, "எல்லாச் சுற்றமும் சுகங்களும் இருந்த போதும், சுகனிடம் அமைதியோ, ஆனந்தமோ தென்படாது. ஆனால், எதுவும் இல்லாவிட்டாலும், இந்தப் பையன் இருக்கும் இடத்தில் சந்தோஷம் இருக்கும்" என்றார் சற்றுத் தணிந்த குரலில்,

முதல் முதலாக, சுகனைப் பற்றி ஒரு பேச்சு.

ஆனால், அதைத் தொடர மனமற்று, மற்றவனைப் பற்றியே, புவனேசுவரி பேசினாள், "பெற்றவர்களுக்கு மேலாக, நீங்கள் எல்லோரும் அவரிடம் பிரியமாக இருக்கும் போது, இவருக்கும், குறை தெரிய வாய்ப்பேது?" என்றாள்.

அவளை ஊடுருவிப் பார்த்து விட்டு, "உண்மைதான். மனோகரி, தாய்க்குத் தாயாகத்தான் பார்த்துக் கொள்ளுகிறாள். அதுதான் ஆறுதல்" என்ற முதியவளின் கண்களின் ஒளி, ஒரு கணம் மங்கியது.

மறைந்த மகனை நினைக்கிறார் என்று உணர்ந்த புவனேசுவரிக்கு தாயின்



நினைவு வந்தது.

தங்கையைத் தன்னிடம் ஒப்படைத்ததும், ஆனால், அந்தப் பொறுப்பைச் சரியாகச் செய்யவில்லையே.

"உங்களுக்கும் யாரும் இல்லை என்று, தயாப்பையன் சொன்னான். பாவம், அது சின்னப் பெண், உனக்கும் அதிக வயதில்லை. ...ச்சு, ரொம்பக் கஷ்டம்தான்"

மனமுணர்ந்த அந்தப் பரிதாபத்தில், சட்டெனப் புவனேசுவரியின் கண்கள் கலங்கி விட்டன. கண்ணீரைக் காட்ட மனமின்றி, தரையைப் பார்த்த வண்ணம் தலைகுனிந்து அமர்ந்திருந்தாள்.

அவள் கையைத் தட்டிக் கொடுத்து, "கவலைப்படாதே, இங்கே வந்து விட்டீர்கள் அல்லவா? இனி எல்லாம், தயா பார்த்துக் கொள்ளுவான்" என்றார் பெரியவர் ஆறுதலாக.

தயானந்தனா? அவன் எங்கே பார்க்கப் போகிறான்? கொண்டு வந்து தள்ளியதோடு கடமை முடிந்தது என்கிற மாதிரி ஆளையே காணவில்லை.

ஏதோ ஆல்பத்தை சரவணனோடு சேர்ந்து பார்த்துக் கொண்டிருந்த தங்கையின் பக்கம் ஒரு பார்வையைச் செலுத்தி விட்டு, "நீங்கள் லோகேசை வெறுப்பீர்களோ என்று, ரொம்பக் கவலைப்பட்டேன், அம்மா" என்றாள் புவனேசுவரி.

"சுகனைப் பற்றி... எல்லோருக்கும் தெரியும், அப்படியிருக்க, இந்தச் சின்னப் பெண்ணைப் போய் யார் வெறுப்பார்கள்? அவன் அம்மா கூட, அப்படிச் செய்ய மாட்டாள்" என்றவர் தொடர்ந்து, "எல்லோரையும் போல நீயும் என்னைப் பாட்டி என்றே கூப்பிடு, அதற்காக வருத்தப்படுகிற வயதெல்லாம் தாண்டி விட்டது. ஆனால், என்ன வயது என்று மட்டும் கேட்டு விடாதே. அது, எனக்கும் மட்டுமே தெரிந்த ரகசியம்" என்று சிரித்தாள்.

"சரவண்ன் எப்படிக் கேலியும் சிரிப்புமாக இருக்கிறார் என்று இப்போது புரிகிறது" என்று புவனேசுவரியும் சேர்ந்து நகைத்தாள்.

முறுவலித்துவிட்டு, "நீ கெட்டிக்காரி என்று தயா சொன்னான்" என்றார் பாட்டி,

வேறு என்னென்ன சொன்னான் என்று வினவத் துடித்த நாவைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் புவனேசுவரி.

அதற்குப் பதிலாக, "அவரை எங்கே? ஆளையே காணோமே" என்று, முயன்று சாதாரணமாக்கிக் கொண்ட குரலில் வினவினாள்.

"அவன்... தயாப் பையன் எப்போது திரும்பி வருகிறான், சரவணா?" என்று பாட்டி கேட்ட பிறகுதான், அவன் ஊரில் இல்லை என்பது புரிந்தது.

அதனால் தான் கண்ணில் படக்கூட இல்லையா என்று எண்ணும் போதே, சொல்லி விட்டுப் போயிருக்காலமே என்று குறையாகவும் இருந்தது.

"நாளை மறுநாள். ஏற்காட்டில் இரண்டு நாள் வேலையாம். இரவில்தான் திரும்புவார்" என்றான் சரவணன்.

சரி, இன்னும் இரண்டு தினங்கள், அவன் வருகிறானா என்று தேடத் தேவையில்லை என்று எண்ணும் போதே, புவனேசுவரி திகைத்துப் போனாள்.



அவள் அவனைத் தேடுவதா? என்ன பைத்தியக்காரத்தனம்? எதற்காகத் தேட வேண்டும் என்று தன்னைத்தானே சாடும் போதே, அவனை எதற்காகத் தேடியிருக்கக் கூடும் என்பது ஞாபகம் வந்தது.

அவனிடம் பேச வேண்டியிருக்கிறாதே வரட்டும்.

"ஏற்காட்டிலும் நமக்குக் கொஞ்சம் காஃபித் தோட்டங்கள் இருக்கிறதில்லையா? அதைப்பார்த்து வரப்போயிருப்பான். அதில் ஏதோ பிரச்சினை என்று சின்னவன் சொல்லிக் கொண்டிருந்தான்" என்றார் பாட்டி.

"சின்னவன் என்றால், சின்ன மாமா நேற்று வந்திருந்தாரே. அவர் தான் பயிர் வளர்ப்பைக் கவனிக்கிறவர். சேர்ந்துதான் போயிருக்கிறார்கள்" என்று விளக்கம் கொடுத்தான் சரவணன்.

மொத்தத்தில், பாட்டியின் வீட்டில் பொழுது நல்லபடியாகவே கழிந்தது!.

"தினமும் வந்து, இந்தப் பழைய தலைமுறையிடம் பேசிக் கொண்டிருப்பது என்றால்,கடமை மாதிரி சீக்கிரமே வெறுத்து விடும். அதனால், எப்போதாவது பொழுது போகாதபோது, இந்தப் பக்கம் எட்டிப்பாருங்கள்" என்று அவர்களை வழியனுப்பி வைத்தார் பாட்டியம்மாள்.

"தேவையில்லை! வழி தெரியும்!" என்று இரு பெண்களும் மறுத்த போதும், "கூட்டி வந்தவன் கொண்டு போய் விட்டு விட்டு வரவேண்டாமா? "என்று, ஏற்கனவே எழுந்துவிட்ட சரவணனிடம் பாட்டி கூற, அவனும் கூட வந்தான்.!

"பாட்டி, ரொம்ம நல்லவர்களாக இருக்கிறார்கள். முதல் தடவையாகப் பார்க்கிறபோதே;மிகவும் பிரியமாகப் பேசுகிறார்களே.!" என்று புவனேசுவரி சொல்ல, அவளுடைய தங்கையும் அதை ஒத்துப் பேசினாள்.

"ஐயோ,அப்படியெல்லாம் பாட்டியை, ரொம்ப நல்லவிதமாக எண்ணி விடாதீர்கள்! அவர்களுக்கு யாரையாவது பிடிக்கவில்லை என்றால், ஆட்டி வைத்து விடுவார்கள்! அந்த லீனா, பாட்டியிடம் படுகிறபாடு! குரங்காட்டம் தான்" என்று எதையோ நினைத்துச் சிரித்தான் சரவணன்.

"அது யார், லீனா?" என்று கேட்டாள் லோகேசுவரி.

மனதுள் ஓர் ஊகம் தோன்ற "சொல்லாதீர்கள், சரவணன்! இதுவரை, அறிமுகம் ஆனவர்களின் பெயர்களும், உறவு முறையுமே, ஒரே குழப்பமாக இருக்கிறது! இன்னுமொன்று, இப்போது வேண்டாம்." என்றாள் புவனேசுவரி.

"ஆமாமாம்! அக்கா சொல்வது சரிதான்! ஒன்று சொல்லுங்கள், சரவணன், மானசி என்பது, உங்கள்... இல்லையில்லை, தயானந்தனுடைய சித்தியா அல்லது மகளா," என்று சின்னவள் அப்பாவியாய் விழி விரித்து சந்தேகம் கேட்க, மற்ற இருவரும் நகைத்தனர்.

இது போலச் சிரிப்பும் கேலியுமாகப் பேசும் போது, லோகேஸ் எப்படி மனதைக் கவருகிறாள் என்று, பெருமிதமாக எண்ணினாள், பெரியவள்!

இரண்டு தினங்கள் மெல்ல நகர்ந்தன.

மூன்றாம் நாள் தயானந்தன், அவர்களைச் சந்திக்கக் குடிலுக்கு வந்தபோது,



அப்போது தான், அவர்களுக்குக் காஃபி, காலைப் பலகாரத்தைக் கொண்டு வந்து வைத்துக் கொண்டிருந்தான் வேலையாள்.

அவன் செல்லும் வரை காத்திருந்து, "என்ன இது?" என்று வினவினான் தயானந்தன்.

"பார்த்தால் தெரியவில்லையா, காலைச் சிற்றுண்டி"

"அது தெரிகிறது. ஆனால், அது ஏன் இங்கே வந்திருக்கிறது? நீங்கள் உணவருந்த அங்கே வருவதாக அல்லவா ஏற்பாடு?"

"ஏற்பாடு பிடிக்காததால் மாற்றி விட்டோம்" என்றாள் அவள். முன் போலவே அலட்சியமான குரலில்.!

அன்று அவனுடைய தங்கை சுதாவின் பேச்சு, இன்னமும் ஆறாத ரணமாக வலித்துக் கொண்டு தான் இருந்தது.!

ஆனால், அதைச் சொல்லி, அவன் முன் அழுது புலம்ப வேண்டுமா? அதற்கு, அவள் ஆளல்லவே!

"நான் ஒரு ஏற்பாடு செய்தால், அதை மாற்றுமுன், என்னிடம் கலந்து பேச வேண்டும் என்பது இல்லையா?"

"சாப்பாடு, உங்கள் அம்மாவின் அதிகாரத்துக்கு உட்பட்டது.! அவர்களுக்குச் சம்மதம் எனும் போது, நீங்கள் ஏன் ஆத்திரப்படுகிறீர்கள்?"

"ஏன் என்பது, கொஞ்சம் யோசித்தால் தெரியும்! லோகேசுவரி, அங்கே வீட்டினர் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்று நினைத்தேன்! உணவு நேரத்தில் கூட இருந்தால், உறவாய்த் தோன்றத் தொடங்கும்!"

"ஆனால்..." என்று தொடங்கிய புவனேசுவரி உடனே பேச்சை நிறுத்தினாள். !

இவன் தங்கை பேசிய பேச்சு பற்றி, இவனுக்கு என்ன தெரியும்? அது அவளுடைய தங்கையின் காதுகளில் விழுந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? இவனிடம், சுதாவைப் பற்றிச் சொல்லலாம்! இவன், அவளைக் கண்டிக்கவும் செய்யலாம்! ஆனால், அப்படிக் கோள் சொல்லும் அளவுக்கு இறங்கப் புவனேசுவரிக்கு மனமில்லை.! அத்தோடு, இவன் கண்டிப்பதால் மட்டும், சுதா இவர்களிடம் உருகி வழியப் போகிறாளா? இன்னமும் வெறுப்புதான் அதிகம் ஆகும்.!

"என்ன ஆனால்?"

"ஒன்றும் இல்லை! அது சரிப்பட்டு வராது! அவ்வளவு தான்!"

அவளைக் கூர்ந்து நோக்கி விட்டு, "என்னை எதற்காகத் தேடினாய்?" என்று வினவினான் தயானந்தன்.

தேடியதற்குக் காரணத்தைத் தனக்குள் அவளே கண்டு பிடித்து வைத்திருந்த போதும், அவன் திடுமெனக் கேட்கவும், சட்டெனக் குழம்பி, முகம் சிவந்து போனாள், "நான்... நான் ஒன்றும்..." என்று சற்றுத் தடுமாறி விட்டு, ஒருவாறு சுதாரித்தாள்.!

உள்ளே லோகேசுவரி குளித்துக் கொண்டிருந்த குளியலறைப் பக்கம் ஒரு தரம் பார்த்து விட்டு, "நான் உங்களைத் தேடவில்லை! கண்ணில் படவில்லையே... எங்கே என்று கேட்டேன். அவ்வளவு தான்! இப்போது, நாம் அங்கே போய் உட்கார்ந்து

பேசுவோம்!" என்று முன் வராந்தாவை நோக்கி நடந்தாள். "விருந்தோம்பல் பரவாயில்லை. இவ்வளவு நேரத்துக்குப் பிறகாவது உட்காரச் சொல்லலாம் என்று தோன்றியதே என்றபடி அமர்ந்தான் தயானந்தன்.

அவன் தங்கை சுதாவின் பேச்சு தானாக நினைவு வர, "விருந்தோம்பலைப் பற்றி, நீங்கள் சொல்லுகிறீர்களா?" என்று, சட்டெனக் கேட்டுவிட்டு, நாக்கையும் கடித்துக் கொண்டாள் புவனேசுவரி.

அதற்குள்ளாகவா, தீர்மானத்தை மறந்து விடுவது?

அவனாக விவரம் கேட்பதற்குள்ளாக அவசரமாக, "எங்களை இங்கே கூட்டி வந்து விட்டவர், அதன் பிறகு, ஆளையே காணோம்!" என்று வெகு வேகமாகச் சொல்லி முடித்தாள்!.

"மெள்ள! மெள்ள! சற்று மூச்சு விட்டுக் கொண்டே, நிதானமாகப் பேசலாமே!" என்றான் அவன் கிண்டல் குரலில்,

நம்பியிருப்பாளா என்று, அவள் யோசிப்பதற்குள் "இரண்டே நாட்களில் தான், திரும்பி வந்து விடப் போகிறோமே என்று நினைத்தேன்!. ஆனால் அதற்குள் நீ என்னைத் தேடுவாய் என்று, எனக்குத் தெரியாதே!" என்றான் மீண்டும்!

அவள் ஆத்திரத்துடன் நிமிரவும், சிரித்துக் கொண்டே, "ஓகே! ஓகே! நீ என்னைத் தேடவே இல்லை! ஒத்துக் கொள்ளுகிறேன்! இப்போது, லோகேசுவரி அறியாமல் என்னிடம் என்ன கேட்பதற்காக, இங்கே வந்து உட்காரச் சொன்னாய்? அல்லது, இப்படியே வெளியே நடந்தபடி பேசுவோமா? பொதுவாக, இங்கே நடப்பதற்கு நன்றாக இருக்கும்! உன் தங்கை குளித்து முடித்து வந்து விட்டாலும். பேச்சை நிறுத்த வேண்டியிராது!" என்று அவன் கூறியது அவளுக்கும் சரியாகப் பட்டது.

குளியலறைக் கதவைத் தட்டித் தங்கையிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டு, அவனோடு வெளியே நடந்தாள் அவள்.

"பாட்டிக்கு, உங்கள் இருவரையுமே பிடித்திருக்கிறது!" என்றான் அவன்.

"எங்களுக்கும் அப்படித்தான்! ரொம்ப நல்லவர்களாகத் தெரிகிறார்கள்!"

"ஓகோகோ! உங்களைப் பிடித்தால், அவர்கள் நல்லவர்கள்! இல்லாவிட்டால் கெட்டவர்களாக்கும்! பரவாயில்லையே! இப்போது, எனக்குக் கூட உன்னைப் பிடித்துதான் இருக்கிறது. அப்படியானால், நானும் நல்லவன்தானே?!" என்று புன்னகை செய்தான் தயானந்தன்.

பிடித்திருக்கிறதா?

புவனேசுவரியின் இதயம் ஒரு கணம் நின்று, பின் துடித்து! இப்படியெல்லாம் பேசித்தான் அந்த சுகன் லோகேசை வீழ்த்தினானோ?

லோகேசுவரியின் நினைவு அவளை நிமிர வைத்தது.

"ப்ளீஸ்! வார்த்தைக்கு வார்த்தை உங்களோடு மல்லுக்கட்ட, நான் உங்களோடு வரவில்லை! இப்போது லோகேசின் நிலை என்ன என்று, எனக்குத் தெரிய வேண்டும்!"

அவனும் முகம் மாற, "அவள், சுகனுடைய குழந்தைக்குத் தாய்!" என்றான் அவன் 'நிதானமாக



"அது, இயற்கையின் வழி! மற்றபடி? இங்கே, அவளது நிலை என்ன? அன்றைக்கு நீங்கள் என்னவோ, சகல உரிமைகளும் உண்டு என்றீர்களே!" என்றாள் அவள் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு!

"நான் குழந்தையைப் பற்றிச் சொன்னேன்! சுகனின் உரிமைகள் அனைத்தும், அவனுடைய குழந்தைக்கு இருக்கும்!"

"ஆனால், பத்து மாதங்கள் அதைச் சுமந்து பெறப் போகிற தாய்க்கு, ஒன்றும் கிடையாது! அவள் உங்கள் தயவில் பிச்சைக்காரியாக வாழ வேண்டும்! அப்படித் தானே? இதில், துணைக்கு நான் வேறு! கேவலம்! இங்கே எனக்கு ஏதாவது வேலை கிடைக்குமா? நான்..."

குறுக்கிட்டு, "என்னைச் சற்றுப் பேச விடுகிறாயா? லோகேசுவரியின் நிலை பற்றித் தெரிய வேண்டும் என்றாய்," அதைச் சொல்லி முடிப்பதற்குள், ஏதேதோ பேசுகிறாயே! இந்த வீட்டுக் குழந்தையுடைய தாய் என்ற முறையில், ஒரு பெரிய தொகை, அவள் பெயரில் வைப்பு நிதியாக வைக்கப்பட்டு இருக்கிறது! கைச் செலவுக்காக, மாதாமாதம் அவளாகக் கேட்டிருப்பதே, ஐயாயிரம் ரூபாய். ஆனால் அதை, அவள் செலவு செய்யத் தேவையே இல்லாதபடி, இங்கேயே, எல்லாம் கிடைக்கும்! பொறு புவனேசுவரி! தயவு பண்ணி நான் சொல்வதை முழுவதும் கேட்டு விட்டுப் பிறகு பேசு! சுகனுடைய குழந்தை பிறந்த பின், லோகேசுவரி இங்கேயே இருக்க விரும்பினால், விற்க, விலை செய்ய முடியாத சில சொத்துகளும், அவற்றின் வருமானமும், அவளுக்குத் தொடர்ந்து கொடுக்கப்படும்! இதற்கு மேல்; என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?" என்ற கேள்வியோடு, தன் பேச்சை முடித்தான் தயானந்தன்.

"விற்க விலை செய்ய முடியாதது என்றால், நீங்கள் அவளை நம்பவில்லை, நம்ப மாட்டீர்கள் என்றுதானே அர்த்தம்? அது, அவமானப்படுத்துவது போல ஆகாதா?"

கையை அவன் முன் குறுக்காக நீட்டி, அவள் மேலே போக முடியாதபடி தடுத்து நிறுத்தினான் அவன்.

அவள் திகைத்து நோக்கவும் "என் முகத்தை நேரே பார்த்துச் சொல்லு! எங்கள் வீட்டாரின் நிலையில் நீ இருந்தால், அவளை நீ முழுக்க நம்புவாயா? அல்லது இதைவிட அதிகமாகத்தான் செய்வாயா?" என்று, அவள் கண்களை நேராகப் பார்த்துக் கேட்டான் அவன். உள்ளே நேர்மை இருந்ததால் அவன் பேச்சை அவள் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது.!

முன்னரே, அவள் போய், விலகச் சொல்லும்படிக் கேட்டிராவிட்டால், சுகனுடைய மகவு என்று, நம்பக்கூடத் தோன்றியிராது.!

"நீங்கள் சொல்லுவது சரிதான். ஆனால், சுகன் இப்படிப்பட்டவர் என்று தெரிந்திருந்தும், அவரைப் பற்றி நான் உங்களிடம் சொன்ன போது, விரலைக் கூட அசைக்காமல் இருந்து விட்டீர்களே.! நீங்கள் கொஞ்சம் முயன்றிருந்தால், இந்த வேதனை நேர்ந்திராதே.!" என்று குறைப்பட்டாள் அவள்.

"நீ ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும், புவனேசுவரி. என் தம்பி சுகன், பிறர் சொல்லிக் கேட்கிறவன் அல்ல.! ஏன், நீ சொன்னதை, உன் தங்கை கேட்டாளா?



அதிலும், யாரேனும் தடுக்கும்போது, சுகனின் வேகம் இரு மடங்காகி விடும்.!... அத்தோடு, அந்த விளையாட்டு விளையாடுகிறவர்கள், விதிமுறைகளை அறிந்திருப்பார்கள் என்றும் எண்ணினேன்.! உன் புகாரை, ரொம்பப் பெரிதாக நினைக்கவும் இல்லை..." என்று யோசனையாகப் பேசியவன், "ஒரு வேளை, சுகனுக்கு ஒரு பிள்ளை பிறக்க வேண்டும் என்று விதி இருந்ததோ, என்னவோ.! சுகன் இறந்து நான் இந்த விஷயம் முழுவதையும் கூறியபோது, பாட்டி அப்படித்தான் சொன்னார்கள்.!" என்று முடித்தான்.!

"அப்புறம், இன்னொரு விஷயம்.! ஒவ்வொரு முறையும், புவனேசுவரி..' என்று நீளமாய்க் கூப்பிடுவது, சிரமமாக இருக்கிறது.! அதனால், 'புவனா, அல்லது புவனி' என்று உன்னை அழைக்க முடிவு செய்து விட்டேன்.! நீ கூட, 'தயா' என்றோ, 'ஆனந்த்' என்றோ, எது உனக்கு வசதியோ, அப்படி அமைத்துக் கொள்ள, என் பூரண அனுமதி உண்டு.! இந்தத் 'தயானந்தன்' நீளமாக இருப்பதால்தான், நீயும் பெயர் சொல்லிக் கூப்பிடச் சிரமப்படுகிறாய்.!" என்று, நமுட்டுச் சிரிப்புடன் தயானந்தன் கூற, புவனேசுவரியின் முகம் லேசாகச் சிவந்தது.!

அவள் இன்னமும் அவனை பெயர் சொல்லிக் கூப்பிடவில்லையாம்.!

"முதலில், இந்த இடம் பழகட்டும்.! பிறகு, அவசியப்பட்டால், மற்றதைப் பார்ப்போம்.!" மிடுக்காகக் கூறியவளுக்குச் சிரிப்பையும் அடக்க முடியவில்லை.!

கீழ்க் கண்ணால், அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, "எப்போதும், இப்படிச் சிரித்துக்கொண்டு இருப்பதற்கென்ன?" என்றான் அவன்.!

சிறு திகைப்புடன் அவள் திரும்புகையில், "பக்கத்தில்தான், பாட்டி வீடு.! இவ்வளவு தூரம் வந்தோம். போய்ப் பார்த்துவிட்டுத் திரும்புவோமா?" என்று கேட்டான்.!

லோகேசுவரியைப் பார்க்கத்தானே, பாட்டிக்கு ஆசை இருக்கும் என்று, சற்றுத் தயங்கினாலும், பாட்டியைப் பார்க்கும் ஆவல் அவளுக்கும் இருந்ததால், இருவருமாக அங்கே சென்றனர்.!

அவர்கள் இருவரையும் சேர்த்துப் பார்த்ததும், பாட்டிக்கு, ஒரே சந்தோஷம்.! மகிழ்ச்சியில் கண்ணீர்கூட வந்துவிட்டது.! அவருக்காகச் செய்யப்பட்டிருந்த சத்துமாவுக் கஞ்சியில், தேங்காய்ப் பாலும், சர்க்கரையும் சேர்த்து, ஏலக்காயும் தட்டிப்போட்டுப் பாயசம் போலாக்கிக் கொண்டு வரச் சொல்லிக் குடிக்கச் சொன்னார்.

ஒரு பெண் மருத்துவர் பெயரைச் சொல்லி, லோகேசுவரியை, மாதாமாதம் அவரிடம் காட்டச் சொன்னார்.! கைராசி உள்ளவராம்.!

லோகேசுவரி தனியாக இருப்பதால், உடனே போக வேண்டும் என்று புவனேசுவரி கூறியபோது, தடை சொல்லாமல், அனுப்பத் தயாரானார்.

சரவணன், வேலைக்குச் சென்றிருந்தான்.

எனவே, தயானந்தனிடம் சாவியைக் கொடுத்து அனுப்பி, பீரோவிலிருந்து, எதையோ எடுத்து வரச் செய்தார்.

"அன்றைக்கே தந்திருக்க வேண்டியதும்மா.! அளவு தெரியாததால், செய்து



வைக்க முடியவில்லை.! இந்தா. எடுத்துப்போ.! ஒன்று லோகேசுவரிக்கு.! இன்னொன்று, உனக்கு.!" என்று கொடுத்தார்.!

இரண்டு நகைப் பெட்டிகள்.! வளையல் டப்பா.!

தங்கைக்கானதை வாங்கிக் கொண்டவளுக்கு, மற்றதை வாங்க முடியாமல், கை பின்னுக்கிழுத்தது.!

"என்னம்மா, நீ? என் பேரனுடைய பிள்ளையைத் தாங்குவதால், லோகேசுவரி, எனக்குப் பேத்தி.! பேத்தியுடைய அக்கா யார்? அவளும் பேத்திதானே? பாட்டியாக இருந்து, ஆசையாகத் தந்தால், வாங்கிக் கொள், கண்ணம்மா.!"

கண்கள் நனைய, அதற்கு மேல் மறுக்க மாட்டாமல் பெற்றுக் கொண்டாள் அவள்.!

"பாட்டிக்குச் சொந்த பந்தங்கள் என்றால், ரொம்பப் பிடிக்கும்.!" என்றான் தயானந்தன்.

உண்மையே.! லோகேசும், அவளும் இங்கே வந்திருப்பதே, அதற்குச் சாட்சிதானே?

பாட்டியிடம் விடை பெற்றுக்கொண்டு அங்கிருந்து வெளியேறி, வீட்டருகே தயானந்தனிடமும் விடை பெற்றுக்கொண்டு, அன்று வரை அறியாத ஒரு மகிழ்ச்சியோடு உள்ளே சென்றால், அங்கே கண்ட காட்சி, புவனேசுவரியை மருட்டியது.!

சாப்பாட்டு மேஜையில், தோசை, இடியாப்பம், சப்பாத்தி எல்லாவற்றையும், உரிய வியஞ்சனங்களோடு தட்டில் பரப்பி வைத்துக்கொண்டு அதன் முன் அமர்ந்து, தேம்பி அழுது கொண்டிருந்தாள் லோகேசுவரி.!

# 11

**பொ**துவாக, லோகேசுவரி உணவில் விருப்பம் உள்ளவள். வகை வகையாக வைத்துக் கொடுத்தால், ரசித்துச் சாப்பிடுவாள். ஆனால், அதற்காக, உடம்பில் சதை போட விட்டுவிட மாட்டாள். கொஞ்சமாக, ஆனால் ஒவ்வொரு கவளத்தையும் அனுபவித்து உண்பவள்.!

'ஜென்' சாமியார்கள், தண்ணீரைக்கூட, ரசித்துக் குடிப்பார்களாம்.! அதுபோல.!

ஆனால், அவர்கள் கிடைப்பதை ரசித்து உண்பார்கள்.! இவளுக்கு, அவள் ரசிக்கிற மாதிரி உணவு இருக்க வேண்டும்.! எல்லாம் உயர் வகை உணவுகளாக, சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும்.!

அந்த மாதிரி உணவுகளுக்காகத்தானே, அவள் தோழிமார் வீட்டில் கிடந்ததே.!

தயானந்தன் வீட்டு உணவில், அவள் குறைபட எதுவும் கிடையாது.! அதிலும், இடியாப்பமும் குருமாவும் அவளுக்கு ரொம்பவே பிடிக்கும்.!

அப்படியிருக்க, அவள் அழுவானேன்.?

அருகில் சென்று அமர்ந்து, "என்ன லோகும்மா, எதற்காக அழுகிறாய்? உடம்பு ஏதேனும் செய்கிறதா?" என்று கவலையும் பரிவுமாக வினவினாள் புவனேசுவரி.

"உடம்பு.! அது தவிர, ஒன்றும் கேட்க மாட்டீர்களா?" என்று விசும்பல்களுக்கு இடையே, எரிந்து விழுந்தாள் லோகேசுவரி.!

வேறு என்ன?

அவள், தயானந்தனிடம் கேட்ட கேள்விகள், லோகேசுவரிக்கும் தோன்றியிருக்குமோ? எதிர்காலத்தை நினைத்துதான் அழுகிறாளோ?

"என்ன லோகும்மா, உனக்கு என்ன தேவை? சொல்லு.! என்னால், முடிந்தவரை நான் செய்கிறேன்.!" என்றாள்.

"உங்களால் என்ன செய்ய முடியும், சொல்லுங்கள்? எல்லாம் என் தப்புக்குத் தண்டனை.! ருசி ருசியாகச் சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டேன்.! மானம் மரியாதை பாராமல், அடுத்தவர் வீடே கதியாய்க் கிடந்தேன்.! அதைவிட... அதைவிட... எந்த அளவுக்குப் போனேன்? கடைசியில், இங்கே இத்தனை விதம் விதமாக அனுப்புகிறார்கள், என்னால் ஒரு வாய் சாப்பிட முடியவில்லையே.! சாப்பாட்டு விஷயத்தில், எப்படியெல்லாம் பேசி, உங்களை எவ்வளவு நோகடித்திருப்பேன்.! அதற்கு, எனக்குச் சரியான தண்டனைதான்.!" என்று கண்ணீர் சொரிந்தாள் சின்னவள்.!

தங்கை சொன்னதில் ஒன்று மனதை மிகுதியாக உறுத்த, "சாப்பிட முடியவில்லையா? உப்பு காரம் சரியாகத்தானே பாவிக்கிறார்கள்? நம் வீட்டு அளவுதான் இருக்கிறது என்று நினைத்தேனே.!" என்று சொல்லும்போதே, கருவுற்றியிருந்த சக ஆசிரியை ஒருத்தி, சாப்பிட முடியாமல் தவித்தது அவளுக்கு நினைவு வந்தது.!

சில நாட்களாகவே, லோகேசுவரி சரியான அளவு சாப்பிடாததின் காரணம், மனநிலை, புதிய இடம் இங்கு பாவிக்கப்படும் மசாலை என்றெல்லாம் அவள் எண்ணியது, தவறோ? மசக்கை என்று சூரியவதனி சொன்னது போலவா?

அதற்குச் சரியாக, "அதெல்லாம் இல்லை.!" என்றாள் தங்கை சோர்வுடன். பாட்டி வீட்டு வேலைக்காரி, அப்போதே சொன்னாள். நீங்கள் பாட்டியோடு பேசிக்கொண்டு இருந்தபோது.! சிலபேருக்கு, உப்பு, புளிப்பு, இனிப்பு என்று, ஒவ்வொரு சுவை பிடிக்குமாம்.! சிலபேர், ரொம்பவே சாப்பிடுவார்களாம்.! ரொம்பச் சிலருக்கு என்னை மாதிரி, ஒன்றுமே பிடிக்காமல் போகுமாம்.! நான் செய்த பாவத்துக்குத் தண்டனை அனுபவிக்க வேண்டாமா? பசி ஒரு பக்கம் குடலைச் சுருட்டுகிறது.! நல்ல நல்ல உணவு வகைகள்.! ஆனால், வாய்கிட்டே, கொண்டு போக முடியவில்லையே.! சாரி, அக்கா.! இனிமேல், இந்தச் சாப்பாட்டுக்காக, நான் ஒரு தப்பும் செய்யவே மாட்டேன்.!" என்று வருத்தத்துடன் கூறினாள் லோகேசுவரி.

"சீச்சீ.! இதெல்லாம் என்ன பேச்சு? எதற்குத்தான், சாரி சொல்வது என்று இல்லையா? என்னோடு வேலை செய்தார்களே, சூரியாவதனி, அவர்கள்கூட, மசக்கை என்று, இப்படித்தான் கஷ்டப்பட்டார்கள்.! சிலபேரின் உடல்வாகு.! அதற்காகப் பாவம்,



அது, இது என்று பேசாதே.! பாட்டி, ஒரு டாக்டரிடம் போகச் சொன்னார்கள். இதற்குக் கூட, இப்போது மருந்திருக்கலாம்.! எப்படியும், இரண்டொரு மாதங்களில், எல்லாம் சரியாகிப் போகும்.! நன்றாகச் சாப்பிடலாம்.!" என்று, புவனேசுவரி தங்கையைத் தேற்றினாள்.!

"எப்படியும், நான் இனிமேல் சாப்பாடு, சாப்பாடு என்று பறக்கப் போவதே இல்லை.!" என்று சபதம் செய்தாள் லோகேசுவரி.!

அதுமட்டும் அல்ல.! அவள் விலகி உட்கார்ந்துகொண்டு, தமக்கையைக் கட்டாயப்படுத்திச் சாப்பிட வைத்தாள்.! தனக்காக உருகி தமக்கை பட்டினி கிடந்துவிடக் கூடாதாம்.!

இந்த அளவு லோகேசுவரி யோசித்ததே, அறியாப் பருவம் மாறி, அவள் வளர்ந்து வருவதின் அறிகுறியோ என்று தோன்றியது, மற்றவளுக்கு.!

பாட்டி கொடுத்த பரிசைக் கொடுத்தபோதும், "வளையல்கள் அழகாக இருக்கின்றன.!" என்று மகிழ்ச்சிதான்.! ஆனால், முன்னைப் போலப் புதியதைக் கண்டதும், தொட்டுத் தொட்டுப் பார்ப்பதும், அணிவதும், சிரிப்பதும், அதைப் பற்றியே பேசுவதுமாக இருக்கவில்லை.!

அதைவிட தமக்கைக்கும் கொடுத்ததையே பெரிதாக எண்ணி மகிழ்ந்தாள் எனலாம்.! "இவர்கள் நல்ல விதம்தான்.! இல்லையாக்கா? முக்கியமாகப் பாட்டியும், சரவணனும்.!"

சாப்பாடு, துணிமணி, நகை, பணம் இவற்றுக்கு வாழ்க்கையில் என்ன மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று அவள் தெரிந்து கொள்வது மகிழ்ச்சி அளித்த போதும், அதற்கு என்ன விலை கொடுத்துவிட்டாள் என்று, புவனேசுவரிக்கு வருத்தமாகவும் இருந்தது.!

லோகேசுவரியை, மருத்துவரிடம் அழைத்துப் போவதற்கு பாட்டியின் அனுமதியோடு, சரவணன் காருடன் வந்தது இரு பெண்களுக்குமே சந்தோஷமாகவே இருந்தது.!

லோகேசுவரியின் ஆரோக்கியம் பற்றிக் கவலைப்பட ஒன்றும் இல்லை என்று சொல்லி, மசக்கைத் தொல்லையைக் குறைக்க வழி முறை கூறி அனுப்பினார் டாக்டர்.!

அவரது ஆலோசனைப்படி, லோகேசுவரியைக் காலை மாலை நடக்க வைக்கும் பொறுப்பையும், சரவணனே ஏற்றுக் கொண்டான்.!

ஆற்று நீரோட்டம் போல, அவனோடு இயல்பாக கலகலவென்று பேசியவாறே, நடப்பது, லோகேசுவரிக்கும் பிடித்துப் போயிற்று.!

அப்படி அவள் செல்லும் நேரத்தில் வீடு சுத்தம், உடை சுத்தம் போன்ற வேலைகளை அதற்கென மனோகரி அனுப்பிய ஆட்களைத் திருப்பி அனுப்பிவிட்டு புவனேசுவரியே செய்தாள்.! ஆனால், எவ்வளவு நேரம் இதைச் செய்ய முடியும்?

நடைமுடிந்து வந்தால் டீவி பார்ப்பதும், தூங்குவதுமாக லோகேசுவரியின் பொழுது கழிந்துவிட, சும்மா இருந்து பழக்கமற்ற மற்றவளுக்குப் போரடித்தது.

இதற்கிடையே, தயானந்தன், அவனுடைய தாயிடம் தனியே பேசினான்.!

வந்த பெண்கள் இருவரும், அவர்கள் தங்கியிருந்த குடிலிலேயே சாப்பிடுவ, தன் ஏற்பாடே என்று, முழுப்பழியையும் தன்மீது ஏறறுக்கொண்டாள் அவள்.!

"விருப்பம் அற்றவர்களை, நான்தான் பிடிவாதமாக இங்கே அழைத்து வந்தேன். அவர்களது சாப்பாடு ஏற்பாடும் என்னதே. நீங்களே, அதை அலட்சியப்படுத்தினால் அப்புறம் ஏன் வார்த்தைக்கு என்ன மதிப்பு, சொல்லுங்கள்?" என்று, வருத்தத்துடன் வினவினான் மகன் 'பார்த்துப் பார்த்துச் செய்வதைப் பார்த்தால், உங்களுக்கு அவர்களிடம் வெறுப்பு இருப்பதாகத் தெரியவில்லை... என்னம்மா? சுதா, ஏதாவது சொன்னாளா?.

சட்டெனப் பிரச்சினையின் மையத்தைக் கண்டுபிடித்துவிடும் இந்த மகனிடம், மனோகரிக்கு எப்போதுமே சிறு பயம் கலந்த பெருமிதம் உண்டு.

அவுன் தந்தை நோயில் விழுந்த இந்த ஏழு ஆண்டுகளாக, தன் இருபதாவது வயதில் இருந்து. ஒரு குறை சொல்ல முடியாதபடி தொழிலை நடத்துவதோடு, வளர்த்தும் வருகிறான். இவனிடம் எதை எப்படி மறைப்பது?

ஆனால், மகளை முழுதாகக் காட்டிக் கொடுக்கவும் மனமற்று, "அது ... அந்தப் பெண்களின் உடை... சின்னவளாவது, கொஞ்சம் அதிகப்படியாக என்றாலும், ஏதோ அலங்காரமாவது செய்கிறாள். உன் தங்கை, அதையும் ஏளனமாகப் பேசுவாள்...' என்றபோது, தயானந்தன் குறிக்கிட்டு, "ஓ அது தான், அந்தக் கூத்து ராணி வேஷமா?" என்று வினவினான்.

ஒத்துக் கொள்ளும் ஒரு வினாடி மௌனத்தின் பின், 'எதற்கு, எல்லோருக்கும் வீண் மனக்கஷ்டம் என்று தான்...' என்று நிறுத்தினாள் தாயார்.

"ம்ம்ம்... இனிமேல் இந்த ஏற்பாட்டை மாற்றினால், உங்கள் மதிப்புக்குச் சரிப்படாது. இப்படியே இருக்கட்டும் அம்மா. சரி, சுதாவிடம் நான் பேசுகிறேன். அவர்கள் சங்கடப்படாமல்... வேண்டாதவர்கள் என்கிற மாதிரி எண்ணம் வராமல், நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்" என்றான் மகன்.

"சரிம்மா. ஆனால் சுதாவை ரொம்பத் திட்டி விடாதே." என்று கேட்டுக் கொண்டாள் மனோகரி.

"திட்டுவதா? என்னம்மா, நீங்கள்? இதற்காக என்று திட்டினால், வெறுப்பு தானே வளரும்? அதைவிட, விருந்தோம்பலைப் பற்றி, ஒரு சிறு பாடம். இன்னும், இரண்டு, மூன்று ஆண்டுகளில், அவளுக்கும் திருமணம் நடத்த வேண்டுமே. விருந்தினரை நடத்தும் விதம் பற்றியெல்லாம், அவள் தெரிந்து கொள்ள வேண்டும் அல்லவா? என்று அவன் முறுவலிக்க, தாயின் மனமும், மகளின் திருமணம் பற்றி எண்ணி மகிழத் தொடங்கியது.

தாயிடம் பேசிய தயானந்தன், அடுத்து புவனேசுவரியிடம் வந்தான்.

"ரோமாபுரியில், ரோமர்களைப் போல நடந்து கொள்ள வேண்டும்' என்று, ஒரு பழமொழி இருக்கிறது" என்று தொடங்கினான்.

அவன் சொல்ல வருவது புரிந்து விட "அதை, ரோமுக்குப் போகிறபோது பார்த்துக் கொள்ளலாம் என்றாள் புவனேசுவரி கிண்டலாக.



"இங்கே யாரோ, வார்த்தைக்கு வார்த்தை மல்லுக் கட்ட வேண்டாம் என்று சொன்ன நினைவு வருகிறதே" என்றான் அவன்.

லேசாக முறுவலித்து, அப்படி வித்தியாசமாக என்ன செய்து விட்டோம்? சொல்லுங்கள் என்று கேட்டாள் அவள்.

"உடை" என்றான் அவன். "இது போலத் தொள தொளப்பான பாண்ட், மேலே..."

அவன் சொல்லத் தெரியாமல் தடுமாறியபோது, "லாங் பிளவுஸ்" என்று எடுத்துக் கொடுத்தாள் அவள்.

"ம்ம்ம்... லாங் பிளவுஸ், பெர்முடா எல்லாம் வசதியாக இருக்கலாம். ஆனால், இங்கே,இந்தக் குடும்பங்கள் முன் அவ்வளவாகச் சரிப்பட்டு வராது. சுரிதார் செட், சேலை மாதிரி அணிந்தால் நன்றாக இருக்கும். உங்களிடம் இல்லை என்றால், மதுரைக்குப் போய் வாங்கிக் கொள். போக்குவரத்துக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்" என்று, சற்றுத் தணிவான குரலிலேயே கூறினான் அவன்.

"நாங்கள் வந்த அன்று, சுதா, வீணா, மானசிக்கா எல்லோரும் அணிந்திருந்தது, நன்றாக இருந்தது." என்று ஏதோ வாரப் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்த லோகேசுவரி, திடுமென அவர்கள் பேச்சில் குறுக்கிட்டுச் சொன்னாள்.

"லோகேஸ் என்றாள் புவனேசுவரி எச்சரிக்கும் குரலில் வாக்கிங் போகச் சரவணன் வந்து கொண்டிருக்கிறாரா, பார்" என்று அவள் உத்தரவிட, தமக்கையைப் பார்த்து மூக்கைச் சுருக்கி அழகு காட்டிய போதும், அவள் சொன்னதைச் செய்தாள் தங்கை.

"என்ன, காட்டுக் குதிரை, வீட்டுப் பசுவாகிறது போல" என்றான் அவன் சிறு வியப்புடன்.

"வலிக்க அடி விழும்போது, வளர்ச்சி தானாக வருகிறது" என்றாள் புவனேசுவரி ஒரு வறண்ட குரலில். "அப்புறம், நீங்கள் சொன்னது எங்களது இந்த உடையே கௌரவமாகத் தான் இருக்கிறது. நாங்களும் அப்படித்தான்." என்றாள் சற்று அழுத்தமாக.

"ம்ம்ம்..." என்றவனின் பார்வை, வெளியே சரவணனுக்காகக் காத்து நின்ற சின்னவளின் மீது யோசனையோடு படிந்தது.

தன்னை மீறி முகம் சிவக்க, "அது ஓர் அசட்டுத்தனம்" என்றாள் அவள்,

உச்சுக் கொட்டி, "அதற்காகப் பார்க்கவில்லை. இது போல விஷயங்களில், லோகேசுவரி சொன்னால் கேட்பாளே என்று எண்ணினேன். மற்றபடி, நீ சொன்னது போல அசட்டுத் தனமாகவே இருந்தாலும், ஒரு பானைச் சோற்றுக்கு, ஒரு சோறு பதம் என்று பலர் நினைக்கக் கூடும்" என்றான் அவன் சோகம் போலக்காட்டி.

கிண்டலா என்று உள்ளூரப் புகைந்தபடி, "பதம் பார்க்கும் சோறாக, என்னை எடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள்" என்றாள் அவள் பதிலுக்கு.

அவள் சொல்லி முடிக்கும் போதே, "அதற்காகத்தானே, உடையை மாற்றச் சொல்லுகிறேன்" என்று அவன் வெற்றிக் குரலில் கூறவும், தன்னை மீறிப் புன்னகை செய்தாள் அவள்.

"என்ன? வாங்கிக் கொள்கிறாயா?"

"என்னிடமே சிலது இருக்கிறது. அங்கே, கோயிலுக்கும், விழாக்களுக்கும் செல்லும்போது, சேலை அல்லது சுரிதார்தான். இனி, அவைகளை அணிந்து கொள்கிறோம்" என்றாள் புவனேசுவரி.

"எங்கள் வீட்டைக் கோயிலுக்கு ஒத்திட்டதற்கு நன்றி." என்று அவன் கண்ணால் சிரிக்க, "சேலை, சுரிதார் அணியத் தயங்கியதே, உங்கள் வீடு என்பதால் தானே" என்று ஒரு போடு போட்டாள் அவள்.

"யப்பா, ஓர் இம்மி அளவு கூட விட்டுக் கொடுத்து விடக்கூடாதே" என்று அவன் சிரிக்கும் போதே, "செலமாட் பாகி" என்று வெளியே சரவணனின் குரல் கேட்டது.

லோகேசுவரி ஏதோ சொல்ல, சிரித்தபடியே வாயில் அருகே வந்து, "தயாண்ணா, செலமாட் பாகி" என்றான் மீண்டும்.

"யாரவர்?" என்று தயானந்தன் கேட்கவும், மற்ற மூன்று பேரும் சேர்ந்து சிரித்தனர்.

"அண்ணா, நீ சுத்த மோசம். இதுவரை நாலு தடவை மலேஷியாவுக்குப் போய் வந்திருக்கிறாய், 'செலமாட் பாகி' என்றால் யார் என்று கேட்கிறாயே" என்றான்.

"ஆமாப்பா, அந்தக் கனவானை நான் சந்தித்ததே இல்லை எனும்போது, யார் என்று, கேட்டுத்தானே ஆக வேண்டும்?" என்றவன் தொடர்ந்து "ஆனால் முதலில் நீ எனக்குக் காலை வணக்கம் சொன்னதற்கு, நானும் பதிலுக்கு உன்னை வாழ்த்தி விடுகிறேன். செலமாட் பாகி," என்று கூற, மற்ற மூவரும் "ஹே..." என்று கை தட்டி, மீண்டும் நகைத்தனர்.

"எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஒரு நாட்டுக்கு நாலு தடவை போய்விட்டு, இந்த மாதிரிச் சில வார்த்தைகளாவது படிக்காமல் நீ இருக்க மாட்டாயே என்று நினைத்தேன். அண்ணா நான், இந்த லோகா ஒருத்தியாலேயே மலாய் பேசப் படித்து விடுவேன் போல இருக்கிறது. நேற்று, மெயின் ரோடு வரை நடந்தோமே? டீ குடிக்க ஐடியா வந்தது இந்தம்மா, அங்கே போய் உட்காந்து கொண்டு... அதென்னது ... ம்ம், நினைவு வந்த விட்டது. 'தேத்தாரே டு வா' என்று ஆர்டர் கொடுக்கிறாள். இல்லைம்மா. என் பெயர் நாராயணன் என்கிறான் சர்வர் பையன். இவளுக்குச் சிரிப்புத் தாங்கவில்லை விவரம் தெரிந்ததும், எல்லோருமே விழுந்து விழுந்து சிரித்தோம் கிளம்புகிறபோது. 'தேத்தாரம்மா, வணக்கம், என்கிறான் அவன். இனிமேல், கொஞ்ச நாள் அந்தப்பக்கம் போகக்கூடாது அல்லது 'தேத்தாரம்மனு'க்குக் கோயிலே கட்டி விடுவார்கள். நேரமாகிறது. வருகிறோம் புவனா, அண்ணா பை" என்று கலகலத்தபடி, லோகேசுவரியோடு வெளியேறினான் சரவணன்.

"பை" என்று லோகேசுவரியின் குரலும் ஒலித்துத் தேய்ந்தது.

அவர்கள் செல்வதைப் புன்னகையோடு பார்த்திருந்து விட்டு, "இன்று நானே மதுரைக்குப் போக வேண்டியிருக்கிறது. கூட வந்தால், வேண்டியதைப் பார்த்து வாங்கிக் கொண்டு வரலாம் வருகிறாயா, புவனா?" என்று அழைத்தான் தயானந்தன்.

அவள் அதிர்ந்து நோக்கவும், "தம்பி கெட்டிக்காரன். அவன் அனுமதியே



கேட்டிருக்க மாட்டான் என்று எண்ணுகிறேன். லோகா, புவனா, பரவாயில்லை. ஆனால் இப்போது அது விஷயம் அல்ல, என்ன வருகிறாயா?" என்றான் மீண்டும்.

சற்று யோசித்தாள் புவனேசுவரி.

இங்கே, இத்தனை பேர் அறிய, அவனோடு தனியே செல்ல, அவளுச்குத் தயக்கமாக இருந்தது. அத்தோடு லேகேஸை மணிக்கணக்கில் தனியே விட்டுச் செல்லவும் மனம் வராமல், மறுப்பாய்த் தலையசைத்து விட்டாள். அவளையும் கூட அழைத்துச் செல்வதும் சரியாகத்தோன்றவில்லை.

நன்றாகச் சாப்பிட முடியாததாலோ என்னவோ, இந்தக் காலை நேரத்து நடை முடிந்து வந்தால் அப்படியே அயர்ந்து படுத்து விடுவாள் அவள்

அவளை எங்கே, மணிக்கணக்கில் காரில் அழைத்துப் போய் அலைய வைப்பது?

லோகேசுவரி வர முடியாத காரணத்தைச் சொல்லி, அதனால் தானும் வருவதற்கு இல்லை என்று கூறவும் தயானந்தனின் முகம் கடுத்தது.

# 12

சட்டென தயானந்தனின் முகம் மாறவும், புவனேசுவரி திகைத்தாள்.

இப்போது என்ன நடந்துவிட்டது என்று இவன் முகம் சுளிக்கிறான்?

இப்போது என்ன நடந்துவிட்டது என்று இவன் முகம் சுளிக்கிறான்? லோகேசுவரி கூட வராவிட்டால், நீயும் வர மாட்டாயா?

தொடர்ந்து, "என்னது? லோகேசுவரி கூட வராவிட்டால், நீயும் வர மாட்டாயா? ஏன்? என்னோடு நீ தனியாக வெளியே வந்ததே இல்லையா? அன்று பாட்டி வீட்டுக்கு வரவில்லை? மதுரையில் கோயிலுக்குப் போனோம்... அப்போது இல்லாத தயக்கம் இப்போது என்ன வந்தது? ஓகோ. மணிக்கணக்காக, இவனோடு எப்படிப் போவது, என்று இருக்கிறதாக்கும்?" என்று கோபமாகப் படபடத்தான் அவன்.

தயானந்தனின் கோபம், தன்னை இவ்வளவு பாதிக்கும் என்று, புவனேசுவரியே எதிர்பார்க்கவில்லை. கோபத்தின் காரணமும் புரியாமல் திகைத்தாள். வெறுமனே, கடைக்கு வரவில்லை என்று சொன்னதற்காக, இவ்வளவு கோபம் வருமா?

மனம் தாளாமல், "பின்னே நீங்கள் சொல்லுங்கள், லோகேஸை அவ்வளவு நேரம் தனியாக விட்டு விட்டுப் போக முடியுமா? சும்மாவே அவள் ஒரு மாதிரி, தைரியம் இல்லாமல் சட்டென அழுகிறாள். அதற்காக மறுத்தால், கோபப்படுகிறீர்களே" என்றாள் அழாக்குறையாக.

தயானந்தனின் முகம் லேசாகக் கன்றியது. கண நேரத் தயக்கத்தின் பின் "சாரிம்மா. நான் தப்பாக நினைத்து விட்டேன். என்னோடு தனியே வரப்... சரி, அது போகட்டும். இந்த ஒரு முறை நானே வாங்கி வருகிறேன். உனக்கு என்னென்ன வண்ணங்கள், மாதிரிகள் பிடிக்கும் சொல்லு. ஏனென்றால், நீ தகராறுக்காரி, நன்றாகக் கேட்டுத் தெரிந்து கொண்டு போவது நல்லது. லோகேசுவரி அப்படியல்ல. பளிச்சென்று எதைக் கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளுவாள்" என்றான் தயானந்தன்.

சட்டென நிமிர்ந்து, கலக்கத்துடன் அவனைப் பார்த்தாள் புவனேசுவரி.



அவன் "என்ன?" என்று கேட்கவும் "எங்கள் ஒட்டு மொத்த மலேஷியத் தமிழ்ப் பெண்களுக்கும் லோகேஸ் பிரதிநிதி அல்ல. அவளைக் கொண்டு எல்லோரையும் எடை போடாதீர்கள்" என்றாள் இம்மிய குரலில். வியந்த பார்வை உடனே மாற அவள் அருகில் வந்து அமர்ந்தான் தயானந்தன். "நீ ஏன் இப்படி பிரசுரித்துப் பேசுகிறாய் புவனி? மலேஷியத் தமிழர். இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் என்று பிரித்துப் பேசலாமா? உலகம் முழுவதும் பரந்து, விரிந்து கிடக்கும், நம் தமிழினம் எல்லாமே, ஓரினம் தான். என்ன ஒரு பிரச்சினை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, நம் வள்ளுவர் பெருமான், 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்', என்றெல்லாம் எழுதி வைத்து விட்டார். அதனால் நாம் எல்லோரும், மற்றவர்களை விட, ஒழுக்கத்துக்குக் கொஞ்சம் அதிப்படியாக மதிப்புக் கொடுத்து அதிகமாகவே அலட்டிக் கொள்ளுகிறோம். நிறையப் பேர், இதைப் பெரிதாக நினைப்பதே இல்லை. என் "பாய் ஃப்ரண்டைக் கேட்டுக் கொண்டு, இரவை உன்னுடன் கழிக்க வருகிறேன் என்று இயல்பாகச் சொல்லும் இனமும் இருக்கிறது, தெரியுமா?"

"நம்மிடமும், மாற்றமே இல்லை என்று சொல்ல முடியாது. உலகமே, ஒரு 'குளோபல் வில்லேஜ்' என்கிற போது, பல்வேறு வர்க்கத்தினரின் தாக்கம், நம்மிடையேயும் இருக்கத்தான் செய்கிறது. புழைய மாதிரி, நிமிர்ந்து பார்த்தாலே பாவம் என்று சொல்வதெல்லாம்,எப்போதோ போய்விட்டது. ஆனாலும், நடை முறைக்கு ஒவ்வாததை விட்டிருக்கிறோமே தவிர, மற்றவர்களை விட, கூடக் கொஞ்சம் அதிக ஒழுக்கம், நாம் கடைப்பிடிக்கத்தான் செய்கிறோம். அதில், வழுகல் நேர்ந்தால் ரொம்ப அதிகமாகவே வருத்தப்படுகிறோம்."

"யோசி, லோகேசுவரி செய்த தவறை, இந்தியாவில் உள்ளவள் செய்ய மாட்டாளா? இலங்கை, கனடா, ஆஸ்திரேலியா... எந்த நாட்டில் உள்ள தமிழ்ப் பெண்ணும் செய்ததில்லையா? அதற்காக, அந்த நாட்டு நம் பெண்களே மோசம் என்று சொல்ல முடியுமா? ஏன், சுகனை வைத்து, இந்தியத் தமிழ் ஆண்கள் அத்தனை பேரும் அயோக்கியர்கள் என்று முத்திரை குத்தி விடுவாயா?"

"ஆண் பெண் உறவு என்பது, உலகத்துக்கே பொது. அதில் தவறுதலும், தெரிந்தே பிழை புரிதலும் கூட காலம் காலமாக நடந்து வரும் பொதுவான குறைபாடுகளே. அதனால், இந்தக் குற்றத்தை எந்த ஓர் இனத்தின் மீதும் தனிப்படச் சுமத்த முடியாது. தெரிந்துக் கொள் புவனி."

நீளமாக அவன் பேசி முடித்த போது, அவளுக்கு எவ்வளவோ ஆறுதலாக இருந்தது.

"எப்போதுமே, எனக்கு இது ஒரு பயம் இருந்தது. எங்களை வைத்து, நாட்டையே எடை போட்டு விடுவீர்களோ என்று உள்ளூரக் கலங்குவேன். இப்போதுதான் நிம்மதி ஆயிற்று" என்று அவனைப் பார்த்துப் புன்னகை செய்து, அவள் நன்றி கூற,

"உண்மையைச் சொல்வதற்கு நன்றி எதற்கு?" என்று அவனும் முறுவலித்தான்.

ஆனால் இந்த முறுவல், "சாரி, அமெரிக்க டாலர்களாகத்தான் இருக்கிறது." என்று, அவன் வாங்கி வந்த சுரிதார்களுக்கான பணத்தைப் புவனேசுவரி கொடுக்க முயன்ற போது, துணி கொண்டு துடைத்தாற்போல, அடியோடு மறைந்து விட்டது.



"ஏன் இப்படி என்னை அவமானப்படுத்துகிறாய்?" என்றான் அவன் ஆத்திரத்தோடு.

"நீங்கள்தான் அவமானப்படுத்துகிறீர்கள். ஒரு காரணத்துக்காக அழைத்து வந்தீர்கள். உணவு, இருப்பிடம் தருவதை ஒத்துக் கொள்ளலாம். ஆனால், உடுக்கும் துணியைக் கூடவா, ஓசியில் பெறுவது?" என்றாள் அவள் பதிலுக்கு.

"இதோ பார், நான் உனக்கு மட்டுமாக வாங்கி வரவில்லை. லோகா, சுதா, மானசி அவளுடைய நாத்தனார் வீணா, எல்லோருக்கும்தான் வாங்கி வந்தேன். இவர்களில் யாரும் இப்படிப் பணத்தை நீட்டி,என்னைக் கேவலப்படுத்தவில்லை." என்றான் தயானந்தன் அதிகரித்த சினத்துடன்.

"அவர்கள் எல்லோரும், உங்கள் சொந்தக்காரர்கள், ஒரு வகையில் லோகேசும்"

"ஏன் நீ உறவில்லையா? பாட்டி சொல்லவில்லை? சுகனுடைய குழந்தையைத் தாங்குவதால், லோகா பேத்தி, அவளுக்கு அக்கா, நீயும் பேத்தி தான் என்று சொன்னபோது மட்டும், சொட்டுக் கண்ணீர் வேறு விட்டு, ஒத்துக் கொண்டாயே ஓ, இப்போது தெரிகிறது. நீ என்னை மட்டும் தான், ஒதுக்குகிறாய், பாட்டி கொடுத்த வளையலை, ஏற்றுக் கொள்ளலாம். அம்மா அனுப்பும் உணவைச் சாப்பிடலாம். ஆனால், நான் வாங்கி வந்தால் மட்டும் விலை கொடுத்து வாங்கி, வேற்றாராக்கி விட வேண்டும். இதுவே இன்பநாதன் கொடுத்திருந்தால், அணிந்து வந்து, முன்னே நின்றிருக்க மாட்டாயா?"

இன்பநாதன்.

அவன், அவளுக்கு எதுவுமே வாங்கிக் கொடுத்ததே இல்லையே, கொடுக்க வேண்டும் என்று, அவள் எதிர்பார்த்ததும் இல்லை.

""ஏன் புவனேசுவரி, ஏன்? ஏன், என்னை மட்டும் வேற்றாளாக்கி, விலக்கி நிறுத்த வேண்டும் என்று எண்ணுகிறாய்? அப்படி என்ன உரிமை எடுத்துக் கொள்வேன் என்று பயப்படுகிறாய்?"

திடுக்கிட்டுப் போனாள் புவனேசுவரி.

அவனைப் பேச விடுவது, இவளது அமைதிக்குக் குந்தகமாகும் என்று தோன்றி விட, "தயானந்தன், ப்ளீஸ், என்னைக் கொஞ்சம் பேச விடுகிறீர்களா? எங்களைப் பற்றி, உங்களுக்குத் தெரியும், என் அம்மாவுக்குச் சுய மரியாதை மிகவும் அதிகம். எங்கள் அத்தையிடம் கூட, அம்மா எதையும் வாங்கிக் கொண்டது இல்லை அப்போது, லோகேஸ் சின்னப் பெண், விலையில்லாது கிடைக்கும் பொருள் ஒன்றுமே கிடையாது என்று அம்மா சொல்வது, இன்னும் என் காதில் ஒலிக்கிறது. பாட்டியிடம் வாங்கிக் கொள்ளவும், முதலில் நான் தயங்கவில்லையா? ஆனால் அவர்களிடம் மறுக்க முடியவில்லை. ஓசிச் சாப்பாடு சாப்பிடுகிறோம் என்று என் மனம் எப்படிக் குறுகுகிறது தெரியுமா? சாப்பாடு, தவிர்க்க முடியாது. தங்குமிடமும் அப்படித்தான்., இது... இதையாவது கொடுக்கலாம் என்று பார்த்தேன்..." என்று உண்மையும் பொய்யுமாகச் சொல்லி முடித்தாள் அவள்.

இதற்கு மேல், எப்படிச் சமாளிப்பது?

அவன் நம்பினானோ, இல்லையோ, அது பற்றி மேலும் பேசுமுன், உள் அறைக் கதவைத் திறந்து கொண்டு லோகேசுவரி வந்தாள்.

அவளுக்காக வாங்கியிருந்த புதிய சுரிதார் ஒன்றை, அளவு பார்ப்பதற்காக அணிந்து வந்திருந்தாள்.

"அளவு சரிதான், அக்கா எனக்கு நன்றாக இருக்கிறதா? நிறம், எனக்குப் பிடித்திருக்கிறது. தயாண்ணா" என்றாள் அவள்.

"தாங்க்ஸ்மா" என்றான் அவன், உரிய பதிலாக.

லோகேசுவரியின் மெலிவை எடுத்துக் காட்டிய போதும், அந்தச் சுரிதார் செட் அவளுக்கு அழகாகவே இருந்தது.

அதைப்பற்றிப் புவனேசுவரி கூறியபோது, "உங்கள் இருவருக்கும் தேர்ந்தெடுத்தது, அம்மா. மதுரையில் தெரிந்த கடையிலிருந்து, அவர்கள் கொடுத்ததை மூட்டையாய்க் கொண்டு வந்து போட்டது மட்டும்தான் நான்" என்று உணர்ச்சியற்ற குரலில் கூறினான் தயானந்தன்.

"அடடா! அனுபவசாலியாக, ஆளாளுக்குப் பொருத்தம் பார்த்து நீங்கள் தான் வாங்கியிருப்பீர்கள் என்றெல்லவா நினைத்தேன். ஆனால் ஆன்டியின் தேர்வு என்றால் எனக்கும் இதேபோல அழகாக இருக்கும் என்று அணிந்து பார்க்காமலே சொல்விடலாம்."

'ஆலிவ் பிரான்ச்' என்பார்களே, அது போலச் சமாதான முயற்சி. ஏனோ, அவனது கோபம் மனதைப் பாதித்ததால், அவன் பேச்சை ஏற்றுக் கொண்டதைச் சொல்லாமல் சொல்லும் முயற்சி. புரிந்துக் கொண்டு ஏற்பானா?

புரிந்து கொள்வதில் பிரச்சினை இல்லை என்று, அவனது பதிலில் தெரிந்தது. "உண்மைதான். அவரவருக்குப் பொருத்தம் பார்த்துத் தெரிவு செய்வதில், அம்மாவுக்கு நிகர், அவர்களே தான். இப்போது இந்தப் பணத்தை எடுத்து உள்ளே வைக்கிறாயா? இன்னொரு முறை போகும் போது மணி சேஞ்சரிடம் கொடுத்து இந்திய ரூபாயாக மாற்றி தருகிறேன். வேறு ஏதாவது தேவை நேர்ந்தால் சட்டெனச் செலவு செய்ய வசதியாக இருக்கும்"

வேறு வழியின்றி அவள் பணத்தை எடுத்துக்கொள்ள, அவன் முறுவலித்தான். இருக்கட்டும் இன்னொரு வழி பார்க்கிறேன் என்று உள்ளூரக் கறுவிய போதும், மனப்பாரம் நீங்கிவிட, அவளும் முறுவலித்தாள்.

"நாளைக்குப் பாட்டி வீட்டுக்கு வரும்போது, ஊதாவில், ரோஜா வண்ண வேலைப்பாடு செய்த சுரிதாரை அணிந்து கொண்டு வாயேன். அம்மாவே பார்த்து எப்படியிருக்கிறது என்று சொல்லட்டும்" என்று அவள் அந்தச் சுரிதார்களில் ஒன்றை உடனடியாக அணிவதையும் உறுதி செய்து கொண்டுதான், அவன் கிளம்பினான்.

பாட்டி வீடு, தனக்கும் சாதகம் என்று புவனேசுவரி எண்ணினாள். அங்கே வைத்து இவன் கோபத்தைக் காட்ட முடியாது. . .யாருமே தான்.

அவன் சொல்லை மீற மாட்டாமல் சுரிதாரை அணிந்து கொண்டு கண்ணாடியில் பார்த்தபோது, புவனாவுக்கே, தன் தலையலங்காரம் பொருத்தமற்றுத் தோன்றியது.



கொண்டையை அவிழ்த்து, ஜடையாகப் போட்டுக் கொள்ளலாமா என்று அவள் யோசிக்கும் போது, லோகேசுவரி தயாராகி வந்தாள்.

தமக்கையைப் பார்த்ததும், "என்னக்கா, நீங்கள்" என்று அருகில் வந்து கொண்டை வலையை அகற்றிக் கூந்தலைப் பிரித்தாள். "உங்களை விடப் பெரியவர்கள், அந்த மானசி, எப்படித் தலை அலங்காரம் செய்திருந்தார்கள். வாருங்கள் இன்றைக்கு நான் உங்களுக்குத் தலை வாரி விடப் போகிறேன்" என்று முன்புற கூந்தலைச் சேர்த்து வாரி, பின்னுச்சியில் கிளிப் மாட்டி, மீதியை லூசாக விட்டாள்.

"ஏய் லோகேஸ் தோளில் கையில் எல்லாம் கூந்தல் படுவது ஒரு மாதிரி இருக்கிறதுப்பா" என்று மூத்தவள் ஆட்சேபிக்கவும், மொத்தக் கூந்தலையும் சேர்த்து, பதினைந்து சென்டிமீட்டர் இடைவெளியில் இரண்டு இடங்களில், உடைக்கேற்ற வண்ணத்தில் பாண்ட் போட்டு விட்டாள்.

அவர்களை அழைத்துப் போக வந்த சரவணன், புவனேசுவரியைப் பார்த்ததும் "ஐயய்யோ" என்று கத்தி விட்டு, "இந்த மாதிரி, உங்கள் நாட்டிலிருந்து ஒவ்வொருவராக எல்லோரும் இங்கே வந்து சேர்ந்து விட்டால், எங்கள் நாட்டுக்காரர்களுக்கு இடம் எங்கே இருக்கும்?" என்று கேட்டான். "சும்மாவே இது மக்கள் தொகை மிகுந்த நாடு".

இருவரும் திகைத்து நோக்க, "பின்னே என்னப்பா? அக்காவும் தங்கையுமாக, முதலில் இரண்டு பேர் வந்தீர்கள். இப்போது ஓசைப்படாமல், இதோ இன்னொரு தங்கையையும் வரவழைத்திருக்கிறீர்களே. என்ன அநியாயம்" என்று அவன் புவனாவைக் காட்டவும், இரு சகோதரிகளும் கலகலவென்று நகைத்தனர்.

சிரித்து முடித்ததும், "நீங்கள் வாயாடி என்பது சரியாகத்தான் இருக்கிறது" என்று, புவனேசுவரி சிறு வெட்கச் சிவப்புடன் கூற, "பொய், பொய் எல்லோரையும் போலத்தானே, என் வாயும் இருக்கிறது? அது மட்டும் தனியாகத் 'தையாதக்கா' என்று ஆடிக்கொண்டா இருக்கிறது? ஏன், லோகா? இல்லைதானே? நன்றாகப் பார்த்து உன் அக்காவிடம் சொல்லு" என்று சரவணன் கூற, மீண்டும் சிரித்தபடியே மூவருமாகக் கிளம்பிச் சென்றனர்.

எல்லோரு புவனேசுவரியை வியந்துதான் நோக்கினர்.

"எப்போதும், இப்படி இருப்பதற்கென்னம்மா?" என்றாள் மனோகரி.

"அப்படியானால், அந்தக் கொண்டைக்குள் இருந்தது எல்லாமே சொந்தக் கூந்தல்தானா? எவ்வளவு அடர்த்தி" என்று ஆச்சரியப்பட்டாள் சுதா.

"பிரமாதம்" என்று மானசியும், "அழகாக இருக்கிறது" என்று வீணாவும் பாராட்டினர்.

லோகேசுவரியின் உடையைப் பாராட்டியும், ஓரிரு வார்த்தைகள் சொல்லப்பட்டன என்ற போதும், ஒரு சிறு ஒதுக்கம் இருப்பது புரிய, புவனேசுவரி உள்ளூர வருந்தினாள்.

அதைத் தானும் உணர்ந்தாற் போல பாட்டியம்மாள், லோகேசுவரியை அழைத்துத் தன்னருகே அமர்த்தி, அவளுடன் பேச்சுக் கொடுத்தார்.

கிடைத்த முதல் வாய்ப்பில், புவனேசுவரியின் அருகே வந்து அமர்ந்து கொண்டு "லோகாவுக்கு என் பாராட்டுக்கள்" என்றான் தயானந்தன்.

அவள் வியப்பும் திகைப்புமாக நோக்கவும், "எப்படித் தெரியும் என்று இருக்கிறதா? நீயாக, உன் அருமைக் கொண்டையை விட்டுக் கொடுத்திருக்க மாட்டாய் என்பது எனக்கு நிச்சயம்" என்று சிரித்தான் அவன். "நான் சொல்வது சரிதானே?"

ஒப்புதலாகத் தலையாட்டியவளுக்கு இதுதான் வரியாக வாய்ப்பு என்று தோன்றி விட, "எனக்கு ஓர் உதவி செய்ய முடியுமா?" என்று கேட்டாள்.

"சொல், என்ன வேண்டுமானாலும் செய்கிறேன் என்று சொல்ல ஆசைதான், ஆனால் வாக்குக் கொடுத்துவிட்டு மாட்டிக் கொள்ளக் கூடாது அல்லவா? என்ன உதவி என்று சொல்லு, முடிந்தால் செய்கிறேன்" என்றான் அவன்.

சற்றுத் தயங்கிவிட்டு, "எனக்கு ஒரு வேலை வேண்டும்..." என்றாள் அவள்.

"ஏன்? சாப்பாடு, துணி மணிக்கு ஈடு கட்டவா?" என்று உடனே கேட்டான் அவன்.

"நீ வெளிநாட்டுக் குடிமகள், உனக்கு வேலையோ, 'அதற்குச் சம்பளமோ தருவது சரியல்ல என்பது, உனக்குத் தெரியாது என்றா சொல்லுகிறாய்?"

இதற்குப் பதில், அவள் வைத்திருந்தாள். "சுறுசுறுப்பாக வேலை செய்து பழக்கப்பட்டவள் நான். நாள் முழுவதும் சும்மா உட்கார்ந்திருப்பது போரடிக்கிறது... சும்மா ஏதாவது உதவி மாதிரியாவது..."

உதட்டைப் பிதுக்கினான் தயானந்தன். நல்ல வாதம் தான். ஆனால், அதிலும் ஒரு பலவீனம் இருக்கிறது. ஒரு நாள், சில மணி நேரம் அவளைத் தனியே விட முடியாது என்றாயே தினந்தோறும், நாள் முழுவதும் அவளை விட்டு விட்டு எப்படியம்மா வேலைக்குப் போவாய்?"

இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்?

புவனேசுவரியின் திகைப்பைப் பார்த்து விட்டு, "என்னை நீ ஜெயிக்க முடியாது புவனி" என்று சிரித்தான் அவன். தொடர்ந்து, "நானாகத் தோற்றால் தான் உண்டு தோற்கட்டுமா?" என்றான் குரலைத் தணித்து, ரகசியம் போலக் கேட்டான்.

சட்டென மூச்சடைத்தது அவளுக்கு. இதற்கு என்ன அர்த்தம்?

புவனா பதில் சொல்லத் தோன்றாமல் பேந்த விழிப்பதைக் கவனித்தோ அல்லது இந்தப் பேச்சையே கவனித்துக் கொண்டு இருந்ததாலோ, பாட்டி அருகில் வந்தார்.

"என்ன விஷயம், தயாம்மா?" என்று மென் குரலில் வினவினார்.

கண்ணில் சிரிப்புடன், "பெரிதாக ஒன்றும் இல்லை பாட்டி. உங்கள் பேத்திக்கு வேலை வேண்டுமாம். சும்மா இருப்பது போரடிக்கிறதாம்" என்று செல்லப் பேரனாகப் புகார் செய்தான் தயானந்தன்.

எல்லாக் கதையும் சொல்லப் போகிறானா? சுரிதாருக்கு விலை கொடுப்பதற்காக அவள் வேண்டும் என்றே வேலை கேட்டதைச் சொன்னால், பாட்டி தப்பாக நினைப்பாரோ?



புவனேசுவரி நிமிரவும், "இந்தம்மா ஆசிரியை, பாட்டி நாம் என்ன பள்ளியா நடத்துகிறோம். இவர்களுக்கு வேலை கொடுக்க?" என்றான் பேரன்.

"அதற்கென்னடா? கூட்டிக் கழிக்கிற மாதிரி, கணக்கெழுதுகிற மாதிரி ஏதாவது வேலை இராதா? பொழுது போகத்தானே, கேட்கிறாள்? கொடு." என்று வற்புறுத்தினார் பாட்டி. "நீயே பத்திரமாகக் கூட்டிப்போய், நீயே கூட்டி வந்துவிடு" என்று பேரனைப் பார்த்தார்.

அவளுக்காகப் பேசுகிற மாதிரிதான் இருந்தது. ஆனால், அவளுக்குத் தெரியாமல் அவர்கள் இருவரும் ரகசியம் பேசுகிற மாதிரி ஓர் உணர்ச்சியும் புவனேசுவரிக்கு உண்டாயிற்று.

ஆனால், இதில் என்ன ரகசியம் இருக்க முடியும்?

இப்போது , பேரன் பாட்டியைப் பார்த்தான் "நான் வெளியூர் செல்லும் போது? அத்தோடு, லோகாவைத் தனியே விட்டு விட்டு,புவனி மணிக்கணக்காக வெளியே போக முடியுமா?" என்று கேட்டான்.

"அதற்கென்னடா? வெளியூர் செல்லும்போது, புவனாவுக்கு ஒரு கார் ஏற்பாடு பண்ணிவிட்டுப் போய்வா. புவனா வீட்டில் இல்லாத நேரம் முழுவதும் லோகா, என்னோடு இங்கே இருக்கட்டும்" என்று சற்று அழுத்தத்துடன் கூறிவிட்டுப் பாட்டி அகன்றார்.

பாட்டியின் குரல் அழுத்தத்தில், சில தலைகள் திருப்பிப் பார்த்தன.

பாட்டியைப் போலவே, புவனேசுவரியும், அப்படியே நகர்ந்திருப்பாள்.

அதற்குள், "ஒரு வாரம் பத்து நாளில், ஒரு வேலை காலியாகும். ஆனால், அதற்கு நீ பொருந்துவாயா... உன்னால், அதைச் செய்ய முடியுமா என்பது தான், ரொம்...பச் சந்தேகமாக இருக்கிறது" என்றான் தயானந்தன் யோசனையோடு.

"ஏன்? ஏன் அந்த சந்தேகம்? உங்கள் தொழில் சம்பந்தமானது என்றால் கூடக் கற்றுக் கொண்டு செய்வேன்..."

"செய்வேன்... அப்புறம்? 'சரவணன்' வருகிறது. 'மாதவன்' வருகிறது 'தயானந்தன்' மட்டும் என்ன பாவம் பண்ணினான்? ம்?"

"செய்வேன் தயானந்தன்" என்று மெதுவாக அவன் பேரைச் சேர்த்துச் சொன்னாள் அவள் "ஆனால், அந்த வேலையில் என்ன பிரச்சினை?"

"அந்த வேலை செய்பவருக்கு இருக்க வேண்டிய முக்கியமான தகுதி, பொறுமை, கோபமே படக்கூடாது. அது உன்னால் முடியாதே என்றுதான்..."

வேலைக்குத் தகுதி பொறுமையாம், இது என்ன கதை?

சட்டென மூண்ட ஆத்திரத்துடன், "நீங்கள் சொன்னதெல்லாம், பொய். அப்படித்தானே? இந்த மாதிரி வேடிக்கை எல்லாம் என்னிடம் வேண்டாம்" என்று வெடுவெடுத்தாள்.

"மெய், புவனி. நம் ஏற்றுமதிப் பகுதியில் வேலை. சரக்கு அனுப்பச் சொல்லி, ஆர்டர் போட்டதுமே அனுப்பியாயிற்றா? இன்னும் வரவில்லையே என்று ஆலாய்ப் பறப்பார்கள். அரைமணிக்கொரு தரம் போன் செய்வார்கள். அவர்களிடம், இன்ன



தேதியில், இன்ன மாதிரி அனுப்பியிருக்கிறது, இப்படி வரும் என்று திரும்பத் திரும்பப் பொறுமையாகச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். உன்னால் எப்படி முடியும் பார் அதற்குள் ஆத்திரப்படுகிறாயே."

"அது.... பொதுவாக நான் பொறுமைசாலி தான் தயானந்தன். ஆனால்..."

"ஆனால், என்னிடம் மட்டும்தான் கோபம் வருகிறதா? ஆஹா அப்படியானால் சரி. இப்படி நீ ஆத்திரப்பட, நான் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே" என்று நகைமுகமாகக் கூறி, மீண்டும் அவளுக்குச் சினமூட்டி சிரித்தான் தயானந்தன்.

# 13

ஏதாவது காரணம் காட்டி, வாரத்துக்கு ஓரிரு முறை, அந்தக் குடும்பங்களில் எல்லோரும் யார் வீட்டிலாவது கூடுவது வழக்கமாக இருந்தது. அதில் கலந்து கொள்ளப் பெரும்பாலும், தயானந்தனே இரு சகோதரிகளையும் அழைத்துப் போனான்.

அதனாலோ என்னவோ, எல்லோரும் இவர்களிடமும் நன்றாகப் பழகலாயினர்.

தயானந்தன் செய்வது சரியாக இருக்கும் என்பது, பொதுவான கருத்து. அதைப் பின்பற்றுவதும் தானாக வந்தது. எனவே, முதல் நாள் போல அல்லாமல், எல்லோரிடமும் பேசிப் பழகவும் முடிந்தது.

சுதாவுடனும் கூட..

தயானந்தனே இரு முறை அவளை அழைத்துக் கொண்டு, குடிலுக்கு வந்தான்.

மனோகரி இருமுறை வந்து, நலம் விசாரித்து, பலகாரங்கள் கொடுத்து விட்டுப் போனாள்.

லோகேசுவரிக்கு இன்னும் சரியாகச் சாப்பிட முடியவில்லை. அவளுக்குப் பிடித்த மலேஷியப் பதார்த்தங்கள் சில செய்து கொடுத்தால் சாப்பிடுவாளோ என்று புவனேசுவரிக்குத் தோன்றிற்று. குடிலில் சமையல் செய்ய எல்லா வசதிகளும் இருந்ததால், மனோகரியிடம் சொல்லித் தேவையான பொருட்களைத் தருவித்து தருவித்து, மீகோரேங், சம்பல் போலச் சிலது செய்து தங்கைக்குக் கொடுத்தாள்.

மனோகரி பலகாரங்கள் அனுப்புவதை எண்ணி, இவைகளையும் நிறையவே செய்து அங்கேயும் அனுப்பினாள்.

சுவை பிடித்துப் போனது மட்டுமின்றி, 'இன்றைக்குச் சாப்பாட்டுக்கு, நீ ஒரு பதார்த்தம், இது செய்து வருகிறாயா' என்று கேட்கும் அளவுக்கு, எல்லோருடனும் பழக்கமும் அதிகரித்தது.

தமையனோடு, தாயும் சொன்னதாலோ என்னவோ, சுதாவுமே ஓரளவு இயல்பாகப் பழகலானாள்.

எனவே, தனித்து நிற்பது போன்ற உணர்வு வெகுவாக மறைந்து விட்டது.

ஆயினும், ஒரு சிறு உறுத்தலும், புவனேசுவரிக்கு, அடிக்கடி ஏற்பட்டது.

அந்த உறுத்தலின் காரணம், 'லீனா' என்ற பெயர். அங்கிருந்த மற்றவர்கள்



பேச்சில் அடிக்கடி அந்த பெயர் அடிபட்டது.

அவளது மாடல் மாதிரி அழகு, சுறுசுறுப்பு எல்லாம் பேசப்பட்டது.

அவள் நாடு திரும்பியதும், நிறுவனத்தின் நிர்வாகத்தில் பங்கெடுத்துக் கொள்ளப் போகிறாள். அதன் பிறகு திருமணம் பேச, ஊட்டியில் இருக்கும் அவளுடைய பெற்றோர் வருவார்கள் என்றெல்லாம், சற்றுத் தணிந்த குரலில் பேசினார்கள். லீனா படிக்கவென்று, யுஎஸ்ஸுக்குப் போயிராவிட்டால், சில ஆண்டுகளுக்கு முன்னரே திருமணம் நடந்திருக்கும் என்றும் சொல்லிக் கொண்டார்கள்.

எப்படியும், அவள் வருவது நிச்சயம், தயானந்தனின் தொழிலிலும், வாழ்விலும் அவளது பங்கும் நிச்சயம் என்பது எல்லோரின் ஊகமாகவும் இருந்தது.

இவையெல்லாமே, புவனேசுவரியின் அமைதியைக் கெடுத்தன.

ஏன் என்று யோசித்த போது, அவளுக்குக் காரணமும் புரிந்தது.

இப்போது தான் ஒரு வழியாக, இங்கே எல்லோருடனும் பழக முடிந்திருக்கிறது. புதியவளாக லீனா வரும்போது, மீண்டும் இதை, அடியிலிருந்து தொடங்க நேரும்.

அவள் எப்படிக் குணமோ? லோகாவைப் பார்த்து முகத்தைத் திருப்பினால்?

கவலை இருக்கத்தான் செய்யும். அமைதியும் குறையத்தான் செய்யும்.

பெருமூச்சுடன் எழுந்து, மற்ற வேலைகளில் மனதைச் செலுத்த முயன்றாள் புவனேசுவரி.

தயானந்தன் சொன்னபடி, அவளுக்கு வேலை கொடுத்தான்.

அவன் சொன்னது போலவே, பொறுமையைச் சோதிக்கும் வேலைதான்.

அப்போதுதான் சொல்லியிருப்பாள், இன்ன எண்ணுள்ள பார்சல், இந்த விமானம் அல்லது கப்பலில் பதிவு பண்ணி ஏற்றியாயிற்று. இன்ன நேரம் உங்களுக்குக் கிடைக்கும் என்று, தெளிவாகச் சொல்லியிருப்பாள். அவள் சொன்ன அரைமணி நேரத்துக்கும் குறைவான நேரத்திலேயே, அதே இடத்தில் இருந்தே, அடுத்த 'கால்' வந்து விடும். எல்லோரும், அதே போலப் பேசினார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால், பலர் பொறுமையற்று எரிச்சல் காட்டினார்கள்.

பல நாடுகளில் இருந்து பல ஊர்களில் இருந்து போன் அழைப்புகள் வந்து கொண்டே இருந்தன.!

அத்தனைக்கும் இனிய குரலில் பதில் சொல்லிக்கொண்டே இருக்க நேர்ந்தது.!

அதுவரை இந்த வேலையைச் செய்து வந்தவள், அன்று முழுவதும் இருந்து, கற்றுக் கொடுத்துவிட்டுப் போனாள்.

"வேறு வேலைக்குப் போகிறீர்களா?" என்று பேச்சுவாக்கில் புவனேசுவரி கேட்டதற்கு, "இல்.. அது.. வந்து...!" என்று அசடு வழிந்துவிட்டு "இப்போதைக்குக் கொஞ்சம் ஓய்வு எடுத்துவிட்டு, அப்புறமாக யோசிக்க வேண்டும்.!" என்று முடித்தாள் அவள்.!

இந்த வேலையைத் தொடர்ந்து செய்தால், தானும் இப்படித்தான்

தடுமாறுவோமோ, தனக்கும் இப்படித்தான் ஓய்வு தேவைப்படுமோ என்று யோசித்தாள் புவனேசுவரி.!

ஆனால், வெவ்வேறு குணங்களை உடைய மாணவர்களைச் சமாளித்துப் பழகியிருந்ததாலோ என்னவோ, இந்த வேலையும் எளிதாகவே பழகிப் போயிற்று.!

ஒரு காலத்தில், 'பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில், சூரியன் அஸ்தமிப்பது இல்லை.!' என்று சொல்லிக் கொள்வார்கள்.! அதுபோல, உலகம் முழுவதிலுமே காஃபி அருந்தாத நாடுகள், மிகவும் குறைவு.! எனவே, இது இருபத்திநாலு மணி நேரமும் செய்ய வேண்டிய வேலையாக இருந்தது.!

பகல் பத்திலிருந்து, மாலை ஆறு மணி வரை, புவனேசுவரியின் பொறுப்பு.! மற்ற நேரத்தை வேறு இருவர், ஆளுக்கு எட்டு மணி நேரம் செய்தார்கள்.!

"அவர்கள் இருவரும் தூக்கம் விழித்துச் செய்யும் அதே வேலையை, நான் மட்டும் நோகாமல் செய்வது போல, மனம் குத்துகிறது.!" என்றாள் புவனேசுவரி, வேலை முடிந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது.!

"அதற்காகத்தான் அவர்களுக்குத் தனிப்பட அலவன்ஸ் கொடுப்பது.! ஆனால், பாவம் உனக்குத்தான் ஊதியமே கிடையாது.! வெறும் பயிற்சிதானே?" என்றவன் ஓரக் கண்ணால் அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, "ஊதியத்தைத்தான், சுரிதார் செட் வடிவில், ஏற்கனவே கொடுத்தாயிற்றே, என்று எண்ணமாக்கும்.!" என்றுரைத்து, அவளை அதிர வைத்தான்.!

ஏனெனில் , கிட்டத்தட்ட அதே போலத்தான், அவளும் நினைத்துக் கொண்டிருந்தாள்.!

ஓசிச் சாப்பாட்டுக்கும், துணிகளுக்குமான விலை, இந்த உழைப்பு என்று இவனுக்கு என்ன தெரியும் என்று எண்ணினாள்.!

ஆனால், அது இவனுக்கு எப்படித் தெரியும்?

"இன்னும் விலை உயர்ந்ததாக நாலைந்தை வாங்கி வந்தால், என்ன செய்வாய், புவனி? 'ஓவர்டைம்' வேலை பார்ப்பாயா?"

அவனது பேச்சோடு அந்த 'புவனி'யும் சேர்ந்து, அவளைத் திணறடித்தது.!

சுதாரித்துக்கொண்டு, "நான் வேலை கேட்டது, பொழுது போவதற்காக என்று முன்பே சொல்லியிருக்கிறேன்.! அத்தோடு, உங்கள் தேர்வு பிடிக்கவில்லை என்று, நீங்கள் வாங்கி வருவதைத் திருப்பிக் கொடுக்க, எனக்கு எவ்வளவு நேரம் ஆகும்?" என்று அவள் மிடுக்காகக் கேட்கவும், "பிரமாதம்.!" என்று சிரித்தான் அவன்.!

மீண்டும் இந்தப் பேச்சை வளர்க்க மனமற்று, "லோகா எப்படி இருக்கிறாளோ?" என்று வேறு கேட்டாள் புவனேசுவரி.

உண்மையில் அவளுக்கு, லோகேசுவரி பற்றிக் கவலை கிடையாது.!

காலையில், அவளை விட்டு விட்டுக் கிளம்பும்போதே, "லோகோவைப் பற்றி நினைத்துக் கொண்டு இராதேம்மா.!" என்று புவனேசுவரியிடம் சொல்லிவிட்டு, அவள் காது கேட்கவே, சின்னவளிடமும், பார் லோகு, குடிலில் எப்படி இருப்பாயோ, அதே போலவே, இங்கேயும் விருப்பம்போல இரு.! டீவி பார்ப்பது என்றால், பார்.!



தூக்கம் வந்தால், தூங்கு.! பாட்டி என்ன நினைப்பாளோ, என்று கவலைப்படாதே.! பாட்டி, இப்படிப் பாட்டியாகவே பிறந்தவள் அல்ல.! இரண்டு பெற்றவள் என்பதால், இந்த நேரம் எப்படி இருக்கும் என்று, எனக்கும் தெரியும்.! சமையல்காரியைக் கூப்பிட்டு, வேண்டியது செய்யச் சொல்லிச் சாப்பிடு.!" என்று சொன்னார்.

பாட்டியிடம் உபசாரப் பேச்சு கிடையாது.!

"நிம்மதியாகத் தூங்கியதாகக் கேள்வி.! கிளம்புமுன் பாட்டியோடு பேசியபோது சொன்னார்கள்.!" என்றான் அவன். "எங்களுக்கு பாட்டி வகை உறவு கிடையாது. இப்போது இப்படி ஒரு பாட்டி கிடைத்தது. எங்கள் அதிருஷ்டம்தான்.!"

மீண்டும் அவனது பார்வையை உணர்ந்து, அவள் திரும்பிப் பார்த்தபோது, தயானந்தன் முகத்தில் முறுவல் மலர்ந்திருந்தது.!

முதல் நாள் என்று சீக்கிரமாக வீடு திரும்பிச் சென்றால், லோகேசுவரியும் உற்சாகமாகக் காணப்பட்டாள்.!

சரவணனும் அலுவல் முடிந்து வந்திருக்க, மூவருமாகத் தோட்டத்தில் அமர்ந்து, முக மலர்ச்சியுடன் இவர்கள் வருவதைப் பார்த்த காட்சி, அழியாத சித்திரமாய்ப் புவனேசுவரியின் மனதில் பதிந்தது.!

முக்கியமாக தங்கையின் முகம்.! அன்றுவரை அவள் கண்டறியாத வகையில், மகிழ்ச்சியும் நிம்மதியுமாக, லோகேசுவரியின் முகம் ஒளிர்ந்தது.!

புவனேசுவரி இறங்கியதும், "அம்மா காத்துக் கொண்டிருப்பார்கள். நான் வருகிறேன், பாட்டி.! எல்லோருக்கும் பை.!" என்றுவிட்டு தயானந்தன் காரைத் திருப்பினான்.

பாட்டி, புன்னகையோடு பேரனுக்குக் கையாட்டுவதைப் பார்த்தபோதுதான், இவர் மேல், எல்லோரும் ஏன் பிரியமாக இருக்கிறார்கள் என்று புவனேசுவரிக்கு முழுமையாகப் புரிந்தது.!

'அம்மாதானே.! இன்னும் ஓர் ஐந்து நிமிஷங்கள் காத்திருக்கட்டும்., இப்போது என்னோடு பேசிக்கொண்டிரு' என்று அந்த முதியவள் கூறவே இல்லை.! பேரனிடம் மிகுந்த பாசம் இருந்தும்கூட.!

பத்து மாதம் சுமந்து பெற்ற தாயின் உரிமையை மதித்து, அனுப்பி வைத்தார்.!

அதுவே, அவரை மற்றவர் மதிக்கக் காரணம் ஆயிற்று.!

வேலை செய்வது, புவனேசுவரிக்குப் பல வகையிலும் நிம்மதியை அளித்தது.!

பாட்டியின் துணையில், லோகேசுவரியும் சந்தோஷமாக இருந்தாள்.! அவளால் கொஞ்சம் சாப்பிட முடிந்ததால், அவளது உடம்பும் தேறி வந்தது.!

மொத்தத்தில், வாழ்க்கை அமைதியாகச் சென்றது எனலாம்.!

அந்தச் சமயத்தில், மலேஷியாவில் இருந்து ஒரு கடிதம் வந்தது.!

இன்பநாதன்தான் எழுதியிருந்தான்.! புவனேசுவரி எப்போது திரும்பி வரப் போகிறாள் என்று கேட்டு எழுதியிருந்தான்.!

அவனுடைய தாயார், அவனைத் திருமணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்துகிறாளாம்.! அவனால்தான், புவனேசுவரியை மறக்க முடியவில்லையாம்.!



அவள் உடனே திரும்பி வந்தால், மீண்டும் அவளுக்கு வேலை கொடுப்பதற்கு பள்ளித் தலைமை ஆசிரியர் தயாராக இருக்கிறாராம்.! அதனால், உடனே திரும்பி வர வேண்டுமாம்.! அவனால் அவளைப் பாராமல், சாப்பிடக்கூட முடியவில்லையாம்.!

என்ன மனிதன் இவன்? தலைமை ஆசிரியர் வேலைத் தரத் தயார் என்றதும், அவளைப் பாராமல் உண்ண முடியவில்லையாமா?

அவளுடைய அருமைத் தங்கையைப் பற்றி, ஒரு வார்த்தை விசாரிக்கவில்லை.! வேகத்தை அடக்கிக்கொண்டு, அதை மடித்து உறையினுள் வைத்தாள். வீட்டில் குப்பை சிதறவிட்டு, அவளுக்குப் பழக்கம் இல்லை.!

பத்து நாட்களாக இருந்த அமைதி, புவனேசுவரிக்கு, அன்று கலைந்து போயிற்று.!

'உதயா'வுக்கு வந்து சேர்ந்ததுமே, முகவரி தெரிவித்து, இன்பநாதனுக்கு அவள் ஒரு கடிதம் எழுதியிருந்தாள்.! லோகேசுவரி பற்றிய கவலைகளையும் ஓரளவு அதில் எழுதியிருந்தாள்.!

அதற்கு, அவன் ஆறுதல் கூறாவிட்டாலும் பரவாயில்லை.! லோகோவைப் பற்றிக் கண்ட கெட்ட வார்த்தைகளால் திட்டி, அவள் அழிந்து போவாள் என்று சாபமிட்டதோடு, அவளோடு சேர்ந்து, இவளும் நாசமாவாள் என்று ஆருடம் சொல்லி முடித்திருந்தான்.!

லோகேவிற்குத் தெரியாமல், அந்தக் கடிதத்தை எரித்துவிட்டிருந்தாள் புவனேசுவரி.!

அப்பேர்ப்பட்ட அன்பின் திருவுருவத்துக்கு, இப்போது அவளைப் பாராமல் உண்ண முடியவில்லையாமா?

நம்புவாளா என்று கூடவா, தோன்றாது? அவ்வளவு பேராசையா?

வாழ்க்கைக்குப் பணம் தேவை என்பதால்தான், பணக்கணக்குப் பார்க்கிறான் என்று எண்ணியது, எவ்வளவு மடத்தனம்?

இதையும் எரித்துவிட வேண்டும் என்று, அவள் எழுந்தபோது, வெளியே தங்கை அழைக்கும் குரல் கேட்டது.! சட்டெனக் கடிதத்தை சோஃபா குஷனுக்கடியில் மறைத்து வைத்துவிட்டு, வாயிற்புறம் சென்று பார்த்தாள்.

வெளியே, மனோகரியும் நின்று கொண்டிருந்தாள்.

புவனேசுவரியைக் கண்டதும், "புவனா, நாளை இரவு, இருவரும் அங்கே சாப்பிட வந்து விடுங்கள்.! லீனா வருகிறாளாம். உன் மீ பிரட்டல் கொஞ்சம் செய்கிறாயா? இது கொலஸ்ட்ரால், அது கலோரி அதிகம் என்று, சாப்பாட்டில் ரொம்பப் பிகு பண்ணுவாள். உன் மீ, பிரச்சினை இல்லாததாக இருக்கும் என்று நினைக்கிறேன்.! ஞாயிற்றுக்கிழமை என்பதால், முடியும் அல்லவா?" என்று சிறு கவலையுடன் கேட்டாள்.!

புலி வருகிறது., வருகிறது என்று வந்தே விட்டது.!

ஆனால், அவள் புலியாக இல்லாமல் இருக்க வேண்டுமே.!

மனதின் கலக்கத்தை வெளிக்காட்டாமல் மறைத்து, "அதற்கென்ன ஆண்ட்டி?



கட்டாயம் செய்து தருகிறேன்.! உப்பு, உறைப்பு, நம் வழக்கம் போலத்தானே?" என்றாள் புவனேசுவரி.

எல்லோரும், தயானந்தனின் வீட்டில் குழுமி, அரை மணி நேரத்துக்குப் பிறகே, அந்த லீனாவின் கார், அவன் வீட்டுமுன் வழுக்கிக்கொண்டு வந்து நின்றது.!

அவளைப் பார்த்ததும், 'அட, நாமும்கூட, தீர்க்க தரிசிதானோ' என்று புவனேசுவரிக்கு வியப்பாக இருந்தது.!

ஏனெனில், புலி, புலி என்று லீனாவை அவள் நினைத்ததற்கு ஏற்றாற்போல, வரிப்புலி போலவே, வெல்வெட்டில், உடலோடு ஒட்டிய உடையணிந்து வந்திருந்தாள் அவள்.!

ஆனால், கறுப்பும், மஞ்சளுமாக அந்தக் கோடுகள், அவளது மெல்லிய உடலின் வளைவுகளை, அழகாக எடுத்துக்காட்டியது உண்மையே!

மாடல் மாதிரி என்று மற்றவர்கள் பேசியதும் சரியே! கிள்ளி எடுக்கச் சதை இல்லாத மாதிரித் தோன்றினாலும், படு கவர்ச்சியாக இருந்தாள்!

லீனா அழகாக இருந்தது பற்றிப் புவனேசுவரிக்கு எந்த வருத்தமும் இல்லை.! ஆனால், சுதா அவளையே பார்த்தபடி, நாய்க்குட்டி மாதிரி, அவள் பின்னே ஓடியதுதான் வேதனையாக இருந்தது.! இப்போதுதான் இந்த சகோதரிகளோடு, சாதாரணமாகப் பழகத் தொடங்கியிருந்தாள்.! இன்று அவர்களைக் கண்டுகொள்ளவே இல்லையே.!

மனோகரி அஞ்சியதும் சரியாகத்தான் இருந்தது.! லேசாக சர்க்கரையிட்ட பழச்சாறை ஒரு மிடறு விழுங்கியவள், "என்ன ஆண்ட்டி, இப்படி இனிப்பைக் கொட்டி வைத்திருக்கிறீர்கள்? பழச்சாறு அவ்வளவும், வீண்.! கழிவுநீரில் கொட்டுங்கள்.! இல்லாவிட்டால், இதைக் குடித்தே, சர்க்கரை வியாதி வந்துவிடும்.!" என்று மற்றவர்களையும் குடிக்க விடாமல் பண்ணினாள்.!

பலர் ஜூஸ் தம்ளரைத் தயக்கத்துடன் அப்படியே வைத்துவிட, லோகா, அதை நிதானமாகக் குடித்து முடித்தாள்.! "ஆண்ட்டி, எனக்கு, இன்னொரு தம்ளர் இந்தப் பழச்சாறு வேண்டுமே.!" என்று கேட்டாள். "ரொம்ப நன்றாக இருக்கிறது, ஆண்ட்டி.!"

அவளிடம், முன்பிருந்த குன்றல், அடியோடு போய்விட்டது.! கூடவே, பாட்டியைப் பின்பற்றி, எல்லோருமே அன்பு காட்டவும், அவளுக்குத் தெம்பும் திடமும் கூட ஏற்பட்டிருந்தன.!

புவனேசுவரிக்கு தங்கையைக் கட்டிப்பிடித்துக் கொள்ள வேண்டும் போல இருந்தது.! உடனே, உள்ளே ஓடிப்போய், இன்னொரு தம்ளர் பழச்சாறு கொண்டு வந்து தங்கையிடம் கொடுத்தாள்.!

நிதானமாகத் தன்னதையும் குடித்து முடித்தாள்.!

அதுவரை, லீனாவை யாரும் தட்டிப்பேசியது இல்லை போலும்.! சட்டெனத் திரும்பி, ரொம்ப முக்கியம் போல, மான்சியுடம் பேசலானாள்.!

விருந்து முடிவதற்குள், லீனாவுக்குத் தங்களைப் பிடிக்கவில்லை என்று, இருவருமே, நன்றாகவே புரிந்துகொண்டனர்.!

மேடை ரகசியம் பேசும் குரலிலேயே, அவர்கள் இருவரைப் பற்றியும் நக்கலாக ஏதேதோ சொன்னாள்.! "சுதா, அந்தப் பச்சைதான், நீ சொன்ன 'அந்த'ப் பெண்ணா?" என்று கேட்டுத் தெரிந்து கொண்டாள்.! "இந்த சுகனின் புத்தி ஏன்தான் இப்படிப் போயிற்றோ.!" என்று வருத்தப்பட்டாள்.! சற்றுப் பொறுத்து "சுகனுக்கு, என்றைக்குமே, தரம் பார்க்கத் தெரிந்ததே இல்லை.!" என்று வேறு எதையோ சொல்வது போலக் குறைப்பட்டாள்.!

எதிலுமே, நேரடியாகப் பதில் கொடுப்பதற்கு இல்லை.! என்றாலும், அவளைப் போலவே ஜாடையாகத் திருப்பிக் கொடுக்கவும் முடியாது போயிற்று.!

மனோகரியின் கலக்கம் நிறைந்த கெஞ்சல் பார்வைக்காக, எல்லாவற்றையுமே அவர்கள் பொறுக்கும்படி ஆயிற்று.!

உணவிலும், மனோகரி அஞ்சியது போலவே, நிறையப் பதார்த்தங்களைக் கெடுதல் என்று விலக்கினாள்.! "இது போல, எண்ணையும் நெய்யுமாகச் செய்து கொடுத்து, மாமாவுக்கு நோய் வரச் செய்ததே, நீங்கள்தான்.!" என்று குற்றம் சாட்டினாள்.

பொதுவாக, மனோகரி வீட்டுச் சமையல், பெருமளவு ஆரோக்கியம் பேணுவதாகவே இருக்கும்.! காய்கறி, கீரை பருப்பு, அசைவம் எல்லாமே, அதிகப்படியான கொழுப்புச் சத்து இல்லாமல், ஆனால் சுவையாகத் தயாரிக்கப்பட்டிருக்கும்.! கூடவே, சுதாவுக்கு சேப்பங்கிழங்கு வறுவல் பிடிக்கும் என்று, அதுவும் கொஞ்சம் இருக்கும்.!

எல்லோருமே தேவை உணர்ந்து, அளவோடு உண்ணவும் கற்றவர்கள்.!

இவளும், வேண்டாததை ஒதுக்கி, விருப்பப்பட்டதை உண்ண வேண்டியதுதானே?

இது மோசம், அது தப்பு என்று, மற்றவர்களையும் சாப்பிட விடாமல் கெடுத்து, சிரமப்பட்டுச் செய்தவர் மனதை நோகடிக்கலாமா?

விருந்தோம்பலில், வீட்டாருக்குச் சில கடமைகள் உண்டு என்றால், வந்த விருந்தினரும், சில விதிமுறைகளைக் கடைபிடித்துத்தானே ஆக வேண்டும்?

அந்த நினைவு இல்லாமல் இவள்தான் எல்லோரையும் போட்டு விளாசிக்கொண்டு இருக்கிறாள் என்றால், யாருமே இவளை அடக்க முயற்சிக்கவும் காணோமே என்று எண்ணினாள் புவனேசுவரி.!

முக்கியமாக தயானந்தன் சும்மா இருந்ததுதான், அவள் மனதை வாளாய் அறுத்தது.!

பொதுவாக தாயாரைக் குறை சொன்னால், அவனுக்குப் பிடிக்காது.! மறைமுகமாக, அதைத் தவிர்க்க முயற்சிப்பான். அது முடியாமல் போனால், நேரடியாகவே சொல்லி விடுவான் என்று, ஒரு தரம் மானசி, அவளிடம் கூறியிருந்தாள்.!

அப்படிப்பட்டவன், இப்போது ஏன் சும்மாவே இருக்கிறான்?

லீனாவின் மீதுள்ள காதல் காரணமா?



சட்டெனப் புவனேசுவரியின் நெஞ்சுக்குள் ஒரு தீ பற்றி எரிந்தது.!

அந்த வினாடியில், அவளுக்கு ஓர் உண்மையும் புரிந்தது.!

# 14

புவனேசுவரி, தயானந்தனைக் காதலிக்கிறாள்.!

இன்று நேற்றல்ல.! பல நாட்களாகவே, அவள் மனதில் இந்த நேசம் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது.!

அவனிடம் கேலியும் கிண்டலுமாக உரையாடுவது உற்சாகம் தந்ததை உணரத்தானே செய்தாள்.! அப்போதே அவளுக்குப் புரிந்திருக்க வேண்டாமா?

அவனுடைய வருங்கால மனைவியோ என்ற ஊகத்தினாலேயே, அந்த லீனாவின் பெயரைக் கேட்கவே பிடிக்காமல் போயிற்றே.! அப்போதேனும் அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டாமா?

மற்றவர்கள் பெயரெல்லாம் வாயில் வருகிறது., என் பெயர் மட்டும் என்ன என்று கேட்டானே.! அந்தத் தயக்கம் ஏன் என்று, அப்போதாவது எண்ணிப் பார்த்தாளா? மரம், மட்டை, யானை, குதிரை போல, அவர்கள் பெயரைச் சொல்லும்போது, அவள் மனம் எந்தவித இனம் புரியாத உணர்ச்சியிலும் தவிப்பது இல்லையே., இவன் பெயருக்கு மட்டும் அந்த வலிமை எப்படி வந்தது என்று அவள் யோசித்திருக்க வேண்டாமா?

இல்லை.! அவள் யோசிக்கவே இல்லை.!

அவன் இன்னொருத்தியை மணக்கப் போவதை எண்ணி, நெஞ்சில் தீப்பிடித்த பிறகுதான், உச்சந்தலையில் ஆணி அறைந்தாற்போல, உண்மை புரிகிறது.!

கடவுளே.! எதிர்காலமே இல்லாத இந்தக் காதல் அவளுக்கு ஏன் வந்தது?

தன்னை அறியாமல் அவளது கண்கள் தயானந்தனை நாடின.!

அவனும், அப்போது அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.!

அவளது திகைப்பையும் கண்டிருப்பானோ, என்னவோ? அவளது பார்வையைச் சந்தித்ததும், 'என்ன?' என்பது போலப் புருவங்களை உயர்த்தி, ஜாடையில் வினவினான்.

என்னவென்று தெரிவிப்பாள்? உண்மை அறிந்தால், அருவருத்துப் போய்விட மாட்டானோ என்று எண்ணும்போதே, கண்ணோரம் கரிப்பதை உணர்ந்து, புவனேசுவரி பதறிப் போனாள்.!

இந்த இடத்தில் கண்ணீர் வந்தால் எவ்வளவு கேவலம்?.!

அவசரமாகத் தண்ணீரை எடுத்து, "மிமிளகாயைக் கடித்துவிட்டேன்.! கா..ரம்.!" என்று குடித்தாள்.

நம்பியிருப்பானா? ஒரு மாதிரி, அவளது சமாளிப்புகளை, இலகுவாகக் கண்டு கொள்கிறவன் ஆயிற்றே.!

கலக்கத்துடன் பார்த்தபோது, "பக்கத்தில் உப்புத்தூள் இருக்கிறதா? கொஞ்சம் எடுத்து நாவில் தடவிக் கொள்.! உடனே காரம் சமனப்பட்டுவிடும் என்று, பாட்டி சொல்வார்கள்.!" என்றவாறு, உணவு மேஜையில் உப்புத்தூள் சீசாவைத் தேடி எடுத்து அவள் பக்கம் நகர்த்தினான் தயானந்தன்.

வேறு வழியின்றி, நாக்கில் தடவிக்கொண்ட உப்பு, சகிக்க முடியாமல் கரித்த போதும், தன் நடிப்பை அவன் நம்பினான் என்கிற அளவில், திருப்தியுற்றாள் புவனேசுவரி.!

இந்த நாடகத்தை வெறுப்புடன் பார்த்தது லீனா.!

தயானந்தன் போய், அந்தப் பெண்கள் இருவரையும் மலேஷியாவில் இருந்து அழைத்து வந்தான் என்று கேள்வியுற்றதில் இருந்தே, அவர்களை வெறுக்கத் தொடங்கி விட்டவள் அவள்.

அருகில் இருந்த சுதாவிடம், "தயா கவனத்தைக் கவர, என்னமாய் நடிக்கிறாள் பார்.! கண்ணில் தண்ணீரையே கொண்டு வந்துவிட்டாளே.! இவள்தான், அவளோடு ஒட்டிக்கொண்டு வந்த அக்காக் காரியாக்கும்? விட்டால், ஓசிச் சாப்பாட்டுக்கு, அக்கம் பக்கம் எல்லோரையும் கூட்டி வந்திருப்பார்கள், போல.! இந்த சுகன் எப்போதுமே இப்படித் தரம் குறைந்ததுகளோடுதான் பழகுவான்.! அதுகள்தானே, இப்படி விரல் அசைத்தால் ஓடி வந்துவிழும்.!" என்று முணுமுணுத்தாள் லீனா.!

"அ.. அப்படி மோசம் என்று சொல்ல முடியாது.."

"என்ன முடியாது? பார், தலைமுடியை இரண்டு பங்காக்க் காட்ட, என்னமாகத் தலை அலங்காரம் செய்திருக்கிறாள் பார்.!" என்றாள் லீனா.!

"நிஜமாகவே, புவனாவுக்கு அவ்வளவு அடர்த்தியான கூந்தல்தான், லீனாக்கா.!" என்றாள் சுதா மெதுவாக.

எரிச்சல் வந்தது லீனாவுக்கு.! "என்னை அக்கா என்று கூப்பிடாதே என்று உனக்கு எத்தனை முறை சொல்வது? என்னை வயதானவளாகக் காட்டாதா?" என்று சிடுசிடுத்தாள் லீனா.!

வயதுக்கு பொருந்தாத கொண்டைக்குள் தன் அடர்கூந்தலை புவனேசுவரி அடக்கி வைத்திருந்த தோற்றம் சுதாவின் மனதில் ஒருகணம் தோன்றி மறைந்தது.

அலுத்துக் களைத்துத் திரும்பிய போதும், புவனேசுவரியால் அன்றிரவு அயர்ந்து உறங்க முடியவில்லை.! தயானந்தனும், லீனாவும் அருகருகே நின்ற காட்சி மனக்கண் முன் தோன்றித் தோன்றி அவளைத் துன்புறுத்தியது.!

இது, முதலில் இருந்தே முடிவான விஷயம்.! ஏன், சுகனுடைய அண்ணனாகப் பேச்சில் தயானந்தன் அறிமுகம் ஆனபோதே, வெளிநாட்டில் படிக்கப் போயிருக்கும் அவனுடைய வருங்கால மனைவியாக, இவளைப் பற்றியும், சேர்த்துத்தானே லோகேசுவரி சொன்னாள்.! அன்றிலிருந்தே தெரிந்த விஷயத்துக்கு, இன்று வருத்தப்பட்டுப் பயன் இல்லை என்று, தனக்குத்தானே அவள் எத்தனை முறை சொல்லிக்கொண்ட போதும் அதற்காக வருந்துவதை, அவளால் நிறுத்த முடியவில்லை.!

ஓவென்று, கதறி அழ வேண்டும் போல, நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது.!

'வாய் விட்டுச் சிரித்தால், நோய் விட்டுப் போகும்' என்பார்கள்.! அது போல, வாய் விட்டு அழுதால், ஒரு வேளை, இந்த வேதனையும் குறையக் கூடுமோ?

தங்கை விழித்து விடுவாளே என்பது மட்டும் இல்லை என்றால், அதையும் முயற்சித்துப் பார்க்கலாம் என்று அவள் எண்ணியபோதுதான், சின்னவளும் புரண்டு படுப்பது தெரிந்தது.!

தன் துன்பம் மறந்து, எழுந்து, "என்ன லோகும்மா? என்ன விஷயம்? ஏன் தூங்கவில்லை? உடம்பை ஏதாவது பண்ணுகிறதா?" என்று கவலையுடன் வினவினாள்.!

"ஒன்றும் இல்லை, அக்கா.!" என்ற லோகேசுவரியின் குரல் கனத்திருந்தது.!

படுக்கையை விட்டிறங்கி தங்கையின் அருகே சென்று அமர்ந்து, "என்னடா, உனக்கு என்ன செய்கிறது?" என்று, அவள் முதுகைத் தடவியவாறு கேட்டாள்.

சற்று நேரம், லோகேசுவரியிடமிருந்து, ஒரு பதிலும் இல்லை.! பிறகு சொன்னாள், "எதிர்காலத்தை நினைத்தால், ரொம்பப் பயமாக இருக்கிறது அக்கா.! அன்றைக்குச் சின்னக் குழந்தைகள் பற்றிய படம் ஒன்றை எடுத்துவந்து, சரவணன் போட்டுக் காட்டினார். என்.. இந்தக் குழந்தையும் அப்படித்தானே, இருக்கும்? அதை இங்கே விட்டுவிட்டு எப்படிப் போவது? அத்தோடு.. அத்தோடு..."

"வேறு என்னம்மா?"

"அக்கா, இதை உங்களிடம்கூட, எப்படிச் சொல்லுவது என்றே தெரியவில்லை.! ஆனால்.. நான் சரவணனை, ஏன் முன்னரே சந்திக்கவில்லை? அவர் ஒன்றும் இல்லாதவராக இருந்திருந்தால்கூட, ஓலைக் குடிசையில் கஞ்சி குடித்துக்கொண்டு, அவரோடு சந்தோஷமாக வாழ்ந்திருப்பேனே.! ஏதேதோ மயக்கத்தில், வயிற்றிலே வாங்கிக் கொண்டு விட்ட பிறகு, இப்போது போய்... ஐயோ, அக்கா.! என்ன மாதிரி நிலைமையில் மாட்டிக் கொண்டேன்.!" என்று கண்ணீர் உகுத்தாள் சின்னவள்.!

திகைத்துப்போய் அமர்ந்திருந்தாள் புவனேசுவரி.!

இதற்கு என்ன செய்ய முடியும்? அல்லது, என்ன சொல்லித் தேற்ற முடியும்?

யாரிடமாவது, இது பற்றிப் பேசினால்கூட, நம்புவார்களா?

ஒன்று ஒரேயடியாகப் போய்விட்டதால், இன்னொன்றைப் பிடிக்கப் பார்க்கிறாள் என்று கேவலமாகப் பேச மாட்டார்களா?

பாட்டியின் பிரியம்கூட, அற்றுப் போய்விடக்கூடும்.!

பணத்திலும், பகட்டிலும், பொய் சத்தியத்திலும் மயங்கி, ஒரு அறியாப் பெண் செய்த தவறு, அது. இது உண்மை நேசம் என்று சத்தியம் செய்தால்கூட, ஒருவருமே ஒத்துக் கொள்ள மாட்டார்கள்.!

அக்கா, தங்கை இருவருமா, இப்படிச் சிக்கித் தவிக்க வேண்டும்?

ஒளியற்று இருண்ட எதிர்காலம்.!

முடிவற்றதாய் நீண்ட மௌனத்தைக் கலைத்து, "நாம் போய் விடுவோமா,



லோகும்மா?" என்று கேட்டாள் தமக்கை.!

"அங்கே மட்டும் நமக்கு யார் இருக்கிறார்கள், அக்கா?" என்றாள் தங்கை, கண்ணீர்க் குரலில்..!

"யாரும் இல்லாவிட்டாலும், நம் தாய் மண் இருக்கும் கண்ணம்மா.!"

மீண்டும் ஒரு நீண்ட மௌனத்தின் பின், "இப்போது வேண்டாம், அக்கா.!" என்றாள் தங்கை. "முடிந்தவரை, சரவணனைப் பார்த்துக் கொண்டிருக்கும் பாக்கியமாவது, எனக்குக் கிடைக்கட்டும்.!" என்று, ஒரு விசும்பலோடு முடித்தாள்.!

அன்றிரவு, இருவருக்குமே சிவ ராத்திரியாக முடிந்தது.!

புவனேசுவரியின் துன்பம், அந்த இரவோடும் தீரவில்லை.!

மறுநாள் கொண்டு விடுகையில், லோகேசுவரியைப் பாட்டி ஆவலாக வரவேற்பதைப் பார்த்தபோது, இந்த வரவேற்பு இன்னும் எத்தனை நாட்களோ, என்று அவள் மனம் பரிதவித்தது. ஆனால் அதற்காக நடப்பது நடக்கட்டும் என்று சும்மா இருக்க முடியுமா? இப்போது வேறு என்ன செய்வது? அவள் மனம் தீவிர சிந்தனையில் ஆழ்ந்தது.!

நல்லவேளையாக அதைக் கலைவதற்கு வழியின்றி, தயானந்தன் முன்னதாகவே அலுவலகம் சென்றிருந்தான்.

அப்படி அவன் செல்வதும் நடப்பதுதான். அவனுக்கு, இந்த ஒரு அலுவலக வேலை மட்டும் என்று கிடையாது.! ஏலம், கிராம்பு போன்ற மற்ற பொருட்கள் தொடர்பான வேலை, 'இன்ஸ்டன்ட்' தயாரிப்பு, ஏற்காடு பிரிவு.. என்ற பலதும் அவன் பார்வையிட வேண்டியிருந்ததால், பெரும்பான்மை நாட்கள், புவனேசுவரி தனியாகத்தான் அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்தாள்.!

அப்படிச் சென்று வருவதற்காக, அவளுக்குத் தனியாகப் போக்குவரத்து வசதியும் செய்து கொடுக்கப்பட்டு இருந்தது.!

அன்றைக்கும் அப்படி ஒரு நாளாக இருந்தது, அவளுக்கு, ஒரு வகையில் நிம்மதியாகத்தான் இருந்தது.! எவ்வளவுக்கெவ்வளவு, தயானந்தனைப் பாராமல் ஒதுங்கிவிட முடிகிறதோ, அவ்வளவு நல்லதுதானே?

லோகா வேறு மாதிரிச் சொன்னாலும், ஒதுங்கி விடுவது மேல் என்றுதான் புவனேசுவரிக்குத் தோன்றியது.!

எவ்வளவோ மனதைத் தயார்ப்படுத்தி வைத்திருந்தாலும், அலுவலகத்தில் தயானந்தனோடு லீனாவைப் பார்த்தபோது, அவள் மனம் வலிக்கத்தான் செய்தது.!

லீனாவுக்கும், புவனேசுவரி வந்தது பிடிக்கவில்லை போலும்.!

"இதென்ன? இவள் இங்கே என்ன செய்கிறாள்?" என்று எரிச்சலுடன் கேட்டாள்.

"உன் போலத்தான்." என்றான் தயானந்தன் சுருக்கமாக.

"அப்படியென்றால்?"

"நீ இங்கே வேலை செய்யப் போகிறேன் என்றாயல்லவா? அதே போல, அவளும் இங்கே வேலை செய்கிறாள்."

லீனா திருப்தி அடைவதாக இல்லை.! அவளைப் போல என்றதில் ஆத்திரம் வேறு.!

புவனா என்ன வேலை செய்கிறாள் என்று விசாரித்துவிட்டு, "இதற்கு ஆ... எதற்கு, தயா? பேசாமல், ரயில் நிலையத்தில் செய்வது போல, எப்போது, எந்தப் பாரசல் போயிற்று என்று, டேப்பில் பதிவு செய்து, ஓட விட்டு விட வேண்டியதுதானே? இதற்கு 'ஷிஃப்ட்' முறையில் மூன்று பேரா? பயங்கர விரயம்.! முதலில் மூன்று பேரையும் வேலையை விட்டு விரட்டுங்கள்.!" என்றாள் அவள்.

தான் அங்கே இல்லாதது போலப் பாவித்து அவள் பேசியது எரிச்சலூட்ட, "நான் என் இடத்துக்குப் போகிறேன், சார்.!" என்றுரைத்துவிட்டுப் பதிலுக்குக் காத்திராமலே கிளம்பினாள் புவனேசுவரி.!

" கஸ்டமர் சர்வீஸ்' பற்றி, உன் படிப்பில் ஒன்றுமே கிடையாதா? உன்னிடம் விட்டால், வாடிக்கையாளர்களை எல்லாம் விரட்டி விடுவாய் போல இருக்கிறதே.! ஒரு வேளை, போட்டி நிறுவனத்திடம், ஏதேனும் வாங்கிவிட்டாயா?" என்று தயானந்தன் கிண்டலாகக் கேட்டுச் சிரித்தது, அவள் காதுகளில், தெளிவாக விழுந்தது.!

"போங்கள், தயா.! சும்மா கேலி பண்ணுகிறீர்களே.." என்று அவள் சிணுங்கியதும்.!

இதுவே, இன்னொருவர் என்றால், வேலையை விட்டே விரட்டி அடித்திருப்பான் அல்லவா? இவள் என்பதால், கிண்டலடிக்கிறான்.!

இன்னொரு சேதியும் காதில் விழுந்தது.! "இது கம்ப்யூட்டர் யுகம்.! பாதி ஆட்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டுப் பதிலாக, நாலு கம்ப்யூட்டர்களை வாங்கி வைத்து, வேலையை நடத்தலாம்.! சம்பள உணர்வு, படி, ஓய்வு ஊதியம் என்று ஒரு பிரச்சினையும் இராது.!" என்றாள் லீனா.!

"ஆனால், தாத்தா காலத்தில் இருந்து, நம்மிடம் மூன்றாவது தலைமுறை வேலை செய்கிறது.! இருப்பவர்களை அப்படியே வைத்துக் கொண்டு, உன் படிப்பால், தொழிலைப் பெருக்க முடியுமானால், சொல்லு.! அது முடியாது என்றால், நீ படிக்கப் போனதே வீண்.!" என்று விட்டாணாம் தயானந்தன்.!

தொழிலாளருக்காக இவ்வளவு பார்க்கிறவன், என்றைக்கும் நன்றாக இருப்பான் என்று எண்ணினாள் புவனேசுவரி.! ஆனால், லீனாவையும் குற்றம் சொல்ல முடியாது.! அவர்களை சொந்த நிறுவனத்தின் லாபத்துக்காகத்தானே, பார்க்கிறாள்.!

எப்படியோ? அவர்கள் தொழில்.! அவர்கள் நடத்துவார்கள்.! அதைப் பற்றி, ஒரு சில மாதங்கள் ஒண்ட வந்தவள்., அவளுக்கு என்ன வந்தது.!

சற்றும் பயனற்ற விதமாக இவர்களைப் பற்றி நினைப்பதை விட, உருப்படியாக, வேறு எதையாவது யோசிக்கலாம்.!

யோசிப்பதற்கு விஷயமா இல்லை? லோகேசுவரி பிரச்சினையே போதுமே.!

அன்று திங்கட்கிழமை.! உலகின் ஒரு பாதி நாடுகளுக்கு, அது ஞாயிற்றுக்கிழமை என்பதால், புவனேசுவரிக்குச் சற்று ஓய்வாய், யோசிப்பதற்கும் நேரம் கிடைத்தது.!

அரை மணி நேரம் முன்னதாகவே, மாற்று ஆளிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, தயானந்தனிடம் சொல்லாமல், வீட்டுக்கும் கிளம்பிவிட்டாள்.!



வரும் வழியிலும், அவளுக்கு அதே யோசனை.!

யோசித்து, யோசித்து ஒரு முடிவும் எடுத்தாள்.!

முடிவு செய்தபின், அதைச் செயல்படுத்துவதைத் தள்ளிப் போட அவளுக்கு மனமில்லை.!

எனவே, மறுநாள் காலையில், லோகாவை உலாவ அழைத்துப் போய்விட்டுத் திரும்பி வரும்போது, புவனேசுவரி, அந்த வீட்டைச் சுற்றியிருந்த சிறு தோட்டத்தில் எதையோ, கொத்திக் கிளறிக் கொண்டிருந்தாள்.

'நடை' முடிந்து வந்ததுமே, லோகேசுவரி சற்று நேரம் படுத்திருந்து விட்டுக் குளிக்கப் போவாள்.!

அவள் உள்ளே சென்றபின், புவனாவிடம் விடை பெற்றுக் கொண்டு, கிளம்புவான் சரவணன்.!

அவனிடம் தோட்டம் பற்றி ஏதோ கேட்டுவிட்டு, அவனோடு மெல்ல நடந்தபடி, "உங்களிடம் ஒன்று கேட்க வேண்டுமே, சரவணன்.! இப்போது.. இப்போது, என் தங்கையின் நிலை உங்களுக்குத் தெரியும்.! இ... இதே நிலை, உங்கள் தங்கைக்கு ஏற்பட்டிருந்தால்.." என்று, புவனேசுவரி கேட்டுக் கொண்டிருக்கும் போதே, "என்ன உளறுகிறீர்கள், புவனா?.!" என்று சரவணன் அவள் பேச்சில் குறுக்கிட்டான்.!

" உளறலா? என்ன கடுமையான வார்த்தைப் பிரயோகம்.!

அவள் மனம் சோர்கையில், "என்ன பேச்சு இது, புவனா? லோகா எப்படி, என் தங்கை ஆக முடியும்? அவள், அவளாகத்தான். லோகேசுவரியாகத்தான் இருக்க முடியும்.! தயவு பண்ணி, இனியொரு தரம் இதுபோலப் பேசாதீர்கள்.!" என்று, அவன் அழுத்தம் திருத்தமாகச் சேர்த்துச் சொன்னான்.!

தங்கைக்கு இந்த நிலை ஏற்பட்டிருந்தால்.. என்று சும்மா சொன்னாலே, ஆத்திரம் வருகிறதே.! இவன் எங்கே மனம் இரங்கி, லோகாவை மணக்கப் போகிறான்.!

ஓய்ந்துபோய், வீட்டுப் பக்கம் திரும்பினாள் புவனேசுவரி.!

# 15

தங்கை விஷயமாகத் தோற்றது, புவனேசுவரியை மிகவும் பாதித்தது.!

அப்படியானால், 'ஓர் அறியாப் பெண்ணின் தவறு., குற்றம் சுகனதுதான்' என்பது போல, எல்லோரும் நடந்து கொண்டது எல்லாம் பொய்யா?

'ஊருக்குத்தானடி உபதேசம்., உனக்கல்லடி கண்ணே.!' என்பதுபோல, சொந்த விஷயம் என்று வந்ததும், உண்மை நிறம் தெரியவருகிறதா?

முதலில் இருந்தே கொஞ்சம்கூட முகம் சுளிக்காமல் இருந்த சரவணனே இப்படி என்றால், மற்றவர்களைப் பற்றி என்ன நினைப்பது?

இவர்களுக்குத் தேவை, சுகனுடைய சிசு.! அதற்காக, இவர்களைக் குளிக்காட்டி வைத்திருக்கிறார்கள்.!... அப்படியானால், குழந்தை பிறந்ததும், அதைப் பிடுங்கிக் கொண்டு, நாயைத் துரத்துவது போல, விரட்டி விடுவார்களா?

கலங்கிப் போன மனம், ஏதேதோ காட்சிகளைக் கற்பனை செய்து துடித்தது.!

லோகாவானால், 'சரவணனைப் பார்க்கும் பாக்கியம்' என்றெல்லாம் பிதற்றுகிறாள்.!

சிரமப்பட்டு, அவளிடம் உண்மையைப் புரிய வைத்தாலும், இப்போது என்ன செய்வது? இருவருமாக, இங்கிருந்து கிளம்புவதும், எளிதல்லவே.! அதுவும், இந்த இடம், அவர்களது ராஜ்ஜியம்.!

குழம்பித் தவித்த புவனேசுவரிக்கு, ஒரு முக்கியமான விஷயம் நினைவு வந்தது.!

அவளும், லோகாவும் வந்திருப்பது, 'டூ ரிஸ்ட் விசா'வில். ஆறு மாதத்துக்குள் அவர்கள் ஒரு தரம் தாய்நாட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கும்.! அப்போது தங்கைக்குப் புரிய வைத்து, அங்கேயே தங்கிவிடலாம்.!

அவர்கள் நாட்டில், இவர்களால் ஒன்றும் செய்ய இயலாது.!

அதுவரை, எல்லாவற்றையும் சகித்துத்தான் ஆக வேண்டும்.

சகித்துத்தான் ஆக வேண்டும் என்று என்னதான் எண்ணினாலும், தயானந்தனையும், லீனாவையும் சேர்த்துப் பார்ப்பது, புவனேசுவரிக்குத் தாங்க முடியாத துன்பமாகவே இருந்தது.!

ஒரு மாதிரி, உள் மனதை அறிந்துகொள்கிறவன் அவன். தன் ரகசியத்தை அறிந்து கொண்டுவிடக் கூடாது என்று வேறு அவள் கவலைப்பட்டாள்.!

எனவே, அவனோடு தனித்திருக்கும் சந்தர்ப்பங்களை, இயன்றவரை தவிர்த்தாள்.!

வேலைக்குச் செல்வது கூடப் பிடிக்கவில்லைதான். ஆனால், ஓர் எட்டு மணி நேரம், இந்தப் பிரச்சினைகளை மறந்து இருக்க முடியும் என்பதற்காகவே வேலைக்குப் போனாள்.

அதுவும்கூட, நல்ல வேளையாக அவன் லீனாவோடு சுற்ற நேர்ந்ததால், அவனோடு சேர்ந்தது செல்ல, நேராமல் போயிற்று.! மாலையில், தயானந்தனிடம் போய்ச் சொல்லிக் கொள்ளாமலே, கிளம்பி விடுவாள். அதுவரை அவன் வரத் தாமதம் ஆகுமா என்று கேளாமல், அவள் தனியே கிளம்புவது இல்லை.!

இப்படி ஒரு வாரம் கழிந்தபின், மானசியின் திருமண நாள் விருந்துக்குச் செல்ல நேர்ந்தது.!

அங்கேயும், உதவி புரியும் சாக்கில், முடிந்தவரை தயானந்தன் பக்கம் வராமலே தூரமாகவே சுற்றிக் கொண்டிருந்தாள்.

லீனாவின் தட்டில், கேசரி, வடை என்று தயானந்தன் எடுத்து வைக்க, வழக்கம் போல், ஒவ்வொன்றுக்கும் குறை சொல்லி ஒதுக்கிக் கொண்டிருந்தாள் அவள்.

'பஃபே' முறைதானே? அவளே எடுத்துக் கொள்ள மாட்டாளாக்கும், என்று உள்ளூரப் பொருமியபடி, மனோகரி செய்து வந்திருந்த வாழைப்பழப் பணியாரத்தை மேஜை மேல் கொண்டு வைத்தாள் புவனேசுவரி.

திரும்பிச் செல்ல முயன்றவளைப் பிடித்து நிறுத்தி, "லீனாவுக்குத் தட்டில் இரண்டு வை, புவனி!" என்று அவன் கூறவும், "அய்யய்யோ.! எனக்கு வேண்டாம்மா.!



கொண்டிருந்தான் தயானந்தன்.

ஏன்? ஏன் இப்படிச் செய்கிறான்?

ஒன்றுமே புரியாமல், மூளை இருக்குமிடம் காலியாகிவிட்டது போன்ற உணர்வு அவளுக்கு.!

சற்று முன்னர்தான் லீனாவுக்கு ஊட்டி விட்டுவிட்டு, இதென்ன?

ஆனால், இன்று வரை இவன் இப்படிச் செய்தது இல்லையே.!

வாயால் பேசுவான்.! தன்னை ஜெயிக்க முடியாது... என்று.! ஆனால்.. ஆனால், கையைப் பிடிக்கும் இந்தத் துணிச்சல் எப்படி வந்தது?

ஒன்றுமே நடவாதது போல, மற்றவர்களோடு அவன் பேசிக்கொண்டு இருந்தது வேறு, அவளுக்கு ஆத்திர மூட்டிற்று.!

அதாவது, அவள் இவ்வளவு தனக்கும் பாதிப்பு இல்லை தவிக்கையில் அவனுக்கு ஒரு பாதிப்பும் இல்லை என்று காட்டுகிறான் என்றுதான், அவளும் காட்ட வேண்டுமோ? ஆனால் அது சாத்தியப்படுமா?

புவனேசுவரி திணறிக்கொண்டு இருந்தபோது, அவளுக்கு உதவி செய்வது போல, மனோகரி, அவளை அழைத்தாள்.! "உனக்கு ஒரு பத்துப் பணியாரம் வைக்கட்டுமாம்மா? எப்படியும் எண்ணைதான்.! லோகா அதிகம் சாப்பிடுவது நல்லதில்லை.! சொல்லு எத்தனை வைக்கட்டும்.!"

"ஆறு போதும், ஆன்ட்டி..!" என்று புவனா இப்போது எழுகையில், தயானந்தன் கை விலகியிருந்தது.!

ஆனால், ஒருபுறமாய் லீனாவின் அருகிலிருந்து, சுதா முறைத்துப் பார்ப்பதைக் கண்டு, அவளுக்குத் தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது.!

என்னவோ, அவள் அண்ணனை இவள் பிடித்து வைத்திருந்தது போல.!

மறுநாள் வேலைக்குப் போகவே, புவனேசுவரிக்கு மனமில்லை.! கடைசியாக, அழைத்துப் போக தயானந்தன் வந்தால், தலைவலி என்றுவிடுவது.. அல்லது வேலைக்குப் போவது என்று முடிவு செய்தாள்.

நல்ல வேளையாக கார்தான் வந்தது.!

அவனுக்குத்தான், லீனாவுக்குத் தாளம் போடவே, நேரம் சரியாக இருக்குமே.!

போடட்டும்.! நன்றாகத் தாளம் போடட்டும்.! ஆனால், தன்னிடம் சீண்டாமல், எப்படி யாரோடு வேண்டுமானாலும் ஆடட்டும் என்று ஆத்திரத்துடன் எண்ணினாள் அவள்.!

வேலையில் மூழ்கியபோது, எவ்வளவோ நிம்மதியாக இருந்தது.!

ஆனால், மாலை நெருங்க நெருங்க, மனம் தவிக்கத் தொடங்கிவிட்டது.!

தயானந்தன் தினந்தோறும் கூட வந்தான் என்று சொல்ல முடியாது.! அவனுக்கு வேலை அதிகம்.! பல நாட்கள், ஊரில்கூட இருக்க மாட்டான். ஆயினும், அவனோடு பேசியபடி, அலுவலகத்துக்கு வந்து போனது, மிகவும் சுகமாகத்தான் இருந்தது.! அதன் மூலம், அவனது தொழில் பற்றி, எத்தனை விஷயங்கள் தெரிந்து கொண்டாள்.! ஆனால், பாடம் சொல்லிக் கொடுக்கிற மாதிரி இல்லாமல், அங்கங்கே சில



சம்பவங்களை - முதலில் செய்த தவறுகளையும், அவைகளைத் திருத்திக்கொண்ட விதத்தையும் சேர்த்து எவ்வளவு அழகாக விவரம் சொல்லுவான்.!

எல்லாமே, 'மலரும் நினைவுகள்' போல, ஏக்கத்துடன் எண்ணிப் பார்க்கிற பழைய கதைகள் ஆகிவிட்டனவே.!

இதையெல்லாம், எவ்வளவு சீக்கிரம் மறக்க முடிகிறதோ, அவ்வளவுக்கு அவளுக்கு நல்லது.!

பெருமூச்சுடன் எழுந்து, ஏற்கனவே 'டெலிவரி' ஆனவற்றைக் குறித்து வைத்து விட்டு, அடுத்த 'ஷிஃப்ட்' ஆளுக்காகக் காத்திருந்தாள்.

அடுத்தவன் வந்த போது, "எம்டி வரச் சொன்னார்.! போய்ப் பார்த்துவிட்டுக் கிளம்பச் சொன்னார்.!" என்றவாறு, பட்டியலை எடுத்துப் பார்த்தான்.!

'கிளம்பச் சொன்னார்.!'

அப்படியானால், தயானந்தன் கூடவரவில்லை.!

அதுதானே, நல்லது? இதற்கு வருத்தப்படுவானேன்? என்று தனக்குத்தானே அறிவுறுத்திக் கொண்டபடி, தயானந்தனின் அறைக் கதவைத் தட்டினாள், புவனேசுவரி.

உள்ளே சென்றவளை உட்காரச் சொல்லிவிட்டு, ஏதோ கடிதங்களில் கையெழுத்துப் போட்டு முடித்தான்.

காத்து நின்ற ஆஃபீஸ் பையனிடம் கொடுத்து, "எல்லாம் நாளைக்கு அனுப்பியாக வேண்டும் என்று, 'டெஸ்பாட்ச்'சில் சொல்லி விடு." என்று பணித்து, அவனை அனுப்பினான்.

அவன் சென்றதும், பேனாவை மூடி வைத்துவிட்டு, எழுந்து அவளருகே வந்தான்.

உள்ளூரக் கலக்கத்துடன், புவனியும் எழுந்தாள்.

"என்ன விஷயம்? ஒரு வாரமாக, ஒரே ஓட்டமாக இருக்கிறதே.! ஓட்டமும், ஒளிதலும்.!"

"இப்போது எதற்காகக் கூப்பிட்டீர்கள்?"

"நீ என்ன ஓடினாலும், ஒன்றும் நடக்காது என்று சொல்லத்தான்.! பார், உன்னை என் முன்னே வரவழைத்து விட்டேன் அல்லவா?" என்று உல்லாசமாகச் சிரித்தவாறு, அவளை நோக்கி ஓர் எட்டு எடுத்து வைத்தான்.!

விழிகள் விரிய, தன்னையறியாமல், அவள் வேகமாக இரண்டு எட்டு பின்னடையவும், சட்டெனக் கை நீட்டி, அவளைப் பற்றினான்.!

"ஏன்? என்னிடம் என்ன பயம்?" என்று சாதாரணமாகக் கேட்டவனுக்கு, அவள் முழுமூச்சுடன் விடுபட முயற்சிக்கவும் கோபம் வந்துவிட்டது.!

"என்னம்மா, அப்படி உன்னை நான் என்ன பண்ணி விடுவேன் என்று, இவ்வளவு நடுக்கம்? இது போலவா?" என்று அவளை இறுக்கப் பற்றி கேட்டவன் சட்டெனக் குனிந்து முத்தமிட்டான்.!

அந்த இணைப்பு எவ்வளவு நேரம் நீடித்ததோ, புவனேசுவரிக்குத் தெரியாது.!



ஆனால், அவன் அவளை விடுவித்தபோது, புவனேசுவரியின் கால்கள் பலமிழந்து நடுங்கின.! ஆதாரத்துக்கு, அருகில் இருந்த நாற்காலியைப் பற்றிக்கொண்டு, அவனை வெறித்துப் பார்த்தாள் அவள்.!

# 16

அவளை விட்டு விலகி, "என்னிடம் நீ ஜெயிக்க முடியாது என்று, இப்போதேனும், புரிந்துகொள்.!" என்று, தயானந்தன் கூறியபோதும், அவன் குரலில் சிறு கோபம் இருந்தது.!

ஆனால், அவளது திகைத்த முகம் அவனை என்ன செய்ததோ, குரலைத் தணித்து, "புவனி.." என்று, அவன் ஏதோ சொல்லத் தொடங்கிய போது, வெளியே பேச்சுக் குரல் கேட்கவும், தயங்கி அங்கே பார்த்தான்.!

பெயருக்கு ஒரு சிறு தட்டலுடன், உரிமையோடு கதவைத் திறந்துகொண்டு, லீனா உள்ளே வந்தாள். அவளை அடுத்து, சுதா.!

இருவருமே, புவனாவை அங்கே கண்டதும் திகைத்துப் போயினர்.!

அதுவும், இவர்கள் இருவரும் அருகருகே நின்று கொண்டிருந்தது, கொஞ்சமும் பிடிக்கவில்லை.!

புவனாவுக்கும், அவர்கள் முன் நிற்க முடியவில்லை.! "நான்.. நான் வேலை முடிக்க வேண்டும்.!" என்றவள், வேகமாக அங்கிருந்து வெளியேறினாள்.

பின்னோடு சென்று, "சீக்கிரம் வந்துவிடு, கிளம்ப வேண்டும்.!" என்றான் தயானந்தன்.

சட்டெனத் தீர்மானித்தாள் லீனா.

"சுதா, கார் நின்றுவிட்டதே, எப்படிப் போவது என்று யோசித்தோமே.! இவர்களுடனேயே போய்விடலாம்.!" என்றாள் அவள்.

சற்றுத் திகைத்து, "கா..ர்.." என்று இழுத்த சுதா, லீனாவின் முகத்தைப் பார்த்து வாயடைத்து நின்றாள்.

அதற்குள், " 'ஷாப்பிங்' வந்தோம், தயா. மலை ஏறுகிற நிலையில், என் கார் இல்லை.! திரும்பிப் போக வேண்டும்.! எங்களையும் கூட்டிப் போங்கள்.!" என்றாள் லீனா.

அவளும், சுதாவும் வந்தபோது, அங்கே ஏதோ நடந்துகொண்டு இருந்தது என்கிறவரை, லீனாவுக்கு நிச்சயம்.! அதைத் தொடர விடுவது சரியல்லவே.!

"நீங்களும் வேலையை முடித்துவிட்டு வாருங்கள், தயா. நானும் சுதாவும் வெளியே காத்திருக்கிறோம்.!" என்று, அவன் தங்கையை அழைத்துக்கொண்டு வெளியே சென்றாள்.

கதவைச் சாத்தியதுமே, "கார் ஒன்றும் ரிப்பேர் இல்லையே, லீனாள்... லீனா?" என்று கேட்டாள் சுதா.!

"இல்லைதான்.! ஆனால், உள்ளே, தயாவை மயக்க அவள் என்னவோ பண்ணிக்கொண்டு இருந்தாளே, அதைத் தொடரவிடக்கூடாது அல்லவா? அதற்காகத்தான்.! கார், ரிப்பேர் என்றால் கூடக் கூட்டிப்போய்தானே ஆக வேண்டும்.! இப்போது, அதை விடு.! அந்தப் பெண் பலே கைகாரியாக இருக்கிறாள். அவளிடமிருந்து, தயாவை மீட்பது எப்படி என்று பார்ப்போம்.!" என்று திட்டமிடலானாள் லீனா.!

பொது அலுவலக நேரம் முடிந்து எல்லோரும் போய்விட்டதால், ஓய்வு அறை காலியாகக் கிடந்தது.!

முகத்தைக் கைகளில் புதைத்துக்கொண்டு, ஓர் இருக்கையில் விழுந்த புவனேசுவரிக்கு, நெஞ்சுக்குள் உலைக்களம் கனன்றது.!

அங்கே, லீனாவுடன் திருமண ஏற்பாடுகள்.! அத்தனை பேர் நடுவில் அவளுக்கு ஊட்டிவிட்டாகிறது.!

இங்கே, பிறர் அறியாமல், இவளை முத்தமிடுகிறானா? மானசி வீட்டிலும் பிறர் அறியாமல்தானே கையைப் பற்றியிருந்தான்.!

தயானந்தனின் திட்டம் என்ன என்று, இப்போது அவளுக்குப் புரிந்து போயிற்று.!

அவனுடைய தம்பி காட்டிவிட்டுப் போன வழி.!

உரிமையில்லாத உறவுக்கு ஒருத்தியாகப் புவனேசுவரி.! இன்னொரு லோகா.!

நாம் எல்லோரும் தமிழர்., ஓர் இனம் என்று சொன்னதெல்லாம் சும்மா வெறும் வாய் வார்த்தை.! அவன் தம்பி ஒருவிதமாகப் பேசி மயக்கியது போல, இன்னொருவித வார்த்தை ஜாலம்.!

இதில் வள்ளுவரை வேறு, இழுத்தானே.! அது எவ்வளவு பெரிய அக்கிரமம்.! அந்த சுகனை விட மோசம்.!

இதற்கு மேல், அவளால், அவனை ஜெயிக்க முடியாது என்று ஜம்பம் வேறு.!

சட்டெனத் திகைத்தாள் புவனேசுவரி.!

இங்கேயே இருந்தால், அப்படித்தான் ஆகிவிடுமோ?

முதலில் திமிறிய போதும், அவனாக விடுவிக்குமுன் ஒரு சில விநாடிகளின் நினைவில் அவள் முகம் கன்றிச் சிவந்தது.!

இல்லை.! இங்கே இருப்பது தவறு.! பெரிய தப்பு.! போய்விட வேண்டும்.! போயே ஆக வேண்டும்.!

ஆனால், லோகேஸ்.! அவள் கதை, இதை விடப் பரிதாபம்.! என்ன வேண்டுமானாலும் பட்டுக்கொள் என்று, அவளை விட்டுவிட்டு, எப்படிப் போவது? கூடாது.! எப்படியாவது எடுத்துச் சொல்லி, அவளுக்குப் புரிய வைத்து, அழைத்துக் கொண்டேதான் போக வேண்டும்.!

துஷ்டரைக் கண்டால், தூர விலகு, என்றுதானே, பெரியவர்களும் எழுதி வைத்திருக்கிறார்கள்.!

விலகிவிட வேண்டியதுதான்.!

ஒரு முடிவு செய்தபின், புவனாவுக்குச் சற்றே அமைதி உண்டாயிற்று.!



இனித் தாமதம் இன்றிச் செயல்பட வேண்டும்.!

முகத்தைக் கழுவித் துடைத்துக் கொண்டு, மற்றவர்களோடு போய்ச் சேர்ந்து கொண்டபோது, அவளும் அமைதியாகவே, காணப்பட்டாள்.!

செல்லும் வழி முழுவதும், தன் பெற்றோர் வரப் போவது பற்றியும், வீட்டில் செய்ய இருக்கும் மாற்றங்கள் பற்றியும் சொல்லிக் கொண்டிருந்தாள் லீனா. "இதுவரை, எங்களுக்கு வெறும் விருந்தினர் இல்லமாக மட்டும் இருந்தது.! இனி, என் வீடாகப் போகிறது அல்லவா?"

'ஷாப்பிங்' செய்தது அசதியாக இருக்கிறது என்று, தன்னை வீட்டிலேயே விட்டு விடுமாறு, சுதா கேட்டதால், அவளை அங்கே விட்டுவிட்டு, புவனாவைப் பாட்டி வீட்டில் இறக்கி விட்டு, லீனாவைக் கொண்டு விடுவதற்காக, அவள் வீட்டுக்குக் காரை ஓட்டிச் சென்றான் தயானந்தன்.!

பாட்டி வீட்டுக்குள் சென்றபோது, உள்ளூர வேதனை மனதை அரித்துக்கொண்டு இருந்த அந்த நேரத்திலும், என்னவோ வேறுபாட்டைப் புவனேசுவரியால் உணர முடிந்தது.!

லோகாவின் முகத்தில் இருந்த புன்னகை.! கன்னம், கண், உதடு... முகம் எங்கும் விகசித்த பூரிப்பு.!

எப்படி? சற்றும் நம்பிக்கைக்கு இடமே இல்லை என்று நிராசையுற்று இருந்தார்களே.!

புவனியைக் கண்டதும், "வாம்மா.! வந்து, முதலில் பாயசம் சாப்பிடு.!" என்று தன் வழக்கம்போல இனிப்பைக் கொடுத்து, இனிய விஷயத்தையும், பாட்டி தெரிவித்தார்.!

"சுகனின் நடத்தையால், எப்போதுமே ஒரு துக்கத்தை, எல்லோருமே எதிர்பார்த்துக் கொண்டேதான் இருந்தோம்.! தேவைப்பட்டால், தேனாகப் பேசுகிறவன் நாக்கில், விநாடிக்குள் விஷம் சொட்டும்.! கை, கால்களை உடைத்துக்கொண்டு, பிறருக்குப் பாரமாக இருந்து, எல்லோர் வாழ்வையும் நரகம் ஆக்குவான் என்று எண்ணினோம்.! மனோகரிக்கு, சரவணனிடம் இவ்வளவு பாசம் ஏன் வந்தது? பெற்ற பிள்ளை அலட்சியம் செய்ததை, இவன் ஆசையாக ஏற்றுத் திருப்பிக் கொடுத்தான்.! ஆனால், கடைசியில்... அவன் ஒரேயடியாகப் போய்... இப்படியெல்லாம் எண்ணினோமே என்று, வருத்தப்பட வைத்துவிட்டான். ஆனால், ஒரு வாரிசையும் தந்துவிட்டுப் போனான்.! அதனிடம் அன்பு காட்டுவதில், அந்த வருத்தம் தீரும்.! இன்னொரு பேரனுடைய பிள்ளைதான்.! ஆனால், சரவணன், வேறு மாதிரி.! சுகனுடைய தாயைத் தன் தாயாக ஏற்ற மாதிரி, பிள்ளையையும், தன்னதாக ஏற்பான்.!

"முதலில் இருந்தே, எனக்கு இந்த எண்ணம்தான்.! லோகாதான், மனதில் இன்னும் கொஞ்சம் வளர வேண்டும் என்று எண்ணினேன்.! அதுவும் நடந்துவிட்டது.! சரவணனும் வந்து, லோகாவை நேசிப்பதாகச் சொல்லிவிட்டான்.! இனி, ஒரு நல்ல நாளைப் பார்த்து, திருமணத்தைப் பதிவு பண்ணிவிட வேண்டியதுதான்." என்றார் முதியவர்.

மிகுந்த மகிழ்ச்சியில் மூழ்கிய புவனேசுவரிக்குச் சிறு பயமும் ஏற்பட்டது.!

"மற்றவர்கள். ஆன்ட்டி, அங்க்கிள், மானசி குடும்பம்... எல்லோரும் ஒத்துக் கொள்வார்களா, பாட்டி?" என்று கவலையுடன் வினவினாள்.

"சரவணன், லோகாவுக்குப் பார்த்துப் பார்த்துச் செய்வதைக் கண்டு, எல்லோருக்குமே சந்தேகம்தான்.! அந்தப் பையன் நல்லவனாக இருந்திருந்தால், கொஞ்சம் வருத்தம் இருந்திருக்கும்.! இப்போது, லோகாதானே 'பாவம்' என்றாகிவிட்டது? சரவணன் மேலும் எல்லோருக்கும் பிரியம்.! அத்தோடு, மற்றவர்களின் சொந்த வாழ்வில், இங்கே யாரும் தலையிடுவது இல்லை.! சரவணனுடைய மனைவியை, அவன் மனைவியாகத்தான் ஏற்பார்கள். வேறு பிரச்சினை வராது.!"

இதையேதான், தயானந்தனும் சொன்னான்.! அப்போது ஆத்திரம் வந்தது.!

சகோதரிகள் திரும்பிச் செல்லும்போது, பெரும்பான்மை நாட்களைப் போல, சரவணனும் கூட வந்தான்.!

"லோகாவிடம் முதலில் இருந்தே, எனக்குப் பிரியம், புவனா.! அன்றைக்கு நீங்கள் தங்கை என்று பேசியது, எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.! காதலிப்பவளைப் போய், தங்கை மாதிரி என்றால்.. ஆனால், உண்மையைச் சொல்லவும் முடியவில்லை.! தயாண்ணா திருமணத்துக்கு முன்னால், நான், என் திருமணம் பற்றி, எப்படிப் பேச முடியும்? நல்லவேளை.! அந்தப் பேச்சும் தொடங்கிவிட்டதால், முதல் ஆளாகப் பாட்டியிடம் சொல்லிவிட்டேன்.! பாட்டி, தினமும் எதிர்பார்த்தார்களாம்..." என்று லோகேசுவரியைப் பார்த்து முறுவலோடு, கை நீட்டினான் அவன்.

பின்னிப் பிணைந்திருந்த கரங்களைப் பார்த்தபோது, புவனேசுவரியின் மனதில் இருந்த பெரும் பாரம், இறங்கிப் போயிற்று.!

ஆனால், தங்கையைப் பற்றிய பாரம் இறங்கிய இடத்தில், இன்னொரு சுமை ஏறி அமர்ந்து, மூச்சுக்கூட விட முடியாமல் அவளை அழுத்தியது.!

அது அவளது சொந்த விஷயம்.!

பேச்சின் நடுவே, தயானந்தனின் திருமணப் பேச்சு தொடங்கிவிட்டதாகச் சரவணன் சொன்ன கணத்திலிருந்து ஏறிய சுமை.!

லீனாவுடைய பெற்றோர் வரப்போவது, அந்த வீட்டில் செய்யப்படப் போகிற மாற்றம்.!

இதற்கு மேல், இங்கே இருப்பது, புவனேசுவரியின் சீரழிவாகி விடக்கூடும்.!

அது, இனி லோகாவுக்குமே கேவலம்.!

சரவணன் விடை பெற்றுச் சொன்னதும், தமக்கையைக் கட்டிப் பிடித்துக்கொண்டு, சற்று நேரம் அசையாது நின்றாள் லோகேசுவரி.! "நீங்கள் மட்டும் இல்லை என்றால், நான் என்ன கதி ஆகியிருப்பேன், அக்கா.!" என்றாள் விழி நனைய.!

"ஷ்.! இனிப் பழைய வேதனை எதையும் நீ நினைக்கவே கூடாது.! எல்லாத் துன்பமும், ஏற்கனவே ஒரு தடவை அனுபவித்து ஆயிற்று.! இனி, அதை நினைத்து



இன்னொரு தரம் அனுபவிக்கக் கூடாது.!" என்றாள் தமக்கை.!

இருவருமாகத் தூங்காமல், வெகு நேரம் எதையெதையோ பேசிக்கொண்டு கிடந்தனர்.! "துக்கம் என்றாலும் தூங்க முடிவது இல்லை.! மகிழ்ச்சி என்றாலும், அப்படித்தான் இருக்கிறது.! என்னக்கா.!" என்றாள் புன்னகைக் குரலில் லோகா.

இது, அவளது இரவு.! இன்று, எதற்காகவும் அவள் வருத்தப்படக்கூடாது என்று, தன் விஷயம் எதையும், அவளிடம் புவனா சொல்லவே இல்லை.!

அதற்குத்தான் மறுநாள் இருக்கிறதே.!

கொஞ்ச நஞ்ச சந்தேகம் இருந்தாலும், அதைப் போக்கடிப்பதற்கு என்று, மறுநாள் காலையில் சுதா வந்து சேர்ந்தாள்.

"லோகா நடந்து போவதைப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன்.! உங்களிடம் தனியே பேச வேண்டும், புவனா.!" என்று தொடங்கினாள்.

தயானந்தனுக்கும், லீனாவுக்கும் விரைவிலே, திருமணம் நடக்கப் போகிறதாம்.! அதற்கு அவள் இடைஞ்சல் பண்ணக்கூடாதாம்.!

"நான் எப்படி இடைஞ்சல் பண்ண முடியும்?" என்று புவனா கேட்க, "நேற்று அண்ணாவோடு, அலுவலகத்தில் தனியாக இருந்தீர்களே.! லீனாக்காவுக்கு ரொம்ப வருத்தம்.! அவள் பொருட்படுத்தாவிட்டாலும், அம்மா, அப்பா அதைத் தப்பாக நினைப்பார்களாம்.! அதுவும், அவர்கள் கல்யாணம் பேச வருகிறபோது..."

"கவலைப்படாதே.! இனி அதுபோல நேராது.! நான் வேண்டுமானால், இந்த நாட்டை விட்டே போய்விடுகிறேன்.!" என்றாள் புவனா.

"ஐயோ.! அப்படியெல்லாம் வேண்டாம்.! அண்ணனிடம் இருந்து விலகியிருந்தால் போதும்.!" என்று விட்டுப் போனாள் மற்றவள்.

ஏற்கனவே, புவனேசுவரி எடுத்த முடிவு, இப்போது, மேலும் வலுப்பெற்றது.!

தங்கை வருமுன் இந்த வேலையை முடித்துவிடக் கருதி, ஃபோனை எடுத்தாள். "குட் மார்னிங்.! என்ன எண் வேண்டும்?" என்ற குரலைக் கேட்டதும், திடுக்கிட்டு வைத்து விட்டாள்.

இங்கிருந்து, போர்டு மூலமாகத்தான் வெளியே தொடர்பு கொள்ள வேண்டும்!. அலுவலகத்திலும் அப்படித்தான்! தனிப்படப் பேச விரும்புகிறவர்கள், செல்லில் பேசிக்கொள்வார்கள்!

இவளிடம் செல் வேண்டுமா என்று கேட்டதற்குக் கூடத் தேவையில்லை என்று விட்டாளே!

சற்று யோசித்து விட்டு, புவனேசுவரி, சுதாவைத் தேடிப் போனாள்.

சற்று நேரத்தில், சுதா வந்து வேண்டிய தகவல் தந்து விட்டுப் போனாள்.

எதுவும் நடவாதது போல, அன்றைய தினம் கழிந்தது!.

பின்னர், லோகாவிடம் எடுத்துச் சொல்வதும், புவனேசுவரியே எதிர்பாராத விதமாக, எளிதாகவே முடிந்து போனது!.

"இதை ஓரளவு எதிர்பார்த்தேன் அக்கா!" என்றாள் அவள், வருத்தத்துடன்.



புவனா வியப்புடன் பார்க்கவும், "சோஃபா குஷனுக்கடியில், இன்பன் மாமா கடிதம் பார்த்தேன்! அவர், உங்களுக்குக் கொஞ்சமும் தகுதியில்லைதான்!. ஆனால் உங்கள் மனம் அவரை நினைத்து விட்டால், அப்புறம், மேலே பேச என்ன இருக்கிறது?" என்றாள் தங்கை.

அன்று, அந்தக் கடிதத்தைக் கிழித்துப் போடாதது, இப்படி உதவியதா என்று எண்ணிக்கொண்டாள் புவனா.

அப்படியே நினைத்துக்கொண்டு இருக்கட்டும் அல்லது கிளம்புவதற்குத் தடை சொல்வாள் என்று எண்ணி,அதை அப்படியே விட்டு விட்டு, கிளம்பும் வரை, யாரிடமும், சரவணனிடம் கூடச் சொல்லக்கூடாது என்று, தங்கையிடம் வாக்கு வாங்கிக் கொண்டாள்.

காலையில் நடக்கச் செல்லுமுன், தங்கையைக் கட்டி அணைத்து விட்டுத் திரும்பிப் பார்த்துக் கொண்டே, சென்றாள் லோகேசுவரி.

இருவரையும் திருப்தியோடு பார்த்து விட்டு, மறுபுறமாகத் தோள் பையுடன், பெருஞ்சாலைக்கு விரைந்தாள் புவனேசுவரி!

கிடைத்த பஸ்சில் ஏறி, எட்டரைக்குள் மதுரைக்குச் சென்றாக வேண்டுமே!

பஸ்சின் வரவுக்காகக் காத்திருந்தவளின் அருகே, கார் ஒன்று வழுக்கிக் கொண்டு வந்து நின்றது! திடுக்கிட்டுப் பார்த்தால், "ஏறிக்கொள்கிறாயா? இருவருக்கும் நிம்மதியாக, விமானத்திலேயே, ஏற்றி விட்டு விடுகிறேன்!" என்று காரின் கதவைத் திறந்து விட்டாள் லீனா!

ஒரு கணம் திகைத்த போதும் உடனேயே புவனாவுக்கு விஷயம் புரிந்துவிட்டது. சுதா, தன் தேவதையிடம் சொல்லியிருக்கிறாள். லீனா, அவளை கொண்டுவிட்டு விடுவாள்தான். ஆனால் அவன் காரில் ஏற புவனேசுவரிக்கு ஏனோ பிடிக்கவில்லை.

ஏனோ என்ன? தயானந்தனை, அவள் மணக்கப் போகிறாள் என்பதாலேயே, அவளது காரில் ஏறப் புவனிக்குப் பிடிக்கவில்லை!.

"உங்களுக்கு ஏன் வீண் சிரமம்? நான் பஸ்சிலேயே போய்க் கொள்கிறேன்!" என்றாள் அவள்!.

"இதில் சிரமம் என்ன? எங்கள் வாழ்வை விட்டு நீ போய் விடுவதற்காகச் சென்னை வரை காரை ஓட்டி வரவும் நான் தயார்! உன்னை வழியனுப்பி வைத்தால் தான் எனக்கு நிம்மதி! ஏறு, புவனா! இந்த நேரத்தில், இந்த வழியில் வரும் பஸ் கிடைப்பது கடினம்! விமான நேரத்துக்குப் போய்ச் சேருவது, அதைவிடக் கஷ்டம்! ஒரு வேளை, அது தான் உன் திட்டமா? விமானம் கிடைக்கவில்லை என்று, மீண்டும் வீட்டுக்குத் திரும்பி விடுவது? திரும்பிப் போய்க் கண்ணீர் கதைச் சொல்லி, பாட்டியை வளைத்து பாட்டி மூலம், தயாவை...."

அவள் முடிக்குமுன் காரில் ஏறி அமர்ந்து, கதவைச் சாத்தினாள், புவனேசுவரி!

அவள் எதற்காகக் கிளம்புகிறாள் என்பதே இல்லாமல், என்ன பேச்சுப் பேசுகிறாள்!

லோகேசுவரிக்கு, அன்று வழக்கமான வேகத்தில் நடக்க முடியவில்லை! மனதில்



இருந்த வருத்தம், உடம்பைப் பாதித்ததோ? கண்களை வேறு, அவளுக்கு மறைத்து, அடிக்கடி துடைத்துக் கொண்டாள்.

ஆனால், சரவணனின் கூரிய கண்களுக்கு அது தப்பவில்லை!

அவளாகச் சொல்லட்டும் என்று சற்று நேரம் பொறுத்தவன், ஒரு கல் திண்ணையில் அவளை உட்கார வைத்து, விவரம் கேட்டான்!

கண்ணீரிடையே அவள் சொன்னதைக் கேட்டு, அவன் புருவம் சுருக்கினான். "நம்ப முடியவில்லையே! நான் வேறு நினைத்தேனே! அந்த இன்பனை, மெய்யாகவே உன் அக்கா நேசிப்பதாகவா, சொல்லுகிறாய்? இருக்காதோ! " என்று குழம்பினான் அவன்.

"பின்னே எதற்காக அக்கா இப்போது அங்கே போக வேண்டும்? அவர் அம்மா திருமணத்துக்கு நெருக்குவதால், அக்காவை உடனேவரச் சொல்லி, இன்பன் மாமா எழுதியிருந்தார்!"

"ஆனாலும்.... ஊகூம்! முதலில் இதைத் தயாண்ணாவிடம் சொல்ல வேண்டும்!"

"ஐயோ! அதுதானே, கூடாது என்று, அக்கா சொன்னார்கள்!"

"அதுதான், ஏன் என்று கேட்கிறேன்!. இப்படி நிலைமை என்று கடிதத்தைக் காட்டினால், அண்ணனே அனுப்பி வைப்பாரே! எதற்கு, ஒளிந்து, மறைந்து போக வேண்டும்? இதில், என்னவோ இருக்கிறது! அண்ணனிடம் சொல்லியே ஆக வேண்டும்" என்றான் சரவணன்.

லோகேசுவரிக்கும் இப்போது, பயம் பற்றிக் கொண்டது!

இருவருமாக தயானந்தனிடம் விவரம் சொல்ல வந்தபோது, அவன் அலுவலகத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தான்.

இருவரும் சொன்னதைக் கேட்டதும், "மலேஷியாவுக்கா? ஏன்? அப்படி என்ன அவசரம்?" என்றான் வியப்புடன்!

லோகா சொன்ன காரணத்தை, அவனும் ஒத்துக் கொள்ளாமல், "நம்ப முடியாது!" என்றான். "இன்பன் என்கிற பெயரே, இப்போது நீ சொல்லித்தான், அவளுக்கு நினைவு வந்திருக்கும்!" என்றான் அலட்சியமாக.

விழி விரித்து, "எப்படி, அப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்று வினவினாள் லோகா.

"ஆமாம்! இவ்வளவு அகலக் கண்ணை வைத்துக் கொண்டு, ஒன்றையும் பார்க்காதே!, என்னையும் தெரிந்து கொள்ளவில்லை! இப்போது, அண்ணனும், புவனாவும் ஒருவரை ஒருவர், நேசிப்பதையும் கண்டு பிடிக்கவில்லை!"

"ஆங்!" என்று வாயைப் பிளந்தாள் லோகேசுவரி! "நி... நி... நிஜம்மாகவா?!"

"முழு நிஜம்! ஆனால், நீ ஆச்சரியப்படுவது இருக்கட்டும்! இன்பம் பெயரைப் பயன்படுத்திக் கொண்டு, புவனி, இப்போது கிளம்புவானேன்? என்ன ஆயிற்று? ஒரு வேளை .. என்னம்மா?" என்று, வெளுத்த முகத்துடன் அருகில் வந்து நின்ற தங்கையிடம் கேட்டான் தயானந்தன்.

"அண்ணா, இ...இப்போது நீ... நீங்கள் சொன்னது, மெய்யாகவே, நிஜமா? சசத்தியமாக?" என்று வினவினாள் அவள்.

"என்னம்மா, இது? எல்லாப் பெண்களுக்கும், திடீர் என்று என் பேச்சில், இவ்வளவு அவ நம்பிக்கை வந்துவிட்டது? நிஜமா, நிஜமா என்று கேட்கிறீர்கள்? நீயானால் சத்தியமே செய்யச் சொல்லுகிறாய்? என்ன விஷயம்? எதனால், என் பேச்சை நம்ப முடியவில்லை?" என்று, இலகுவாகவே விசாரித்தான் அவன்.

"அண்ணா! வேடிக்கை வேண்டாம்! நீங்கள் புவனா பற்றிச் சொன்னது உண்மையா? சொல்லுங்கள்!" என்று அதட்டிக் கேட்டாள் தங்கை!

"சர்வ சத்தியமான உண்மை! எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து, நான் மணந்து கொள்ள விரும்பும் ஓரே பெண் புவனேசுவரிதான்! இது, மெய்யாகவே, நிஜம்! போதுமா? இன்னும், 'காட் பிராமிஸ்ஃம்' சொல்ல வேண்டுமா? ஏ.. ஏய், எதற்கு அழுகிறாய்? ஏம்மா" என்று, கவலையும் பரிவுமாக விசாரித்தான் அண்ணன்.

"புவனா விஷயத்தில்,இந்த வாண்டு, ஏதோ பண்ணி வைத்திருக்கிறது என்றுதோன்றுகிறது, அண்ணா" என்றான் சரவணன்!

ஆம் என்பது போலத் தலையாட்டினாள் அவள். "லீனா சொன்னதை நம்பி, அண்ணனுக்கும் அவளுக்கும் கல்யாணம் என்று நினைத்து விட்டேன்! அதைக் கெடுக்க வேண்டும் என்று, புவனாவிடம் ..."

"கடவுளே!"

"ஆனால், புவனா இப்போது எங்கே இருக்கக் கூடும் என்று எனக்குத் தெரியும், அண்ணா! நமக்கு டிக்கட் எடுத்துத் தரும் நவீன் டிராவல்சுக்கு, டிக்கெட்டுக்காகப் போய்க்கொண்டு இருப்பார்கள்! அவர்களிடம் பேசினால்..." என்று சுதா சொல்லிக் கொண்டு இருக்கும் போதே, தயானந்தன் தன் 'செல்ஃபோனை' எடுத்து, பட்டன்களைத் தட்டிக் கொண்டிருந்தான்.

"இன்னும் வரவில்லை, வந்ததும், தகவல் சொல்லுகிறோம்" என்றார்கள் அங்கே.

"பயணம் ரத்தாகி விட்டது என்று சொல்லி, அவர்களை, உங்கள் வண்டியிலேயே திரும்பி வரச் சொல்லுங்கள்" என்று சொல்லி விட்டு, எல்லோரும் காத்திருந்தனர்!

ஆனால், ஒன்பது மணி ஆகியும், புவனேசுவரி அங்கு போய்ச் சேரவில்லை என்றதும், எல்லோருக்குமே கவலை உண்டாயிற்று!

முதலில் சந்தேகம் வந்தது, சுதாவுக்குத் தான்!

தயானந்தனுக்கும் தனக்கும் திருமணம் ஆவது உறுதி, தயானந்தனுக்கும் அதில் விருப்பமே என்று, அவளிடம் பொய் சொன்னது, லீனாதானே? புவனா கிளம்புவதும், அவளுக்குத் தெரியும்!

விஷயத்தை அண்ணனிடம் சொல்லி, "லீனாக்காவிடம் விசாரியுங்களேன், அண்ணா!" என்றாள்.

வெகு நேரம் லீனாவின் செல் குரல் கொடுத்த பிறகு, பேசின லீனா, புவனாவைப் பற்றித் தனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்லி விட்டாள்!

"இல்லை, அண்ணா! புவனா கிளம்புவது, லீனாக்காவுக்கு மட்டும்தான் தெரியும்" என்று சுதா கூறவும் தயானந்தனுக்குப் பயம் வந்தது!



அதைக் காட்டிக் கொள்ளாமல், "பாட்டியிடம், நான் புவனியோடு வந்து சொல்லிக் கொள்ளுகிறேன்! நீ இங்கேயே இரு லோகா! சரவணா, நீ அவ்வப்போது, நவீன் ட்ராவல்சுக்கு ஃபோன் பண்ணிக் கேள்!" என்று விட்டு, காரை எடுத்துக் கொண்டு லீனாவின் வீட்டுக்குச் சென்றான்!.

லீனாவின் கார் மலையை விட்டு இறங்காமல்,பக்கவாட்டில் போகவும், "வழி தப்பு லீனா!" என்றாள் புவனா.

"சரியான வழிதான். என் வீட்டை, நீ பார்த்ததே இல்லையே, பயப்படாதே! நேரம் இருக்கிறது. உன்னை வழியனுப்பி வைப்பதுதான் என் குறிக்கோளும்!" என்றாள் லீனா.

ஆனால் வீட்டினுள் சென்றதும், அவளது குணமே மாறிவிட்டது!

"உன்னை வழியனுப்பப் போகிறேன் என்றேனே, எங்கே என்று நீ கேட்கவில்லையே! இந்த உலகத்தை விட்டு" என்றவள், ஹாஹா என்று பேய்ச் சிரிப்பு சிரித்தாள்.

"என்ன உளறுகிறீர்கள்?" என்று கேட்ட புவனாவுக்கு, வீட்டின் ஆள் அரவம் அற்ற அமைதி உறுத்தியது!

லீனாவுக்கு, வீட்டோடு இருக்கும் வேலையாட்களே இரண்டு பேர் உண்டு! கணவன் மனைவி யாரும், இல்லாத போதும், அந்த வீட்டைப் பராமரிக்கிறவர்கள். இவள் வந்த பிறகு, எடுபிடிக்கும் இரண்டு பேர் இருந்தார்கள், அவர்கள் நாலு பேரும் எங்கே?

ஒருவாறு, லீனா சிரித்து முடித்ததும், "பாருங்கள், எனக்கு விமானத்துக்குத் தாமதம் ஆகிவிடும்! சென்னைக்குப் போய், இன்றிரவே நான் எங்கள் நாட்டுக்குச் செல்லும் ஏற்பாடுகளையும் கவனிக்க வேண்டும்.! அதனால்..." என்று அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, ஆத்திரத்துடன் லீனா குறுக்கிட்டாள்.

"மலேஷியா, என்னடி, உலகத்தின் மறு கோடியிலா இருக்கிறது? இன்றைக்கு நீ போனால், உன்னைத் தேடிக்கொண்டு நாளைக்கே, தயா அங்கே வந்து விட்டுப் போகிறான்! 'எனக்கு... எப்போதும்... புவனி தான்...' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னவன், உலகத்தின் மறு கோடிக்கே போனாலும், விட்டுவிடவா போகிறான்? எங்கே போனாலும், உன் பின்னோடு தானே வருவான். அதனால் தான், உன்னை இந்த உலகத்தை விட்டே அனுப்பிவிடப் போகிறேன்.!" என்று கதவை உட்புறமாகத் தாளிட்டாள்.!

அவளது பேச்சில் மற்றதெல்லாம் மறக்க என்ன சொன்னார்?தயா என்ன சொன்னார் என்கிறீர்கள்?" என்று ஆவலுடன் வினவினாள் புவனேசுவரி.

ஆத்திரத்துடன் முறைத்தாள் லீனா!"அந்தக் கண்ணராவியை, இன்னொரு தரம் என் வாயால் சொல்ல வைக்க வேண்டும் என்று பார்க்கிறாயா?" என்று கொதித்தவள், உடனே ஏளனமாகச் சிரித்தாள்.

"சரி. பரவாயில்லை! சொல்லுகிறேன்... கேட்டுக் கொள்! சாகப் போகிறவரின் கடைசி ஆசையை நிறைவேற்ற வேண்டுமாமே! அதனால், சொல்லுகிறேன்... கேள். தயாவுக்கு எப்போதும் நீ மட்டும்தானாம்! கேட்டாயல்லவா? ஆசை நிறைவேறி



விட்டதா? இனி, செத்துப்போ! உன்னை அடித்தே கொல்லப் போகிறேன்!"

புவனேசுவரி நிதானித்தாள்.

தயானந்தனிடம் இருந்து, மனதை நிகழ்வுக்குக் கொண்டு வருவது கடினமாகவே இருந்தது! ஆயினும் லீனாவின் வெறி கொண்ட தோற்றமும், பேச்சும், நல்லபடியாக இங்கிருந்து வெளியேறுவது முக்கியம் என்று உணர்த்தின.

ஆள் அரவம் அற்றிருந்த வீடு, இவள் முன் கூட்டியே திட்டமிட்டிருப்பதை உணர்த்தியது! ஆனாலும் கொலையா?

"கொலை பெரிய குற்றம், லீனா ! நீங்களும் தப்பிக்க முடியாது! போலீஸ் கேஸ் என்று... எவ்வளவு அவமானம்? யோசியுங்கள்!" என்று எச்சரித்தாள்.

ஆனால், "பிடிபட்டால்தானே?" என்றாள் லீனா அலட்சியமாக. "உன்னைக் கொன்று, உன் துணிகளைக் கழற்றிவிட்டுப் பின்புறமாக இருக்கும் பள்ளத்தில் போட்டு விடுவேன். ஒரே நாளில், நாயும் நரியும் எலும்பைக்கூட மீதி வைக்காது! துணிகளை எரித்து விட்டால் தீர்ந்தது" என்று அவள் விவரிக்கவும், புவனா உள்ளூர அதிர்ந்தாள்.

இவளிடம் பயத்தைக் காட்டிக் கொள்வது தப்பு!

"ஒன்றை மறந்து விட்டாயே! நான் மலேஷியப் பெண். எனக்கு இரண்டு பக்கமும் சீனர்கள் வீடு.! காரத்தே, குங்ஃபூ எல்லாமே, சின்ன வயதில் இருந்து பழக்கம்! கடைசியில், நீதான் அடிபட்டுக் கிடப்பாய்.... பேசாமல், கதவைத் திறந்து விடு. இருவரும் எல்லாவற்றையும் மறந்து விடலாம்!" என்றாள் நயமாக.

லீனாவை மிரட்டத்தான், அவள் சொன்னது! ஆனால் கைப்பையில் இருந்து, துப்பாக்கி, கத்தி இரண்டையும் எடுத்து, "இரண்டிலும் ரத்தம் வரும்!சுத்தம் செய்ய வேண்டும்! ஆனாலும், இதில் எது மேல்?" என்று, அவள் உரக்கவே யோசிக்கவும் அரண்டு போனாள்!

"பக்கத்தில் போகக்கூடாது, அதனால்..." என்று, துப்பாக்கியில் 'சைலன்சரை'ப் பொருத்திக் கொண்டு இருந்தவள் மேல், அருகில் இருந்த டீபாயை எடுத்து வீசினாள் புவனா.

தடுமாறி விழுந்து எழுமுன், அவளைத் தாண்டிக் கொண்டு ஓடிப்போய்க் கதவைத் திறந்து வெளியே ஓடினாள்.!

முதலில் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஓடியிருக்க வேண்டும் என்று, 'விஷ்க்' என்ற ஒலியுடன் அருகில் ஒரு குண்டு பாயும் சத்தத்தில் உணர்ந்தாள்!

அப்புறம், பூனை எலி ஆட்டம் தான்!

லீனாவின் வீடு இருந்த இடம், மரங்களும், குத்துச் செடிகளுமாக மிகவும் பெரியது.! அதனால்,ஓரோர் இடமாக இவள் ஒளிவதும், துரத்தித் துரத்தி வந்து அவள் சுடுவதுமாகச் சற்று நேரம் கண்ணாமூச்சி ஆட்டம் நடந்தது!

சற்று நேரத்தில் சுடுவது நிற்கவும், குண்டு தீர்ந்திருக்கும் என்று புவனாவுக்குத் தோன்றியது.



எனினும் எச்சரிக்கையுடனேயே வேறு போக்குக் காட்டிவிட்டு, இவர்கள் வந்த போது திறந்து, அப்படியே கிடந்த வெளி கேட்டை நோக்கிப் பாய்ந்தாள்.

கேட்டின் வழியே ஒரு கார் உள்ளே வருவதைக் கடைசி நேரத்தில் கண்டு, சட்டென அவள் பக்கவாட்டில் சரிய, குண்டு, காரைத் தாக்கித் தெறித்தது.

கார் நின்று விட, மனோகரியின் வயதை ஒத்த ஒரு பெண்மணியும், லேசாகத் தலை நரைத்த இன்னொருவரும், காரிலிருந்து இறங்கி ஓடி வந்தனர்.

"ஏய்ய்..." என்று துப்பாக்கியுடன் ஓடி வந்த லீனா, அவர்களைக் கண்டதும் திகைத்து நின்றாள்!

"ஐயையோ! நீதாணா? அந்தப் பொண்ணை என்ன செய்தாய்? காரில் அடிபட்டது என்று நினைத்தேனே!" என்று பதறியவாறு, கீழே கிடந்த புவனேசுவரியைத் திருப்பினார், காரில் வந்தவர்!

புவனாவுக்குப் பெரிய அடி ஒன்றும் இல்லை.! வேகமாக வந்து, சரிந்து விழுந்ததில், சிராய்ப்புகள் மட்டுமே!

வந்தவர்கள், லீனாவுடைய பெற்றோர்!

சிராய்ப்புக் காயங்களைத் துடைத்து மருந்திட்டபடி, தாயார் பேசினாள். "எங்கள் குடும்பங்களிலேயே, இவள் ஒரே பெண் என்று செல்லம் கொடுத்தது, பெரிய தவறாகப் போயிற்று! நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணுக்குப் பிள்ளை பிறந்த பின், திருமணம் பேச வருகிறோம் என்றதற்காக, 'இப்போதே பிறக்கட்டும்' என்று இவள் அண்ணியை மாடிப்படியிலிருந்து தள்ளி விட்டுவிட்டாள். தாயும் பிள்ளையும் பிழைத்தது, மறு பிழைப்பாயிற்று, நேற்றுத்தான், இனிக் கவலை இல்லை என்றார்கள்! இவள், இனி அந்த வீட்டுக்குள் நுழையக்கூடாது என்று விட்டான் மகன். அவனைக் குற்றம் சொல்ல முடியுமா? இங்கே வந்து பார்த்தால்.... உனக்கும் இவளுக்கும் என்னம்மா?" என்று விசாரித்தாள், பரிதாபத்துக்குரிய அந்தத் தாய்.

முடிந்தவரை, அவர்கள் மனம் நோகாதவாறு விவரம் சொன்னாள், புவனேசுவரி.

கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

முகத்தை உர்ரென்று வைத்தபடி உட்கார்ந்திருந்த மகளிடம், "உனக்கு வேண்டியதை எடுத்து வைத்துக்கொள்! இப்போதே கிளம்புகிறோம்..." என்று லீனாவுடைய தந்தை சொல்லிக் கொண்டிருக்கும் போதே, வெளியே இன்னொரு கார் வேகமாக வந்து நிற்கும் ஓசை கேட்டது.

அதே வேகத்துடன் உள்ளே வந்த தயானந்தன், புவனேசுவரியைப் பார்த்ததும்,"என்ன காயம்?" என்று அவள் அருகே சென்றான்.

அவள் "ஒன்றும் இல்லை! வெறும் சிராய்ப்பு! "என்ற பிறகும், அவளைத்தலையோடு கால் வரை பார்த்துத் திருப்தியடைந்த பிறகே, மற்றவர் பக்கம் திரும்பினான்!

"ஹல்லோ, அங்க்கிள், ஆண்ட்டி, எப்போது வந்தீர்கள்? சொல்லவே இல்லையே!" என்று வியப்புடன் கேட்டான்.

"சொல்லும்படியாகவா, நிலைமை இருக்கிறது?" என்றார் பெரியவர் வருத்தத்துடன். "தயா, இங்கே என் பங்கு இருபது சதவீதத்தையும், உனக்கே விற்று விடலாம் என்று பார்க்கிறேன். உடனடியாகப் பணத்தைக் கொடுத்தாக வேண்டியது இல்லை! முடிகிற மாதிரித் தவணைகளில் கொடு! பிரேசில் தோட்டத்தைப் பார்க்க வேண்டியிருக்கிறது! இனி, அங்கேதான் நாம் வசிக்கப் போகிறோம்! இவளையும் கூட்டிப் போகிறோம்! இப்படியே கிளம்புகிறோம்! பாட்டி, அம்மா, அப்பாவிடம் கேட்டோம் என்று சொல்லி விடு....! மற்றது, இந்தக் குழந்தை... பேரென்ன? புவனா! புவனா சொல்லுவாள்! பாவம், பெண்! முதலில் இந்த இடத்தை விட்டு, அவளைக் கூட்டிக் கொண்டு போ! " என்று முடித்தார்.

காரில் செல்லும் போதே, 'செல்'லில் சரவணனை அழைத்து, "புவனி பத்திரமாக இருக்கிறாள். லோகா, சுதா எல்லோரிடமும் சொல்லி விடு" என்றான்.

நடந்ததைப் புவனா சொல்ல குறுக்கிடாமல் கேட்டான்!

நேரே குடிலுக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்தான்.

அவள் முகத்தையே சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

சிலுசிலுவென்று வீசிய காற்றில், கூந்தல் சுருள் ஒன்று, அவளது நெற்றியில் விழுந்து அலைய, ஒற்றை விரலால், அதை மெல்ல ஒதுக்கினான்! "ஆக, உன்னையே கொல்ல முயற்சிக்கிறவள் சொன்னால்தான் நம்புவாயாக்கும்? புத்திசாலி! "என்றான் கிண்டலாக.

கண்ணால் சிரித்து, "நீங்கள் மட்டும் என்னவாம்? அவளிடம்தானே, தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள்? கொலை செய்வதற்கு, ஒரு தூண்டுகோல் கிடைக்கட்டும் என்று..." என்று அவள் பதிலுக்குச் சொல்லி முடிக்கு முன், அவளை எட்டி இழுத்து, இறுக அணைத்தான் அவன்.

"என்ன வார்த்தை இது? அந்த ஆறு குண்டுகளில் , ஒன்று உன் மேல் பாய்ந்திருந்தால்....!" என்றவனின் உடல் நடுங்கியது!

எனக்காக என்னமாய் பயப்படுகிறான் என்று பெருமிதமாய் உணரும் போதே, அவன் துன்புறுவது பொறுக்காமல், "அப்படிப் பாய விட்டு விடுவேனே, என்ன? எனக்குப் புத்தியே இல்லை என்றா எண்ணுகிறீர்கள்?" என்றாள் மிடுக்கான குரலில்!

"ஆமாம், உலக மகா புத்திசாலி...!" என்றான் அவன் அலுப்பு காட்டி...! தன் அருகேயே அவளை அமர வைத்துக் கொண்டு கேட்டான். "எப்போதாவது, எதையாவது, நீ யோசித்திருக்கிறாயா? சொல்லு! இதே அளவு, லோகாவைப் பார்த்துக் கொள்ள, எங்களால் முடியாதா? உன் தடைகள் இல்லை என்றால், அது, இன்னமும் இலகுவாக இழுந்திருக்குமே ...! அப்படியிருக்க, மலேஷியாவில் இருந்து, உன்னைக் கட்டாயப்படுத்தி எதற்காக அழைத்து வர வேண்டும்? எண்ணிப் பார்த்திருக்கிறாயா?"

"அப்... அப்போதேவா?" என்று திகைப்புடன் வினவினாள் புவனா...! எனக்குத் தெரியவே தெரியாதே"



"அப்... அப்போதே தான்!" என்றான் அவன் கிண்டலாக. "உன்னை அங்கே விட்டுவிட்டு வந்தால், நீ திரும்பக் கிடைக்க மாட்டாய் என்பதால்தான், நீயும் கட்டாயம் வர வேண்டும் என்றேன்! அப்புறமும், எத்தகைய குறிப்புகள்! என்னிடம் ஜெயிக்க முடியாது, நான் சுகன் மாதிரி இல்லை... எத்தனை குறிப்பு கொடுத்தாலும், என்ன என்று, யோசிக்கவே தோன்றவில்லையா?" என்று வினவினான்.

ஒன்றும் சொல்ல முடியாமல் "தலையைச் சுற்றி மூக்கைத் தொடுகிற மாதிரி, குறிப்பு எதற்கு? சொல்வதை, நேரடியாகச் சொல்ல வேண்டியது தானே?" என்று, பதிலுக்கு அவள் ஒரு கேள்வி கேட்டாள்.

"எப்படிச் சொல்வது? உனக்கு இன்பன் மாயை விலக வேண்டியிருந்தது! இதை மட்டும் முதலில் நான் சொல்லியிருந்தால், விழுந்தடித்துக் கொண்டு, அவரைக் கல்யாணமே செய்து கொண்டு, புதை குழியில் மூழ்கியிருப்பாய்!" என்று பேசிக் கொண்டே போனவன், அவள் வியந்து நோக்கவும், "என்ன?" என்று வினவினான்!

"லோகேசும், இன்பனை இப்படித்தான் ஏதாவது சொல்லுவாள்!"

"அவள் கெட்டிக்காரி!"

"உங்களைப் போலப் பேசுவதால் கெட்டிக்காரியாக்கும்?" என்று அவனைச் சிரிக்க வைத்தாள். அவன் சிரிப்பதைச் சற்று நேரம் ஆவலாகப் பார்த்து விட்டு, "சொல்லுங்கள், அப்புறமும் ஏன் குறிப்பிலேயே இருந்து விட்டீர்கள்?"என்று கேட்டாள்.

"லோகா பிரச்சினை தீர வேண்டும் என்று எண்ணினேன் சுகனுக்காக அவள் கைம்மை நோன்பு நோற்க வேண்டும் என்று, இங்கே யாருமே விரும்பியது இல்லை! குழந்தை பிறக்குமுன் அவளுக்கு ஒரு வாழ்வு அமைய வேண்டும். அவளது பிரச்சனை ஒரே பிரச்சனையாக இருந்தால் சீக்கிரம் தீரும் என்று நினைத்தேன். அத்தோடு லீனா...

"ஓ! அதைப்பற்றிக் கேட்க மறந்தே போனேனே! அவளோடு, அந்த ஆட்டம் போட்டீர்களே! ஒட்டிக் கொண்டு அலைவது என்ன?வாயிலே ஊட்டுவது என்ன...?"

"போதும்.... போதும்! விட்டால், கே.பி.சுந்தராம்பாள் மாதிரி, 'என்ன, என்ன,என்ன?' என்று பாடிவிடுவாய் போல இருக்கிறதே! லீனாவுடைய அம்மா, என் அம்மா- உன் வருங்கால மாமியாருடைய சினேகிதி! முன்பு இங்கேதான் இருந்தார்கள்! லீனாவை மருமகளாக்க வேண்டும் என்று, அம்மாவுக்கு ஆசை உண்டு! அந்த ஆசை, அடியோடு மறைய வேண்டாமா? அதற்காகத்தான்!"

"ஆனால், அது எனக்கு எப்படித் தெரியும்?"

"கொஞ்சம் மூளையைப் பயன்படுத்தினால், புரிந்திருக்கும்?" என்றான் அவன்.

"இங்கே அம்மா முன் இப்படி நடத்தியவன், அலுவலகத்தில் எப்படி நடத்தினேன்? உனக்கும் தெரியும்தானே? அது மட்டும் அல்ல! அவளுக்கு ஊட்டி விட்டு விட்டு, உடனேயே, இப்படி உன் கையைப் பிடித்துக் கொண்டே, உன்னருகே உட்காரவில்லையா?" என்றுரைத்து, அவள் கையைப் பற்றிக்கொண்டான் தயானந்தன்.

புன்னகை செய்து, "நானும் மூளையைப் பயன்படுத்தினேன், தயா! கோபப்படாவிட்டால், எப்படி என்று சொல்லுகிறேன்" என்று அவள் எண்ணியதை எல்லாம் சொன்னாள் அவள்!

அவளது விரல்களில் விளையாடியவாறே கேட்டிருந்தவன், "என்னை இவ்வளவு மோசமாக நினைத்ததற்கு, உனக்குத் தண்டனை கொடுக்க வேண்டும்! கட்டாயமாய்!" என்றுரைத்து, அவளை லேசாக முத்தமிட்டான்.

"வா! பாட்டியைப் பார்த்துவிட்டு வருவோம்!" என்று, அவளைக் கையைப் பிடித்து எழுப்பிவிட்டுச் சொன்னான். "பாட்டிக்கு என் மனம் முதலில் இருந்தே தெரியும்! நான் மணக்க விரும்பும் பெண்ணை, அவர்களிடம் அழைத்து வருவதாகச் சொல்லியிருந்தேன்!"

வியப்புடன் அவனைப் பார்த்தாள் புவனேசுவரி.

ஆனந்தக் கண்ணீருடன் பாட்டியின் முகம் நினைவு வந்தது!

அப்போதே, என்ன தெளிவுடன் இருந்திருக்கிறான்!

சட்டென எம்பி, அவன் கன்னத்தில் முத்தமிட்டாள் அவள்!

"ஏய்... என்ன இது? நாம் இப்போது பாட்டி வீட்டிற்குப் போகிறோமா இல்லையா?" என்றுகண் சிமிட்டிக் கேட்டான் தயானந்தன்.

அவளது கன்னம் சிவப்பதைப் பார்த்து அவன் சிரிக்கவும், "போக வேண்டியது தான்...! ஆனால் பாட்டியிடம் என்ன சொல்லப் போகிறோம்? இன்னமும் நீங்கள் என்னிடம் முறைப்படி, எதையும் சொல்லவோ, கேட்கவோ இல்லையே! என்றாள் அவள்.

"இதோ! ஆறு மாதங்களுக்கு ஒரு முறை மலை நாட்டுக்கு அழைத்துப் போகிறேன். என்னை மணந்து கொள்வாயா, புவனி? " என்று குறு நகையுடன் கேட்டான் அவன்.

ரொம்பவும் யோசித்து விட்டு, "எங்கள் அழகான நாட்டுக்குப் போகவே முடியாதோ என்று கவலைப்பட்டேன்! அழைத்துப்போவதாகச் சொல்லுகிறீர்கள்! அப்படி ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்பதால், இந்தத் தியாகத்தைச் செய்கிறேன். உங்களை நான் மணந்துக்கொள்கிறோன், தயா" என்று பதவிசாகச் சொன்னாள் புவனேசுவரி!

"தியாகமா? ஆஹா, என்ன காதல்! என்ன காதல்! உனக்கு என்மேல் இருக்கும் அளவிலாக் காதலை எண்ணிப் புளகாங்கிதம் அடைகிறேன், கண்மணி!" என்றான் தயானந்தன்!

அடக்க முடியாமல் அவளுக்குச் சிரிப்பு பீறிட, அவனும் இணைந்து நகைக்கலானான்!

**- முற்றும் -**